# பாரதிதீபம்

## அகராதியும் மூலமும்



பதிப்பாசிரியர்

**வ. ஜெயதேவன்**

தொகுப்பாசிரியர்

**கு. சுபாஷிணி**

சென்னைப் பல்கலைக்கழகம்

2007

150ஆம் ஆண்டு சிறப்பு வெளியீடு

# பாரதிதீபம்
## அகராதியும் மூலமும்


பதிப்பாசிரியர்

**வ. ஜெயதேவன்**

தகைசால் பேராசிரியர் – தமிழ் இலக்கியத்துறை
முதன்மை ஆய்வாளர் & தலைமைப் பதிப்பாசிரியர்
தமிழ்ப் பேரகராதித் திருத்தப்பணித் திட்டம்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை 600 005

தொகுப்பாசிரியர்

**கு. சுபாஷிணி**

ஆய்வாளர்
தமிழ் மொழித்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை 600 005



**சென்னைப் பல்கலைக்கழகம்**
**2007**

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதித் திருத்தப்பணித் திட்ட வெளியீடு: 10

பாரதிதீபம்
வ. ஜெயதேவன் (பதிப்பாசிரியர்)

150ஆம் ஆண்டு வெளியீடு

© சென்னைப் பல்கலைக்கழகம்

முதல் பதிப்பு: அக்டோபர் 2007

விலை ரூ. 160/-

கணினி வடிவமைப்பு: திருமதி ஐ. ஜோஸபின்
திரு இல. கணேசன்

வடிவமைத்து அச்சிட்டோர்: ஸ்ரீ ராகவேந்திரா பிரஸ்
✆ 24614545, 24952913

வெளியிடுவோர்: பதிப்புத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை 600 005




# சென்னைப் பல்கலைக்கழகம்

சேப்பாக்கம் - சென்னை - 600 005



பேராசிரியர் சு. இராமச்சந்திரன்
M.Sc., Ph.D., Ph.D. (Miami)
துணைவேந்தர்

## அணிந்துரை

புத்தகங்கள் நாகரிகத்தைச் சுமந்து வருவன; அவை இன்றேல், வரலாறு ஓசையற்றுப் போகும்; இலக்கியம் ஊமையாகி விடும்; அறிவியல் ஊனப்பட்டு விடும்; சிந்தனையும் எதிர்காலக் கணிப்பும் இயக்கமற்று விடும் எனப் புத்தகம் பற்றிச் சரியாகக் கூறப்பட்டுள்ளது. நம் பாசத்திற்கும் நேசத்திற்கும் உரிய அன்னை நிறுவனமான சென்னைப் பல்கலைக் கழகத்தின் 150ஆம் ஆண்டை அடையாளப்படுத்த... நினைவு நூல்கள் வெளியிடுவதை விடவும் சிறந்த நிலையான வேறுபணி என்ன இருக்கமுடியும்?

சென்னைப் பல்கலைக் கழகம் மற்றும் அதன் இணைப்பு நிறுவனங்களின் ஆசிரியப் பெருமக்கள் படைத்த இந்த நூல் தொகுதிகளுக்கு முகவுரை வரைவது அருமையும் பெருமையும் சான்ற சிறப்பு. இந்நூல்கள் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி மேம்பாட்டிற்கும் பல்கலைக் கழகத்தின் 150ஆம் ஆண்டு அர்ப்பணிப்புக்கும் நிலையான நினைவுப் பொருள்களாக அமையும் என்பதைக் கருத்திற்கொண்டு, இந்நூல்கள் அவற்றின் புத்தாக்க அணுகுமுறை, ஆய்வுத்தரம், நடைநலம் ஆகியவற்றின் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டு வெளியிடப்பெறுகின்றன.

நமது பெருநிறுவனத்தின் முன்னேற்றப்பாதையில் ஓர் இன்றியமையாத மைல் கல்லாக மட்டுமன்றி நமது நாட்டின் கல்விப் பாங்கிற்கு ஓர் உண்மையான, பொருண்மை மிக்க பங்களிப்பை இந்நூல்கள் நல்கும் என்று நம்புகிறேன்.

கல்விச் சமூகத்தினர், கூட்டுறவாளர்கள், பங்காளர்கள் அனைவருக்கும், அவர்கள் நல்கிய ஒத்துழைப்பிற்கு நன்றி பாராட்டுகிறேன். சென்னைப் பல்கலைக் கழகத்தின் 150ஆம் ஆண்டு நிறைவு விழா நிகழும் அக்டோபர் 9, 2007இல் வெளியிடத்தக்க வகையில் இந்நினைவு நூல்களை உருவாக்கிய ஏனைய அனைவரையும் வாழ்த்துகிறேன், பாராட்டுகிறேன்.

சென்னைப் பல்கலைக் கழகம் செயல்படத் தொடங்கிய செப்டம்பர் 5, 1857 முதல் இன்றுவரை எத்தனையோ மாற்றங்களும் ஏற்றங்களும் பெற்றுப் பொலிவுடன் ஒளிர்கிறது. மேலும் பல சிறப்புகள் வரவுள்ளன என்பதை நாம் அனைவரும் எண்ணிப் பார்க்க இதயம் இறும்பூது எய்துகிறது. அன்பார்ந்த வணக்கத்துடனும் மனமார்ந்த வாழ்த்துக்களுடனும்

**சு. இராமச்சந்திரன்**

அக்டோபர் 2007

# பதிப்புரை

தமிழ் அகராதியியல் தொல்காப்பியத்தில் அரும்பி, நிகண்டுகளில் போதாகி, அகராதிகளில் மலர்ந்துள்ளது எனலாம். தமிழ் அகராதியியல் வரலாற்றில் கணிசமான இடத்தைத் தமிழ் நிகண்டுகள் வகிக்கின்றன. மேலும், அவை பண்டைய தமிழ்க் கல்வியிலும் இன்றியமையாத இடத்தை வகிக்கின்றன. அன்றியும், தமிழ் மொழி வரலாற்றை அறிய உதவும் அரிய ஆவணங்களாகவும் அவை திகழ்கின்றன.

எட்டாம் நூற்றாண்டு முதல் இருபதாம் நூற்றாண்டு முடிய அமையும் காலப்பரப்பில் திவாகர முனிவர் இயற்றிய சேந்தன் திவாகரம் தொடங்கிக் கவிராச பண்டித இராமசுப்பிரமணிய நாவலர் இயற்றிய தமிழ் உரிச்சொற்பனுவல் (1984) ஈறாக 45-க்கும் மேற்பட்ட நிகண்டுகள் தமிழில் தோன்றியுள்ளன. இவை அனைத்தும் எளிதாக மனனம் செய்ய யாப்பு நெறியில் இயற்றப்பட்டனவாகும். இலக்கியம் பயில்வாருக்கும் இயற்றுவாருக்கும் அவை பெருந்துணையாகப் பயன்பட்டன. நோக்குநூலாக அகராதி உருப்பெற்றபின் அதன் பயன்பாட்டு வீச்சுக்கு ஈடு கொடுக்க நிகண்டால் இயலாமல்போகவே நிகண்டு இயற்றும் மரபும் கற்கும் மரபும் அறுந்துபோயின. எனினும், நிகண்டுகளின் தரவுக் கருவூல வளம் இன்றும் அகராதியியலாளருக்கும் வரலாற்று மொழியியலாருக்கும் பெரிதும் பயன்படும் பான்மையது. இந்நிலையில் நிகண்டுகளை அகராதி வடிவில் வெளியிடுவது அவற்றின் பரவலானதும் மிகுதியானதுமான பயன்பாட்டுக்கு வழிகோலும் என்பதால் இம்முயற்சியில் ஈடுபடலானோம். மேலும் தமிழ்ப் பேரகராதித் திருத்தப்பணித் திட்டத்திற்கும் இம்முயற்சி பேரளவில் உதவவல்லது.

இந்நூல் காங்கேயர் இயற்றிய உரிச்சொல் நிகண்டை அகராதி முறையில் கொண்டுள்ளதோடு அந்நிகண்டின் மூலத்தையும் கொண்டுள்ளது. இதனைச் சிறப்பாக உருவாக்கியவர் செல்வி நா. சுப்புலட்சுமி ஆவார். தமிழ் உலகம் இந்நன் முயற்சியை வரவேற்கும் என நம்புகிறேன். இதன் நிறைகுறைகள் குறித்த கருத்துகள் வரவேற்கப்படுகின்றன. இந்நூலுக்கு அணிந்துரை வழங்கிச் சிறப்பித்த மாண்பமை துணைவேந்தர் அவர்களுக்கு எனது இதயங் கனிந்த நன்றி உரியது.

அன்புடன்

வ.ஜெயதேவன்

# முன்னுரை

தமிழில் தோன்றிய நிகண்டு நூல்களுள் மிகவும் பழமை வாய்ந்தது சேந்தன் திவாகரமாகும். இது முப்பெரும் பிரிவுகளைக் கொண்டு பூரண நிகண்டாக விளங்குகிறது. இதனைத் தொடர்ந்து நிகண்டு நூல்கள் பல வெளிவந்தன. அந்த வரிசையில் திருவேங்கட பாரதி என்பவரால் இயற்றப்பட்டது பாரதிதீபம் ஆகும். இது திவாகரம் போன்று ஒருபொருள் பல்பொருள் பெயர்த் தொகுதி, ஒருசொல் பல்பொருள் பெயர்த் தொகுதி, பல்பொருள் கூட்டத்து ஒருபெயர்த் தொகுதி ஆகிய முப்பெரும் பிரிவுகளையும் பெற்றுப் பூரண நிகண்டாக விளங்குகிறது. பாரதிதீபம் என்னும் பெயர் ஆக்கியோன் பெயரால் அமைந்ததாகும்.

தமிழில் உள்ள சில நிகண்டுகளின் பெயர்கள் தீபம், தீபிகை என்னும் பெயர்களால் அமைந்துள்ளன. 'தீபம்' என்னும் சொல்லுக்கு 'விளக்கு' என்பது பொருள். இங்கே பொருள்களின் பெயர்கள், சொற்பொருள்கள் ஆகியவற்றைத் தெளிவுறத் தொகுத்து விளக்குவது என்னும் பொருளில் 'தீபம்' என்பதை ஆசிரியர் பயன்படுத்தியுள்ளார். அகராதி நிகண்டு, நாமதீப நிகண்டு முதலிய நூற் பெயர்களில் இணைந்துள்ள நிகண்டு என்பது போல இங்குத் 'தீபம்' என்பது வந்துள்ளது. ஆகவே நிகண்டு என்னும் பொருளில் 'தீபம்' என்பது இவ்வாசிரியரால் ஆளப்பட்டுள்ளது என்று கருதவும் இடமுண்டு என்கிறார் மு. சண்முகம்பிள்ளை.

தமிழில் முதலில் தோன்றிய நிகண்டுகளாகிய திவாகரமும் பிங்கலமும் நூற்பாவினால் இயற்றப்பட்டுள்ளன. அவற்றுக்குப் பின் வந்த நிகண்டுகள் நூற்பாவினால் மட்டுமன்றி வெண்பா, கட்டளைக் கலித்துறை, ஆசிரிய விருத்தம் என்னும் யாப்பு வகைகளில் அமைந்து காணப்படுகின்றன. இந்நூல் கட்டளைக் கலித்துறை என்னும் பாவினால் இயற்றப்பட்டுள்ளது. இவ்வகையான பாவினம் தமிழுலகில் முற்காலத்தில் பெருவழக்காயிருந்தது. யாப்பருங்கலக்காரிகை, வீரசோழியம், நவநீதப் பாட்டியல் முதலிய இலக்கண நூல்களும் எண்ணிறந்த கோவைகளும் இதற்குச் சான்றாக அமைகின்றன. இனிய ஓசையும், எண்ணினால் வரையறைப்பட்ட எழுத்தமைதியும், எதுகை, மோனை முதலியவற்றின் நயமும் இவ்வகைச் செய்யுள்கள் கற்போர்க்குப் பெருவிருந்தாயின. இத்தகு நயங்களால் நினைவில் வைத்தற்கு ஏற்றதொரு பாவினமாக இது கருதப்பட்டது எனலாம்.

பாரதிதீபம் தொகுதிகளின் பெயரிலும் சரி, தொகுதிப் பொருளடைவிலும் சரி, சற்றும் மாறாமல் திவாகரத்தை அடியொற்றிச் செல்கிறது. மேலும், பொருள்களை விளக்கும் முறையிலும் திவாகரர் நூலின் அடைவையே பாரதிதீபம் தழுவிச் செல்கிறது. திவாகரத்தில் பல நூற்பாக்களில் காணும் பொருட்கூறுகள் இதன்கண் ஒரு பாடலில் சேர்ந்து காணப்படும்.

கி.பி. 15ஆம் நூற்றாண்டில் தோன்றிய கயாதரம் யாப்பு வகையிலும் திவாகரத்தை பின்பற்றிச் செல்வதிலும் பாரதிதீபத்தை ஒத்துக் காணப்படினும் அந்நூல் முற்றும் அந்தாதித் தொடையில் அமைந்துள்ளது. அந்தாதி முறை நினைவில் வைத்துப் பாடல்களை மனப்பாடம் செய்வதற்கு ஏற்ற முறை. இத்தகைய வளர்ச்சி நிலையை நோக்கப் பாரதிதீபம் அதற்கு முன்பே தோன்றிய நூலாதல் கூடும் என்று கருதலாம். பாரதிதீபத்தையும் அந்நிகண்டைப் போலவே 15ஆம் நூற்றாண்டில் தோன்றிய நிகண்டு நூலாகக் கொள்ளலாம். இந்நூலாசிரியர் திருவேங்கட பாரதியின் ஊராகக் குறிப்பிட்டுள்ள கடம்பை என்பது திருக்கடம்பூர் என்னும் சிவத்தலமாகும். கடம்பை என்பது கடம்பூர் என்பதன் மரூஉ. இவ்வூர் சிதம்பரத்திலிருந்து 15 கல் தொலைவிலும் காட்டுமன்னார்குடியிலிருந்து 3 கல் தொலைவிலும் உள்ளது.

*திதமா வுறைநளி னத்தடஞ் சூழ் தென்கடம்பை (74)*
*மீன்றாவு வாவிக் கடம்பை (200)*

என்று தென்கடம்பை, கடம்பை என்று தம் ஊரினைக் குறிப்பிட்டுள்ளார்.

இவர் பெரும்பான்மையும் அடைமொழி அதிகமின்றிப் பெயர்களைத் தொகுத்து அமைத்துச் செய்யுள்களை இயற்றியுள்ளார். சிற்சில இடங்களில் மகடூஉ முன்னிலைகளையும் தந்துள்ளார். ரகரத்தை அடுத்து வல்லினம் வரும் வடசொற்களை எடுத்தாளும்போது வல்லினத்திற்கியைய றகரம் கொடுத்தே ஆளுகின்றார் (சான்று: இரணிய கெற்பன் (10), சற்பம் (180), கற்கடகம் (198)). சில சொற்களில் ககர தகரம் முதலிய வல்லினம் றகரமாக மாறி வழங்குதலும் காணலாம் (சான்று: பற்பநாபன் (6), தற்கோலம் (227), பற்பம் (237), பற்பநிதி (297)). வடமொழி ஒலிப்பு முறையில் பகரமிட்டுச் சில சொற்கள் எடுத்தாளப்பட்டுள்ளன (சான்று: இரேவதி (63), வேட்கோபர் (92), தாபரம் (214)). ஒருசில தமிழ்ச் சொற்கள் தமக்குரிய நேரிய வடிவத்திலிருந்து சிறிது உருவம் பிறழ்ந்து காணப்படுகின்றன (சான்று: மாதிரு (277), வல்லுழியே (159), சிகாவலம் (153), திமிங்கிலகிலம் (195), கந்திருவர் (35), மாபெலன் (38), அணிகம் (130), துடை (133), மிதலை (134), குருக்கண் (135), செண்பகம் (202, 214), மாரோட்டம் (207), அம்பிலம் (207), வில்லுவம் (208), கரிக்காடு (216), எலவு (218)). அகரம் ஐகாரமாகப் போலி வடிவுடன் வழங்குதலும் சில இடத்தில் காணலாம் (சான்று: பிரளையம் (44), சதையம் (62), சமையத்தவர் (77), அபையன் (86), சையிந்தவம் (152)). ஒரு சில இடங்களில் சில எழுத்துப் பேதமும் இடம்பெறக் காணலாம் (சான்று: திருவிக்கிரமன் (8), விரிச்சிகம் (52), உத்திரம் (58)). சிற்சில புதுவடிவ அமைப்புகளும் காணப்படுகின்றன (சான்று: *தானவர் கோபன்* (11), *குணதிசைக் காவன்* (11)). ஒரு சில இடங்களில் பொருள் விளங்காத சொல் வடிவங்களும் தென்படுகின்றன (சான்று: இதளியங்கன் (4), நீலகன் (83), விலவங்கம் (163)).

இதுவரையில் அச்சிடப்பெறாமல் மிகவும் அருகியுள்ள இந்நூல் சுவடி ஒன்று டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல்நிலையத்தில் உள்ளமை அறிந்து மு. சண்முகம்பிள்ளை சென்னைப் பல்கலைக்கழகத்தின் வெளியீடாக 1980இல் பதிப்பித்தார். இந்தப் பதிப்பினை ஆதாரமாகக் கொண்டே இவ்வகராதி உருவாக்கப்பட்டுள்ளது. இந்நூலின் இறுதியில் மூலநூல் யாப்பு முறையில் தராமல் பொருள் எளிமை கருதி செய்யுள்களைப் பிரித்துப் பாரதிதீபத்தின் மூலம் தரப்பட்டுள்ளது.

நிகண்டுகளில் உள்ள சொற்களுக்குப் பொருள் காண வேண்டுமாயின் அச்சொல் எந்தத் தொகுதியில் எந்தப் பாடலில் இடம்பெற்றுள்ளது என்பதைப் பார்த்த பின்னரே அச்சொல்லின் பொருளை அறிந்துகொள்ள முடியும். அவ்வாறு அறிந்துகொள்ள முற்படினும் பாடலின் ஓசை நயத்திற்காகவும் யாப்பிற்காகவும் சொல்லின் இசைக்காகவும் சேர்க்கப்பட்ட அடைமொழிகள், அசைச்சொற்கள் முதலியன தடையாய் உள்ளன. இவற்றையெல்லாம் கருத்தில்கொண்டு நிகண்டுகள் தரும் சொற்பொருளை அகராதி முறையில் தொகுத்துத் தந்தால் பலரும் பயன்கொள்வர் என்ற எண்ணத்தோடு இப்பாரதிதீப நிகண்டு அகராதி வடிவம் பெற்றுள்ளது.

எளிதில் பொருள் உணரமுடியாத சில சொற்கள் பிரித்தும் சில சொற்கள் மூலத்தில் உள்ளவாறும் இந்நூலுள் இடம்பெற்றுள்ளன. அடைப்புக்குறிக்குள் கொடுக்கப்படும் பொருள்கள் உரையாசிரியர் எடுத்து விளக்கும் பொருளாகும். ஒரு சில இடங்களில் அவை பொருள் விளக்கம் வேண்டிக் கொடுக்கப்பட்டவையாகும். தலைச்சொல்லை அடுத்து அடைப்புக்குறிக்குள் இருக்கும் பொருள் அதன் நேர்ப் பொருளுக்கு மட்டுமே உரியது. ஏனைய தொகுதிகளில் இடம்பெறும் தலைச்சொல்லுக்கான நேர்ப் பொருளுக்கோ குறுக்கு நோக்கீட்டுச் சொற்களுக்கோ உரியதல்ல.

(எ.கா.) **சங்கம்(சங்கு)** - 1. கம்பு 2. கோடு 3. சுரிமுகம் 4. நத்து 5. நந்து 6. நாகு 7. பணிலம் 8. வளை 9. வாரணம் (3:50) [196]; ► 1. கோட்டி (2:9) [83] 2. திருப்பொறி (12:68) [658] 3. புலவர் (2:6) [80]

ஒரு சொல்லுக்குப் பல பாடல்களின் பெயர்கள் காணப்படுகையில் ஒவ்வொரு பாடலில் உள்ள பெயர்களும் தனித்தனியே அகரவரிசைப்படுத்தப்பட்டுள்ளன. சில தொகைப்பெயர்கள் பொருள் அமைப்புக் கருதி மாற்றியமைக்கப்பட்டுள்ளன. (எடுத்துக்காட்டாக ஏழ்முகில் என்னும் தலைச்சொல்லின் பெயர்களைக் குறுக்கு நோக்கீட்டின் பொழுது ► ஏழ்முகில் என்று குறிப்பிடாமல் ஏழ்முகிலுள் ஒன்று என்று குறிப்பிடப்பட்டுள்ளது.)

இந்நூலுக்கு வேறு பதிப்பு இல்லை என்பதால் மற்ற நிகண்டுகளோடு ஒப்பிட்டு இவ்வகராதி உருவாக்கப்பட்டுள்ளது. என் அறியாமையாலும் மறதியாலும் சில பல பிழைகள் ஏற்பட்டிருக்கக் கூடும். அவற்றை அறிஞர்கள் சுட்டிக்காட்டினால் நன்றியோடு ஏற்று உரிய திருத்தங்களை அடுத்த பதிப்பில் மேற்கொள்வேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வகராதியினை வெளியிடும் சென்னைப் பல்கலைக்கழகத்திற்கும் அணிந்துரை வழங்கிய மாண்பமை துணைவேந்தர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நூல் உருவாக்கத்திற்கு ஆக்கமும் ஊக்கமும் நல்கியதோடு சிறப்பாகப் பதிப்பித்தும் உதவிய சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் மொழித்துறைத் தலைவர் பேராசிரியர் வ. ஜெயதேவன் அவர்களுக்கு எனது நன்றியினைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அவ்வப்போது ஏற்பட்ட ஐயங்களைக் களைந்துதவிய புலவர் ப.வெ. நாகராசன் அவர்களுக்கும், திரு வை. சிவநேசன் அவர்களுக்கும் ஏனைய தமிழ்ப் பேரகராதித் திருத்தப்பணித் திட்டக் குழுவினர்க்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நூலினைக் கணினியில் உள்ளீடு செய்து உதவிய திருமதி ஐ. ஜோஸ்பின், திரு இல. கணேசன் அவர்களுக்கும் இவ்வகராதி உருவாக எல்லாவகையிலும் உதவி செய்த அனைத்து நண்பர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கு. சுபாஷிணி

# பொருளடக்கம்


1. பாரதிதீபம்: அகராதி 13

2. பாரதிதீபம்: மூலம் 137

# பாரதிதீபம்

## அகராதி

# அகராதிப் பதிவின் அமைப்பு

**இந்திரன்** - 1. அசலத்தின்சிறகுஅரிந்தோன் 2. அமரர்கோன் 3. அரி 4. குணதிசைக்காவலன் 5. குலிசப்படையோன் 6. கோகிலவண்ணன் 7. சசிபதி 8. தானவர்கோபன் 9. பாகசாதனன் 10. மஞ்ஞைஉருவானவன் 11. வலாரி 12. வானவன் 13. வேள்விப்பிரான் (1:11) [11]; 14. ஆகண்டலன் 15. ஆயிரக்கண்ணினன் 16. சதக்கிருது 17. சுரர்பதி 18. தரும்தருஆளி 19. புயல்ஊர்தி 20. புரந்தரன் 21. புனிதன் 22. பொன்னகர்இந்திரன் 23. மகவான் 24. வச்சிரகரத்தோன் 25. வாசவன் 26. விண்ணோர்இறைவன் 27. வெள்ளைவாரணத்தோன் (1:12) [12]; 28. எண் கணத்துள் ஒன்று (12:46) [636] 29. எண் திக்குப்பாலகருள் ஒருவர் (12:39) [629]; ▶ 1. அரி (11:78) [584] 2. மகசிரம் (1:55) [55]

- இந்திரன் → தலைச்சொல்
- 1–13 → இணைப்பொருட் பெயர்கள் (அகர நிரலில்) (முதல் செய்யுள்)
- 14–27 → இணைப்பொருட் பெயர்கள் (அகர நிரலில்) (அடுத்த செய்யுள்)
- [12] → செய்யுளின் தொடர் எண்
- (12:46) இல் 12 → தொகுதி எண்
- (12:46) இல் 46 → செய்யுள் எண்
- ▶ → 'காண்க' என்பதன் குறியீடு

## அ

அ - ► சுட்டு (10:13) [486]

அஃகுதல் - ► குன்றல் (8:11) [376]

அக்கசாலையர் - ► கண்ணாளர் (2:19) [93]

அக்கம் - ► கண் (2:66) [140]

அக்கரசித்திரம் - ► சித்திரகவி (12:14) [604]

அக்கன் - ► குபேரன் (1:18) [18]

அக்காரம் - ► சர்க்கரை (6:20) [313]

அக்கிரோணி - அனிகம் ஐமடி கொண்டது (12:72) [662]

அக்கு - ► 1. சங்குமணி (6:7) [300] 2. சாரியை (10:12) [485] 3. மனவு (11:69) [575]

அகஇதழ் - அல்லி (4:39) [239]

அகக்காழ் - வன்மரம் (4:18) [218]

அகங்கை - 1. அங்கை 2. குடங்கை (2:62) [136]

அகடு - ► வயிறு (2:60) [134]

அகண்டபூரணி - ► பார்வதி (1:24) [24]

அகத்தி - அச்சம் (4:10) [210]

அகத்தீடு - கவவு (9:20) [443]

அகப்பா - ► அகழ் (5:40) [283]

அகம் - ► இல் (5:30) [273]

அகம் அழிந்துக் கேட்டை உரைப்பது - ► பேரியற்காஞ்சி (10:24) [497]

அகமகிழ்வு - 1. ஆனந்தம் 2. இன்பம் 3. கட்டி 4. தொய்யல் (8:33) [398]

அகரம் - ► ஊர் (5:24) [267]

அகரு - ► அகில் (4:1) [201]

அகல் - 1. சார்வம் 2. சுத்தி (7:40) [359]

அகல்வின்மை - 1. ஆனாமை 2. தண்டாமை (8:36) [401]

அகலம் - 1. அகலுள் 2. அகறல் 3. கண்ணறை 4. நளி 5. பாழி 6. வியலிடம் (8:10) [375]; ► மார்பம் (2:61) [135]

அகலிடம் - ► பூமி (5:5) [248]

அகலுள் - ► 1. அகலம் (8:10) [375] 2. ஊர் (5:24) [267] 3. நாடு (5:7) [250] 4. பெருமை (8:6) [371]

அகவல் - ► ஆசிரியம் (10:21) [494]

அகழ்(அகழி) - 1. அகப்பா 2. கிடங்கு 3. பரிகம் (5:40) [283]

அகழுதல் - ► தோண்டல் (9:24) [447]

அகளம் - ► 1. தாழி (7:39) [358] 2. மிடா (7:39) [358]

அகறல் - ► 1. அகலம் (8:10) [375] 2. கடத்தல் (9:9) [432]

அகி - ► அரவு(3:34) [180]

அகிதலம் - கீழ்ஏழ்உலகுள் ஒன்று (12:36) [626]

அகில் - 1. அகரு 2. காகதுண்டம் 3. பூழில் (4:1) [201]

அகிலம் - ► முழுவதும் (8:11) [376]

அகோரம் - புராரி ஐம்முகத்துள் ஒன்று (12:22) [612]

அங்கணம் - ► 1. பொல்லாத்தலம் (5:21) [264] 2. முற்றம் (5:33) [276]

அங்கதம் - 1. அரவு 2. தோளணி (11·77) [583]; ► 1. அரவு(3:34) [180] 2. தோளணி (7:16) [335]

அங்கம் - ► 1. அவயவம் (2:70) [144] 2. உடம்பு (2:58) [132]

அங்கர் - பதினெட்டு வாசகருள் ஒருவர் (12:55) [645]

அங்கராகம் - ► பூசுவன (6:9) [302]

அங்கனை - ► மடவரல் (2:39) [113]

அங்காடி - 1. ஆவணம் 2. கூலம் 3. நியமம் (5:28) [271]

அங்காரகன் - 1. அழல் 2. அனலோன் 3. கனல் 4. சுசி 5. சுடர் 6. தீ 7. தூமத்தன் (1:39) [39]; 8. அரி 9. தகனன் 10. தழல் 11. பாவகன் 12. வன்னி (1:40) [40]; ► செவ்வாய் (1:47) [47]

அங்கி - 1. அட்டமூர்த்தத்துள் ஒன்று (12:41) [631] 2. எண்கணத்துள் ஒன்று (12:46) [636] 3. எண்திக்குப்பாலகருள் ஒருவர் (12:39) [629]; ► 1. அரி (11:78) [584] 2. கார்த்திகை (1:54) [54] 3. சட்டை (7:43) [362] 4. நெருப்பு (1:40) [40]

அங்கிதம் - ► 1. மெய்தழும்பு (2:71) [145] 2. யானைக்கால் (3:30) [176]

அங்குசப்பாணியன் - ► விநாயகன் (1:15) [15]

அங்குரித்தல் - ► முளைத்தல் (9:39) [462]

அங்குலி - ► விரல் (2:62) [136]

அங்கை - ► 1. அகங்கை (2:62) [136] 2. ஆதிரை (1:55) [55]

அங்கோலம் - ► சேமரம் (4:8) [208]

அச்சம் - 1. அஞர் 2. அதிர்ப்பு 3. அழற்றி 4. உலைதல் 5. கம்பலை 6. கவலை 7. குணம் 8. கூசல் 9. துணுக்கம் 10. துளக்கம் 11. தெருமரல் 12. நடுக்கல் 13. பனித்தல் 14. புலம்பல் 15. பீதி 16. பொதிர்ப்பு 17. மெய்யழிதல் 18. விதிர்ப்பு 19. வெம்மை 20. வெருவு 21. வெறி (8:39) [404]; 22. நவரசத்துள் ஒன்று (12:51) [641]; ► 1. அகத்தி (4:10) [210] 2. கடி (11:82) [588] 3. கம்பலை (11:21) [527] 4. கொன் (11:29) [535] 5. பனி (11:63) [569]

அச்சுதம் - அரிசியோடு அறுகு கூட்டியது (6:11) [304]

**அச்சுதன்** - ► திருமால் (1:5) [5]
**அச்சுவத்தம்** - ► அரசு (4:3) [203]
**அச்சுவம்** - ► குதிரை (3:6) [152]
**அசடர்** - ► கீழ்மக்கள் (2:27) [101]
**அசணி** - ► வச்சிரப்படை (7:5) [324]
**அசதி** - ► விழைவுறுசொல் (10:9) [482]
**அசரம்** - இருவகைத் தோற்றத்துள் ஒன்று (12:1) [591]
**அசலத்தின்சிறகுஅரிந்தோன்** - ► இந்திரன் (1:11) [11]
**அசலம்** - ► 1. நாகம் (11:40) [546] 2. மலை (5:9) [252]
**அசலன்** - ► அருகன் (1:19) [19]
**அசலை** - ► பூமி (5.4) [247]
**அசனம்** - ► உண்டி (6:16) [309]
**அசனி** - உயிர்வேதனை பன்னிரண்டனுள் ஒன்று (12:54) [644]; ► இடி (1:71) [71]
**அசித்துவம்** - அட்டமாசித்தியுள் ஒன்று (12:41) [631]
**அசுத்தம்** - ► பொல்லாத்தலம் (5:21) [264]
**அசுபதி** - 1. இரலை 2. ஐப்பசி 3. தலைநாள் 4. பரி (1:53)[53]
**அசும்பு** - ► கிணறு (5:19) [262]
**அசுரம்** - எண்மணத்துள் ஒன்று (12:47) [637]
**அசுரர்** - 1. அவுணர் 2. தகுவர் 3. தயித்தியர் 4. தானவர் 5. நிசாசரர் (1:34) [34]; 6. பதினெண் கணத்துள் ஒன்று (12:56) [646]
**அசுரர்தினம்** - ► மூலம் (1:60) [60]
**அசேதனம்** - ► போதம்இலாதவை (8:50) [415]
**அசைத்தல்** - ► யாத்தல் (9:29) [452]
**அசைதல்** - 1. துயல்வரல் (9:40) [463]; 2. தங்கல் 3. நோய் (11:64) [570]; ► 1. சோம்பு (8:38) [403] 2. நிலைபெறல் (9:14) [437]
**அசைநிலை** - ► அந்தில் (11:29) [535]
**அசைநிலைச்சொல்** - 1. அரோ 2. ஒடு 3. கா 4. பிற 5. பிறக்கு 6. மாது 7. யா (10:11) [484]
**அசோகின்பெருந்தகை** - ► அருகன் (1:20) [20]
**அசோகு** - 1. செயலை 2. பிண்டி (4:2) [202]
**அஞ்சம்** - ► அன்னம் (3:42) [188]
**அஞ்சல்** - ► சோம்பு (8:38) [403]
**அஞ்சலி** - ► தொழுதல் (9:21) [444]
**அஞ்சனம்** - எட்டுத்திக்குயானையுள் ஒன்று (12:48) [638]; ► கருமை (8:16) [381]
**அஞ்சாம்பக்கம்** - ► பூரணம் (1:67) [67]
**அஞ்சாமை** - ► சூர் (11:11) [517]
**அஞ்சி** - ► கொத்தமூரி (4:28) [228]
**அஞர்** - ► 1. அச்சம் (8:39) [404] 2. அறிவிலர் (2:28) [102] 3. குற்றம் (8:43) [408] 4. துன்பம் (8:41) [406] 5. நோய் (8:35) [400]
**அஞறல்** - ► எழுச்சிமிகுதி (9:36) [459]
**அட்டமங்கலம்** - 1. ஆடி 2. இணைக்கயல் 3. கும்பநீர் 4. கொடி 5. சவுரி 6. சுடர் 7. தோட்டி 8. முரசு (12:40) [630]
**அட்டமாசித்தி** - 1. அசித்துவம் 2. அணிமா 3. காமரூபி 4. பிராகாமிகம் 5. பிராத்தி 6. மகிமா 7. லகுமா 8. விசுவத்துவம் (12:41) [631]
**அட்டமூர்த்தம்** - 1. அங்கி 2. இயமானன் 3. கதிர் 4. கால் 5. நிலம் 6. நீர் 7. மதி 8. வான் (12:41) [631]
**அட்டி** - ► அதிமதுரம் (6:12) [305]
**அட்டில்** - ► அடுக்களை (5:31) [274]
**அடக்கம் இல்லாமல் பலர் புறங்கூறல்** - ► அலர் (10:5) [478]
**அடக்கமுடன் சிலர் தம்முள் புறம் சொல்லல்** - ► அம்பல் (10:5) [478]
**அடம்பு** - சோபாலிகை (4:34) [234]
**அடர்** - ► ஐம்மைவடிவு (8:4) [369]
**அடர்காற்று** - ► சுழல்அனிலம் (1:39) [39]
**அடலை** - ► 1. சாம்பல் (6:13) [306] 2. மிகுதி (8:7) [372]
**அடவி** - ► காடு (4:17) [217]
**அடி** - ► பாதம் (2:59) [133]
**அடிகள்** - ► 1. தலைவி (2:40) [114] 2. பற்றற்றோர் (2:1) [75]
**அடிசில்** - அடுப (6:17) [310]; ► உண்டி (6:16) [309]
**அடிசில்ஊண்தொழில்** - 1. அயிறல் 2. மிசைதல் (9:4) [427]
**அடித்தல்** - எட்டுமெய்ப்பரிசத்துள் ஒன்று (12:46) [636]
**அடிதொடுவது** - பாதுகை (7:38) [357]
**அடிமை** - 1. ஆள் 2. சிலதர் 3. சிலதியர் 4. சேகார் 5. சேடர் 6. சேடியர் 7. தொழும்பு (2:24) [98]
**அடிவரை இன்றி அகவல் நடையில் கூறுவது** - ► சூத்திரயாப்பு (10:17) [490]
**அடுக்கல்** - ► மலை (5:8) [251]
**அடுக்களை** - 1. அட்டில் 2. மடப்பளி (5:31) [274]
**அடுத்தல்** - ► 1. குற்றுதல் (9:39) [462] 2. கூடிடல் (9:25) [448]
**அடுத்தோர்** - 1. அணுகுநர் 2. ஒல்லுநர் 3. ஒன்றுநர் 4. துடர்ந்தவர் 5. துன்னினர் 6. நண்ணுநர் 7. நள்ளுநர் (2:35) [109]

அடுப்பு - ► பரணி (1:53) [53]
அடுப - ► அடிசில் (6:17) [310]
அடை - 1. சஃகுல்லி 2. மோதகம் (6:18) [311]
அடைக்கலம் - கையடை (8·40) [405]
அடைகுறடு - பட்டடை (7.32) [351]
அடைத்தல் - ► பதனழிவு (9:39) [462]
அடையலர் நாடு அழிவு ஆவது - ► கொற்றவள்ளை (9:31) [454]
அண்டம் - ► 1. ஆகாயம் (1·37) [37] 2. முட்டை (3 47) [193]
அண்டர் - 1. அமரர் 2. ஆயர் (11:68) [574]; ► 1 தேவர் (1:33) [33] 2. முல்லைநில மக்கள் (2:44) [118]
அண்ணம் - ► 1. உள்நா (2 65) [139] 2 மேல்வாய் (2:65) [139]
அண்ணல் - ► 1. அரசன் (2:10) [84] 2. அருகன் (1.19) [19] 3. புத்தன் (1:21) [21] 4. பெருமை (8:6) [371] 5 பெருமையின் மிக்கவர் (2:7) [81] 6. முல்லைத் தலைமக்கள் (2:45) [119]
அண்ணுதல் - ► சார்வு (9:37) [460]
அண்ணை - ► அறிவிலர் (2:28) [102]
அணங்காட்டு - ► 1. கழங்கு (11:49) [555] 2. வெறி (11·7) [513]
அணங்கு - 1. கொலை 2. தெய்வம் 3 பேய் 4. மாதர் 5. வருத்தம் (11:28) [534], ► 1. தெய்வப் பெண் (1:32) [32] 2 பசாசு (1 36) [36] 3. வருத்தம் (8:37) [402] 4. வேலன்ஆடல் (9:48) [471]
அணங்குஅண்டல் – ► கொலைத்தொழில் (9:26) [449]
அணர் - ► கீழ்வாய் (2:65) [139]
அணரி - ► மேல்வாய் (2:65) [139]
அணவுதல் - ► எட்டல் (9:40) [463]
அணி - 1. அழகு 2 ஆடை 3. பூண் (11.26) [532]; ► 1 அழகு (8·18) [383] 2. ஆபரணம் (7·18) [337] 3. ஆரம் (11:12)[518] 4. கட்டழகு (8:18) [383] 5. கைவகுத்தல் (2:56) [130]
அணிகம் - ► படைத்திரள் (2:56) [130]
அணிதல் - ► ஒப்பனை (9:3) [426]
அணிமா - அட்டமாசித்தியுள் ஒன்று (12:41) [631]
அணியஇடம் - கொட்டில் (5:35) [278]
அணியல் - ► மாலை (4:42) [242]
அணில் - வெளில் (3:19) [165]
அணு - ► 1. சிறுமை (8:7) [372] 2. நுண்மை (8:10) [375]
அணுக்கம் - ► வருத்தம் (8:37) [402]
அணுக்கு - ► பாங்கி (2:54) [128]
அணுகுநர் - ► அடுத்தோர் (2:35) [109]
அணுவளி - ► புதன் (1:47) [47]
அணை - ► 1. நீர்க்கரை (5:15) [258] 2. மெத்தை (7:45) [364]
அத்தம் - 1. ஐவிரல் 2. களிறு 3 கன்னி 4 காமரம் 5. கைம்மீன் 6. கௌத்துவம் 7. நவ்வி (1:58) [58]; ► அருநெறி (5:44) [287] 2. காடு (4:17) [217] 3. கைத்தலம் (2:62) [136] 4. வழி (5.44) [287]
அத்தவாளம் - வடகம் (7·43) [362]
அத்தன் - ► 1. சிவன் (1:4) [4] 2. தந்தை (2.48) [122] 3. மூத்தவர் (2:7) [81]
அத்தாணி - ► அரசர்இருக்கை (5:34) [277]
அத்தி - 1. அதவு 2. உதும்பரம் (4:4) [204]; ► 1. கடல் (5 13) [256] 2. யானை (3:3) [149]
அத்திரம் - ► அம்பு (7:4) [323]
அத்திரி - ► 1. கழுதை (3:13) [159] 2. குதிரை (3:6) [152] 3. மலை (5:9) [252]
அத்து - ► 1 சாரியை (10:12) [485] 2. சிவப்பு (8.14) [379]
அத்தை - ► தலைவி (2:40) [114]
அதமம் - மூவகைத் தானத்துள் ஒன்று(12:6) [596]
அதர்வணம் - நான்மறையுள் ஒன்று (12:10) [600]
அதரம் - ► உதடு (2·64) [138]
அதலம் - கீழ்ஏழ்உலகுள் ஒன்று (12:36) [626]
அதவு - ► அத்தி (4:4) [204]
அதள் - ► தோல் (3:31) [177]
அதிகம் - ► மிகுதி (8:7) [372]
அதிகாரம் - ► 1. நீர்மை (8:56) [421] 2. நூல் (10 16) [489]
அதிகுணன் - ► அருகன் (1·19) [19]
அதிங்கம் - ► அதிமதுரம் (6:12) [305]
அதிசயம் - 1. இறும்பூது 2. மிலைச்சு 3. விம்மிதம் 4. வியப்பு (8:27) [392]; 5. அந்தோ 6. அன்னோ 7. ஐயோ 8. ஓ (8:28) [393]; 9. உலகர்க்குஉறுதுயர்பதினெட்டனுள் ஒன்று (12:58) [648]
அதிதிநாள் - ► புனர்பூசம் (1:55) [55]
அதிதியர் - ► புதியவர் (2:23) [97]
அதிபன் - ► எப்பொருட்கும்இறை (2:8) [82]
அதிமதுரம் - 1. அட்டி 2 அதிங்கம் (6:12) [305]
அதிர்ப்பு - ► 1. அச்சம் (8:39) [404] 2. நடுக்குதல் (9:18) [441]
அதிரல் - ► சிறுதூறு (4:34) [234]
அது - ► வேற்றுமைஉருபு (10:13) [486]
அதோமுகம் - ► கழிமுகம் (5:17) [260]
அந்தகன் - ► யமன் (1:23) [23]
அந்தணர்அறுதொழில் - 1. ஏற்றல் 2. ஓதல் 3. ஓதுவித்தல் 4. கொடுத்தல் 5. வேட்டல் 6. வேட்பித்தல் (12:23) [613]

அந்தணன் - ► வியாழன் (1:48) [48]
அந்தம் - 1. அழகு 2. ஈறு (11:18) [524]; ► முடிவு (8:52) [417]
அந்தரம் - 1. எண்கணத்துள் ஒன்று (12:46) [636] 2. முந்நிலத்துள் ஒன்று (12:3) [593], ► ஆகாயம் (1:37) [37]
அந்தரி - ► கொற்றவை (1:31) [31]
அந்தி - ► 1. சந்தி (1:64) [64] 2. தூண் (7:29) [348] 3. மாலை (11:32) [538]
அந்தியம் - சமுத்திரம் பத்து (12:74) [664]
அந்தியம்பத்து - ► மத்தியம் (12.74) [664]
அந்தில் - 1. அசைநிலை 2. ஆங்கு (11:29) [535]
அந்திவண்ணன் - ► சிவன் (1:4) [4]
அந்தோ - ► 1. அதிசயம் (8:28) [393] 2. இரக்கம் (8:28) [393]
அநிகம் - ► படைத்திரள் (2:55) [129]
அப்பம் - 1. கஞ்சம் 2. தோசை 3. நோலையல் 4. பூரிகை (6:18) [311]
அப்பல் - கொட்டல் (6:9) [302]
அப்பன் - ► தந்தை (2.48) [122]
அப்பு - எழுகடலுள் ஒன்று (12.35) [625]; ► நீர் (1:42) [42]
அபரம் - ► பிறக்கு (2:64) [138]
அபருமிதம் - ► அளவின்மை (8:13) [378]
அபாரம் - ► அளவின்மை (8:13) [378]
அபிராமி - ► திருமகள் (1:26) [26]
அபையன் - ► சோழன் (2:12) [86]
அம் - ► 1. இடைச்சொல் (10:12) [485] 2. சாரியை (10:12) [485] 3. நீர் (1:42) [42]
அம்பகம் - ► கண் (2:66) [140]
அம்பணம் - ► பல்வகைப்பறை (7:24) [343]
அம்பரம் - 1. கடல் 2. கூறை 3. விண் (11:27) [533]; ► 1. ஆகாயம் (1:37) [37] 2. கடல் (5:14) [257] 3. கூறை (7:41) [360]
அம்பல் - அடக்கமுடன் சிலர் தம்முள் புறம் சொல்லல் (10:5) [478]
அம்பலம் - ► மன்றம் (5:33) [276]
அம்பி - ► 1. தெப்பம் (7·33) [352] 2. மரக்கலம் (7·32) [351]
அம்பிகையாள் - ► பார்வதி (1:24) [24]
அம்பு - 1. அத்திரம் 2. அரி 3. ஆசுகம் 4. கங்கம் 5. கணை 6. காண்டம் 7. கொத்திரம் 8. கோ 9 கோல் 10. சரம் 11. சிலீமுகம் 12. தண்டம் 13. தாரை 14. தொடை 15. பகழி 16. பத்திரம் 17. பல்லம் 18.பாணம் 19. புங்கம் 20. மாற்கணம் 21. வண்டு 22. வாளி 23. விசிகம் (7:4) [323]; ► 1. கோல் *(11:48) [554]* 2. நீர் (1:42) [42]
அம்புதம் - ► 1. நீர் (1:42) [42] 2. மேகம் (1:71) [71]
அம்புபெய்பாத்திரம்(கூடு) - 1. ஆவம் 2. தூணி (7·9) [328]
அம்புயம் - ► தாமரை (4:37) [237]
அம்புலி - ► சந்திரன் (1.46) [46]
அம்போருகத்தில் உறைபவன் ► பிரமன் (1:10) [10]
அம்போருகம் - ► தாமரை (4:37) [237]
அம்ம - ► கேட்பித்தல் *(10:10)* [483]
அம்மம் - ► முலை (2:61) [135]
அம்மான் - ► 1. தந்தை (2:48) [122] 2. மாதுலன் (2:49) [123]
அம்மை - ► வருபிறப்பு (8.47) [412]
அமண் - ► சமண்முனிவர் (2:4) [78]
அமர் - ► பூசல் (9:30) [453]
அமர்க்களம் - ► போர்க்களம் (5·38) [281]
அமரர் - ► 1. அண்டர் (11 68) [574] 2. தேவர் (1:33) [33]
அமரர்கோன் - ► இந்திரன் (1:11) [11]
அமரர்நதி - ► கங்கை (1:25) [25]
அமராபதி - ► துறக்கம் (5·1) [244]
அமலம் - ► அழுக்கின்மை (8:49) [414]
அமலன் - ► சிவன் (1:1) [1]
அமலை - ► உண்டி (6 16) [309]
அமளி - ► மக்கள்உறங்கிடம் (5:35) [278]
அமாத்தியன் - ► மந்திரிதந்திரி (2:15) [89]
அமுங்கல் - ► உள்தளர்வு (9:28) [451]
அமுதகதிர் - ► சந்திரன் (1:46) [46]
அமுதம் - ► 1. பால் (6:19) [312] 2. மேகம் *(1:43)* [43]
அமுதவல்லி - ► சீந்தில் (4.35) [235]
அமுதாசனர் - ► தேவர் (1:33) [33]
அமுது - மருந்து (6:23) [316], ► தேவருணவு (6:17) [310]
அமை - ► 1. மூங்கில் *(4:13) [213]* 2. வேய் (11:39) [545]
அமைச்சர் - ► மந்திரி (2.14) [88]
அமைச்சு - ► அரசியல்ஆறனுள் ஒன்று (12:28) [618]
அமைத்தல் - ► சமைத்தல் (9:40) [463]
அமைப்பாளர் - ► உப்பமைப்பவர் (2:19) [93]
அமையம் - ► பொழுது (1:64) [64]
அயம் - ► 1. இரும்பு (6:5) [298] 2. நீர் (1:42) [42]
அயர்தல் - ► செயல் (9:1) [424]
அயர்வு - ► வருத்தம் (8:37) [402]

அயலோர் - 1. நொதுமலர் 2. வம்பலர் (2:23) [97]

அயன் - ► பிரமன் (1:9) [9]

அயன்ஆயுள் - ► கற்பம் (11:73) [579]

அயன்ஊருவில்வந்தோர் - ► வணிகர் (2:16) [90]

அயன்தாளில்வந்தவர் - ► காராளர் (2:17) [91]

அயாவுயர்த்தல் - ► வருத்தம்களைதல் (9:32) [455]

அயிதம் நூறாயிரம் - ► மாலயிதம் (12:73) [663]

அயிர் - ► நுண்மணல் (5 21) [264]

அயிர்ப்பு - ► குறிஞ்சியாழ்த்திறன் (10.28) [501]

அயிராணி - ► 1. இந்திரன்தேவி (1·31) [31] 2. பார்வதி (1:24) [24]

அயிராணிஆடல் - கடையம் (9:45) [468]

அயிராவதம் - எட்டுத்திக்குயானையுள் ஒன்று (12:48) [638]

அயில் - ► 1. ஆயுதக்கூர்மை (7.8) [327] 2. வேல் (7:3) [322]

அயிறல் - ► 1. அடிசில்ஊண்தொழில் (9:4) [427] 2. உண்டல் (9:4) [427] 3. நுகருதல் (6:16) [309]

அயினி - ► உண்டி (6:16) [309]

அயுதம் - ► பதினாயிரம் (12·72) [662]

அரக்கர் - ► இராக்கதர் (1:34) [34]

அரக்கர்இனத்தவர் - 1. சாலகடங்கடர் 2. நிருதர் 3. யாதுதானர் (1:35) [35]

அரக்கு - ► 1. சிவப்பு (8:14) [379] 2. துப்பு (11:33) [539]

அரக்குடைச்சிலம்பு - 1. இரதம் 2. ஞெகிழி (7:13) [332]

அரங்கம் - ► ஆற்றிடைக்குறை (5.19) [262]

அரங்கு - 1. ஆடிடம் 2 போரிடம் 3. வட்டாடிடம் (5:34) [277]

அரசர்அறுதொழில் - 1. படைக்கலம் இயற்றல் 2. ஓதுதல் 3. கொடுத்தல் 4. படைக்கலம் பயிலல் 5. பூதலங்காத்தல் 6. வேட்டல் (12:24) [614]

அரசர்இருக்கை - அத்தாணி (5:34) [277]

அரசர்ஐங்குழு - 1. ஒற்றன் 2. சேனாபதி 3. தூதுவன் 4. புரோகிதன் 5. மந்திரி (12:54) [644]

அரசர்துணைவர் - 1. அருமைப்பதியினர் 2. கடைகாப்பர் 3. கரணத்தினவர் 4. கரிமிசையோர் 5. சுற்றம் 6. நட்டோர் 7. படைத்தலைவர் 8. பரிவீரர் 9. வேதியன் (12:57) [647]

அரசர்பரியாரம் - பரியாளம் (2:34) [108]

அரசற்குளாங்கருமத்தர் - 1. சாக்கை 2. வள்ளுவன் (2:15) [89]

அரசன் - 1. ஏந்தல் 2. கோ 3. நரபதி 4 நிருபன் 5. புரவலன் 6. காவலன் 7. முதல்வன் 8. வேந்தன் (2:9) [83]; 9. அண்ணல் 10. இறையவன் 11. குருசில் 12. கொற்றவர் 13. தலைவன் 14. பதி 15. பார்த்திபன் 16. பிரான் 17. பூபாலன் 18. பெருமான் 19. மன்னவன் (2:10) [84]; ► எப்பொருட்கும் இறை (2:8) [82]

அரசியல் - ► கொற்றம் (11:54) [560]

அரசியல்ஆறு - 1. அரண் 2. அமைச்சு 3. குடி 4 கூழ் 5. நட்பு 6. படை (12:28) [618]

அரசு - 1. அச்சுவத்தம் 2. கணவம் 3. பணை 4 போதி 5. மராமரம் (4:3) [203]

அரசுஇறை - திறை (9:36) [459]

அரசுயானைஇயல்பு - ஏழுமுழ உயரம், ஒன்பது முழ நீளம், பதினான்கு முழ சுற்றளவு, கார்நிறம், முன்பகுதி உயர்ந்து பின்பகுதி தாழ்ந்து, கை, கால், மருப்பு, தாலவட்டம் முதலியவற்றால் கொல்ல வல்லதாய் அமைந்திருக்கும் (12:69) [659]

அரண் - அரசியல்ஆறனுள் ஒன்று (12:28) [618]; 1. காவற்காடு (4·16) [216] 2. மதில் (5:39) [282] 3. வேல் (7.3) [322]

அரண்இருக்கை - குறும்பு (5:27) [270]

அரணம் - 1. கவசம் 2. மதில் (11:73) [579]; ► மெய்யுறை (7:9) [328]

அரத்தம் - துப்பு (6·10) [303]; ► 1. சிவப்பு (8·14) [379] 2. செங்குவளை (4:38) [238] 3. பவளம் (6:4) [297]

அரதனம் - ► கனமணி (6:3) [296]

அரந்தை - ► துன்பம் (8:41) [406]

அரம் - ► பாதலம் (5.12) [255]

அரம்பை - ► 1. வாழை (4:12) [212] 2. வானவர்மாதர் (1:32) [32]

அரமாது - ► வானவர்மாதர் (1:32) [32]

அரமியம் - ► நிலாமுன்றில் (5:33) [276]

அரலை - 1. கழலை 2. கனிக்காழ் (11:57) [563]; ► கழலை (2:71) [145]

அரவம் - ► 1. அழுங்கல் (11:63) [569] 2. ஆரவாரம் (10:32) [505] 3. ஒல் (11:5) [511]

அரவிந்தம் - ► தாமரை (4:37) [237]

அரவில்துயில்வோன் - ► திருமால் (1:6) [6]

அரவின்தினம் - ► ஆயிலியம் (1:56) [56]

அரவு(பாம்பு) - 1. அகி 2. அங்கதம் 3. அரி 4. உரகம் 5 கட்செவி 6. காளதரம் 7. சற்பம் 8. தந்தசூகம் 9. நாகம் 10. பணி 11. பன்னகம் 12. பாந்தள் 13. புயங்கம் 14. மாசுணம் 15. வியாளம் (3:34) [180]; ► 1. அங்கதம் (11:77) [583] 2. நாகம் (11:40) [546]

அரவுஆசனத்தன் - ► கருடன் (3:35) [181]
அரவொடுகதிர் - ► உற்பாதம் (12:67) [657]
அரவொடுதிங்கள் - ► உற்பாதம் (12·67) [657]
அரற்று - ► குறிஞ்சியாழ்த்திறன் (10:28) [501]
அரன் - ► சிவன் (1:1) [1]
அரன்உயிர்நண்பன் - ► குபேரன் (1:18) [18]
அரன்தினம் - ► ஆதிரை (1:55) [55]
அரன்பாரி - ► பார்வதி (1:24) [24]
அரன்வில் - பினாகம் (7:2) [321]
அராகம் - ► வண்ணகம் (10:21) [494]
அரி - 1. அங்கி 2. அளி 3 இந்திரன் 4. ஊகை 5. கதிர் 6. கவி 7. கிண்கிணிபெய்பரல் 8. கிளி 9. கூற்று 10. சிங்கம் 11 திகிரி 12. திருமால் 13. தேரை 14 நிறம் 15. பகை 16. படை 17. பணி 18. பறவை 19. பன்றி 20. புகை 21 புலி 22 பொன் 23. வலி 24. வாசி 25. வாள் (11.78) [584], ► 1. அங்காரகன் (1:40) [40] 2. அம்பு (7:4) [323] 3. அரவு (3.34) [180] 4. இந்திரன் (1:11) [11] 5. ஐம்மை வடிவு (8 4) [369] 6. காற்று (1:37) [37] 7. குதிரை (3.6) [152] 8. குரங்கு (3:17) [163] 9. சிங்கம் (3:1) [147] 10. சூரியன் (1:44) [44] 11. தவளை (3:51) [197] 12. திருமால் (1:6) [6] 13. பன்றி (3·13) [159] 14 புகை (6:13) [306] 15. பொன் (6:1) [294] 16. மரக்காழ் (4.18) [218] 17 மலை (5:8) [251] 18. மால் (11:10) [516] 19. மூங்கில் (4 13) [213] 20. வண்டு (3:44) [190]
அரி(திருமால்)ஆடல் - 1. அல்லியம் 2. குடம் 3. மல் (9:44) [467]
அரி(திருமால்)வில் - சாரங்கம் (7:2) [321]
அரிஏந்தியநீழலன் - ► புத்தன் (1:22) [22]
அரிகள் - ► பகைவர் (2·36) [110]
அரிச்சந்திரன் - சக்கரவர்த்திஅறுவருள் ஒருவர் (12:34) [624]
அரிசனம் - ► மஞ்சள் (4·27) [227]
அரிசியோடு அறுகு கூட்டியது - ► அச்சுதம் (6:11) [304]
அரித்தல் - ► 1. அழித்தல் (9:23) [446] 2. நீவி (11:44) [550]
அரித்திரம் - ► மஞ்சள் (4:27) [227]
அரிதகி - ► கடுக்காய் (4:6) [206]
அரிதம் - ► திக்கு (5:3) [246]
அரிதில்அமைத்தல் - ► ஒப்பனை (9:3) [426]
அரிதினம் - ► ஓணம் (1:61) [61]
அரிபயில்அல்லி(செவ்வாம்பல்) - கயிரவம் (4:39) [239]
அரிமா - ► 1. சிங்கம் (3:1) [147] 2. போதகம் (3:25) [171]
அரில் - 1. குற்றம் 2. பிணக்கு (11:15) [521]; ► சிறுதூறு (4:19) [219]
அரி(றி)வன் - ► செவ்வாய் (1:47) [47]
அரிவாள் - ► குயம் (11:12) [518]
அரிவை - ஏழுபருவப்பெண்ணுள் ஒருவள் (2:38) [112]; ► மடவரல் (2·39) [113]
அருக்கன் - ► 1. அலரி (11 71) [577] 2. சூரியன் (1·45) [45] 3. தபனன் (11.22) [528]
அருகர் - ► 1. அறுசமயத்தருள் ஒருவர் (12:26) [616] 2. சமண் (2 3) [77]
அருகல் - 1. சாதல் 2. சுருங்கல் (11:70) [576]; ► வறிது (11 44) [550]
அருகன் - 1. அசலன் 2. அண்ணல் 3.அதிகுணன் 4. அறவாழிஅந்தணன் 5. ஆதி 6. எண்குணத்தோன் 7. சினவரன் 8 சினேந்திரன் 9. பகவன் 10. பரமன் 11. புண்ணியமூர்த்தி 12. புனிதன் 13. பொன்னெயில்நாதன் 14. மலரின் வந்தோன் 15 வரதன் 16. விரதன் 17. விளங்கொளி (1:19) [19]; 18. அசோகின்பெருந்தகை 19. அருளாளி 20. ஆசன் 21. கலையுணர்ந்தோன் 22. காரணன் 23. சாந்தன் 24. திகம்பரன் 25. தேவன் 26. பண்ணவன் 27. பூரணன் 28.பேர்அரியாசனன் 29. முக்குடைப்புங்கவன் 30. முனிவன் 31 விண்ணவன் 32 வீரன் 33. வேந்தன் 34. வேளைவென்றோன் (1:20) [20]
அருகு - ► நாறுதல் (8:54) [419]
அருகுதல் - ► குன்றல் (8.11) [376]
அருச்சனை - ► பூசை (9 20) [443]
அருச்சுனம் - ► மருதம் (4:3) [203]
அருணம் - 1. அழகு 2. சிவப்பு 3. மான் (11·62) [568]; ► 1. சிவப்பு (8 14) [379] 2. மான் (3:14) [160]
அருணன் - ► 1 சூரியன் (1·45) [45] 2. புதன் (1.47) [47]
அருந்ததி - 1. சாலி 2. வடமீன் (1·63) [63]
அருந்தல் - ► நுகருதல் (6:16) [309]
அருந்தவர் - ► பற்றற்றோர் (2:2) [76]
அருந்துதல் - ► உண்டல் (9:4) [427]
அருநெறி - 1. அத்தம் 2. கடறு 3. சுரம் 4. தூம்பு (5:44) [287]
அருப்பம் - ► 1. உழவர்பதி (5:26) [269] 2. மருதநிலஊர் (5:26) [269] 3. வழுக்குப்பார் (5:39) [282]
அரும்பண்டம் - தாரம் (6:7) [300]
அரும்பு - ► மொட்டு (4:40) [240]
அருமைப்பதியினர் - ► அரசர்துணைவர் (12:57) [647]

அருவி - ► 1. கிரிச்சாரல்வரும்ஆறு (5:16) [259] 2. தினைத்தாள் (4:30) [230]
அருள் - 1. இரக்கம் 2. கருணை (8:25) [390]; ► 1. இறும்பூது (11:42) [548] 2. தருமம் (8:49) [414]
அருள்செல்வன் - ► புத்தன்
அருள்மொழியை மெய்யாக உரைப்பது - ► பொருண்மொழிக்காஞ்சி (10:24) [497]
அருளாளர் - ► பெருமையின்மிக்கவர் (2:7) [81]
அருளாளி - ► அருகன் (1:20) [20]
அருளுதல் - ► தியாகம் (9:18) [441]
அரை - ► பானாள் (1:67) [67]
அரைப்பட்டிகை - 1. கலாபம் 2. கலை 3. காஞ்சி 4. மனா 5. மேகலை (7:14) [333]
அரோ - ► அசைநிலைச்சொல் (10.11) [484]
அல் - ► இரவு (1:65) [65]
அல்கல் - ► நிலைபெறல் (9:14) [437]
அல்குல் - 1. கடிதடம் 2. நிதம்பம் (2:59) [133]
அல்லல் - ► துன்பம் (8:41) [406]
அல்லவன் - ► சந்திரன் (1:46) [46]
அல்லவாம்-எனல் - அன்று (10:10) [483]
அல்லி - ► அகஇதழ் (4:39) [239]
அல்லியம் - ► அரிஆடல் (9:44) [467]
அலகு - 1. மகிழின்பரல் 2. மணி (6:25) [318]; ► 1. கணிதம் (8.51) [416] 2. பலகறை (6:7) [300]
அலகை - ► பசாசு (1·36) [36]
அலங்கரித்தல் - ► ஒப்பனை (9.3) [426]
அலங்கல் - ► மாலை (4:41) [241]
அலந்தை - ► வாவி (5:18) [261]
அலம் - ► கலப்பை (7:28) [347]
அலம்வரல் - ► சுழற்சி (8:32) [397]
அலர் - அடக்கம் இல்லாமல் பலர் புறங்கூறல் (10:5) [478]; ► நீர் (1:42) [42]
அலர்தல் - ► முளைத்தல் (9:39) [462]
அலரி - 1. கணவரி 2. கரவீரம் (4.25) [225]; 3. அருக்கன் 4. பூ (11.71) [577]; ► மலர் (4:40) [240]
அலவன் - ► 1. கர்க்கடகம் (1:51) [51] 2. நண்டு (3:52) [198]
அலாதம் - ► கடைக்கொள்ளி (6:13) [306]
அலாயுதன் - நாரணன்பத்துஅவதாரத்துள் ஒன்று (12:52) [642]
அலி - 1. பெண்டகர் 2. பெண்டு 3. பேடர் 4. பேடியர் (2:26) [100]
அலை - ► 1. கடல் (5:13) [256] 2. நீர்த்திரை (5:15) [258]
அலைசுதல் - ► சோம்பு (8:38) [403]
அலைப்பு - 1. உலைத்தல் 2. செறல் 3. நெரித்தல் 4. மிறை 5. வேதனை (9:26) [449]
அவ்விடம் - ► ஆண்டு (5·49) [292]
அவ்வியன் - ► அழுக்காறு (8.29) [394]
அவண் - ► உம்பர் (5:49) [292]
அவதி - ► அளவு (8.22) [387]
அவயவம் - 1 அங்கம் 2 உறுப்பு 3. காத்திரம் 4 சினை (2:70) [144]
அவரை - ► முதிரை (4:30) [230]
அவல் - ► பள்ளம் (5:46) [289]
அவலம் - ► நவரசத்துள் ஒன்று (12:51) [641]
அவலோர் - ► வல்லுனர்மாட்டார் (2:31) [105]
அவன்பாற்கோடல் - வினாஐந்தனுள் ஒன்று (12:23) [613]
அவனி - ► 1. பூமி (5:5) [248] 2. வையம் (11:76) [582]
அவா - ► 1. வருத்தம் (8:37) [402] 2. விருப்பு (8:24) [389]
அவி - ► தேவருணவு (6:17) [310]
அவிட்டமீன்(அவிட்டம்) - 1. ஆவணி 2. காக்கை 3. புள் 4. வசுநாள் (1:61) [61]
அவித்தல் - 1. நவிற்றல் 2 நொகுத்தல் 3. பயிலல் (9:42) [465]
அவிப்பு - ► விடர் (5:12) [255]
அவிர்தல் - ► 1. ஒளிவிடல் (8:17) [382] 2. படிவம் (11:68) [574]
அவுணர் - ► அசுரர் (1:34) [34]
அவை - ► கோட்டி (2:9) [83]
அவைத்தல் - ► குற்றுதல் (9:39) [462]
அவையவர் - ► புலவர் (2:6) [80]
அழகு - 1 அணி 2. ஆர் 3. ஐ 4. சித்திரம் 5. சீர் 6. செவ்வி 7. பை 8. பொலம் 9. மாண்பு (8:18) [383]; ► 1. அணி (11:26) [532] 2. அந்தம் (11:18) [524] 3. அருணம் (11 62) [568] 4. சித்திரம் (11:71) [577] 5 தளிமம் (11:66) [572] 6. தேசிகம் (11:55) [561] 7. விடங்கம் (11·45) [551]
அழல் - 1. உருப்பம் 2. வெப்பம் (8:20) [385]; ► 1. அங்காரகன் (1:39) [39] 2. உற்பாதம் (12:67) [657] 3. கார்த்திகை (1:54) [54] 4 கேட்டை (1:60) [60]
அழல்புகை - ► உற்பாதம் (12:67) [657]
அழற்றி - ► அச்சம் (8:39) [404]
அழன் - ► பிணம் (2:58) [132]
அழி - ► வைக்கோல் (4:31) [231]
அழிஞ்சில் - ► சேமரம் (4:8) [208]

அழித்தல் - 1. அரித்தல் 2. உதைத்தல் 3. சவட்டல் 4. செகுத்தல் 5. தெறுத்தல் (9:23) [446]

அழுக்காறு - 1. அவ்வியன் 2 மனக்கோட்டம் 3. மனச்சழுக்கம் (8:29) [394]

அழுக்கின்மை - 1. அமலம் 2 விமலம் (8:49) [414]

அழுகும்தசை - ► முடை (3:33) [179]

அழுங்கல் - 1. இரக்கம் 2. கேடுறல் (11:49) [555]; 3. அரவம் 4. இரங்கல் (11:63) [569], ► 1. ஓசை (11:4) [510] 2. சோம்பு (8.38) [403] 3. ஞெமுங்கல் (9:23) [446] 4. துன்பம் (8:42) [407] 5. நோய் (8:35) [400]

அழுங்கு - ► மறி (3:26) [172]

அழுதல் - 1. கசிதல் 2. கலக்கம் 3. கலுழ்தல் (9:7) [430]

அழுந்தயம் - ► ஆழம் (5:19) [262]

அழும்-எனல் - ► அனுகரணஓசை (10:31) [504]

அழைத்தல் - ► விளித்தல் (10:8) [481]

அள் - 1. காது 2. செறிவு 3. வன்மை (11:46) [552]; ► இடைச்சொல் (10:12) [485]

அள்ளல் - ► நரகம் (5:6) [249]

அள்ளு - ► பற்றிரும்பு (7:12) [331]

அளக்கர் - 1. உததி 2. சேறு 3. நிலம் (11:28) [534]; ► 1 கடல் (5:13) [256] 2. கார்த்திகை (1:54) [54] 3. சேறு (5:20) [263] 4. பூமி (5:4) [247]

அளகம் - 1. பின்னல் 2. மாதர்குழல் (11:17) [523]; ► 1. குழன்றமயிர் (2:70) [144] 2. பெண்மயிர் (2:68) [142] 3. மேகம் (1.43) [43]

அளகு - 1. கூகை (பெண்) 2. கோழி (பெண்) (3:46) [192]

அளகைப்பிரான் - ► குபேரன் (1:18) [18]

அளங்கன் - ► புத்தன் (1 21) [21]

அளவின்மை - 1. அபருமிதம் 2. அபாரம் 3. அனந்தம் (8:13) [378]

அளவு - 1. அவதி 2. காலம் 3. காறு 4. தாறு 5. துணை 6. நேர் 7. பிரமாணம் 8. வரை (8:22)[387]; ► 1. அன்பின்நடையது (8:40) [405] 2. எல்லை (11:29) [535] 3. பண்பின்இயல்பு (8:1) [366] 4. வரையறை (8:21) [386]

அளவை - 1. கச்சம் 2. கடன் (8:21) [386]

அளறு - ► நரகம் (5:6) [249]

அளாவல் - ► கலத்தல் (9:38) [461]

அளி - 1. கொடை 2. மது 3. வண்டினம் (11:13) [519]; ► 1 அரி (11:78) [584] 2. அன்பு (8:25) [390] 3. வண்டு (3:44) [190]

அளித்தல் - முச்செயலுள் ஒன்று (12:2) [592]; ► 1. தியாகம் (9:18) [441] 2. பாதீடு (9:32) [455] 3. வழங்கல் (11:49) [555]

அளிப்பயிலாமரம்(வண்டுணாமலர்மரம்) - 1. செண்பகம் 2 வேங்கை (4:14) [214]

அளை - ► தயிர் (6:19) [312]

அற்புதம் - கோடி பத்து (12:73) [663]

அற்றம் - 1. சோர்பு 2. மறைபொருள் (11:49) [555]

அறநிலைஅறம் - நிரை மீட்டல், நிரை ஓட்டல், செகுத்தல் முதலியன (12.30) [620]; அறநிலைமறநிலைஆறனுள் ஒன்று (12:29) [619]

அறநிலைஇன்பம்- அறநிலைமறநிலை ஆறனுள் ஒன்று (12:29) [619]

அறநிலைப்பொருள் - அமர்கொள்ளல், நிரைகொள்ளல், தண்டிப்பொருள் முதலியன (12:30) [620]; அறநிலைமறநிலை ஆறனுள் ஒன்று (12:29) [619]

அறநிலைமறநிலை(அரசியல்வகை)ஆறு - 1 அறநிலைஅறம் 2. அறநிலைஇன்பம் 3. அறநிலைப் பொருள் 4 மறநிலைஅறம் 5. மறநிலைஇன்பம் 6. மறநிலைப்பொருள் (12 29) [619]

அறம் - வேந்தன்ஏழுபண்புள் ஒன்று (12.39) [629]

அறல் - 1. கருமணல் 2. நித்திரை 3. வயவு (11:50) [556]; ► 1. கருமணல் (5.21) [264] 2. நீர் (1:42) [42] 3. நீர்த்திரை (5:15) [258]

அறவர் - ► பற்றற்றோர் (2:2) [76]

அறவாழிஅந்தணன் - ► அருகன் (1 19) [19]

அறிந்துஅறியாமை - ► அறிமடம் (8:34) [399]

அறிமடம் - அறிந்துஅறியாமை (8:34) [399]

அறியாமை - எய்யாமை (8:34) [399]

அறியான்வினாதல் - வினாஐந்தனுள் ஒன்று (12:23) [613]

அறிவர் - ► பற்றற்றோர் (2:1) [75]

அறிவன்நாள் - ► உத்திரட்டாதி (1:62) [62]

அறிவிலர் - 1. அஞர் 2. அண்ணை 3. இழுதை 4. ஐஞ்ஞை 5. குதலை 6. பேதை 7. மடம் 8. முழுமகன் 9. மூடன் (2:28) [102], ► கீழ்மக்கள் (2:27) [101]

அறிவின்திறம் - துயவு (8:34) [399]

அறிவு - 1. உணர்வு 2. உரன் 3. ஒண்மை 4. காட்சி 5. புலன் 6. மெஞ்ஞானம் (8:23) [388]; ► 1. ஒண்மை (8:38) [403] 2. கல்வி (10:14) [487] 3. கொள்கை (8:57) [422] 4. மிகுதி (8:7) [372]

அறிவுள்ளது - சேதனம் (8:50) [415]

அறிவுற்றவர் - ► மிக்கவர் (2:5) [79]

அறிவொப்புக்காண்டல் - வினாஐந்தனுள் ஒன்று (12:23) [613]
அறிவோர் - ► புலவர் (2 6) [80]
அறுகு - ► யானையாளி (3:3) [149]
அறுசமயத்தர் - 1. அருகர் 2. சேடிகர் 3. நையாயிகர் 4. புத்தர் 5 மீமாங்கர் 6 லோகாயுதர் (12:26) [616]
அறுசமையத்தருக்குஉணவு - முப்பத்திரண்டுஅறத்துள் ஒன்று (12 60) [650]
அறுசுவை - 1. உவர்த்தல் 2. கார்த்தல் 3 கைத்தல் 4. தித்தித்தல் 5 துவர்த்தல் 6. புளித்தல் (12:29) [619]
அறுத்தல் - ► 1. நிலைபெறல் (9:14) [437] 2. வெட்டல் (9:22) [445]
அறுதொழில்நாயகர் - ► வணிகர் (2:16) [90]
அறுதொழிலாளர் - ► பார்ப்பார் (2:5) [79]
அறுபதம் - ► வண்டு (3:44) [190]
அறுமீன் - ► கார்த்திகை (1:54) [54]
அறுமீன்காதலன் - ► முருகன் (1:14) [14]
அறுவகைத்தானை - 1. ஆனை 2. தேர் 3. வாசி 4. வாள் 5. வில் 6. வேல் (12:27) [617]
அறுவகைப்போகபூமி - 1. ஆயரிவஞ்சனை 2. உத்தரகுருவம் 3. ஏமதவஞ்சம் 4. தேவகுருவம் 5. நல்லரிவஞ்சம் 6. ரணவஞ்சம் (12:33) [623]
அறுவை - ► கூறை (7.41) [360]
அறை - ► எழுத்தின்ஓசைச்சொல் (10:1) [474]; ► பாறை (5:11) [254]
அறைகூறல் - ► விளித்தல் (10 8) [481]
அறைதல் - ► சொல்லுதல் (10:2) [475]
அறைபோதல் - ► கீழறுப்பு (10:8) [481]
அன் - ► சாரியை (10:12) [485]
அன்பின்நடையது - 1. அளவு 2. இன்பம் 3. நயன் 4. பயன் (8:40) [405]
அன்பு - 1. அளி 2. ஆர்வம் 3. ஈரம் 4. நார் 5. பரிவு 6. பற்று 7. புரி (8:25) [390]
அன்றில் - தரிஞ்சம் (3;40) [186]; ► 1. சேவல் (3:46) [192] 2 மூலம் (1:60) [60]
அன்று - ► அல்லவாம்-எனல் (10:10) [483]
அன்னத்துஇறகு - தூவி (3:42) [188]
அன்னம் - 1 அஞ்சம் 2. எகினம் 3. ஓதிமம் 4. பிணிமுகம் (3:42) [188]; ► 1. எகினம் (11:44) [550] 2. சோறு (6.15) [308]
அன்னை - ► 1. பெற்றவள் (2:49) [123] 2. முன்பிறந்தாள் (2:50) [124]
அன்னோ - ► 1. அதிசயம் (8:28) [393] 2. இரக்கம் (8:28) [393]
அனங்கன் - ► மன்மதன் (1:16) [16]
அனந்தசுகம் - எண்குணத்துள் ஒன்று (12:44) [634]
அனந்ததெரிசனம் - எண்குணத்துள் ஒன்று (12:44) [634]
அனந்தம் - ► அளவின்மை (8:13) [378]
அனந்தமெஞ்ஞானம் - எண்குணத்துள் ஒன்று (12:44) [634]
அனந்தமெய்வீரியம் - எண்குணத்துள் ஒன்று (12:44) [634]
அனந்தல் - ► துஞ்சல் (9:5) [428]
அனந்தவிலோசனன் - ► புத்தன் (1:22) [22]
அனந்தன் - சேடன் (1:50) [50]
அனல் - ► தபனன் (11:22) [528]
அனலோன் - ► அங்காரகன் (1:39) [39]
அனிகம் - சமுகம் மும்மடி கொண்டது (12:72) [662]
அனிகம் ஐமடி கொண்டது - ► அக்கிரோணி (12:72) [662]
அனிலம் - ► காற்று (1:37) [37]
அனுகரணஓசை - 1. அழும்-எனல் 2. இம்-எனல் 3. எழும்-எனல் 4. ஓல்-எனல் 5. கல்-எனல் 6. ஞெள்-எனல் 7. நொள்-எனல் 8. பொள்-எனல் (10 31) [504]
அனுசம் - 1 தாளி 2. தேள் 3. பனை 4. புல் 5 போந்தை (1:59) [59]
அனுபவம் - துப்பரவு (8:52) [417]
அனுமானம் - ► ஐயம் (8:32) [397]
அனை - ► ஐயச்சொல் (10:13) [486]

## ஆ

ஆ - 1. ஆ(பசு) (பெண்) 2. எருமை (பெண்) 3. மரை (பெண்) (3:23) [169], ► ஆச்சா (4:2) [202]
ஆக்கம் - ► 1. இலாபம் (8:49) [414] 2. கொடிப்படை (2.56) [130] 3. திருமகள் (1:26) [26] 4. நந்தல் (11:3) [509]
ஆக்கினேயம் - பதினெண்புராணத்துள் ஒன்று (12·59) [649]
ஆக்கை - ► உடம்பு (2:58) [132]
ஆகண்டலன் - ► இந்திரன் (1:12) [12]
ஆகம் - உடல் (11:44) [550]; ► மார்பம் (2:61) [135]
ஆகமம் - ► நூல் (10:16) [489]
ஆகரம் - ► உறைவிடம் (5:35) [278]
ஆகவபூமி - ► போர்க்களம் (5:38) [281]
ஆகவம் - ► பூசல் (9:30) [453]
ஆகவனீயம் - முத்தீயுள் ஒன்று (12:4) [594]
ஆகாசகாமி - ► கங்கை (1:25) [25]
ஆகாசியர் - பதினெண்கணத்துள் ஒன்று (12:56) [646]
ஆகாயம் - 1. அண்டம் 2. அந்தரம் 3. அம்பரம் 4. ஆசினி 5. உம்பர்இடம் 6. ககனம் 7. குடில் 8. மங்குல் 9. மாகம் 10. வானம் 11. விண் 12. விசும்பு 13. வெளி (1:37) [37]

ஆகாரசித்திரம் - ► சித்திரகவி (12:14) [604]
ஆகாவழிச்செல்பவன் - பதிதன் (2:24) [98]
ஆகுபரிப்புங்கவன் - ► விநாயகன் (1:15) [15]
ஆகுலம் - ► 1. ஆரவாரம் (10:32) [505] 2. வருத்தம் (8:37) [402]
ஆகுளி - ► சிறியபறை (7·22) [341]
ஆங்க - ► உரையசைச்சொல் (10·10) [483]
ஆங்கு - ► அந்தில் (11:29) [535]
ஆச்சா - ஆ (4.2) [202]
ஆச்சியம் - ► நெய் (6:19) [312]
ஆசங்கை - ► ஐயம் (8:32) [397]
ஆசன் - ► அருகன் (1:20) [20]
ஆசாரம் - ► பெருமழை (1:72) [72]
ஆசிரியம்(ஆசிரியப்பா) - 1 அகவல் 2 தொகை (10:21) [494]
ஆசில் - ► வாழ்த்து (10 3) [476]
ஆசினி - ► 1. ஆகாயம் (1 37) [37] 2 ஈரப்பலா (4:8) [208] 3. மரக்காழ் (4:18) [218]
ஆசீவகத்தவர் - ► சமண் (2 3) [77]
ஆசு - 1 கவி 2. குற்றம் 3. சிறுமை 4. மெய் சேர்வு (11:62) [568], 5. நாற்கவியுள் ஒன்று (12.11) [601]; ► 1. குற்றம் (8:43) [408] 2. சிறுமை (8:7) [372]
ஆசுகம் - ► அம்பு (7:4) [323]
ஆசுகவி - கொடுத்த பொருளில் தொடித்த இன்பத்துடன் தோமளவாய் அடுத்த பொழுதில் பாடுவது (12 13) [603]
ஆசை - ► திக்கு (5:3) [246]
ஆட்டுக்குட்டி - 1 குட்டம் 2. பறழ் 3 மணங்கு 4. மறி (3:12) [158]
ஆடகம் - ► பொன் (6:1) [294]
ஆடல் - ► 1. கூத்து (9:46) [469] 2. வெற்றி (8:22) [387]
ஆடலுக்குஏற்பது - வெண்டுறை (10:30) [503]
ஆடவர் - ► ஆண் (2.38) [112]
ஆடவர்மயிர் - ► ஓரி (11.56) [562]
ஆடவள் - ► மிதுனஇராசி (1:51) [51]
ஆடி - அட்டமங்கலத்துள் ஒன்று (12.40) [630]; ► 1. உத்திராடம் (1:61) [61] 2. கண்ணாடி (7:19) [338]
ஆடிடம் - காணக: அரங்கு (5:34) [277]
ஆடு - 1. உதள் 2. கிடாய் 3. கொச்சை 4. கொறி 5. செம்மறி 6. தகர் 7. துருவை 8. பள்ளை 9. புருவை 10. மறி 11. மேடம் 12. மேழகம் 13. மை 14. மோத்தை 15. வருடை 16. வற்காலி 17. வெள்ளை (3:10) [156]; ► 1. உம்பல் (3:22) [168] 2. மறி (3:26) [172] 3. மை (11:29) [535] 4. வெற்றி (8:22) [387]
ஆடுதல் - ► ஆலுதல் (11:65) [571]
ஆடுநர் - ► புலவர் (11:36) [542]
ஆடூஉ - ► ஆண் (2:38) [112]
ஆடை - ► 1. அணி (11:26) [532] 2. கலை (11.25) [531] 3. கூறை (7·41) [360] 4. மனவு (11.69) [575]
ஆடைகீறல் - ► கிழி (11:81) [587]
ஆண் - 1. ஆடவர் 2. ஆடூஉ 3. ஆளன் 4. காளையர் 5. குமரன் 6. பூமன் 7. மகன் 8. மைந்தன் (2:38) [112]
ஆண்குறி - 1. இலிங்கம் 2. கோசம் (2 61) [135]
ஆண்டளப்பான் - ► வியாழன் (1·48) [48]
ஆண்டு - அவ்விடம் (5:49) [292]
ஆண்டை - ► இடத்தின்ஐயுற்றசொல் (10:14) [487]
ஆண்பிள்ளைப்பாட்டு - பிள்ளைப்பாட்டின் பொதுப் பருவங்களோடு, இரண்டாம் ஆண்டில் சிறுபறை கொட்டலும், மூன்றாம் ஆண்டில் சிற்றில் அழித்தலும் ஐந்தாம் ஆண்டில் மையாடல், சுரிகை சேர்த்தலுமாகப் பாடுவது (12:63) [653]
ஆண்பூனை - 1 கடுவன் 2. விராளம் 3. வெருகு (3·15) [161]
ஆண்மயிர் - 1. உழை 2. ஓரி 3 குஞ்சி 4. குடுமி 5. சிகை 6. சுருள் 7. தொங்கல் 8. நவிர் 9. பங்கி 10. பித்தை (2:68) [142]; 11 கதுப்பு 12 கேசம் 13 சுரியல் (2:69) [143]
ஆண்மரம் - ► உன்னம் (4·11) [211]
ஆண்முதலை - கராம் (3:48) [194]
ஆண்மை - ► வலி (8:19) [384]
ஆண்வண்டு - 1 சுரும்பு 2. தும்பி 3. மதுகரம் (3:45) [191]
ஆணை - 1. இலாஞ்சினை 2. சூள் 3 மெய்ப்பாடு 4. விறல் (11:47) [553]; 4. தசாங்கத்துள் ஒன்று (12:53) [643]; ► 1. உண்மை (10:3) [476] 2. வியங்கோள் (11:69) [575]
ஆத்தி - 1. ஆர் 2. ஆரம் 3. தாதகி (4.6) [206]; ► 1. ஆர் (11:22) [528] 2. ஆரம் (11:12) [518]
ஆதபம் - ► வெயில் (1:65) [65]
ஆதரத்துமிகுதி - ► ஊக்கம் (11:81) [587]
ஆதரவு - ► விருப்பு (8·24) [389]
ஆதரிசனம் - ► கண்ணாடி (7·19) [338]
ஆதவன் - ► சூரியன் (1:44) [44]
ஆதனம் - எண்வகையோகத்துள் ஒன்று (12:42) [632]
ஆதி - ► 1. அருகன் (1:19) [19] 2 எப்பொருட்கும் இறை (2:8) [82] 3. சிவன் (1:2) [2] 4. நேர்செலல் (9:13) [436] 5. புத்தன் (1:22) [22] 6. முதல் (8·51) [416]

ஆதித்தர் - ► தேவர் (1:33) [33]
ஆதித்தன் - முச்சுடருள் ஒன்று (12:3) [593]; ► சூரியன் (1:45) [45]
ஆதித்தன்மூவகைவீதி - 1. இடபவீதி 2. மிதுனவீதி 3. மேடவீதி (12·8) [598]
ஆதிநூல் - ► வேதம் (10:14) [487]
ஆதிமுதல்வன் - ► புத்தன் (1:21) [21]
ஆதிரை(திருவாதிரை) - 1. அங்கை 2. அரன்தினம் 3. மூதுரை (1:55) [55]
ஆதுலர் - ► வறியோர் (2:26) [100]
ஆதுலர்க்குஉண்டி - முப்பத்திரண்டு அறத்துள் ஒன்று (12:60) [650]
ஆதோரணர் - ► கரிப் பாகர் (2:33) [107]
ஆபகை - ► கங்கை (1:25) [25]
ஆபரணம்(பொது) - 1. அணி 2. இழை 3. கலம் 4. நாண் 5. பூண் (7:18) [337]
ஆபித்தல் - ► கொட்டாவி (9:32) [455]
ஆம் - ► இடைச்சொல் (10:12) [485]
ஆம்பல் - ► 1. பழிச்சொல் (10:4) [477] 2. கள்ளின்பேதம் (6:22) [315] 3. கொம்பு (7:24) [343]
ஆம்பிரம் - ► புளிமா (4·5) [205]
ஆம்பிலம் - ► புளி (4:7) [207]
ஆமட்டுஊண் - முப்பத்திரண்டுஅறத்துள் ஒன்று (12·61) [651]
ஆமணக்கு - ஏரண்டம் (4·25) [225]
ஆமலகம் - ► நெல்லி (4:6) [206]
ஆமா - ► காட்டுஆ (3:10) [156]
ஆமை - 1 கச்சபம் 2 கமடம் 3. கூருமம் (3:51) [197]; 4. நாரணன்பத்துஅவதாரத்துள் ஒன்று (12:52) [642]
ஆய் - ► பெற்றவள் (2:49) [123]
ஆய்ச்சி - ► முல்லைமகள் (2.45) [119]
ஆய்தல் - ► நுண்மை (8:10) [375]
ஆய்ந்தவர் - ► புலவர் (2:6) [80]
ஆயம் - 1 சூது 2 திரள் (11:47) [553]; ► 1. பாங்கி (2:54) [128] 2. மக்கள்கூட்டம் (2:57) [131] 3. மாழை (11:26) [532]
ஆயர் - ► 1 அண்டர் (11:68) [574] 2. முல்லைநிலமக்கள் (2:44) [118]
ஆயரிவஞ்சனை - அறுவகைப் போகபூமியுள் ஒன்று (12:33) [623]
ஆயிரக்கண்ணினன் - ► இந்திரன் (1:12) [12]
ஆயிரம் - நூறுபத்து (12:72) [662]
ஆயிலியம் - 1. அரவின்தினம் 2. கவ்வை (1:56) [56]
ஆயிழை - ► மடவரல் (2:39) [113]
ஆயுகம் - ► வாழ்நாள் (1:70) [70]
ஆயுதக்கூர்மை - 1. அயில் 2. இங்கிதம் 3. நுதி 4. நுனை 5. பூ 6. வசி 7. வடி 8. வயிரம் 9. வள் 10. வார் 11. வை (7:8) [327]
ஆயுதம்(பொது) - 1. ஏதி 2. கடுமுள் 3. கழுமுள் 4. சாதனம் 5. துப்பு 6. படை 7. படைக்கலம் (7:8) [327]; 8. உயிர்வேதனை பன்னிரண்டனுள் ஒன்று (12:54) [644]; ► படை (11:60) [566]
ஆயுள் - ► வாழ்நாள் (1:70) [70]
ஆயுள் மருத்துவ நூலர் - ► மருத்துவர் (2:18) [92]
ஆயோதனதலம் - ► போர்க்களம் (5:38) [281]
ஆயோதனம் - ► பூசல் (9:30) [453]
ஆர் - 1. ஆத்தி 2. கூர்மை 3. தேர்உறுப்பு (11:22) [528]; ► 1. அழகு (8:18) [383] 2. ஆத்தி (4:6) [206] 3. இடைச்சொல் (10·12) [485] 4. உருளிஅகக்கதிர் (7:26) [345]
ஆர்அத்தன் - ► சோழன் (2:12) [86]
ஆர்கலி - ► கடல் (5:13) [256]
ஆர்த்தல் - ► மேவல் (9:40) [463]
ஆர்தல் - 1. உண்டல் 2. நிறைதல் (11:65) [571]; ► 1. நிறைவு (8:13) [378] 2. நுகருதல் (6:16) [309]
ஆர்ப்பு - ► 1. ஆரவாரம் (10:32) [505] 2. யாத்தல் (9:29) [452]
ஆர்வம் - ► 1 அன்பு (8:25) [390] 2. விருப்பு (8·24) [389]
ஆர்வலர் - ► காதலித்தோர் (2:28) [102]
ஆரகூடம் - ► பித்தளை (6:5) [298]
ஆரணியம் - ► காடு (4:17) [217]
ஆரம் - 1. அணி 2. ஆத்தி 3. சந்தனம் 4. மாலை 5. முத்து (11:12) [518]; ► 1. ஆத்தி (4:6) [206] 2. சந்தனம் (4:1) [201] 3. பதக்கம் (7:15) [334] 4. மாதர்முலையணிவடம் (7:15) [334] 5. முத்து (6:3) [296]
ஆரல் - 1. கார்த்திகை 2. செவ்வாய் (11:12) [518]; ► 1. கார்த்திகை (1·54) [54] 2 செவ்வாய் (1·47) [47]
ஆரவாரம் - 1. அரவம் 2. ஆகுலம் 3. ஆர்ப்பு 4. இரைத்தல் 5. உரைத்தல் 6. எக்காளித்தல் 7. கரைத்தல் 8. கலித்தல் 9. கறங்கல் 10. குரைத்தல் 11. ஞெள்ளல் 12. தழங்கல் 13. திரைச்சி 14. துவைத்தல் 15. துழனி 16. தெளித்தல் 17. புரைத்தல் 18. பூசல் (10:32) [505]
ஆராதனை - ► பூசை (9:20) [443]
ஆராய்தல் - 1. ஓர்தல் 2. தூக்கல் 3. தெரிதல் 4. தெளிதல் 5. தேர்தல் (9:16) [439]
ஆரிடம் - எண்மணத்துள் ஒன்று (12:47) [637]; ► நூல் (10:16) [489]

ஆரிடை - ► 1. வழி (5:44) [287] 2. வழுக்குப் பார் (5:39) [282]
ஆரியர் - பதினெட்டுவாசகருள் ஒருவர் (12:55) [645]; ► மிலேச்சர் (2:18) [92]
ஆரியை - ► பார்வதி (1:24) [24]
ஆருதல் - ► உண்டல் (9.4) [427]
ஆலங்கட்டி - ஆலி (1:72) [72]
ஆலம் - ► நஞ்சு (6:23) [316]
ஆலம்பனம் - ► பற்றுக்கோடு (8:48) [413]
ஆலவட்டம் - 1. உக்கம் 2. கால்செய் வட்டம் 3. விசிறி (7:36) [355]
ஆலி - ► 1. ஆலங்கட்டி (1:72) [72] 2. துளி (1:72) [72] 3. வருடம் (1:70) [70]
ஆலிடம் - 1. வலக்கால் மண்டலித்து இடக்கால் முந்துறல் (12·17) [607]; 2. நால்வகை நிலையுள் ஒன்று (12:16) [606]
ஆலுதல் - 1. ஆடுதல் 2. ஒலி (11:65) [571]; ► கூத்து (9.46) [469]
ஆலையம் - ► மாதவர்வாழிடம் (5:29) [272]
ஆவணம் - ► 1 அங்காடி (5·28) [271] 2. தெரு (5:28) [271] 3. புனர்பூசம் (1:55) [55]
ஆவணி - ► அவிட்டமீன் (1.61) [61]
ஆவத்தம் - ஏழ்முகிலுள் ஒன்று (12:67) [657]
ஆவம் - ► அம்புபெய்பாத்திரம் (7:9) [328]
ஆவலங்கொட்டல் - ► வாய்தட்டல் (9.48) [471]
ஆவி - ► 1. உயிர் (9·32) [455] 2. பிட்டு (6:17) [310] 3. வாவி (5:18) [261]
ஆவிற்புனைமணி - ► தார் (11:11) [517]
ஆழம் - 1. அழுந்தயம் 2. கயம் 3. குண்டு (5:19) [262]; ► கயம் (11:41) [547]
ஆழல் - ► சிதலை (3:53) [199]
ஓணம்(திருவோணம்) - 1. அரிதினம் 2. உலக்கை 3. சிரவணம் 4. சோணை 5. வயிரம் (1:61) [61]

ஓத்து - ஓர் இனத்தைச் சேர்ந்த மணிகளை நிரைத்தது(வரிசைப்பட வைப்பது) போல ஓர் இனப் பொருள்களை ஒரு வழி வைத்து உரைப்பது (ஒன்றாக அமைப்பது) (10:18) [491]

ஓத்து உரைப்போர் - கணக்காயர் (2:5) [79]

ஓதம் - ► கடல்திரை (5:14) [257]

ஓதமையாடல் - ► பாடம் (10:17) [490]

ஓதல் - அந்தணர்அறுதொழிலுள் ஒன்று (12:23) [613]; ► சொல்லுதல் (10:2) [475]

ஓதனம் - ► சோறு (6.15) [308]

ஓதி - 1. எகினம் 2. கேசம் (11:33) [539]; ► 1. கல்வி (10 14) [487] 2. பெண்மயிர் (2:68) [142]

ஓதிமம் - ► அன்னம் (3:42) [188]

ஓதிமவாகனன் - ► பிரமன் (1:9) [9]

ஓதினர்க்குஉணவு - முப்பத்திரண்டு அறத்துள் ஒன்று (12:60) [650]

ஓதுதல் - 1. அரசர்அறுதொழிலுள் ஒன்று (12:24) [614] 2. வணிகர்அறுதொழிலுள் ஒன்று (12:24) [614]

ஓதுவித்தல் - அந்தணர்அறுதொழிலுள் ஒன்று (12:23) [613]

ஓதை - ► 1 ஒல் (11:5) [511] 2 கம்பலை (11:21) [527]

ஓம்பல் - ► பாதுகாத்தல் (9:19) [442]

ஓமம் - ► வேள்வி (9.19) [442]

ஓமவிறகு - சமிதை (6:12) [305]

ஓய்தல் - ► நுண்மை (8:10) [375]

ஓர் காலை முடக்கி ஒரு கால் நிறுத்தல் - ► பைசாசம் (12:16) [606]

ஓர்கொடி - ► வஞ்சி (11:9) [515]

ஓர்தல் - ► ஆராய்தல் (9:16) [439]

ஓர்ப்பு - ► தேற்றம் (10:6) [479]

ஓர்மரப்பேர் - ► நாகம் (11:40) [546]

ஓரி - 1. இகலன் (3:15) [161]; 2 ஆடவர்மயிர் 3. நரி (11:56) [562]; ► 1. ஆண்மயிர் (2:68) [142] 2. பிறமயிர் (2:69) [143] 3. முசு (3·18) [164]

ஓரை - 1. இராசி 2. கூற்று 3. மாதர்கூட்டம் (11.51) [557]; ► 1. பாங்கி (2:54) [128] 2. மக்கள்கூட்டம் (2:57) [131] 3. மகள்விளையாட்டு (9:2) [425]

ஓலை - முப்பத்திரண்டுஅறத்துள் ஒன்று (12:61) [651]; ► 1. இலை (4:22) [222] 2. மாழை (11:26) [532]

ஓவர் - ► பாடலில்தாழுமவர் (2:22) [96]
ஓவியம் - ► சித்திரம் (7:45) [364]
ஓவியர் - ► சித்திரகாரர் (2:19) [93]
ஓளி - ► நிரை (6·25) [318]

க

ககபதி - ► கருடன் (3:35) [181]
ககம்(பறவைப்பொது) - 1. பதங்கம் 2. விகங்கம் (3:42) [188]; ► காக்கை (3:38) [184]
ககனம் - ► ஆகாயம் (1:37) [37]
ககுபம் - ► திக்கு (5:3) [246]
கங்கணம் - கடகம் (7 16) [335]
கங்கம் - ► 1. அம்பு (7:4) [323] 2. பருந்து (3·36) [182]
கங்கர் - ► உயர்நிலம் (5:12) [255]
கங்காதரன் - ► சிவன் (1:1) [1]
கங்காளம் - ► கழியென்பு (2.71) [145]
கங்காளன் - ► சிவன் (1:3) [3]
கங்கு - ► வரம்பருகு (5:43) [286]
கங்குல் - ► இரவு (1:65) [65]
கங்கை - 1. அமரர்நதி 2. ஆகாசகாமி 3. ஆபகை 4. சிந்துநதி 5. சீநதி 6. சுரர்ஆறு 7. திரிபதகை 8. பகீரதி 9. மந்தாகினி 10. வானதி 11. விமலை (1:25) [25]
கங்கைகுலத்தர் - ► காராளர் (2:17) [91]
கச்சபம் - பதினெண்புராணத்துள் ஒன்று (12:59) [649]; ► ஆமை (3:51) [197]
கச்சம் - ► அளவை (8:21) [386]
கச்சு - 1. வம்பு 2. வார் (7:43) [362]; ► வம்பு (11 27) [533]
கச்சோலம் - ► வாசப்பண்டம் (4:27) [227]
கசடு - ► 1. குற்றம் (8:43) [408] 2. மலினம் (8:16) [381]
கசிதல் - ► அழுதல் (9:7) [430]
கசிவு - ► வருத்தம் (8:37) [402]
கஞ்சகாரர் - ► கன்னார் (2:20) [94]
கஞ்சம் - நவதாரணையுள் ஒன்று (12:51) [641], ► 1. அப்பம் (6:18) [311] 2. கஞ்சா (4:24) [224] 3. தாமரை (4:37) [237] 4. வெண்கலம் (6:4) [297]
கஞ்சனை - ► கண்ணாடி (7:19) [338]
கஞ்சா - 1. கஞ்சம் 2. குல்லை (4:24) [224]; 3 பூங்காடு 4. விரை (11:23) [529]; ► கள்ளின்பேதம் (6:22) [315]
கஞ்சி - 1. காடி 2. மேழை (6:19) [312]
கஞ்சுகம் - ► சட்டை (7:43) [362]
கஞரல் - ► நெருங்குதல் (9:10) [433]
கஞறல் - ► பொலிவு (8:37) [402]
கட்கம் - ► வாள் (7:5) [324]
கட்சி - 1. இதண் 2. காடு 3. கூடு (11:56) [562]; ► 1. காடு (4:17) [217] 2. கூடு (5:36) [279] 3. மக்கள்உறங்கிடம் (5:35) [278]
கட்செவி - ► அரவு(3 34) [180]
கட்டல் - ► 1. கடைதல் (9:24) [447] 2. களவு (9:6) [429] 3. களைதல் (9:22) [445]
கட்டழகு - 1. அணி 2. எழில் 3. ஏர் 4. கவின் 5. காமர் 6. காரிகை 7. பொற்பு 8. யாணர் 9 வனப்பு 10. வாமம் 11. விடங்கம் (8:18) [383]
கட்டளை - 1. உரைத்துஅறிவது 2 நீண்ட நெறி அறிவது (11:48) [554]; ► துலாம் (1:52) [52]
கட்டளைக்கலித்துறை - ► காரிகை (11·12) [518]
கட்டி - ► 1. அகமகிழ்வு (8 33) [398] 2. சர்க்கரை (6:20) [313]
கட்டி(ப்)பொன் - ► மாழை (11·26) [532]
கட்டில் - 1. பரியங்கம் 2. பாரி 3 மஞ்சம் (7:31) [350]
கட்டினம் - ► பலகை (7:10) [329]
கட்டு - ► காவல் (9:41) [464]
கட்டுரை - ► சொல்லுதல் (10 2) [475]
கடகம் - ► 1. கங்கணம் (7:16) [335] 2. நடன விகற்பம் (9:47) [470] 3. வட்டம் (8:2) [367]
கடத்தல் - 1. அகறல் 2. இகத்தல் 3. உகழ்தல் 4. குதித்தல் 5 தாண்டல் 6. தாவுதல் 7. நடத்தல் 8. நீட்டல் 9. வாவுதல் (9:9) [432]; ► 1. இறத்தல் (11:58) [564] 2. கழிதல் (11:58) [564]
கடம் - ► 1. களரி (11 24) [530] 2. குடம் (7 39) [358] 3. மலைப்பக்கம் (5:10) [253] 4. யானைமதம் (3:30) [176]
கடம்(மதம்)பாய்சுவடு - கரடம் (3:30) [176]
கடம்பல் - ► குமிழ் (4.8) [208]
கடம்பன் - ► முருகன் (1:13) [13]
கடம்பு - 1. கதம்பம் 2 நீபம் 3. விசாலம் (4:9) [209]
கடமை - ► 1. கன்று (3:27) [173] 2. குழவி (3:27) [173]
கடல் - 1. அத்தி 2. அலை 3. அளக்கர் 4. ஆர்கலி 5. இறவாலையம் 6. உப்பு 7. உவரி 8. கார்கோள் 9. கூலராசி 10. சமுத்திரம் 11. சவர் 12. சிந்து 13. திரை 14 நதிபதி 15. நரலை 16 பரவை 17. பௌவம் 18. மகராலையம் 19. முந்நீர் 20 வாருதி 21. வேலாவலையம் 22. வேலை (5:13) [256]; 23. அம்பரம் 24. ஆழி 25. உததி 26. சக்கரம் 27. சலதி 28. சாகரம் 29. நேமி 30. பாரா வாரம் 31. புணரி 32. பூவாடை 33. பெருநீர் 34. மகோததி 35. வாரி 36. வீரை (5:14) [257]; ► 1. அம்பரம் (11:27) [533] 2. திருப்

பொறி (12:68) [658] 3. பரவை (11:71) [577] 4. புணரி (11:69) [575] 5. வாரி (11·38) [544] 6. வேலை (11:52) [558]

கடல்கரை - ► புணரி (11:69) [575]

கடல்திரை - 1. ஓதம் 2. புணரி (5:14) [257]

கடல்துயில்வண்ணன் - ► திருமால் (1·8) [8]

கடல்முரசன் - ► மன்மதன் (1:17) [17]

கடல்வண்ணத்தன் - ► திருமால் (1:6) [6]

கடலர் - ► நெய்தல்கிழவர் (2:46) [120]

கடவுள் - ► புத்தன் (1.22) [22]

கடவுள்ஆனவர் - ► தேவர் (1:33) [33]

கடவுள்பொது - 1. தீர்த்தர் 2. பகவர் 3. பட்டாரகர் 4. பண்ணவர் 5. புங்கவர் (1:34) [34]

கடவுள்மணி - நிதானம் (6:2) [295]

கடவை - ► இறைவை (7:31) [350]

கடற்கரை - 1. பாரம் 2. வேலை (5:15) [258]; ► வேலை (11:52) [558]

கடல்சார்பொழில் - ► கானல் (11·60) [566]

கடல்பிணவு - ► நெய்தல்கிழத்தி (2:46) [120]

கடறு - ► 1. அருநெறி (5:44) [287] 2. காடு (4:17) [217] 3. வழி (5 45) [288]

கடன் - ► 1. அளவை (8:21) [386] 2. இறை (11:50) [556] 3. குடிஇறை (9:35) [458]

கடா - ► போத்து (3 9) [155]

கடாம் - ► யானைமதம் (3:30) [176]

கடாவல் - ► வினாவல் (10:9) [482]

கடி - 1. அச்சம் 2. ஐயம் 3. கரிப்பு 4 காப்பு 5. கூர்மை 6. சிறப்பு 7. புதுமை 8. பேய் 9. மணம் 10. மணம் செய்தல் 11. மிகுதி 12. முன்றேற்று 13. வரைவு 14. விரைவு 15. விளக்கம் (11:82) [588]; ► 1. கந்தம் (11:19) [525] 2. காவல் (9·41) [464] 3. நாறுதல் (8:54) [419] 4. பசாசு (1:36) [36] 5. புதுமணம் (9:3) [426] 6. புதுமை (8:46) [411] 7. முருகு (11:59) [565]

கடிகை - 1. கள் 2 சமயம் 3. நாழிகை 4. வேதம் (11:53) [559]; ► 1. இரப்போர் கலன் (7:40) [359] 2. துண்டம் (7:37) [356] 3. நாழிகை (1:64) [64]

கடிகைகள் - ► மங்கலப்பாடகர் (2:32) [106]

கடித்தல் - ஐந்துஉண்டியுள் ஒன்று (12:21) [611]

கடிதடம் - ► அல்குல் (2:59) [133]

கடிப்பகை - ► கடுகு (4:26) [226]

கடிப்பம் - ► கெண்டிகை (7:34) [353]

கடிப்பிணை - ► காதணி (7.17) [336]

கடு - 1. கடுமரம் 2. விடம் (11:19) [525]; ► 1. திரிபலை (12:8) [598] 2. நஞ்சு (6:23) [316] 3. முள் (4:16) [216]

கடுக்காய் - அரிதகி (4:6) [206]

கடுக்கை - ► கொன்றை (4:3) [203]

கடுகல் - ► விரைவு (9:11) [434]

கடுகு - 1. ஐயவி 2. கடிப்பகை (4:26) [226]

கடுத்தல் - ► கைத்தல் (8:55) [420]

கடுப்பு - 1. கதனம் 2. துரிதம் (9:11) [434]; ► உவமை (8:57) [422]

கடும்பு - ► மித்திரர் (2:37) [111]

கடுமரம் - ► கடு (11:19) [525]

கடுமுள் - ► ஆயுதம் (7:8) [327]

கடுமை - ► 1. கோரம் (8:30) [395] 2. வேகம் (9:43) [466]

கடுவன் - குரங்கு (3:22) [168]; ► 1. ஆண் பூனை (3·15) [161] 2. குரங்கு (3:17) [163]

கடுவை - ► யானை (3·4) [150]

கடை - ► 1. இடவகை (5:50) [293] 2 பூணின் புணர்வு (7:15) [334]

கடைஎழும்சனி - ► உத்திரம் (1:58) [58]

கடைக்கனல் - ► ஊழிஅங்கி (1.41) [41]

கடைக்குளம் - ► உத்திராடம் (1:61) [61]

கடைக்கொள்ளி - 1. அலாதம் 2. இராதம் 3. முளரி (6:13) [306]

கடைகாப்பர் - ► அரசர்துணைவர் (12:57) [647]

கடைச்சி - ► கழனிமகள் (2:47) [121]

கடைதல் - 1. கட்டல் 2. கவர்தல் 3. குடைதல் 4. ஞெலிதல் (9:24) [447]

கடைநாள் - ► இரேபதி (1:63) [63]

கடைப்பிடி - ► 1. கொண்டதுமறவாமை (8:34) [399] 2 தேற்றம் (10·6) [479]

கடையம் - ► அயிராணிஆடல் (9:45) [468]

கடையர் - ► கழனிமள்ளர் (2:47) [121]

கண் - 1. அக்கம் 2. அம்பகம் 3. கோ 4 திருக்கு 5. நயனம் 6. நாட்டம் 7. நேத்திரம் 8. நோக்கம் 9. பார்வை 10. விலோசனம் 11. விழி (2:66) [140]; ► 1. நனவு (11:38) [544] 2. பெருமை (8:6) [371] 3. மூங்கில் (4:13) [213] 4. வேற்றுமை உருபு (10.13) [486]

கண்டகம் - 1. சுரிகை 2. முள்ளி 3. வாள் (11:18) [524]; ► முள் (4:16) [216]

கண்டம் - 1. கழுத்து 2. திரை 3. துண்டம் 4. தேசம் 5. மெய்சேர்கருவி 6. வாள் (11:19) [525]; ► 1. இடுதிரை (7:44) [363] 2. கண்டுசர்க்கரை (6:20) [313] 3. கழுத்து (2:63) [137] 4. கெண்டிகை (7:34) [353] 5. துண்டம் (7:37) [356] 6. நாடு (5:7) [250] 7. மெய்யுறை (7:9) [328] 8. வாள் (7:5) [324]

கண்டல் - ► தாழை (4:14) [214]

கண்டலர் - ► பகைவர் (2:36) [110]
கண்டன் - ► சோழன் (2:12) [86]
கண்டிகை - ► 1. பதக்கம் (7:15) [334] 2. மாதர்முலையணிவடம் (7.15) [334]
கண்டீரவம் - ► சிங்கம் (3:1) [147]
கண்டுசர்க்கரை - 1. கண்டம் 2. பாளிதம் 3. புல்லகண்டம் (6·20) [313]
கண்டுரம் - ► காஞ்சொறி (4:35) [235]
கண்டூர் - ► தினவு (9:25) [448]
கண்டை(மணி) - இபமணி (7:20) [339]
கண்ணல் - ► 1. கருத்து (8.23) [388] 2. நாழிகைவட்டில் (7·19) [338]
கண்ணறை - ► அகலம் (8:10) [375]
கண்ணன் - ► திருமால் (1:5) [5]
கண்ணாடி - 1. ஆடி 2. ஆதரிசனம் 3. கஞ்சனை 4. தர்ப் பணம் 5 படிமக்கலம் (7:19) [338]; 6. முப்பத்திரண்டுஅறத்துள் ஒன்று (12.60) [650]
கண்ணாளர் - 1. அக்கசாலையர் 2. கம்மியர் 3 களனையர் 4 கொல்லர் 5. சிற்பியர் 6. தபதியர் 7. நலனறிவர் 8. மயன்நூலர் 9. யவனர் 10 வித்தகர் (2:19) [93]
கண்ணாளர் - ► நாடகர் (2:32) [106]
கண்ணி - ► மாலை (4:41) [241]
கண்ணேணி - மால் (7 31) [350]
கண்ணோட்டம் - 1. கேண்மை 2. நயம் 3. நாகரிகம் (8:28) [393]
கண்நுதல் - ► சிவன் (1:4) [4]
கண்மருந்து - முப்பத்திரண்டுஅறத்துள் ஒன்று (12 60) [650]
கண்வளர்தல் - ► துஞ்சல் (9:5) [428]
கணக்கன் - ► புதன் (1·47) [47]
கணக்காயர் - ► ஓத்து உரைப்போர் (2:5) [79]
கணக்கு - 1. எண் 2. எழுத்து (10:22) [495]
கணபதி - ► விநாயகன் (1:15) [15]
கணம் - 1. மாத்திரை (1.67) [67]; 2 திரட்சி 3. வட்டம் (11:70) [576]; 4. கும்பி மும்மடி கொண்டது (12·71) [661]; ► 1. கருத்து (8:23) [388] 2. கோட்டி (2:9) [83] 3. பசாசு (1 36) [36] 4 மீன் (1:63) [63] 5 விலங்கின் கூட்டம் (3:29) [175]
கணம் மும்மடி கொண்டது - ► வாகினி (12:71) [661]
கணவம் - ► அரசு (4:3) [203]
கணவரி - ► அலரி (4:25) [225]
கணவன் - 1 இறை 2. காதலன் 3. தலைவன் 4. தோழன் 5. பதி (2:54) [128]; ► 1. துணைவன் (2:55) [129] 2. மணவாளன் (2:50) [124]
கணவன்பிழைத்தோள்மகன் - குண்டகன் (2·30) [104]
கணி - ► வேங்கை (4:9) [209]
கணிகை - ► 1 பொதுமகள் (2 41) [115] 2. மொட்டு (4·40) [240]
கணிச்சி - ► மழு (7:2) [321]
கணித்தல் - ► வரையறுப்பு (9:17) [440]
கணிதம் - 1. அலகு 2. எண் 3. கரணம் (8:51) [416]; ► எண் (10:23) [496]
கணை - 1. திரட்சி 2. பகழி (11.72) [578]; ► 1. அம்பு (7·4) [323] 2 திரள்வடிவு (8·3) [368] 3. பூரம் (1:57) [57]
கணையம் - ► திடர் (7 28) [347]
கத்தபம் - ► கழுதை (3·13) [159]
கத்திகை - ► மாலை (4·42) [242]
கத்தியம் - ► நல்லாடை (7:42) [361]
கத்தூரி - 1 துருக்கம் 2. நாவி 3 நானம் 4. மறி 5. மறிவன் 6. மான்மதம் (3:16) [162], 7. மான்மதம் (6·8) [301]
கதம் - ► 1 கோபம் (9:8) [431] 2. செற்றம் (8·26) [391]
கதம்பம் - ► கடம்பு (4:9) [209]
கதலிகை - ► சிறுகொடி (7:44) [363]
கதவு - 1. கபாடம் 2. புதவு 3. வாரி (7:30) [349]; ► 1. காவல் (9·41) [464] 2 வாரி (11.38) [544]
கதழ்வு - ► விரைவு (9:11) [434]
கதனம் - ► கடுப்பு (9:11) [434]
கதித்தல் - ► கருதுதல் (8:31) [396]
கதிமிக்கசித்திரம் - ► சித்திரகவி (12:14) [604]
கதிர் - 1 குரல் (4:30) [230]; 2. அட்டமூர்த்தத்துள் ஒன்று (12:41) [631]; ► 1. அரி (11:78) [584] 2. ஒளி (8:17) [382] 3. குரல் (11:73) [579] 4. சுடர் (11.41) [547] 5. சூரியன் (1:45) [45]
கதிர்ஒளி - ► கானல் (11.60) [566]
கதிர்த்தொகுதி - ► கற்றை (8·5) [370]
கதிரம் - ► கருங்காலி (4.6) [206]
கதிரவன் - ► கனலி (11:22) [528]
கதிரோன் - ► சூரியன் (1:44) [44]
கதிரோன் தாரகம் போது - ► தாமரை (4:37) [237]
கதுப்பு - ► 1. ஆண்மயிர் (2.69) [143] 2. பெண்மயிர் (2.68) [142]
கதும்-எனல் - ► விரைவுக்குறிப்பு (9:11) [434]
கதுவாய் - ► வடுப்படுதல் (9:25) [448]
கதை - ► 1. எழுத்தின்ஓசைச்சொல் (10:1) [474] 2. காரணச்சொல் (10.9) [482]

**கந்தம்** - 1. கடி 2. கிழங்கு 3. புனல் (புலன்) (11:19) [525]; ► 1. கருணை (4:27) [227] 2. கிழங்கு (2:33) [233] 3. நாறுதல் (8:54) [419]

**கந்தர்ப்பன்** - ► மன்மதன் (1:16) [16]

**கந்தரம்** - 1. கழுத்து 2. மலைமுழை 3. மேகம் (11:29) [535]; ► 1. கழுத்து (2:63) [137] 2. மலைமுழை (5:11) [254] 3. மேகம் (1:71) [71]

**கந்தன்** - ► முருகன் (1:13) [13]

**கந்தி** - ► கமுகு (4:11) [211]

**கந்தித்தல்** - ► நாறுதல் (8:54) [419]

**கந்திருவம்** - ► 1. இசை (10:26) [499] 2. குதிரை (3:6) [152]

**கந்திருவர்** - 1. கின்னரர் 2. தந்திரர் 3 யாழ் உடையவர் 4. வீணைத்தனுவினர் (1:35) [35]; 5 பதினெண்கணத்துள் ஒன்று (12:56) [646]

**கந்து** - ► 1. தூண் (7:29) [348] 2. பற்றுக்கோடு (8 48) [413]

**கந்துகம்** - ► 1. குதிரைப்பண்பு (3.7) [153] 2. பந்து (7:37) [356]

**கந்துள்** - ► கரி (6:13) [306]

**கப்பணம்** - ► கைவேல் (7:5) [324]

**கபாடம்** - ► கதவு (7·30) [349]

**கபாலம்** - ► தலையோடு (2.71) [145]

**கபாலி** - ► சிவன் (1:1) [1]

**கபிலம்** - ► குரால்நிறம் (8:15) [380]

**கபிலை** - ► பசுப்பெண்பால் (3:8) [154]

**கபோதம்** - ► புறா (3:40) [186]

**கபோலம்** - ► கவுள் (2:65) [139]

**கம்** - ► தலை (2:67) [141]

**கம்பம்** - ► 1. தூண் (7:29) [348] 2. நடுக்குதல் (9:18) [441]

**கம்பலம்** - ► மேற்கட்டி (7:43) [362]

**கம்பலை** - 1. அச்சம் 2. இன்னாங்கு 3. ஓதை 4. நடுக்கம் (11.21) [527]; ► 1. அச்சம் (8:39) [404] 2. ஓசை (11:4) [510] 3. துன்பம் (8:41) [406]

**கம்பளம்** - ► சம்படாம் (7:42) [361]

**கம்பளர்** - ► கழனிமள்ளர் (2:47) [121]

**கம்பு** - ► சங்கம் (3.50) [196]

**கம்புள்** - ► சம்பங்கோழி (3:43) [189]

**கம்மியர்** - ► 1. கண்ணாளர் (2:19) [93] 2. தொழில்காரர் (2:23) [97]

**கமகன்** - ஞாபகம், செம்பொருளாம் அவற்று எப்பொருளும் கலை தெரியும்படி பாட வல்லோன் (12:11) [601]

**கமகன்** - நாற்புலவோருள் ஒருவர் (12:10) [600]

**கமடம்** - ► ஆமை (3:51) [197]

**கமண்டலம்** - 1. கரண்டகம் 2. குண்டிகை (7:33) [352]

**கமர்** - ► விடர் (5:12) [255]

**கமலக்கண்ணன்** - ► திருமால் (1:6) [6]

**கமலம்** - ► நீர் (1:42) [42]

**கமழல்** - ► நாறுதல் (8:54) [419]

**கமுகு** - 1. கந்தி 2. பூக்கம் 3. பூகம் (4:11) [211]; ► புறக்காழ்மரம் (4:18) [218]

**கமை** - ► களரி (11:24) [530]

**கயக்கு** - ► சோர்வு (9:35) [458]

**கயம்** - 1. ஆழம் 2. கரிக்கன்று 3. நீர் (11:41) [547]; ► 1. ஆழம் (5:19) [262] 2. இளமை (8.48) [413] 3. யானை (3:4) [150] 4. வாவி (5:18) [261]

**கயம்(யானை) செல்வழி** - தண்டம் (5:36) [279]

**கயம்(யானை) மேவுஇடம்** - 1. சேவகம் 2 தண்டம் (5:36) [279]

**கயமுனி** - ► கரிக்கன்று (3:5) [151]

**கயவாய்** - ► கருங்குருவி (3:39) [185]

**கயவு** - ► 1 களவு (9·6) [429] 2. பெருமை (8:6) [371] 3. மிகுதி (8:7) [372] 4. மென்மை (8:12) [377]

**கயிரவம்** - ► அரிபயில்அல்லி (4:39) [239]

**கயில்** - ► 1. பிடரி (2:63) [137] 2. பூணின் புணர்வு (7:15) [334]

**கயிலாயன்** - ► சிவன் (1:1) [1]

**கயிற்றுவலை** - சாலம் (7:38) [357]

**கயிறு** - 1. நாண் 2. பாசம் (7:38) [357]; ► பாசம் (11:55) [561]

**கயினி** - ► கலன்கழிமகளிர் (2:40) [114]

**கர்க்கடகம்** - 1. அலவன் 2. களவன் 3. குளிர் 4. ஞெண்டு (1:51) [51]

**கரகம்** - 1. கன்னல் 2. சிரகம் (7:39) [358]; ► 1. கன்னல் (11:23) [529] 2. சிரகம் (11:43) [549]

**கரடம்** - ► கடம்பாய்சுவடு (3:30) [176]

**கரடி** - 1. உளியம் 2. எண்கு 3. பல்லம் (3·14) [160]; ► 1. ஒருத்தல் (3:20) [166] 2. பல்லம் (11:58) [564]

**கரடு** - ► காலடி (2:59) [133]

**கரண்டகம்** - ► கமண்டலம் (7:33) [352]; ► கெண்டிகை (7.34) [353]

**கரணத்தினவர்** - ► அரசர்துணைவர் (12:57) [647]

**கரணம்** - 1. எண் 2. கல்வி 3. காமப்பகுதி 4. பல்வகைஆடல் 5. பல்வகைப்பாடல் 6. முதற்பொருட்டாம்துணைக்காரணம் (11:34) [540]; ► 1. எண் (10:23) [496] 2. கணிதம் (8:51) [416] 3. கற்புழை (5:11) [254] 4. நடன் விகற்பம் (9:47) [470]

கரத்தல் - கரவு *(9:20)* *[443]*
கரந்தை - எண்வகைப் போர்த்தொழிலுள் ஒன்று (12:47) [637]
கரபத்திரம் - ► ஈர்வாள் (7:6) [325]
கரம் - ► 1. எழுத்தின்சாரியை *(10:13)* *[486]* 2. கழுதை (3:13) [159] 3. குடிஇறை (9:35) [458] 4. கைத்தலம் (2:62) [136]
கரம் கோத்து ஆடல் - ► குரவை *(9:46)* [469]
கரம்பை - ► முதுநிலம் *(5:45)* *[288]*
கரவடர் - ► கள்வர் (2:28) [102]
கரவாளம் - ► வாள் (7:5) [324]
கரவீரம் - ► அலரி (4:25) [225]
கரவு - ► 1. கரத்தல் (9:20) [443] 2. களவு (9:6) [429]
கரளதரம் - ► அரவு(3:34) [180]
கரளம் - ► நஞ்சு (6:23) [316]
கரா - ► முதலை (3:48) *[194]*
கராம் - ► 1. ஆண்முதலை (3·48) [194] 2. கன்று (3.27) [173]
கரி - 1. இருந்து 2. கந்துள் (6:13) [306]; 3. நவதாரணையுள் ஒன்று *(12:51)* *[641]* 4. நாற்படையுள் ஒன்று *(12:9)* [599]; ► 1. களிறு (3:20) [166] 2. பிணா (3:24) [170] 3. போதகம் (3:25) [171] 4. *யானை* (3·3) [149]
கரிக்(யானைக்) கழுத்திடு கயிறு - 1. கவடு 2. புரோசை (7:12) [331]
கரிக்(யானைக்) கன்று - 1. கயமுனி 2. களபம் 3. துடியடி 4. போதகம் (3:5) [151]; ► கயம் (11.41) [547]
கரிகாடு - 1. சுரம் 2. பொச்சை (4·16) [216]
கரிச்(யானைச்) செவி - 1. கன்னம் 2. தாலம் (3:30) [176]
கரிப்(யானைப்) பாகர் - 1. ஆதோரணர் 2. வாதுவர் (2:33) [107]
கரிப்பு - ► கடி (11:82) [588]
கரிமிசையோர் - ► அரசர்துணைவர் (12:57) [647]
கரியவன் - ► சனி (1:49) [49]
கரியன் - 1. களவன் 2. சோரன் (2:30) [104]
கரியோன் - ► இராகு (1:50) [50]
கரில் - 1 கூர்த்தல் 2. கொடுமை (11:70) [576]; ► கைத்தல் (8·55) [420]
கரிவட்டம் - ஏழ்நரகத்துள் ஒன்று (12:37)[627]
கரிள் - ► பரி வாய்புகுகருவி *(7:11)* *[330]*
கரு - ► சூல் (3:33) *[179]*
கருங்காலி - கதிரம் *(4:6)* *[206]*
கருங்குரங்கு - யூகம் (3:18) [164]
கருங்குருவி - 1. கயவாய் 2. வலியன் (3:39) *[185]*
கருங்குவளை - *1.* இந்தீவரம் 2. காவி 3. குவலையம் 4. நீலோற்பலம் 5. பானல் (4:38) [238]
கருங்கை - 1. கொல்லும்தொழில் 2. வன்தொழில் (11:31) [537]
கருடபதாகையன் - ► திருமால் (1:6) [6]
கருடர் - பதினெண்கணத்துள் ஒன்று (12 56) [646]
கருடன் - 1. அரவுஆசனத்தன் 2. உவணன் 3. ககபதி 4 கலுழன் 5. புள்அரசன் 6. வயிநதேயன் 7. விநதாசுதன் (3·35) [181]
கருணாகரன் - ► திருமால் (1:7) [7]
கருணி - ► யானை (3:4) [150]
கருணை - 1. கந்தம் (4.27) [227] 2 நவரசத்துள் ஒன்று (12:51) [641]; ► அருள் (8.25) [390]
கருத்து - 1. இங்கிதம் 2. உள்ளல் 3. உன்னல் 4 கண்ணல் 5. கணம் 6. கவைஞர் 7. குறிப்பு 8. சிந்தை 9. செத்து 10. நினைவு 11. போதம் 12. விரும்பல் (8:23) [388]; ► செத்து (11:33) [539]
கருதலர் - ► பகைவர் (2:36) [110]
கருதுதல் - 1. உணருதல் 2. கதித்தல் 3. குறித்தல் 4. சுட்டல் (8 31) [396]
கருதுதல் - ► மதித்தல் (8:31) [396]
கருந்தனம் - ► பொன் (6·1) [294]
கருந்தாது - ► இரும்பு (6:5) [298]
கருந்தினை - இறடி (4:30) [230]
கருநந்து - ► நத்தை (3:51) [197]
கருநிலம் - வனம், மலை, புனல் ஆகிய வற்றில் மிகுந்தது (5:23) [266]
கருப்(ம்)புவில் - காண்டம் (1:73) [73]
கருப்பூரம் - பளிதம் (6:8) [301]
கருப்பை - ► எலி (3·19) [165]
கரும்பாளி - ► மன்மதன் (1:17) [17]
கரும்பிள்ளை - ► காக்கை (3:38) [184]
கரும்பு - 1. இக்கு 2. கழை 3. கன்னல் 4.வேழம் (4:12) [212]; 5. எழுகடலுள் ஒன்று (12:35) [625]; ► புனர்பூசம் (1:55) [55]
கருமணல் - அறல் (5:21) [264]; ► அறல் (11:50) [556]
கருமபாகை - ► வேதநூலின் இருவகைப் பொருள் (10:15) [488]
கருமம் - ► தொழில் (9:1) [424]
கருமா - ► பன்றி (3:13) [159]
கருமுகை - ► சிறுசெண்பகம் (4.34) [234]
கருமை(நிறம்) - 1. அஞ்சனம் 2. களங்கம் 3. கறை 4. கார் 5. காளகம் 6. காளிமம் 7. நீலம் (8:16) [381]; ► 1. களம் (11:24) [530] 2. கார் (11:22) [528] 3. மா (11:10) [516] 4. மால் (11:10) [516] 5. வண்ணம் (8:13) [378]

கருவி - 1. கலனை 2. கவசம் 3. கொண்டல் 4 தொகுதி 5. தொடர் 6. படைக்கலம் 7. பல்லியம் 8. பூண் 9. யாழ் (11:51) [557]; ► யாழ் (7:25) [344]
கருவி இசைக்குமவர் - ► இயவர் (2:22) [96]
கருவிப்புட்டில் - ► படையுறை (7:9) [328]
கருவூர் - வஞ்சி (5:27) [270]; ► வஞ்சி (11:9) [515]
கருள் - ► நல்லாடை (7 42) [361]
கருனை - ► பொரிக்குங்கறி (6:17) [310]
கரைத்தல் - ► ஆரவாரம் (10:32) [505]
கரைதல் - 1. கூவல் 2. மொழிதல் (11:73) [579]; ► 1. சொல்லுதல் (10:2) [475] 2. விளித்தல் (10:8) [481]
கல் - ► மலை (5·8) [251]
கல்-எனல் - ► அனுகரணஓசை (10:31) [504]
கல்திரள் - சிலை (5:11) [254]
கல்லகம் - ► மலை (5·8) [251]
கல்லகாரம் - ► குளிரி (4·36) [236]
கல்லு - சிற்பவினைக்குறிப்புப்பத்தனுள் ஒன்று (12:53) [643]
கல்லூரி - கல்வியூரி (5:32) [275]
கல்லோலம் - ► நீர்த்திரை (5:15) [258]
கல்வி - 1. அறிவு 2. ஓதி 3. கலை 4. கேள்வி 5. சால்பு (10:14) [487]; 6. நால்வகைப் புண்ணியத்துள் ஒன்று (12:16) [606]; ► 1. கரணம் (11:34) [540] 2. கலை (11:25) [531] 3. கேள்வி (11·39) [545]
கல்விபயில்களம் - ► கழகம் (5:33) [276], (5:34) [277]
கல்வியூரி - ► கல்லூரி (5:32) [275]
கலக்கம் - 1 கலங்கல் 2. துருமம் 3. புலம்பு 4 முதிர்ப்பு 5. வெதிர்ப்பு 6. வெருவல் 7. வெறிப்பு (9:17) [440]; ► அழுதல் (9:7) [430]
கலங்கல் - ► 1. கலக்கம் (9:17) [440] 2. வருத்தம் (8:37) [402]
கலங்கல்நீர் - ► கலுழி (11:35) [541]
கலனை(குதிரை) - 1. படை 2. பண் 3. பருமம் 4. பல்லணம் (7:11) [330]
கலத்தல் - 1. அளாவல் 2. கலாவல் 3. துளாவல் (9:38) [461]
கலதி - ► மூதேவி (1:28) [28]
கலப்பை - 1. அலம் 2. கலனை 3. நாஞ்சில் 4. படை (7:28) [347]; ► பலஉறுப்பாகிய ஓர்உறுப்பு (7:28) [347]
கலபம் - ► மயில்பீலி (3:38) [184]
கலம் - ► ஆபரணம் (7:18) [337]
கலர் - ► கீழ்மக்கள் (2:27) [101]
கலவர் - ► நெய்தல்கிழவர் (2:46) [120]
கலவி - ► மெய்க்கூட்டம் (9:22) [445]
கலவைச்சேறு - ► சாந்து (6:8) [301]
கலன்கழிமகளிர் - 1. கயினி 2. கைம்மை (2:40) [114]
கலனை - ► 1. கருவி (11:51) [557] 2. கலப்பை (7:28) [347] 3. பலஉறுப்பாகிய ஓர்உறுப்பு (7:28) [347]
கலாபம் - ► 1. அரைப்பட்டிகை (7:14) [333] 2. பீலியில்கட்டும்கவிகை (7:35) [354]
கலாம் - ► கோபம் (9:8) [431]
கலாவல் - ► கலத்தல் (9:38) [461]
கலிகை - ► மொட்டு (4:40) [240]
கலிங்கம் - ► 1. கூறை (7:41) [360] 2 தானை (11:33) [539]
கலிங்கர் - பதினெட்டுவாசகருள் ஒருவர் (12:55) [645]
கலித்தல் - 1. எழுச்சி 2. ஒலித்தல் (11:35) [541]; ► 1. ஆரவாரம் (10:32) [505] 2. எழுச்சிமிகுதி (9:36) [459] 3. ஓசை (11:4) [510] 4. பொலிவு (8:37) [402]
கலிப்பா - முரற்கை (10:21) [494]
கலினம் - ► பரி வாய்புகு கருவி (7:11) [330]
கலீகம் - ► வன்னி (4:6) [206]
கலுழ்தல் - ► அழுதல் (9:7) [430]
கலுழன் - ► கருடன் (3:35) [181]
கலுழி - 1. கலங்கல்நீர் 2. கான்யாறு (11:35) [541]; ► முல்லைநிலக்கான்யாறு (5:16) [259]
கலை - 1. ஆடை 2. கல்வி 3. காலநுட்பம் 4. நூல் 5. முசுஏறு (11:25) [531]; ► 1. அரைப் பட்டிகை (7:14) [333] 2. இரலை (11·58) [564] 3. உடை (7:35) [354] 4. உம்பல் (3:22) [168] 5. கல்வி (10:14) [487] 6. கால நுட்பம் (1:63) [63] 7. கூறை (7·41) [360] 8. மகரம் (1:53) [53] 9. மரக்காழ் (4:18) [218] 10. மான் (3:14) [160] 11. முசு (3:18) [164]
கலைஞர் - ► புலவர் (2:6) [80]
கலைநாயகன் - ► புத்தன் (1:21) [21]
கலைமகள் - 1. காயத்திரி 2. கீர்வாணி 3. சாவித்திரி 4. சொல்லின்கிழத்தி 5. தாமரை ஆசனநாரி 6. நாமகள் 7. பனுவல்தமிழ்மடந்தை 8. பாமகள் 9. பாரதி 10. பால்நிறத்தி 11. வாணி 12. வெள்ளைநளினவல்லி (1:29) [29]
கலையுணர்ந்தோன் - ► அருகன் (1·20)[20]
கலைவல்லவர் - கவிஞர் (2:5) [79]
கவ்வை - ► 1. ஆயிலியம் (1:56) [56] 2. துன்பம் (8:41) [406]

கவசம் - ► 1. அரணம் (11:73) [579] 2. கருவி (11:51) [557] 3. மெய்யுறை (7:9) [328]
கவடி - ► பலகறை (6:7) [300]
கவடு - ► 1. கரிக்கழுத்திடுகயிறு (7:12) [331] 2. குற்றம் (8:43) [408]
கவண் - கவணை (7:8) [327]
கவணை - ► கவண் (7·8) [327]
கவந்தம் - ► 1. மெய்க்குறை (2 57) [131] 2. மேகம் (1:43) [43]
கவர்த்தநெறி - கவலை (5:44) [287]
கவர்தல் - ► கடைதல் (9:24) [447]
கவர்நெறி - ► கவலை (11:28) [534]
கவரி(மான்) - 1. எகினம் 2. சவரம்(சவரி) 3. மானமிருகம் (3:12) [158], ► 1. எகினம் (11:44) [550] 2. எருமை (3:9) [155] 3. ஏறு (3:20) [166] 4. ஒருத்தல் (3:20) [166] 5. கன்று (3·27) [173] 6. சாமரம் (6:11) [304] 7. தேர் (7:26) [345] 8. பிணை (3:23) [169]
கவலை - 1. கவர்நெறி 2. துன்பம் (11 28) [534]; ► 1. அச்சம் (8 39) [404] 2. கவர்த்தநெறி (5 44) [287] 3. துன்பம் (8·41) [406]
கவவு - ► அகத்தீடு (9 20) [443]
கவளம் - ► சோறு (6:15) [308]
கவனம் - ► 1 ஓசை (11 4) [510] 2. காடு (4:17) [217]
கவான் - ► துடை (2·59) [133]
கவி - 1. ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் ஆகிய நாற்கவிகளைப் பாடுவோன் (12:11) [601]; 2. நாற்புலவோருள் ஒருவர் (12:10) [600]; ► 1. அரி (11:78) [584] 2. ஆசு (11:62) [568] 3. குரங்கு (3:17) [163] 4. யாப்பு (10:21) [494]
கவிகள் - ► புலவர் (11:36) [542]
கவிகை - 1. குடை 2. கொடை (11:45) [551]; ► வெண்குடை (7:36) [355]
கவிஞர் - ► 1. கலைவல்லவர் (2.5) [79] 2. பாவலர் (2.32) [106] 3. புலவர் (2:6) [80]
கவித்தல் - ► மூடுதல் (9.34) [457]
கவிதை - ► யாப்பு (10:21) [494]
கவிப்பர் - ► வணிகர் (2:16) [90]
கவிப்பின்சென்றோன் - ► திருமால் (1:8) [8]
கவிர் - ► முருக்கு (4.8) [208]
கவின் - ► கட்டழகு (8:18) [383]
கவுசலர் - பதினெட்டுவாசகருள் ஒருவர் (12·55) [645]
கவுஞ்சம் - எழுதீவுள் ஒன்று (12:34) [624]
கவுண்டர் - ► சண்டாளர் (2:21) [95]
கவுத்துவம் - ► காணப்படாமணி (12:50)[640]
கவுதாரி - 1. சிதல் 2. பூழ் (3:39) [185]
கவுந்தி - ► வரத்தெழுமகளிர் (2:41) [115]
கவுரவர் - ► குருகுலமன்னன் (2:10) [84]
கவுரி - ► 1. காளி (1:27) [27] 2. கொற்றவை (1:30) [30] 3. பார்வதி (1:24) [24]
கவுரியன் - ► பாண்டியன் (2:13) [87]
கவுள் - 1 கபோலம் 2. கொடிறு (2:65) [139]
கவைஞர் - ► கருத்து (8:23) [388]
கவையம் - ► காட்டுஆ (3:10) [156]
கழகம் - 1. கல்விபயில்களம் (5:33) [276]; 2. கல்விபயில்களம் 3 சூதுபயில்களம் 4 படைபயில்களம் 5. வல்பயில்களம் (5:34) [277]
கழங்கு - 1. மூழல் (4:28) [228], 2. அணங் காட்டு 3. கொடிகழல் (11:49) [555]; ► வேலன்ஆடல் (9:48) [471]
கழல் - 1. கொடி (4:28) [228]; 2. கால் 3. காலடித்தோல் 4. காலணி (11:61) [567]; ► 1. காலணிவடம் (7:14) [333] 2. துளைப் பொருள் (8 5) [370] 3. தோல்செருப்பு (7:38) [357] 4 பாதம் (2:59) [133]
கழலை - அரலை (2:71) [145]; ► அரலை (11·57) [563]
கழறல் - ► உறுதிக்கட்டுரை (10:6) [479]
கழனி - ► 1. மருதம் (5 22) [265] 2. வயல் (5:41) [284]
கழனிமகள்(மருதநிலப்பெண்) - 1. உழத்தி 2. கடைச்சி (2:47) [121]
கழனிமள்ளர்(மருதநிலமக்கள்) - 1. உழவினர் 2. கடையர் 3 கம்பளர் 4 களமர் 5. தொழுவர் 6. மள்ளர் (2·47) [121]
கழாய்க்கூத்தர்(கழைக்கூத்தர்) - வேழம்பர் (2:23) [97]
கழி - ► உப்பளம் (5:17) [260]
கழிதருநாள் - ► வைகல் (11:14) [520]
கழிதல் - 1. இகத்தல் 2. கடத்தல் 3. சாவு (11:58) [564]; ► நிறைவு (8:13) [378]
கழிந்தவர்களைக் காட்டி உரைப்பது - ► முதுமொழிக்காஞ்சி (10:24) [497]
கழிபிறப்பு - உம்மை (8:47) [412]
கழிமுகம் - 1. அதோமுகம் 2. ஓடை 3 புகார் (5:17) [260]
கழியென்பு - கங்காளம் (2:71) [145]
கழிவு - ► உள்ளநெறியில்சிறத்தல் (8:11) [376]
கழு - ► களரி (11:24) [530]
கழுக்கடை - கழுமுள் (7:6) [325]
கழுகு - 1. உவணப்புள் 2. எருவை (3:35) [181]

கழுத்து - 1. கண்டம் 2. கந்தரம் 3. களம் 4. கிரீபம் 5. மிடறு (2:63) [137]; ► 1. கண்டம் (11:19) [525] 2. கந்தரம் (11:29) [535]

கழுது - 1. இதணம் 2. பேய் 3. வண்டு (11:52) [558]; ► 1. பசாசு (1:36) [36] 2. பரண் (7:31) [350] 3. வண்டு (3:44) [190]

கழுதை - 1. அத்திரி 2. கத்தபம் 3. கரம் 4. கோகு 5. வாலேயம் 6. வேசரி (3:13) [159]; 7. எண்திசைக்குறியுள் ஒன்று (12:40) [630]; ► 1. கன்று (3:27) [173] 2. பிணா (3:24) [170] 3. பெட்டை (3:23) [169]

கழுதைஊரி - ► மூதேவி (1:28) [28]

கழுமல் - 1. பற்று 2. மயக்கம் (11:22) [528]; ► உன்மத்தம் (8:35) [400]

கழுமுள் - ► 1. ஆயுதம் (7:8) [327] 2. கழுக்கடை (7:6) [325] 3. சூலப்படை (7:1) [320]

கழுவுதல் - ► காருகவினைத்தொழில் (12:25) [615]

கழை - ► 1. கரும்பு (4:12) [212] 2. பணை (11:26) [532] 3. மூங்கில் (4:13) [213]

கழையான் - ► சிவன் (1:2) [2]

கள் - 1. இக்கு 2. சாதி 3. சாறு 4. சுரை 5. தணியல் 6. தேறல் 7. தேன் 8. தொண்டி 9. தோப்பி 10. நறவு 11. நனை 12. படு 13. பானம் 14. பிரசம் 15. பிழி 16. மட்டு 17. மது 18. முருகு 19. வடி 20. வழி (6:21) [314]; ► 1. கடிகை (11:53) [559] 2. களரி (11:24) [530] 3. சாறு (11:13) [519]

கள்வர் - 1. கரவடர் 2. சோரர் 3. பகைவர் (2:28) [102]

கள்வன் - ► முசு (3:18) [164]

கள்விற்போர் - 1. துவசர் 2. படுவர் 3. பழையர் (2:21) [95]

கள்ளல் - ► களவு (9:6) [429]

கள்ளின்பேதம் - 1. ஆம்பல் 2. உணா 3. கஞ்சா 4. சக்கரம் 5. சாலி 6. சுமாலி 7. சுலோகி 8. குழிகை 9. தமம் 10. நள்ளி 11. பாடலி 12. பாலி 13. மதுகரம் 14. மருட்டம் 15. மாதுவம் 16. மாலி 17. முண்டகம் 18. விசுணி 19. வேலி (6:22) [315]

களங்கம் - ► 1. கருமை (8.16) [381] 2. குற்றம் (8:43) [408]

களதபுதம் - ► வெள்ளி (6:5) [298]

களப்பரர் - பதினெட்டுவாசகருள் ஒருவர் (12:55) [645]

களபம் - ► 1. கரிக்கன்று (3:5) [151] 2. சாந்து (6:13) [306] 3. யானை (3:4) [150]

களம் - 1. கருமை 2. பொருநிலம் 3. மிடறு (11:24) [530]; ► 1. இடம் (5:46) [289] 2. கழுத்து (2:63) [137] 3. களா (4:10) [210]

களமர் - ► 1. கழனிமள்ளர் (2:47) [121] 2. காராளர் (2:17) [91]

களரி - 1. கடம் 2. களம் 3. கழு 4. கள் 5. செருசெய் நிலம் 6. வில் (11:24) [530]; ► 1. காடு (4:17) [217] 2. முதுநிலம் (5:45) [288]

களவன் - ► 1. கர்க்கடகம் (1:51) [51] 2. கரியன் (2:30) [104] 3. நண்டின்ஆண் (3:52) [198]

களவு - 1. கட்டல் 2. கயவு 3. கரவு 4. கள்ளல் 5. பட்டினம் 6. வடம் (9:6) [429]

களனையர் - ► கண்ணாளர் (2:19) [93]

களா - களம் (4:10) [210]

களி - ► உன்மத்தம் (8:35) [400]

களிங்கம் - ► மலினம் (8:16) [381]

களிறு - 1. கரி(ஆண்) 2. கேழல்(ஆண்) (3:20) [166]; ► 1. அத்தம் (1:58) [58] 2. தகர் (3:21) [167] 3. யானை (3:3) [149] 4 விலங்கினில்ஏற்றை (3:19) [165]

களேபரம் - ► 1 உடம்பு (2:58) [132] 2. பிணம் (2:58) [132]

களைதல் - 1. கட்டல் 2. குற்றல் 3. பறித்தல் (9.22) [445]

கற்கடகம் - ► நண்டு (3:52) [198]

கற்கி - நாரணன்பத்துஅவதாரத்துள் ஒன்று (12:52) [642]; ► குதிரை (3:6) [152]

கற்பகம் - ► தருவின்வகை (4:1) [201]

கற்பகம்சேர்கொடி - காமர்வல்லி (4:32) [232]

கற்பம் - 1. அயன்ஆயுள் 2. தேவர்உலகு (11:73) [579]; ► நான்முகன்வாழ்நாள் (1:69) [69]

கற்புழை - கரணம் (5:11) [254]

கற்றாழை - குமரி (4:28) [228]

கற்றை - 1. கதிர்த்தொகுதி 2. மயிர்த்தொகுதி (8:5) [370]

கற்றோர் - ► 1. பாவலர் (2:32) [106] 2 புலவர் (2:6) [80]

கறங்கல் - ► 1. ஆரவாரம் (10:32) [505] 2. ஓசை (11:4) [510] 3. சுழற்சி (8:32) [397]

கறி - ► மிளகு (4:26) [226]

கறுப்பு - ► 1. கோபம் (9:8) [431] 2. சினக்குறிப்பு (8:27) [392] 3. செற்றம் (8:26) [391]

கறுவு - ► செற்றம் (8:26) [391]

கறுவுதல் - ► கொண்டதுமறவாமை (8:34) [399]

கறை - 1. உதிரம் 2. திறை 3. நிறம் (11:16) [522]; ► 1. உரல் (7:30) [349] 2. கருமை (8:16) [381] 3. குடிஇறை (9:35) [458] 4. மலினம் (8:16) [381]

**கறைக்கடுஉண்டவன்** - ► சிவன் (1:4) [4]
**கறைக்கண்டன்** - ► சிவன் (1:3) [3]
**கறையடி** - ► யானை (3:3) [149]
**கறையான்** - ► சிதலை (3:53) [199]
**கன்மபூமிப்பயன்** - 1. உழவு 2. சிறப்பு 3.தொழில் 4. புகழ் 5. வாணிபம் 6. வித்தை (12:31) [621]
**கன்றல்** - ► சினக்குறிப்பு (8:27) [392]
**கன்று** - 1 ஒட்டகம் 2. கடமை 3. கராம் 4. கவரி 5. கழுதை 6. மரை 7. மான் 8. யானை 9. வாசி (3:27) [173]; 10. உழை (3:28) [174]; ► 1. கைவளை (7:16) [335] 2. சிறுமை (8:7) [372] 3. பார்ப்பினம் (3:25) [171] 4. மரத்தின்இளமை (4:21) [221]
**கன்னம்** - ► 1. கரிச்செவி (3:30) [176] 2. காது (2:67) [141] 3. கொல்லன்சின்னத்தட்டு (7:35) [354]
**கன்னல்** - 1. கரகம் 2. குடம் 3. சருக்கரை 4. நாழிகைவட்டில் (11:23) [529], ► 1. கரகம் (7:39) [358] 2. கரும்பு (4:12) [212] 3. குடம் (7:39) [358] 4. சர்க்கரை (6:20) [313] 5. நாழிகை (1:64) [64] 6. வேழம் (11.17) [523]
**கன்னார்** - 1. கஞ்சகாரர் 2. கன்னுவர் (2:20) [94]
**கன்னி** - குமரி (8:51) [416]; ► 1 அத்தம் (1:58) [58] 2. கொற்றவை (1:31) [31]
**கன்னிஇராசி** - பெண்பெயர்எல்லாம் (1:52) [52]
**கன்னிகாரம்** - ► கோங்கு (4:4) [204]
**கன்னிமகன்** - கானீனன் (2 31) [105]
**கன்னுவர்** - ► கன்னார் (2:20) [94]
**கனகதர்** - ► சண்டாளர் (2:21) [95]
**கனகம்** - ► பொன் (6:1) [294]
**கனசெல்வன்** - ► குபேரன் (1:18) [18]
**கனம்** - 1. செறிவு 2. மேகம் (11:63) [569]; ► 1. உடம்பு (2:58) [132] 2. மேகம் (1:71) [71]
**கனமணி** - 1. அரதனம் 2. சலாகை (6:3) [296]
**கனரதம்** - ► மேகம் (1:43) [43]
**கனல்** - உயிர்வேதனை பன்னிரண்டனுள் ஒன்று (12:54) [644]; ► 1. அங்காரகன் (1:39) [39] 2. சுடர் (11:41) [547] 3. முளரி (11:40) [546]
**கனல்அணங்கு(தீக்கடவுள்)** - பாவகன் (1:41) [41]
**கனலல்** - ► சினக்குறிப்பு (8:27) [392]
**கனலி** - 1. கதிரவன் 2. பாவகன் (11:22) [528], ► 1. சூரியன் (1:44) [44] 2. நெருப்பு (1:40) [40] 3. பன்றி (3:13) [159]
**கனவட்டம்** - ► குதிரைப்பண்பு (3:7) [153]
**கனவு** - 1. துயில் 2. பொய் 3. மயக்கம் (11:38) [544]; ► துஞ்சல் (9:5) [428]
**கனி** - ► பழம் (4:23) [223]
**கனிக்காழ்** - ► அரலை (11:57) [563]
**கனி, கிழங்குஉண்பவர்** - ► பற்றற்றோர் (2:2) [76]
**கனிட்டர்** - ► கீழ்மக்கள் (2:27) [101]

## கா

**கா** - முப்பத்திரண்டுஅறத்துள் ஒன்று (12:61) [651]; ► 1. அசைநிலைச்சொல் (10:11) [484] 2. பொழில் (11:14) [520]
**காக்கை** - 1. ககம் 2. கரும்பிள்ளை 3. காரி 4. கொடி 5. வாயசம் (3:38) [184]; ► அவிட்டமீன் (1:61) [61]
**காக்கைக்கொடிச்சி** - ► மூதேவி (1:28) [28]
**காகதுண்டம்** - ► அகில் (4:1) [201]
**காகந்தி** - ► புகார் (5:27) [270]
**காகம்** - எண்திசைக்குறியுள் ஒன்று (12:40) [630]
**காகளம்** - ► காளம் (7:20) [339]
**காகுத்தன்** - ► திருமால் (1:6) [6]
**காசறை** - 1. காயாமரம் 2. நாணல் (11:55) [561]; ► மயிர்ச்சாந்து (6:9) [302]
**காசினி** - ► பூமி (5:5) [248]
**காசு** - 1. குற்றம் 2. மணி (11:62) [568]; ► 1. குற்றம் (8:43) [408] 2. சூதாடுகருவி (7·37) [356] 3. மணி (6:3) [296] 4. மாதர்முலையணிவடம் (7:15) [334]
**காசை** - ► 1. காயா (4:10) [210] 2. நாணல் (4:36) [236]
**காஞ்சனம்** - ► பொன் (6:1) [294]
**காஞ்சி** - 1. உலகம் புகப் பாட்டு எழுந்தது (10:23) [496] 2. எண்வகைப் போர்த்தொழிலுள் ஒன்று (12:47) [637]; ► அரைப்பட்டிகை (7:14) [333]
**காஞ்சிரை** - எட்டி (4:4) [204]
**காஞ்சொறி** - கண்டுரம் (4:35) [235]
**காட்சி** - ► அறிவு (8:23) [388]
**காட்டுஆ** - 1. ஆமா 2. கவையம் (3:10) [156]
**காட்டை** - ► திக்கு (5:3) [246]
**காடி** - ► கஞ்சி (6:19) [312]
**காடு** - 1. அடவி 2. அத்தம் 3. ஆரணியம் 4 கட்சி 5. கடறு 6. கவனம் 7. களரி 8. காண்டம் 9. காந்தாரம் 10. கானம் 11. குறும்பொறை 12. சீரணி 13. சுரம் 14 தில்லம் 15. பழுவம் 16. பொச்சை 17. முளரி 18. வனம் (4:17) [217]; 19. நாற்புகலுள் ஒன்று (12:9) [599]; ► கட்சி (11:56) [562]
**காடுகாள்** - ► காளி (1·28) [28]
**காடை** - ► குறும்பூழ் (3:41) [187]
**காண்டம்** - ► 1. அம்பு (7:4) [323] 2. கருப்புவில் (1:73) [73] 3. காடு (4:17) [217] 4. மேகம் (1:43) [43]

காண்டலுற்ற பொருள் - ► பண்பின்இயல்பு (8:1) [366]

காண்டீபம் - ► தனு (1:52) [52]

காணப்படாமணி - 1. கவுத்துவம் 2. சிந்தாமணி (12:50) [640]

காணம் - ► பொன் (6:2) [295]

காத்தல் - முச்செயலுள் ஒன்று (12:2) [592]

காத்திரம் - ► 1. அவயவம் (2:70) [144] 2. உடம்பு (2:58) [132] 3. யானைக்கால் (3:30) [176]

காதணி - 1. கடிப்பிணை 2. தோடு 3. புல்லிகை 4. வேடகம் (7:17) [336]; ► குண்டலம் (7:17) [336]

காதம் - காவதம் (5:49) [292]

காதல் - முப்பத்திரண்டுஅறத்துள் ஒன்று (12:60) [650]; ► விருப்பு (8:24) [389]

காதலன் - ► எப்பொருட்கும்இறை (2:8) [82]; ► கணவன் (2:54) [128]

காதலி - 1. தோழி 2. புதல்வி 3 மனைவி (2:55) [129]

காதலித்தோர் - 1. ஆர்வலர் 2. நயந்தோர் 3. விரும்பினர் 4. வேட்கையர் 5. வேட்பவர் (2:28) [102]

காதித்தல் - 1. உறுத்தல் 2. முனித்தல் 3. வறத்தல் (9:33) [456]

காது - 1. கன்னம் 2. செவி (2:67) [141]; ► அள் (11:46) [552]

காதுதல் - ► கோறல் (9:23) [446]

காந்தமணி - இரும்பை வலிப்பது (6:6) [299]

காந்தர்ப்பம் - பதினெண்புராணத்துள் ஒன்று (12:59) [649]

காந்தள் - கோடல் (4:24) [224]

காந்தளந்தாரோன் - ► முருகன் (1:14) [14]

காந்தன் - ► 1. எப்பொருட்கும்இறை (2:8) [82] 2. புத்தன் (1:22) [22] 3. மணவாளன் (2:50) [124]

காந்தாரம் - ► 1. காடு (4:17) [217] 2. குறிஞ்சியாழ்த்திறன் (10:28) [501]

காந்திருவம் - எண்மணத்துள் ஒன்று (12:47) [637]

காப்பு - ► 1. கடி (11:82) [588] 2. மதில் (5:39) [282]

காபாலம் - ► சிவன்ஆடல் (9:45) [468]

காம்பு - ► மூங்கில் (4:13) [213]

காமக்கவலை - விரகம் (8:25) [390]

காமதகனன் - ► சிவன் (1:3) [3]

காமப்பகுதி - ► கரணம் (11:34) [540]

காமம் - 1. உட்பகைஆறனுள் ஒன்று (12:27) [617] 2. நவரசத்துள் ஒன்று (12:51) [641] 3. முக்குற்றத்துள் ஒன்று (12:3) [593]; ► 1. இளமை (11:16) [522] 2. விருப்பு (8:24) [389]

காமமிக்கவர் - ► தூர்த்தர் (2:29) [103]

காமர் - ► 1. கட்டழகு (8:18) [383] 2. மா (11:10) [516] 3. விருப்பு (8:24) [389]

காமர்வல்லி - ► கற்பகம்சேர்கொடி (4:32) [232]

காமரம் - ► 1. அத்தம் (1:58) [58] 2. இசை (10:26) [499]

காமரூபி - அட்டமாசித்தியுள் ஒன்று (12:41) [631]; ► கோம்பி (3:18) [164]

காமவினைத்தொடர்பு - 1. இணை 2. விழைச்சு (9:21) [444]

காமன் - ► 1. சிறுமூலகம் (4:26) [226] 2. மன்மதன் (1:17) [17]

காமன்ஆடல் - பேடு (9:45) [468]

காமாரி - ► சிவன் (1:4) [4]

காய்தல் - ► கோபம் (9:8) [431]

காயத்திரி - ► கலைமகள் (1:29) [29]

காயம் - 1. காழ்ப்பு 2. யாக்கை (11:47) [553]; 3. முப்பொறியுள் ஒன்று (12:2) [592]; ► 1. உடம்பு (2:58) [132] 2. கைத்தல் (8:55) [420]

காயல் - ► உப்பளம் (5:17) [260]

காயா - 1. காசை 2. பூவை (4:10) [210]

காயாமரம் - ► காசறை (11:55) [561]

காயாமலர்வண்ணன் - ► திருமால் (1:8) [8]

கார் - 1. கருமை 2. புனல் 3. மாரிக்காலம் 4. முகில் (11:22) [528]; 5. பருவம்ஆறனுள் ஒன்று (1:68) [68]; ► 1. கருமை (8:16) [381] 2. மேகம் (1:71) [71]

கார்கோள் - ► கடல் (5:13) [256]

கார்த்தல் - அறுசுவையுள் ஒன்று (12:29)[619]

கார்த்திகேயன் - சக்கரவர்த்திஅறுவருள் ஒருவர் (12:34) [624]

கார்த்திகை - 1. அங்கி 2. அழல் 3 அளக்கர் 4. அறுமீன் 5. ஆரல் 6. இறால் 7. நாவிதன் 8. வானன் (1:54) [54]; ► 1. ஆரல் (11:12) [518] 2. கொற்றவை (1:30) [30]

கார்த்திகைநாள்மலர் - 1. கோடல் 2. செங்காந்தள் 3. தோன்றி (4:24) [224]

கார்த்திகையன் - ► முருகன் (1:13) [13]

கார்முகம் - ► வில் (7:3) [322]

காரசம் - ► எருமை (3:9) [155]

காரண்டம் - ► நீர்க்காக்கை (3:43) [189]

காரணச்சொல் - கதை (10:9) [482]

காரணம்தெரிசொல் - 1. திரன் 2. நிபம் 3. நிமித்தம் 4. பொருட்டு 5. வாயில் (8:47) [412]

காரணன் - ► அருகன் (1:20) [20]

காரம் - ► 1. உறை (11:2) [508] 2. எழுத்தின் சாரியை (10:13) [486] 3. திருப்பொறி (12:68) [658]

**காராளர்** - 1. அயன்தாளில்வந்தவர் 2. உழவர் 3. ஏர்வாழ்நர் 4. கங்கைகுலத்தர் 5 களமர் 6. கொடையினர் 7. சதுர்த்தர் 8. பார்மைந்தர் 9. வார்த்தையாடலில்வல்லோர் 10. விளைப்பவர் 11. வேளாளர் 12. வேளிர் (2:17) [91]

**காரான்** - ► எருமை (3:9) [155]

**காரி** - 1. இருள்நிறம் 2. சனி 3. சாத்தன் 4. நஞ்சு (11:74) [580]; ► 1. காக்கை (3:38) [184] 2. நஞ்சு (6:23) [316] 3. வயிரவன் (1:17) [17]

**காரிகை** - 1. கட்டளைக்கலித்துறை 2 மாது (11:12) [518]; ► 1. கட்டழகு (8:18) [383] 2 மடவரல் (2:39) [113]

**காரியன்** - ► ஐயன் (1·17) [17]

**காரியைப்பெற்றகொடி** - ► காளி (1:28) [28]

**காருகபத்தீயம்** - ► முத்தீயுள் ஒன்று (12:4) [594]

**காருகம்** - உழவர்அறுதொழிலுள் ஒன்று (12:25) [615]

**காருகவினைத்தொழில்** - 1. கழுவுதல் 2. சுமத்தல் 3 பட்டுத்துகில்அமைத்தல் (12:25) [615]

**காருடம்** - பதினெண்புராணத்துள் ஒன்று (12 59) [649]

**காரோடர்** - ► உறைகாரர் (2:20) [94]

**காரோடி** - ► சிரமாலை (7.17) [336]

**கால்** - அட்டமூர்த்தத்துள் ஒன்று (12:41) [631], ► 1 இடவகை (5:50) [293] 2. கழல் (11:61) [567] 3. காற்று (1.37) [37] 4. பாதம் (2:59) [133]

**கால்செய்வட்டம்** - ► ஆலவட்டம் (7.36) [355]

**காலடி** - 1. கரடு 2. பரடு 3. மிசைத்திரள் (2:59) [133]

**காலடித்தோல்** - ► கழல் (11:61) [567]

**காலணி** - ► 1. கழல் (11.61) [567] 2. சிலம்பு (11:35) [541]

**காலணிவடம்** - கழல் (7:14) [333]

**காலநுட்பம்** - 1. கலை 2. துடி (1:63) [63], ► கலை (11:25) [531]

**காலம்** - 1. யாண்டு (1:69) [69]; 2. ஊழ்முறை 3. ஊழி (1:70) [70]; ► 1. அளவு (8:22) [387] 2. ஊழி (1.67) [67] 3 காலை (11:53) [559] 4. பொழுது (1:64) [64] 5. வேலை (11:52) [558]

**காலன்** - ► 1. யமன் (1:23) [23] 2. யமன்படர் (1:23) [23]

**காலனைக்காய்ந்தவன்** - ► சிவன் (1:4) [4]

**காலாட்படை** - ► தானை (11:33) [539]

**காலாழம்** - ► சேறு (5:20) [263]

**காலாள்** - நாற்படையுள் ஒன்று (12:9) [599]

**காலியின்நிரை** - ► தொறு (3:28) [174]

**காலில(ங்)குமணிவடம்** - பாதசாலம் (7:13) [332]

**காலேகம்** - ► மெய்ப்பூசுசாந்து (6:8) [301]

**காலேகவண்ணம்** - ► சாந்து (6:8) [301]

**காலை** - 1. விடியல் (1:64) [64]; 2. காலம் 3. நாட்கூறு (11:53) [559]; ► பொழுது (1:64) [64]

**காலையன்** - ► சூரியன் (1:45) [45]

**காவதம்** - ► காதம் (5:49) [292]

**காவல்** - 1. ஒழுக்கம் 2. கட்டு 3. கடி 4. கதவு 5. சிறை 6. துற்றல் 7. நவிற்றல் (9:41) [464]; ► 1. ஏமம் (11:1) [507] 2 சிறை (11:17) [523] 3. மதில் (5 39) [282] 4. வேலி (11:61) [567]

**காவலன்** - ► 1. அரசன் (2:9) [83] 2. எப்பொருட்கும்இறை (2:8) [82]

**காவற்காடு** - 1. அரண் 2 மிளை (4·16) [216]

**காவி** - ► கருங்குவளை (4:38) [238]

**காவிதி** - ► மந்திரிதந்திரி (2:15) [89]

**காவிரி** - பொன்னி (5 17) [260]

**காழ்** - 1 ஒளி 2. கோல் 3. சேகு 4 பரல் 5. மணிக்கோவை 6 மாலை (11·25) [531]; ► படிகம் (6:6) [299]

**காழ்த்தல்** - ► கைத்தல் (8·55) [420]

**காழ்ப்பு** - ► காயம் (11:47) [553]

**காழகம்** - ► கூறை (7·41) [360]

**காழியர்** - ► வண்ணார் (2 20) [94]

**காளகண்டம்** - ► குயில் (3:36) [182]

**காளகண்டன்** - ► சிவன் (1:2) [2]

**காளகம்** - ► கருமை (8:16) [381]

**காளம்** - காகளம் (7:20) [339]; ► 1. நஞ்சு (6:23) [316] 2. நாகம் (11:40) [546]

**காளவனம்** - ► சுடுகாடு (5·37) [280]

**காளாமுகர்** - ► சைவத்தவப்பாலினோர் (2:3) [77]

**காளி** - 1. எண்தோள்வல்லி 2. கவுரி 3. சண்டி 4. சாமுண்டி 5. தாருகற்காய்ந்தவள் 6. பயிரவி 7. பேய்க்கொடியாள் 8. மாகாளி 9. மாரி 10. முக்கண்ணி 11. யாமளி 12. யாளியைஊர்பவள் 13. யோகினி 14. வடக்குஒண்தொடிமாது 15. வேதாளி (1:27) [27]; 16. காடுகாள் 17. காரியைப்பெற்றகொடி 18. கொற்றி 19. சூரி 20. மாரி 21. மூதணங்கு 22. வடுகி (1:28) [28]

**காளிமம்** - ► கருமை (8:16) [381]

**காளை** - ► 1. இளமையர் (2·30) [104] 2. பாலைத்திணைமக்கள் (2:43) [117]

காளையர் - ▶ ஆண் (2:38) [112]
காற்பாசம் - ▶ பருத்தி (4:26) [226], (6:15) [308]
காற்று - 1. அரி 2. அனிலம் 3. உலவை 4. உயிர்ப்பு 5. ஊதை 6. ஒலி 7. கால் 8. கூதை 9. கொண்டல் 10. கோடை 11. கோதை 12. சதாகதி 13. சமீரணன் 14. பரிசனன் 15. பவனம் 16. வந்து 17. வாதம்(1:37) [37]; 18. மருத்து 19. மாபெலன் 20. மாருதம் 21. வங்கூழ் 22. வளி 23. வாடை (1:38) [38]; ▶ உலவை (11:49) [555]
காறு - ▶ அளவு (8:22) [387]
கான் - ▶ 1. எழுத்தின்சாரியை (10:13) [486] 2. வழி (5:45) [288] 3. வனம் (11:63) [569]
கான்நிலம் - ▶ முல்லை (11.23) [529]
கான்மல்லிகை - ▶ முல்லை (11:23) [529]
கான்யாறு - ▶ கலுழி (11:35) [541]
கானகநாடன் - ▶ 1. குறிஞ்சித்திணைமகன் (2:42) [116] 2. முல்லைத்தலைமக்கள் (2:45) [119]
கானம் - ▶ 1. இசை (10:26) [499] 2. காடு (4:17) [217] 3. நாறுதல் (8:54) [419]
கானமீன் - ▶ பரணி (1:53) [53]
கானல் - 1. கடல்சார்பொழில் 2. கதிர்ஒளி 3. மலைச்சார் பொழில் (11:60) [566]; ▶ 1. உப்பளம் (5:17) [260] 2. பேய்த்தேர் (6:24) [317]
கானவர் - ▶ 1. குறிஞ்சிக்குஅதிபர் (2:42) [116] 2 பாலைநிலமக்கள் (2:44) [118]
கானவன் - ▶ குரங்கு (3·17) [163]
கானீனன் - ▶ கன்னிமகன் (2:31) [105]

## கி

கிசலையம் - ▶ தளிர் (4:22) [222]
கிஞ்சுகம் - ▶ முருக்கு (4:8) [208]
கிஞ்சுமாரம் - ▶ முதலை (3:48) [194]
கிட்டினன் - நாரணன்பத்துஅவதாரத்துள் ஒன்று (12:52) [642]
கிடங்கு - ▶ 1. அகழ் (5:40) [283] 2. வாவி (5:18) [261]
கிடாய் - ▶ 1. ஆடு (3:10)[156] 2. துருவாட்டு ஏறு (3:11) [157]
கிடுகு - ▶ தேர்ப்புடைசூழ்மரச்சுற்று (7:28)[347]
கிண்கிணி - ▶ சதங்கை (7:14) [333]
கிண்கிணிபெய்பரல் - ▶ அரி (11:78) [584]
கிண்ணம் - ▶ வட்டில் (7:19) [338]
கிணறு - 1. அசும்பு 2. கூபம் 3. கூவல் (5:19) [262]
கிணை - ▶ மருதப்பறை (7:21) [340]
கிம்புருடர் - பதினெண்கணத்துள் ஒன்று (12:56) [646]
கிரணம் - ▶ ஒளி (8:17) [382]
கிரணன் - ▶ சூரியன் (1:44) [44]
கிரவுஞ்சம் - ▶ கோழிப்பறவை (5:49) [292]
கிராதர் - ▶ பாலைநிலமக்கள் (2·44) [118]
கிரி - ▶ மலை (5:8) [251]
கிரி(மலை) ஆறுசார்ந்தஊர் - கேடகம் (5:27) [270]
கிரி(மலை) உச்சி - 1. குவடு 2. கொடுமுடி 3. கோடு 4. சிகரம் (5:10) [253]
கிரிச்(மலைச்) சாரல்வரும்ஆறு - அருவி (5:16) [259]
கிரிசரம் - ▶ யானைபிறந்ததிணை (3:5) [151]
கிரீடம் - 1. சுடிகை 2. சேகரம் 3. மகுடம் 4. முடி 5. மௌலி (7:18) [337]
கிரீடை - ▶ மகள்விளையாட்டு (9:2) [425]
கிரீபம் - ▶ கழுத்து (2:63) [137]
கிருத்திமம் - ▶ 1. தோல் (3:31) [177] 2. பூதகணம் (1:36) [36]
கிருது - ▶ 1. நெய் (6:19) [312] 2. வேள்வி (9:19) [442]
கிருமி - ▶ புழு (3:53) [199]
கிலம் - ▶ சிறிது (8:8) [373]
கிலுகிலுப்பை - பகன்றை (4:28) [228]
கிலேசம் - உலகர்க்குஉறுதுயர்பதினெட்டனுள் ஒன்று (12:58) [648]
கிழக்கு - 1. குணதிசை 2. பூருவம் (5:2) [245]; ▶ பள்ளம் (5:46) [289]
கிழங்கு - 1. கந்தம் 2. மூலம் (2:33) [233]; ▶ கந்தம் (11:19) [525]
கிழத்தி - ▶ 1. மருதத்தலைமகள் (2:47) [121] 2. முல்லைத்தலைவி (2:48) [122]
கிழமை - ▶ 1. உரிமை (8:49) [414] 2. நீர்மை (8:56) [421] 3. வாரம் (11:75) [581]
கிழவர் - ▶ மூதறிந்தோர் (2:29) [103]
கிழவன் - ▶ மருதநிலத்தலைவர் (2:47) [121]
கிழி - 1. ஆடைகீறல் 2. எழுதும்படம் 3. பொருள்பொதி (11:81) [587]
கிள்ளி - ▶ சோழன் (2:12) [86]
கிள்ளை - ▶ 1. கிளி (3:39) [185] 2. குதிரை (3·6) [152]
கிள்ளைகடிகருவி - 1. குளிர் 2. தட்டை 3. தழல் (7:31) [350]; ▶ குளிர் (11:43) [549]
கிளர்ச்சியானை - 1. தந்தி 2. மதகரி (3:5) [151]
கிளவி - ▶ எழுத்தின்ஓசைச்சொல் (10:1) [474]
கிளி - 1. கிள்ளை 2. சுகம் 3. தத்தை 4. வன்னி (3:39) [185]; ▶ அரி (11:78) [584]
கிளை - ▶ 1. தளிர் (4:22) [222] 2. மித்திரர் (2:37) [111] 3. மூங்கில் (4:13) [213]

**கிளைஞன்** - ► நண்பன் (2:53) [127]
**கின்னரம்** - ► யாழ் (7:25) [344]
**கின்னரர்** - ► கந்திருவர் (1:35) [35]

**கீ**

**கீசகம்** - ► 1. தலைக்கீடு (7:10) [329] 2. மூங்கில் (4:13) [213]
**கீடம்** - ► 1. கோற்புழு (3:53) [199] 2. புழு (3:53) [199]
**கீதநடையது** - ► சாமவேதம் (10:16) [489]
**கீதம்** - ► இசை (10:26) [499]
**கீர்த்தி** - 1. இசை 2. சீர்த்தி 3. புகழ் 4. மீக்கூறல் 5. மெய் (10:5) [478]
**கீர்வாணி** - ► கலைமகள் (1:29) [29]
**கீரம்** - ► பால் (6:19) [312]
**கீரி** - நகுலம் (3:16) [162]
**கீலாலம்** - ► நீர் (1:42) [42]
**கீழ்** - ► 1. இடவகை (5:50) [293] 2. பள்ளம் (5:46) [289]
**கீழ்ஏழ்உலகம்** - 1. அகிதலம் 2. அதலம் 3. இராதலம் 4. சுதலம் 5. தராதலம் 6. நிதலம் 7. மாதலம் (12:36) [626]
**கீழ்காற்று** - ► கொண்டல் (11:12) [518]
**கீழ்மக்கள்** - 1. அசடர் 2. ஆற்றலர் 3. அறிவிலர் 4. கலர் 5. கனிட்டர் 6. சிறுமையர் 7. சுமடர் 8. தீம்பர் 9. தீயவர் 10. தேரலர் 11. நீசர் 12. நெறியிலர் 13. புல்லர் 14. பூரியர் 15. பேதையர் 16. பொல்லாதவர் 17. பொறியர் 18. முசுடர் 19. முசுண்டர் 20. மூர்க்கர் (2:27) [101]
**கீழ்மகன்** - ► சனி (1:49) [49]
**கீழ்வாய்** - அணர் (2:65) [139]
**கீழறுப்பு** - அறைபோதல் (10:8) [481]
**கீழறை** - ► பிலம் (5:11) [254]

**கு**

**கு** - ► வேற்றுமைஉருபு (10:13) [486]
**குக்கி** - ► வயிறு (2:60) [134]
**குக்கில்** - ► செம்போத்து (3:37) [183]
**குக்குடம்** - ► கோழி (3:37) [183]
**குகை** - ► உடம்பு (2:58) [132]
**குங்கிலியம்** - 1. குங்குலு 2. குற்குலு (6:10) [303]
**குங்குமம்** - 1. துருக்கம் 2. மாதவம் (4:11) [211]; ► செந்தாது (6:9) [302]
**குங்குலு** - ► குங்கிலியம் (6:10) [303]
**குசம்** - ► நீர் (1:42) [42]
**குசலர்** - ► மிகக்கற்றவர் (2:6) [80]
**குசன்** - ► செவ்வாய் (1:47) [47]
**குசேசையம்** - ► தாமரை (4:38) [238]
**குசை(கயிறு)** - 1. வற்கம் (7:11) [330]; 2. எழுதீவுள் ஒன்று (12:34) [624]; ► தருப்பை (4:35) [235]
**குஞ்சம்** - ► 1. குறள் (2:26) [100] 2. குறளை (10:3) [476]
**குஞ்சரம்** - ► யானை (3:4) [150]
**குஞ்சரம் உதைத்தோன்** - ► திருமால் (1:7) [7]
**குஞ்சி** - ► ஆண்மயிர் (2:68) [142]
**குஞ்சித்தல்** - ► குந்தியகாலின்நிலை (9:48) [471]
**குட்டம்** - ► 1. ஆட்டுக்குட்டி (3:12) [158]; 2. வாவி (5:18) [261]
**குட்டன்** - ► இளமை (2:53) [127]
**குட்டி** - 1. ஊகம் 2. முசு 3. வெருகு (இவற்றின் இளமை) (3:26) [172]; ► பார்ப்பினம் (3:25) [171]
**குட்டுவன்** - ► சேரன் (2:11) [85]
**குடக்கு** - ► மேக்கு (5:2) [245]
**குடக்குன்றன்** - ► சேரன் (2:11) [85]
**குடக்கொல்லியன்** - ► சேரன் (2:11) [85]
**குடகாற்று(மேல்காற்று)** - கோடை (1:39) [39]
**குடங்கை** - ► அகங்கை (2:62) [136]
**குடசம்** - ► வெட்பாலை (4:7) [207]
**குடத்தி** - ► முல்லைமகள் (2:45) [119]
**குடந்தம்** - கைகூப்பி மெய்கொட்டி நிற்றல் (9:49) [472]
**குடநாடன்** - ► சேரன் (2:11) [85]
**குடபால்இரேவதம்** - ► நவகண்டத்துள் ஒன்று (12:49) [639]
**குடபால்விதேயம்** - ► நவகண்டத்துள் ஒன்று (12:49) [639]
**குடம்** - 1. இடங்கர் 2. இரும்பை 3. கடம் 4. கன்னல் 5. கும்பம் 6. தசும்பு (7:39) [358]; ► 1. அரிஆடல் (9:44) [467] 2. கன்னல் (11:23) [529] 3. பசு (3:7) [153]
**குடம்பை** - ► 1. கூடு (5:36) [279] 2. முட்டை (3:47) [193]
**குடமுழவம்** - 1. மண்கனை 2. முழவம் 3. முழா (7:22) [341]
**குடமுழவு** - ► குளிர் (11:43) [549]
**குடவர்** - ► முல்லைநிலமக்கள் (2:45) [119]
**குடவு** - 1. குடிலம் 2. கொட்டம் (4:4) [204]
**குடி** - அரசியல்ஆறனுள் ஒன்று (12:28) [618]; ► குலம் (11:65) [571]
**குடிஇறை** - 1. கடன் 2. கரம் 3. கறை (9:35) [458]
**குடிக்காடு** - ► 1. உழவர்பதி (5:26) [269] 2. மருதநிலஊர் (5:26) [269]
**குடிஞை** - ► 1. ஆறு (5:16) [259] 2. கூகை (3:37) [183]

குடில் - ▶ 1. ஆகாயம் (1:37) [37] 2. உடம்பு (2:58) [132]
குடிலம் - ▶ 1. குடவு (4:4) [204] 2. செறிவு (8:12) [377] 3. வளைவு (8:2) [367]
குடும்பு - ▶ மித்திரர் (2:37) [111]
குடுமி - 1. சிக்கம் 2. சிகை 3. சிமையம் (2:72) [146]; ▶ ஆண்மயிர் (2:68) [142]
குடை - ▶ கவிகை (11:45) [551]
குடைதல் - ▶ 1. கடைதல் (9:24) [447] 2. குயிறல் (11:19) [525]
குடைவேல் - உடை (4:8) [208]
குண்டகன் - ▶ கணவன்பிழைத்தோள்மகன் (2:30) [104]
குண்டம் - ▶ வாவி (5:18) [261]
குண்டலம் - 1. காதணி 2. குழை 3. மிருசிகை (7:17) [336], ▶ குழை (11:21) [527]
குண்டிகை - ▶ கமண்டலம் (7:33) [352]
குண்டு - ▶ ஆழம் (5:19) [262]
குணதிசை - ▶ கிழக்கு (5:2) [245]
குணதிசைக்காவலன் - ▶ இந்திரன் (1:11)[11]
குணதிசைவந்து(கீழ்காற்று) - கொண்டல் (1:39) [39]
குணபம் - ▶ பிணம் (2:58) [132]
குணபால்இரேவதம் - ▶ நவகண்டத்துள் ஒன்று (12:49) [639]
குணபால்விதேயம் - ▶ நவகண்டத்துள் ஒன்று (12:49) [639]
குணம் - ▶ 1. அச்சம் (8:39) [404] 2. கொள்கை (8:57) [422] 3. கோள் (11:20) [526] 4. நீர்மை (8:56) [421] 5. பண்பின்இயல்பு (8:1) [366] 6. பண்பு (8:57) [422]
குணில் - ▶ குறுந்தடி (7:31) [350]
குணுங்கர் - ▶ சண்டாளர் (2:21) [95]
குத்திரம் - ▶ 1. பன்றி (3:13) [159] 2. மலை (5:9) [252] 3. வஞ்சனை (8:44) [409]
குத்திரன் - ▶ நாய் (3:16) [162]
குதலை - ▶ அறிவிலர் (2:28) [102]
குதித்தல் - ▶ 1. கடத்தல் (9:9) [432] 2. பாய்தல் (9:13) [436]
குதிரை - 1. அச்சுவம் 2. அத்திரி 3. அரி 4. இவுளி 5. கந்திருவம் 6. கற்கி 7. கிள்ளை 8. குந்தம் 9. குரகதம் 10. கொக்கு 11. கொய்யுளை 12. கோடகம் 13. கோணம் 14. சையிந்தவம் 15. துரகம் 16. துரங்கம் 17. பரி 18. புரவி 19. மண்டிலம் 20. மா 21. வாசி (3:6) [152]; 22. நாற்படையுள் ஒன்று (12:9) [599]
குதிரைஇயல்பு - பூங்குழலார்(மகளிர்) மனம் போல் மனமும் கதலிப் பூ மடல் போன்ற செவியும், அழகான முகமும், நாற்கதி பெற்றும், ஏன்பத்திரண்டு அங்குல உயரமும் கொண்டு இருத்தல் (12:70) [660]
குதிரைக்குளம்பு - குரம் (3:7) [153]
குதிரைச்சம்மட்டி - 1. கோல் 2. மத்திகை (7:11) [330]
குதிரைப்பண்பு - 1. கந்துகம் 2. கனவட்டம் 3. கோரம் 4. பாடலம் (3:7) [153]
குதிரைமார்க்கம் - மாதிகம் (3:7) [153]
குந்தம் - ▶ 1. குதிரை (3:6) [152] 2. குருந்து (4:6) [206] 3. வேல் (7:3) [322]
குந்தியகாலின்நிலை - குஞ்சித்தல் (9:48)[471]
குப்பம் - ▶ ஊர் (5:24) [267]
குப்பாயம் - ▶ சட்டை (7:43) [362]
குப்புறல் - ▶ பாய்தல் (9:13) [436]
குப்பை - ▶ 1. உயர்நிலம் (5:12) [255] 2. குவிதல்வடிவு (8:3) [368]
குபேரன் - 1. அக்கன் 2. அரன்உயிர்நண்பன் 3. அளகைப்பிரான் 4. இயக்கன் 5. இருநிதிஆளி 6. உத்தரதிக்கன் 6. கனசெல்வன் 8. தனதன் 9. நரவாகனன் 10. நிதிக்கோன் 11. பிங்கலன் 12. புட்பகன் 13. பொருள்இறை 14. மந்திரி 15. வச்சிரவணன் (1:18) [18]; ▶ சந்திரன் (1:46) [46]
கும்பகாரர் - ▶ குயவர் (2:18) [92]
கும்பநீர் - அட்டமங்கலத்துள் ஒன்று (12.40) [630]
கும்பம் - 1. குயம் 2. சாடி (1:53) [53]; ▶ குடம் (7:39) [358]
கும்பி - சேனம் மும்மடி கொண்டது (12:71) [661]; ▶ 1. நரகம் (5:6) [249] 2. யானை (3:4) [150]
கும்பி மும்மடி கொண்டது - ▶ கணம் (12:71) [661]
குமரன் - ▶ 1. ஆண் (2:38) [112] 2. இளமையர் (2:30) [104] 3. முருகன் (1:13) [13]
குமரன்ஆடல் - 1. கொடை 2. துடி (9:44) [467]
குமரி - ▶ 1. கற்றாழை (4:28) [228] 2. கன்னி (8.51) [416] 3. கொற்றவை (1:30) [30]
குமிழ் - 1. கடம்பல் 2. கூம்பல் (4:8) [208]
குமிழ்ப்புவடிவு - புளகம் (8.4) [369]
குமுதபதி - ▶ சந்திரன் (1:46) [46]
குமுதம் - எட்டுத்திக்குயானையுள் ஒன்று (12:48) [638]; ▶ வெள்ளாம்பல் (4:39) [239]
குயம் - 1. அரிவாள் 2. இளமை 3. கொங்கை (11:12) [518]; ▶ 1. கும்பம் (1:53) [53] 2. கொடுவாள் (7:6) [325] 3. முலை (2:61) [135]
குயவர் - 1. கும்பகாரர் 2. குலாலர் 3. வேட்கோபர் (2:18) [92]
குயவரி - ▶ புலி (3:2) [148]
குயவன்மண்அரிநார் - மட்பகை (7:40) [359]
குயா - ▶ கோங்கு (4:4) [204]

குயில் - 1. காளகண்டம் 2. கோகிலம் (3:36) [182]
குயில்தல் - ► துளைத்தல் (9:24) [447]
குயிலுவம் - 1. நரப்புக் கருவியில் சேர்தரு பாடற்பண்பு (9:44) [467]; 2. உழவர் அறுதொழிலுள் ஒன்று (12:25) [615]
குயிலுவர் - ► நரப்புக்கருவிகொள்மாந்தர் (2:22) [96]
குயிற்காகளத்தன் - ► மன்மதன் (1:16) [16]
குயிறல் - 1. குடைதல் 2. கூறல் 3. செறிதல் (11:19) [525]; ► சொல்லுதல் (10:2) [475]
குயின் - ► மேகம் (1:71) [71]
குரகதம் - ► குதிரை (3:6) [152]
குரங்கல் - ► தாழ்தல் (9:7) [430]
**நடனம்** - தாள ஒத்திற்கு ஏற்ப நடிப்பது (9:49) [472]; ► கூத்து (9:46) [469]

**நடனவிகற்பம்** - 1. கடகம் 2. கரணம் 3. குனிப்பு 4 பவுரி 5. பிரமரி 6. மலைப்பு 7. முள்ளாள் 8. வித்தம் 9. வீரிட்டதானம் (9:47) [470]

**நடாத்தல்** - ► போகல் (9:10) [433]

**நடு** - 1. இடை 2. ஒத்தல் 3. நள் 4. நனந்தலை 5. நாப்பன் 6. மத்திமம் (5:47) [290]; ► 1. இடை (2:60) [134] 2. பகல் (11.20) [526]

**நடுக்கம்** - ► 1. கம்பலை (11:21) [527] 2. பனி (11:63) [569] 3. புலம்பு (11:35) [541]

**நடுக்கல்** - ► அச்சம் (8:39) [404]

**நடுக்குதல்** - 1. அதிர்ப்பு 2. கம்பம் 3. பனிப்பு 4. பொதிர்ப்பு 5. விதலை 6. விதிர்ப்பு (9:18) [441]

**நடுவன்** - ► யமன் (1:23) [23]

**நடை** - ► 1. இயல் (11:72) [578] 2. ஒழுக்கம் (9:42) [465]

**நண்டின்ஆண்** - களவன் (3:52) [198]

**நண்டு** - 1. அலவன் 2. கற்கடகம் 3. குளிர் 4. நள்ளி (3:52) [198]

**நண்ணுதல்** - ► சார்வு (9:37) [460]

**நண்ணுநர்** - ► அடுத்தோர் (2:35) [109]

**நண்பன்** - 1. எலுவன் 2. கிளைஞன் 3. கேள் 4. துணைவன் 5. தோழன் 6. பாங்கன் (2:53) [127]; ► குறிஞ்சித்திணைமகன் (2:42) [116]

**நணுகுதல்** - ► சார்வு (9:37) [460]

**நத்தம்** - ► இரவு (1:65) [65]

**நத்தன்** - ► திருமால் (1:6) [6]

நத்து - ► சங்கம் (3 50) [196]
நத்தை - 1. கருநந்து 2. சுரிமுகம் 3. நாகு (3:51) [197]
நதி - தசாங்கத்துள் ஒன்று (12:53) [643]; ► 1 ஆறு (5:16) [259] 2. உந்தி (11:2) [508]
நதிசரம் - ► யானைபிறந்ததிணை (3:5) [151]
நதிபதி - ► கடல் (5:13) [256]
நந்தல் - 1. ஆக்கம் 2. கேடு (11:3) [509]
நந்தவனம் - 1. இளமரக்கா 2 உபவனம் 3. சோலை 4. துடவை 5 தோட்டம் 6. பொழில் (4.15) [215]
நந்தியாவத்தம் - வலம்புரி (4·24) [224]
நந்தின்ஏறு - ► குருளை (3:28) [174]
நந்து - ► சங்கம் (3:50) [196]
நந்தை - ► முதல்பக்கம் (1·66) [66]
நம்பன் - ► சிவன் (1.4) [4]
நமன் - ► யமன் (1·23) [23]
நயந்தோர் - ► காதலித்தோர் (2:28) [102]
நயம் - ► 1. இன்பம் (8:31) [396] 2. கண்ணோட்டம் (8.28) [393] 3. நன்மை (8:33) [398]
நயன் - ► 1 அன்பின்நடையது (8:40) [405] 2. இன்பம் (8:45) [410]
நயனம் - ► கண் (2.66) [140]
நரஅரி - ► திருமால் (1:7) [7]
நரகம் - 1. அள்ளல் 2 அளறு 3. இருஞ்சிறை 4. இருநிலம் 5. இருள் 6. எரி 7. கும்பி 8 கொல்கதி 9. துரகதி 10. நிகோதம் 11. நிரையம் 12 பாதகம் 13 பாதலம் 14 பாதாளம் 15. பாவம் விளைநிலம் 16. மடல் (5:6) [249]
நரசிங்கம் - நாரணன்பத்துஅவதாரத்துள் ஒன்று (12:52) [642]
நரந்தை - ► நாரத்தம் (4:10) [210]
நரப்புக் கருவியில் சேர்தரு பாடற்பண்பு - ► குயிலுவம் (9:44) [467]
நரப்புக்கருவிகொள்மாந்தர் - குயிலுவர் (2:22) [96]
நரபதி - ► அரசன் (2:9) [83]
நரம்பு - ஏழுதாதுள் ஒன்று (12:38) [628]; 1. சிரை 2. நாடி (2:71) [145]
நரர் - ► மானிடர் (2:56) [130]
நரர்திரள் - ► மக்கள்கூட்டம் (2:57) [131]
நரலை - ► கடல் (5:13) [256]
நரவாகனன் - ► குபேரன் (1:18) [18]
நராந்தகன் - ► திருமால் (1:7) [7]
நரி - 1. இகலன் 2. கோமாயு 3. சம்பு (3:15) [161]; ► 1. ஓரி (11:56) [562] 2. குருளை (3:25) [171] 3. பறழ் (3:25) [171] 4. பாட்டி (3:24) [170]
நரிப்புறம் - ► மகசிரம் (1:55) [55]
நரை - உலகர்க்குஉறுதுயர்பதினெட்டனுள் ஒன்று (12:58) [648]
நல்கல் - செட்டிஎண்குணத்துள் ஒன்று (12:45) [635]; ► தியாகம் (9:18) [441]
நல்நுதல் - ► வஞ்சி (11:9) [515]
நல்லரிவஞ்சம் - அறுவகைப்போகபூமியுள் ஒன்று (12:33) [623]
நல்லாடை - 1. ஏடகம் 2. கத்தியம் 3. கருள் 4. சித்திலிகை 5. சில்லிகை 6. தூரியம் 7. பாரி 8. வேதிகை (7:42) [361]
நலம் - ► விரிச்சிகம் (1:52) [52]
நலனறிவர் - ► கண்ணாளர் (2:19) [93]
நவ்வி - ► 1 அத்தம் (1:58) [58] 2. இளமை (8:48) [413] 3. மான் (3.14) [160]
நவ்வு - ► மரக்கலம் (7:32) [351]
நவகண்டம் - 1. குடபால்இரேவதம் 2 குடபால் விதேயம் 3. குணபால்இரேவதம் 4. குணபால் விதேயம் 5. தென்பால்இரேவதம் 6. தென்பால் விதேயம் 7. மத்திமகண்டம் 8 வடபால்இரேவதம் 9 வடபால்விதேயம் (12:49) [639]
நவகோள் - ► கோள் (11:37) [543]
நவதாரணை - 1. இலக்கம் 2. எழுத்து 3. கஞ்சம் 4 கரி 5. சதுரங்கம் 6. செய்யுள் 7 நாமம் 8. நீர் 9. பரி (12:51) [641]
நவம் - ► 1. தொண்டு (11:14) [520] 2. புதுமை (8:46) [411]
நவமணி - 1. நிதி (6:2) [295]; 2. கோமேதகம் 3. துப்பு 4. நீலம் 5 பற்மராகம் 6. மரகதம் 7. மாணிக்கம் 8. முத்து 9. வுயிடூரியம் 10. வயிரம் (12:50) [640]
நவரசம் - 1. அச்சம் 2. அவலம் 3. உருத்திரம் 4. கருணை 5. காமம் 6. சிங்காரம் 7. நகை 8. வியப்பு 9. வீரம் (12:51) [641]
நவியம் - ► மழு (7.2) [321]
நவிர் - ► 1. ஆண்மயிர் (2:68) [142] 2. தலை (2:67) [141] 3. மருதயாழ்த்திறன் (10:29) [502]
நவிரம் - 1. மருதயாழ்த்திறன் 2. மலை 3. மலைஉச்சி (11:65) [571]; ► 1. உச்சி (2:72) [146] 2 மலை (5:9) [252]
நவிற்றல் - ► 1. அவித்தல் (9:42) [465] 2. ஓசை (11:4) [510] 3. காவல் (9.41) [464]
நவை - ► குற்றம் (8:43) [408]
நழுங்கு - ► துன்பம் (8:41) [406]
நள் - ► நடு (5·47) [290]
நள்ளி - ► 1. கள்ளின்பேதம் (6:22) [315] 2. நண்டு (3:52) [198]
நள்ளுநர் - ► அடுத்தோர் (2:35) [109]

நளன் - சக்கரவர்த்திஅறுவருள் ஒருவர் (12:34) [624]

நளி - 1. செறிவு 2. பெருமை (11:66) [572]; ▶ 1. அகலம் (8·10) [375] 2. சீதளம் (8:21) [386] 3. செறிவு (8:12) [377] 4. பெருமை (8:6) [371] 5. மிகுதி (8:7) [372]

நற்கந்தம் - இருவகைக்கந்தத்துள் ஒன்று (12:1) [591]

நறவம் - சுள்ளி (4:10) [210]

நறவு - ▶ கள் (6:21) [314]

நறுமை - ▶ நன்மை (8.33) [398]

நறை - ▶ 1. நாறுதல் (8:54) [419] 2. வம்பு (11:27) [533]

நறைப்புகை - குரூப்புகை (6·14) [307]

நன்மை - 1. உறுதி 2. சீர் 3. நயம் 4. நறுமை 5. நன்னர் 6 மணி 7. மாசறல் 8. மான் 9. வண்ணம் (8:33) [398]; ▶ ஒண்மை (8:38) [403]

நன்று - இருவினையுள் ஒன்று (12:1) [591]; ▶ பெருமை (8:6) [371]

நன்னயம் - ▶ உபசாரச்சொல் (10:9) [482]

நன்னர் - ▶ நன்மை (8:33) [398]

நன்னுதலார் விளையாட்டு - ▶ பண்ணை (11:5) [511]

நனந்தலை - ▶ நடு (5:47) [290]

நனவு - 1. கண் 2. தெளி (11:38) [544]

நனி - ▶ மிகுதி (8:7) [372]

நனை - மொட்டு (11:53) [559]; ▶ 1. கள் (6:21) [314] 2. மொட்டு (4:40) [240]

## நா

நா - 1. தாலம் 2. தாலு (2:65) [139]; ▶ தாலம் (11.42) [548]

நாகணவாய் - 1 சாரிகை 2. பூவை (3:41) [187]

நாகம் - 1. அசலம் 2. அரவு 3. ஓர்மரப்பேர் 4. காளம் 5. மலையாடு 6. விண் (11:40) [546]; ▶ 1. அரவு(3:34) [180] 2. ஞாழல்மரம் (4:10) [210] 3. துறக்கம் (5:1) [244] 4. மலை (5:8) [251] 5. யானை (3:3) [149]

நாகர் - நாற்கதியுள் ஒன்று (12:9) [599]

நாகரவண்டு - நொள்ளை (3:53) [199]

நாகரிகம் - ▶ கண்ணோட்டம் (8:28) [393]

நாகரிகர் - ▶ பதிவாழ்சதுரர் (2:29) [103]

நாகு - 1. பசு(பெண்) 2. எருமை(பெண்) 3. மரை(பெண்) (3:24) [170]; 4. ஆன், ஆடு, எருமை, மரை இவை அல்லாத பிற விலங்குகளின் இளமைப்பெயர் 5. இளமரம் 6. நீர்வாழ்சாதி (11:80) [586]; ▶ 1. சங்கம் (3:50) [196] 2. நத்தை (3:51) [197] 3. விலங்கின்பெண் (3:22) [168]

நாசி - ▶ மூக்கு (2:65) [139]

நாஞ்சில் - ▶ 1. கலப்பை (7:28) [347] 2. படை (11:60) [566] 3. மதில்உறுப்பு (5:40) [283]

நாட்கூறு - ▶ காலை (11:53) [559]

நாட்டம் - ▶ கண் (2.66) [140]

நாட்டியம் - ▶ 1. குறிப்பு (8:31) [396] 2. நிருத்தம் (9:46) [469]

நாட்டுவகைஆறு - 1. செல்வம் 2. சேமம் 3. குறும்பின்மை 4. நோய்இன்மை 5. வளம் 6. விளை (12:28) [618]

நாடகம் - ▶ கூத்து (9:46) [469]

நாடகர் - 1. கண்ணாளர் 2. நடர் 3. நிருத்தர் 4. பொருநர் 5. வயிரியர் (2:32) [106]

நாடகவாள்நுதல் - ▶ பாணமகள் (2:41) [115]

நாடல் - ▶ தேடல் (9:16) [439]

நாடி - ▶ நரம்பு (2:71) [145]

நாடு - 1 அகலுள் 2. கண்டம் 3. தண்ணடை 4. பாண்டில் 5. பைதிரம் 6. மண்டிலம் (5:7) [250], 7. தசாங்கத்துள் ஒன்று (12:53) [643]; ▶ 1. உலகு (5:7) [250] 2. தண்ணடை (11:56) [562] 3. பாடி (11:56) [562]

நாண் - 1. பாசம் 2. மங்கலஅணி (11:77) [583]; ▶ 1. ஆபரணம் (7:18) [337] 2. கயிறு (7:38) [357]

நாணம் - 1. மானம் 2. வட்கல் 3. வெள்கல் (8.30) [395]

நாணல் - காசை (4:36) [236]; ▶ காசறை (11·55) [561]

நாதம் - ▶ ஒல் (11:5) [511]

நாதன் - ▶ 1 எப்பொருட்கும்இறை (2:8) [82] 2. சிவன் (1:3) [3] 3. மூத்தவர் (2:7) [81]

நாந்தகம் - ▶ வாள் (7:5) [324]

நாப்பன் - ▶ நடு (5:47) [290]

நாபி - ▶ கொப்பூழ் (2:60) [134]

நாமகள் - ▶ கலைமகள் (1:29) [29]

நாமம் - ▶ நவதாரணையுள் ஒன்று (12:51) [641]

நாமம்இன்மை - எண்குணத்துள் ஒன்று (12:44) [634]

நாய் - 1. எகினம் 2. குத்திரன் 3. சுணகன் 4. சுணங்கன் 5. சுவா 6. சூரன் 7. ஞமலி 8. ஞாளி 9. முடுவல் (3:16) [162]; 10. எண் திசைக் குறியுள் ஒன்று (12:40) [630]; ▶ 1. எகினம் (11:44) [550] 2. குருளை (3:25) [171] 3. பறழ் (3:25) [171] 4. பாட்டி (3:24) [170] 5. பிணை (3:23) [169]

நாய் அன்றி ஏனைய விலங்குகளின் இளமைப் பெயர் - ▶ பிள்ளை (3:26) [172]

நாயகன் - ▶ எப்பொருட்கும்இறை (2:8) [82]

நார் - ▶ அன்பு (8:25) [390]

**நாரணன்பத்துஅவதாரம்** - 1. அலாயுதன் 2. ஆமை 3. இராமன் 4. கற்கி 5. கிட்டினன் 6. கேழல் 7. நரசிங்கம் 8. பரசுராமன் 9. மீன் 10. வாமனம் (12:52) [642]

**நாரணி** - ஏழுமாதாவுள் ஒருவர் (12:38) [628]

**நாரத்தம்** - நரந்தை (4:10) [210]

**நாரதம்** - பதினெண்புராணத்துள் ஒன்று (12:59) [649]

**நாரம்** - ► 1. நீர் (1:42) [42] 2. பாசி (4:36) [236]

**நாரரி** - 1. தெங்குநார்ப்பாளை 2. நெய்யரி (4:32) [232]

**நாராசம்** - சலாகை (7:7) [326]

**நாராயணன்** - ► திருமால் (1:7) [7]

**நாராயணன்சமையத்தவர்** - பாகவதர் (2:3) [77]

**நாராயணி** - ► கொற்றவை (1.30) [30]

**நாரி** - ► மடவரல் (2.39) [113]

**நாரிபாகத்தன்** - ► சிவன் (1:3) [3]

**நாரை** - 1. பிதா 2. போதா (3.43) [189]

**நால்வகைநிலை** - 1. ஆலிடம் 2. பிரத்தாலிடம் 3. பைசாசம் 4. மண்டிலம் (12·16) [606]

**நால்வகைப்புண்ணியம்** - 1 ஒழுக்கம் 2. கல்வி 3 தவம் 4. தானம் (12.16) [606]

**நால்வகைப்பூ** - 1. கொடிப்பூ 2. கோட்டுப்பூ 3. நிலப்பூ 4 நீர்ப்பூ (4·40) [240]

**நால்வகையாழ்** - 1. சகோடம் 2. செங்கோடு 3. பேரியாழ் 4. மகரம் (7.25) [344]; 5. செவ்வழி(முல்லை) 6 பாலை 7. மருதம் 8. யாமை(குறிஞ்சி) (10:27) [500]

**நால்வாய்** - ► யானை (3:3) [149]

**நாவல்** - 1. சம்பு (4:4) [204]; 2. எழுதீவுள் ஒன்று (12:34) [624]

**நாவலர்** - ► பாவலர் (2:32) [106]

**நாவாய்** - ► 1. இரேபதி (1:63) [63] 2. திருப்பொறி (12:68) [658] 3. மரக்கலம் (7:32) [351]

**நாவி** - ► கத்தூரி (3:16) [162]

**நாவிதர்** - 1. பெருமஞ்சிகர் 2. மயிர்வினைஞர் (2:21) [95]; 3. முப்பத்திரண்டுஅறத்துள் ஒன்று (12:61) [651]

**நாவிதன்** - ► 1. கார்த்திகை (1:54) [54] 2. பூரம் (1:57) [57]

**நாழி** - ► 1. உள்துளைவடிவு (8:5) [370] 2. பூரட்டாதி (1:62) [62]

**நாழிகை** - 1. இருத்தை 2. கடிகை 3. கன்னல் 4. பதம் 5. விகலை (1:64) [64]; ► கடிகை (11:53) [559]

**நாழிகைவட்டில்** - கன்னல் (7:19) [338]; ► கன்னல் (11:23) [529]

**நாள்** - ► 1. பகல் (11:20) [526] 2. மீன் (1:63) [63] 3. மூலம் (11:61) [567]

**நாளிகேரம்** - ► தெங்கு (4:12) [212]

**நாற்கதி** - 1. உம்பர் 2. நாகர் 3. மனிதர் 4. விலங்கு (12:9) [599]

**நாற்கவி** - 1. ஆசு 2. சித்திரம் 3. மதுரம் 4. வித்தாரம் (12:11) [601]

**நாற்படை** - 1. கரி 2. காலாள் 3. குதிரை 4. தேர் (12:9) [599]

**நாற்பாவில் ஒன்று** - ► வஞ்சி (11·9) [515]

**நாற்புகல்** - 1. காடு 2. நீர் 3. மதில் 4. வெற்பு (12:9) [599]

**நாற்புலவோர்** - 1. கமகன் 2. கவி 3. வாக்கி 4. வாதி (12:10) [600]

**நாற்புவி** - 1. குறிஞ்சி 2. நெய்தல் 3. மருதம் 4. முல்லை (12:9) [599]

**நாற்பெரும்பண்** - 1. குறிஞ்சி 2. பாலை 3. மருதம் 4. முல்லை (10:27) [500]

**நாற்றம்** - ► வெறி (11:7) [513]

**நாறுதல்** - 1. அருகு 2. கடி 3. கந்தம் 4 கந்தித்தல் 5. கமழல் 6. கானம் 7. கொங்கு 8. நறை 9. பரிமளம் 10. மணம் 11. மன்றல் 12. முருகு 13. மோக்கம் 14 வாசம் 15. விரை 16. வெறி (8:54) [419]

**நான்மறை** - 1. அதர்வணம் 2. இருக்கு 3 சாமம் 4. தயித்திரியம் (12:10) [600]

**நான்முகன்** - ► பிரமன் (1:9) [9]

**நான்முகன்வாழ்நாள்** - கற்பம் (1:69) [69]

**நானம்** - ► கத்தூரி (3:16) [162]

**நானாவிதம்** - பலவிதம் (8:51) [416]

## நி

**நிகர்** - ► உவமை (8·57) [422]

**நிகரலர்** - ► பகைவர் (2:36) [110]

**நிகலம்** - ► தோள்மேல் (2:63) [137]

**நிகழ்வு** - முக்காலத்துள் ஒன்று (12:2) [592]

**நிகளம்** - ► தளை (7:12) [331]

**நிகிலம்** - ► இடம் (5:46) [289]

**நிகேதனம்** - ► மாதவர்வாழிடம் (5·29) [272]

**நிகோதம்** - ► நரகம் (5:6) [249]

**நிசா** - ► இரவு (1:65) [65]

**நிசாசர்** - ► இராக்கதர் (1:34) [34]

**நிசாசரர்** - ► அசுரர் (1:34) [34]

**நிசி** - ► இரவு (1:65) [65]

**நிசிசர்** - ► இராக்கதர் (1·34) [34]

**நிசிதம்** - ► பொய் (10:3) [476]

**நிணம்** - 1. இழுது 2. நெய் 3. விழுக்கு (3:33) [179]; 4. ஏழுதாதுள் ஒன்று (12:38) [628]

**நிணர்வு** - 1. சுவலல் 2. சுற்றல் 3. வலத்தல் (9:28) [451]

நித்தன் - ▶ 1. சிவன் (1:1) [1]; 2. திருமால் (1:8) [8]

நித்திரை - ▶ அறல் (11:50) [556]

நித்திலம் - ▶ முத்து (6:3) [296]

நிதம்பம் - ▶ அல்குல் (2:59) [133]

நிதலம் - கீழ்ஏழ்உலகுள் ஒன்று (12:36) [626]

நிதனம் - ▶ படைத்திரள் (2:55) [129]

நிதானம் - ▶ 1 கடவுள்மணி (6:2) [295] 2. செல்வம் (8:53) [418] 3. பொன் (6:1) [294]

நிதி - ▶ 1. தொங்கல் (7·16) [335] 2. நவமணி (6:2) [295] 3. பதம் (11:31) [537] 4. பொன் (6:1) [294]

நிதிக்கோன் - ▶ குபேரன் (1:18) [18]

நிபம் - ▶ காரணம்தெரிசொல் (8:47) [412]

நிபுணர் - ▶ மிகக்கற்றவர் (2:6) [80]

நிம்பத்தொடையினன் - ▶ பாண்டியன் (2:13) [87]

நிம்பம் - ▶ வேம்பு (4:4) [204]

நிமித்தம் - 1. வாய்ப்புள் 2. விரிச்சி (10:7) [480]; ▶ காரணம்தெரிசொல் (8:47) [412]

நிமிர்தல் - ▶ உயர்ச்சி (8:8) [373]

நிமிரல் - ▶ சோறு (6:15) [308]

நியதி - ▶ 1. செய்கடன் (9.44) [467] 2. நியமம் (11:63) [569]

நியமம் - 1. தெரு 2. நியதி (11:63) [569]; 3. தவம், சவுசம், தத்துவநூல்ஓதல், கடவுளர்ப் பேணல் முதலியன (12:43) [633]; 4. எண்வகை யோகத்துள் ஒன்று (12:42) [632]; ▶ 1. அங்காடி (5:28) [271] 2. செய்கடன் (9:44) [467] 3. தெரு (5:28) [271]

நியாயம் - மும்முரசுள் ஒன்று (12:2) [592]

நிரம்பாதசொல் - 1. நிழற்றல் 2. மிழற்றல் (10:7) [480]

நிருத்தம் - நாட்டியம் (9:46) [469]; ▶ ஆறு அங்கத்துள் ஒன்று (12:26) [616]

நிருத்தர் - ▶ நாடகர் (2:32) [106]

நிருதர் - ▶ அரக்கர்இனத்தவர் (1:35) [35]

நிருதி - எண்திக்குப்பாலகருள் ஒருவர் (12:39) [629]

நிருபன் - ▶ அரசன் (2:9) [83]

நிரை - 1. ஒழுங்கு 2. ஒளி 3. பந்தி (6:25) [318]; ▶ 1. கொடிப்படை (2:56) [130] 2. நீளம் (8:9) [374] 3. வரையறை (8:21) [386]

நிரைதொழு - 1. ஆன்வேலி 2. ஆனிலை 3. தொறு 4. தோழம் (5:37) [280]

நிரையம் - ▶ நரகம் (5:6) [249]

நிலப்பூ - நால்வகைப்பூவுள் ஒன்று (4:40) [240]

நிலம் - அட்டமூர்த்தத்துள் ஒன்று (12:41) [631]; ▶ 1. அளக்கர் (11:28) [534] 2. இடம் (5:46) [289] 3. உலகு (5:7) [250] 4. குவலயம் (11:13) [519] 5. திணை (11:27) [533] 6. பூமி (5:5) [248]

நிலமகன் - ▶ செவ்வாய் (1:47) [47]

நிலவு - ▶ ஒளி (8:17) [382]

நிலாமுன்றில் - அரமியம் (5:33) [276]

நிலைகெடல் - ▶ தொலைவு (8:23) [388]

நிலைத்தல் - ▶ 1. துஞ்சுதல் (11:7) [513] 2. நிலைபெறல் (9:14) [437]

நிலைபெறல் - 1. அசைதல் 2. அல்கல் 3. அறுத்தல் 4. தங்கல் 5. துஞ்சல் 6. தெவிட்டல் 7. நிலைத்தல் 8. பரிதல் 9. மல்கல் 10. மன்னல் (9:14) [437]

நிலையம் - ▶ மாதவர்வாழிடம் (5:29) [272]

நிலையின்மை - ▶ வம்பு (11:27) [533]

நிலையுடைமை - ஏண் (8:30) [395]

நிவப்பு - ▶ உயர்ச்சி (5:48) [291], (8:8) [373]

நிழல் - ▶ ஒழுக்கம் (9:42) [465]

நிழல்செய்தல் - ▶ நிழற்றல் (11·37) [543]

நிழற்றல் - 1. நிழல்செய்தல் 2. நுணுக்கம் (11.37) [543]; ▶ 1. நிரம்பாதசொல் (10:7) [480] 2. நுண்மை (8:10) [375]

நிறப்பொது - 1. உரு 2 ஒளி 3. குரு 4. கெழு 5. கேழ் 6. சந்தம் 7. புகர் 8. மாமை 9. வண்ணம் (8:16) [381]

நிறம் - ▶ 1. அரி (11:78) [584] 2. கறை (11:16) [522] 3. பண்பு (8:57) [422] 4. பதம் (11:31) [537] 5. மா (11:10) [516]

நிறுப்பான் - ▶ துலாம் (1:52) [52]

நிறை - ▶ 1. கோல் (11·48) [554] 2. துலாம் (1:52) [52]

நிறைகுடம் - ▶ திருப்பொறி (12:68) [658]

நிறைதல் - ▶ ஆர்தல் (11:65) [571]

நிறைபுனல் - 1. பிராறு 2. வழாறு 3. வாரி (5:20) [263]

நிறைமதி - ▶ திருப்பொறி (12:68) [658]

நிறைவு - 1. ஆர்தல் 2. கழிதல் 3. துவன்றல் 4. தெவிழ்தல் 5. நெகிழ்தல் 6. மல்கல் 7. மலிதல் 8. மலிர்தல் (8:13) [378]

நினைப்பு - உலகர்க்கு உறுதுயர் பதினெட்டனுள் ஒன்று (12:58) [648]

நினைவு - ▶ 1. எற்று (11:54) [560] 2. கருத்து (8:23) [388]

## நீ

நீக்கல் - ▶ நீளம் (8:9) [374]

நீக்குதல் - ▶ வரைதல் (11:6) [512]

நீகம் - ▶ தவளை (3:51) [197]

நீகான் - ▶ மீகாமன் (2:24) [98]

நீசர் - ► கீழ்மக்கள் (2:27) [101]
நீட்டல் - ► கடத்தல் (9:9) [432]
நீண்டநெறிஅறிவது - ► கட்டளை (11:48) [554]
நீத்தம் - ► பெருவெள்ளம் (1·44) [44]
நீபம் - ► கடம்பு (4:9) [209]
நீர் - 1 அப்பு 2. அம் 3. அம்பு 4. அம்புதம் 5. அயம் 6. அலர் 7. அறல் 8. உதகம் 9. உறை 10. கமலம் 11. கீலாலம் 12. குசம் 13. கோ 14. சம்பாங்கம் 15. சலம் 16. சலிலம் 17. சீவனம் 18. தோயம் 19. நாரம் 20. நீரம் 21. பயம் 22. பாணியம் 23. புவனம் 24. புனல் 25. வனம் 26. வார் 27. வாரி (1:42) [42], 28. அட்டமூர்த்தத்துள் ஒன்று (12:41) [631]; 29. நவதாரணையுள் ஒன்று (12:51) [641]; 30. நாற்புகலுள் ஒன்று (12:9) [599]; ► 1. கயம் (11:41) [547] 2 பனி (1:73) [73] 3 பாணி (11:8) [514]
நீர்இறை(நீர்க்கடவுள்) - 1. பாசதரன் 2 பாசி 3. வருணன் (1:44) [44]
நீர்க்கரை - 1 அணை 2 கூலம் 3. கோடு 4. தீரம் 5. வரை (5:15) [258]; ► 1. கூலம் (11·61) [567] 2. கோடு (11:15) [521]
நீர்க்காக்கை - காரண்டம் (3 43) [189]
நீர்க்குமிழி - 1. நுரை 2 புற்புதம் 3. பௌவம் (5:19) [262]
நீர்ச்சுழலல் - 1. உந்தி 2. சுரிதல் (9:12) [435]
நீர்த்திரை - 1. அலை 2. அறல் 3. கல்லோலம் 4 விசிகரம் 5. தரங்கம் (5:15) [258]
நீர்த்தினம் - ► பூராடம் (1·60) [60]
நீர்த்துளி - ► உறை (11:2) [508]
நீர்நிறைசால் - 1. இடங்கர் 2. வட்டம் (7:40) [359]
நீர்ப்பூ - நால்வகைப்பூவுள் ஒன்று (4:40) [240]
நீர்மை - 1. அதிகாரம் 2. இயல்பு 3. உரிமை 4. உழுவல் 5. ஊழ் 6. கிழமை 7. குணம் 8. தகவு 9. தன்மை 10. பண்பு 11 பரிசு 12. பால் 13. பான்மை 14. மரபு 15 மாலை 16. முறை 17. விதி (8:56) [421]
நீர்வாரம் - ► குளநெல் (4:29) [229]
நீர்வாழ்சாதி - ► நாகு (11:80) [586]
நீர்வேட்டல் - உலகர்க்கு உறுதுயர் பதினெட்டனுள் ஒன்று (12:58) [648]
நீரம் - ► நீர் (1:42) [42]
நீரின்றிஉலர்நிலம் - ► பாலை (5:22) [265]
நீரின்றிமுதிர்ந்தபார் - ► பாலை (11:67) [573]
நீருறுபள்ளம் - ► சேறு (5:20) [263]
நீலகம் - ► கோட்டி (2:9) [83]
நீலநிறத்தன - ► நீலம் (11:74) [580]
நீலம் - 1. நீலநிறத்தன 2. நீலமணி 3. நெய்தல் (11:74) [580]; 4. நவமணியுள் ஒன்று (12:50) [640]; ► 1. இரவு (1:65) [65] 2. கருமை (8:16) [381] 3. நஞ்சு (6:23) [316] 4. பனை (4:12) [212] 5. விலங்கின்கூட்டம் (3:29) [175]
நீலமணி - ► நீலம் (11:74) [580]
நீலவாருணி - ஏழ்முகிலுள் ஒன்று (12:67) [657]
நீலி - ► கொற்றவை (1:30) [30]
நீலிநி - ஏழ்முகிலுள் ஒன்று (12:67) [657]
நீலோற்பலம் - ► கருங்குவளை (4:38) [238]
நீவல் - ► தடவுதல் (9:38) [461]
நீவி - 1. அரித்தல் 2. கொய்சகம் 3. துகில் 4. துடைத்தல் (11.44) [550]
நீளம் - 1. ஒழுகல் 2. சேண் 3. தீர்தல் 4. நிரை 5. நீக்கல் 6. நெடில் 7. நெடுமை 8. நேர்பாடு 9. போகல் 10. விடிதல் 11. விரிவாதல் (8:9) [374]; ► 1. சேண் (11:65) [571] 2. மதவு (11:47) [553]
நீளிடை - ► தூரம் (8:8) [373]
நீறு - ► பொடி (6:14) [307]
நீறுஅணிந்தோன் - ► சிவன் (1:3) [3]

## நு

நுகர்தல் - 1. நுங்கல் 2. நொண்டல் 3. விழுங்கல் (9:5) [428]; ► உண்டல் (9:4) [427]
நுகருதல்(உணவு) - 1. அயிறல் 2. அருந்தல் 3. ஆர்தல் 4. துய்த்தல் 5. நுங்கல் 6. பரிகரித்தல் 7. பொசித்தல் 8. மாந்தல் 9. மிசைதல் 10. மேவல் (6:16) [309]
நுங்கல் - ► 1. நுகர்தல் (9:5) [428] 2. நுகருதல் (6:16) [309]
நுங்கி - ► நுனை (7:9) [328]
நுசுப்பு - ► இடை (2:60) [134]
நுண்தேர்ச்சியர் - ► மந்திரி (2:14) [88]
நுண்மணல் - அயிர் (5:21) [264]
நுண்மை - 1. அணு 2. ஆய்தல் 3. ஒய்தல் 4. சாய்வு 5. நிழற்றல் 6. நுணுக்கம் 7. நுணுக்கு 8. நுணுகு 9. நுவணை 10. நுழை 11. நுனை 12. நொசிவு (8:10) [375]; நோன்றல் (8:36) [401]
நுணவு - ► தணக்கு (4:11) [211]
நுணுக்கம் - ► 1. நிழற்றல் (11:37) [543] 2. நுண்மை (8:10) [375]
நுணுக்கு - ► நுண்மை (8:10) [375]
நுணுகு - ► நுண்மை (8:10) [375]
நுனை - ► ஆயுதக்கூர்மை (7:8) [327]
நுதல் - ► நெற்றி (2:66) [140]
நுதல்எழுதுகுறி - புண்டரம் (6:10) [303]
நுதல்மேலணி - 1. இலம்பகம் 2. சூட்டு (4:42) [242]

நுதலணிபூண் - 1. இலம்பகம் 2. புல்லகம் (7:18) [337]
நுதற்சுடிகை - சுட்டி (7:17) [336]
நுதி - ► 1. ஆயுதக்கூர்மை (7:8) [327] 2. நுனை (7:9) [328]
நுரை - ► நீர்க்குமிழி (5.19) [262]
நுவணை - ► 1. நுண்மை (8:10) [375] 2. பிண்டி (6.18) [311]
நுழை - ► நுண்மை (8:10) [375]
நுள்ளல் - ► நுளம்பு (3:45) [191]
நுளம்பு - 1 நுள்ளல் 2. நுளுவல் (3:45) [191]
நுளுவல் - ► நுளம்பு (3:45) [191]
நுளைச்சி - ► நெய்தல்கிழத்தி (2:46) [120]
நுளையர் - ► நெய்தல்கிழவர் (2:46) [120]
நுனை - 1. நுங்கி 2. நுதி (7:9) [328]; ► நுண்மை (8:10) [375]

## நூ

நூபுரம் - ► பதகிண்கிணி (7 13) [332]
நூல் - 1. தந்து 2. பனுவல் (7:40) [359]; 3. அதிகாரம் 4. ஆகமம் 5. ஆரிடம் 6. தந்திரம் 7. பனுவல் 8. பிடகம் (10:16) [489]; 9. எண்ணம் 10. பனுவல் (11:64) [570]; ► 1. கலை (11:25) [531] 2. வாரி (11:38) [544]
நூல்இறைவர் - ► மந்திரி (2:14) [88]
நூலினில்செய்தல் - ► செயற்கையது (7:1) [320]
நூழில் - ► வன்கொடி (4:33) [233]
நூழை - ► சாளரம் (5:31) [274]
நூறு - சதம் (12:72) [662]
நூறுபத்து - ► ஆயிரம் (12:72) [662]
நூறை - ► மலங்கு (3:49) [195]
நூன்முகம் - ► பாயிரம் (10:18) [491]

## நெ

நெகிழ்தல் - ► நிறைவு (8:13) [378]
நெட்டை - ► பொழுதுநீட்டித்தல் (9:34) [457]
நெடித்தல் - ► பொழுதுநீட்டித்தல் (9:34) [457]
நெடித்தல்பொழுது - ► பாணி (11:8) [514]
நெடிது - ► நேர் (11:82) [588]
நெடில் - ► நீளம் (8:9) [374]
நெடுமாலவன் - ► திருமால் (1:6) [6]
நெடுமை - ► நீளம் (8:9) [374]
நெடுமொழி - தன்னை மேம்பாடு படச் சொல்லல் (10:9) [482]
நெய் - 1. ஆச்சியம் 2. இழுது 3. கிருது 4. துப்பு (6:19) [312]; 5. எழுகடலுள் ஒன்று (12:35) [625]; ► 1. சித்திரை (1:58) [58] 2. நிணம் (3:33) [179]
நெய்த்தோர் - ஏழுதாதுள் ஒன்று (12:38) [628]; ► இரத்தம் (3:32) [178]
நெய்தல் - 1. குவலையம் (4:39) [239]; 2. மகோததிசூழ்நிலம் (5:22) [265]; 3. நாற்புவியுள் ஒன்று (12:9) [599]; ► 1. ஓசை (11:4) [510] 2. குவலயம் (11:13) [519] 3. சமபடர் (5:23) [266] 4. நீலம் (11:74) [580]
நெய்தல்கிழத்தி(நெய்தல்நிலப்பெண்) - 1. கடல்பிணவு 2. நுளைச்சி 3. பரத்தி (2:46) [120]
நெய்தல்கிழவர்(நெய்தல்நிலமக்கள்) - 1. கடலர் 2. கலவர் 3. திமிலர் 4. நுளையர் 5. பரதர் 6. வலையர் (2:46) [120]
நெய்தல்தலைமகன் - 1. கொண்கன் 2. சேர்ப்பன் 3. துறைவன் 4. மெல்லம்புலம்பன் (2:46) [120]
நெய்தல்நிலத்துஊர் - பட்டினம் (5:25) [268]
நெய்தல்யாழ்த்திறன் - 1. திறங்காலம் 2. விளரி (10:30) [503]
நெய்தல்பறை - சாப்பறை (7:21) [340]
நெய்யரி - ► நாரரி (4 32) [232]
நெரித்தல் - வெறுத்தல் (9:23) [446], ► அலைப்பு (9:26) [449]
நெருக்கல் - ► மீதூறுதல் (9:25) [448]
நெருங்குதல் - 1. இமிர்தல் 2. கஞரல் 3. மிடைதல் (9:10) [433]
நெருப்பு - 1. அங்கி 2. உதாசனன் 3 எரி 4. எழுநாவன் 5. கனலி 6. சிகி 7. சித்திரபானு 8. சுவலன் 9. ஞெகிழி 10. தனஞ்செயன் 11. திரிகுணன் 12. புவமானன் 13 வாயுசகன் (1:40) [40]
நெருப்புமலிவிறகு - ஞெகிழி (6.12) [305]
நெருநல் - ► முனநாள் (1:66) [66]
நெல் - ► இளமைப்பெயர்பெறாதவை (4:21) [221]
நெல்தாள் - ► வை (11:16) [522]
நெல்லி - ஆமலகம் (4:6) [206]; ► திரிபலை (12:8) [598]
நெற்றி - 1. இலாடம் 2. குளம் 3. நுதல் 4. மத்தகம் 5 முண்டகம் (2:66) [140]
நெறி - ► வழி (5:45) [288]
நெறியிலர் - ► கீழ்மக்கள் (2:27) [101]
நென்னல் - ► முனநாள் (1:66) [66]

## நே

நேடல் - ► தேடல் (9.16) [439]
நேத்திரம் - ► கண் (2:66) [140]
நேமி - ► 1. கடல் (5:14) [257] 2. சக்கிரம் (7:2) [321] 3. தேர்க்கால் (7:26) [345] 4. பூமி (5:5) [248] 5. வட்டம் (8:2) [367]
நேமிப்புள் - ► சகோரம் (3:42) [188]
நேர் - 1. உடன்பாடு 2. ஒத்தல் 3. கொடை 4. தனி 5. நெடிது (11:82) [588]; ► 1. அளவு (8:22) [387] 2. உவமை (8:57) [422]

**நேர்செலல்** - 1. ஆதி 2. வீதி (9:13) [436]
**நேர்தல்** - ► உடன்படல் (9:34) [457]
**நேர்பாடு** - ► நீளம் (8:9) [374]
**நேரலர்** - ► பகைவர் (2:36) [110]
**நேராடல்** - ► பாணி (11:8) [514]
**நேரியன்** - ► சோழன் (2:12) [86]

## நை

**நையாயிகர்** - ► அறுசமயத்தருள் ஒருவர் (12:26) [616]
**நைவளை** - ► குறிஞ்சியாழ்த்திறன் (10:28) [501]

## நொ

**நொகுத்தல்** - ► அவித்தல் (9:42) [465]
**நொச்சி** - 1. சிந்துவாரம் (4:24) [224]; 2. எண் வகைப் போர்த்தொழிலுள் ஒன்று (12:47) [637]; ► ஊர் (5:24) [267]
**நொசிவு** - ► நுண்மை (8:10) [375]
**நொடி** - ► எழுத்தின்ஓசைச்சொல் (10:1) [474]
**நொடை** - ► விலை (9:17) [440]
**நொண்டல்** - ► நுகர்தல் (9:5) [428]
**நொதுமலர்** - ► அயலோர் (2:23) [97]
**நொய்தாதல்** - நொய்வு (8:20) [385]
**நொய்து-எனல்** - ► விரைவுக்குறிப்பு (9:11) [434]
**நொய்வு** - ► நொய்தாதல் (8:20) [385]
**நொள்-எனல்** - ► அனுகரணஓசை (10:31) [504]
**நொள்ளை** - ► நாகரவண்டு (3.53) [199]
**நொறில்** - ► விரைவு (9:11) [434]

## நோ

**நோக்கம்** - ► கண் (2:66) [140]
**நோய்** - 1. அஞர் 2. அழுங்கல் 3. சூழ் 4 பிணி 5. பையுள் 6. மடங்கு 7. மடி 8. மழுகல் (8:35) [400]; 9. உயிர்வேதனை பன்னிரண்டனுள் ஒன்று (12:54) [644]; ► 1. அசைதல் (11:64) [570] 2. மடங்கல் (11:45) [551]
**நோய்இன்மை** - நாட்டுவகைஆறனுள் ஒன்று (12:28) [618]
**நோய்மருந்து** - முப்பத்திரண்டுஅறத்துள் ஒன்று (12:60) [650]
**நோலையல்** - ► அப்பம் (6:18) [311]
**நோன்றல்(பொறை)** - நுண்மை (8:36) [401]
**நோனாமை** - ► பொறாமை (8:36) [401]

## ப

**பஃறி** - ► 1. இரேபதி (1:63) [63] 2. மரக்கலம் (7:32) [351]
**பக்கம்** - 1. திதி (1:66) [66]; 2. இடம் 3. சிறை 4. ஞாங்கர் 5. பாங்கர் 6. பாடு 7. பால் 8. புடை 9. புழை 10. மருங்கு 11. முன் (5:47) [290]; ► பால் (11:25) [531]
**பகடு** - 1. இபம்(ஆண்) 2. எருமை(ஆண்) 3. பெற்றம்(ஆண்) (3:21) [167]; ► 1. ஓடம் (7:33) [352] 2. தெப்பம் (7:33) [352] 3. போத்து (3:9) [155] 4. யானை (3:4) [150]
**பகண்டை** - 1 இதலி 2. குறும்பூழ் 3. சிவல் (3:40) [186]
**பகம்** - ► 1. கொக்கு (3:41) [187] 2. மாதர்குறி (2:61) [135]
**பகர்தல்** - ► 1. சொல்லுதல் (10:2) [475] 2. விலை (9:17) [440]
**பகல்** - 1. எல்லை (1:65) [65]; 2. ஒளி 3. செயல் 4. நடு 5. நாள் (11:20) [526]; ► 1. உச்சி (1·64) [64] 2. எல்லை (11:29) [535] 3. தினம் (1:66) [66]
**பகலவன்** - ► சூரியன் (1:45) [45]
**பகவதி** - ► கொற்றவை (1:30) [30]
**பகவர்** - ► கடவுள்பொது (1:34) [34]
**பகவன்** - ► 1. அருகன் (1:19) [19] 2. புத்தன் (1:21) [21]
**பகவன்தினம்** - ► பூரம் (1:57) [57]
**பகழி** - ► 1. அம்பு (7.4) [323] 2. கணை (11:72) [578]
**பகற்பதி** - ► வியாழன் (1:48) [48]
**பகறி** - ► ஓடம் (7:33) [352]
**பகன்றை** - ► கிலுகிலுப்பை (4:28) [228]; ► சிவதை (4:35) [235]
**பகீரதி** - ► கங்கை (1:25) [25]
**பகுத்தல்** - ► பால் (11:25) [531]
**பகுதி** - ► வாரம் (11:75) [581]
**பகுவாய்க்கொள்கலம்** - பிழா (7:35) [354]
**பகை** - 1. இகல் 2. உறழ் 3. தூ 4. தெவ்வு 5. முரண் 6. முனை (8:42) [407]; 7. உலகர்க்கு உறுதுயர் பதினெட்டனுள் ஒன்று (12:58) [648]; ► 1. அரி (11:78) [584] 2. கோபம் (9:8) [431] 3. படலை (11:45) [551] 4 பூசல் (9:30) [453] 5. முரண் (11:58) [564] 6. முனை (11:69) [575]
**பகைவர்** - 1. அரிகள் 2 எதிர்ந்தார் 3. ஒட்டலர் 4. ஒல்லார் 5. ஒன்னார் 6. கண்டலர் 7. கருதலர் 8. செருநர் 9. செருவினர் 10 செற்றவர் 11. சேரலர் 12. தரியலர் 13. தெவ்வர் 14. நிகரலர் 15. நேரலர் 16. பரவலர் 17. பற்றலர் 18. போற்றலர் 19. மாற்றலர் 20. விண்டார் (2:36) [110]; ► கள்வர் (2:28) [102]
**பங்கம்** - ► சேறு (5:20) [263]
**பங்கயப்பாணியன்** - ► விநாயகன் (1:15) [15]
**பங்கயம்** - ► தாமரை (4:37) [237]
**பங்கி** - ► 1. ஆண்மயிர் (2:68) [142] 2. பிற மயிர் (2:69) [143]

பங்கு - ► 1. சனி (1:49) [49] 2. முடவர் (2:25) [99]
பங்குனி - ► உத்திரம் (1:58) [58]
பச்சிமம் - ► மேக்கு (5:2) [245]
பச்சிலை(மரம்) - 1. தமாலம் 2. பசும்பிடி (4:6) [206]
பச்சை - ► தோல் (3:31) [177]
பச்சைநிறம் - 1 சாமளம் 2. பசுமை 3. பாசு 4. பைத்து (8:15) [380]
பச்சைமரகதமேனியன் - ► திருமால் (1:6) [6]
பசாசு - 1. அணங்கு 2. அலகை 3. கணம் 4. கடி 5. கழுது 6. கூளி 7. சாவு 8. சோகு 9. பிரேதகம் 10. மண்ணை 11. வேதாளம் (1:36) [36]
பசி - 1. உயிர்வேதனை பன்னிரண்டனுள் ஒன்று (12:54) [644] 2. உலகர்க்கு உறுதுயர் பதினெட்டனுள் ஒன்று (12:58) [648]
பசு(பொது) - 1. ஆன் 2. குடம் 3. கோ 4. சுட்டு 5. பெற்றம் 6. மாடு (3:7) [153]; ► 1. இடபஇராசி (1:50) [50] 2. நாகு (3:24) [170]
பசுக்காவல் - 1. உழவர்அறுதொழிலுள் ஒன்று (12:25) [615]; 2. வணிகர் அறுதொழிலுள் ஒன்று (12:24) [614]
பசுப்பெண்பால் - 1. கபிலை 2. குரம் 3. கோமளம் 4. சுரபி 5. சுரை 6. சேதா 7. தேனு (3:8) [154]
பசுபதி - ► சிவன் (1:1) [1]
பசும்பிடி - ► பச்சிலை (4:6) [206]
பசும்புல் - ► பயிர் (4:31) [231]
பசுமை - ► 1. பச்சைநிறம் (8:15) [380] 2. வண்ணம் (8:13) [378]
பசை - ► 1. இலாபம் (8:49) [414] 2. தூவு (11:52) [558]
பஞ்சசயனம் - 1. தூவி 2. பஞ்சுமெத்தை 3. படாம் 4. மயிர்ச்சேணம் 5. விரிப்பாய் (12:21) [611]
பஞ்சதாரை விட்டோன் - ► புத்தன் (1:22) [22]
பஞ்சரம் - ► 1. கூடு (5:36) [279] 2. செருந்தி (4:5) [205]
பஞ்சவன் - ► பாண்டியன் (2:13) [87]
பஞ்சாய்க்கோரை - எருவை (4:36) [236]
பஞ்சாயுதன் - ► திருமால் (1:6) [6]
பஞ்சானனம் - ► சிங்கம் (3:1) [147]
பஞ்சிகம் - ► தாளி (4:35) [235]
பஞ்சு - ► பருத்தி (6:15) [308]
பஞ்சுநுனி - துய் (6:15) [308]
பஞ்சுமெத்தை - ► பஞ்சசயனம் (12:21) [611]
பஞ்சுரம் - ► குறிஞ்சியாழ்த்திறன் (10:28) [501]
பட்டடை - ► அடைகுறடு (7:32) [351]
பட்டம் - ஓடை (7:17) [336]; ► 1. கூறை (7:41) [360] 2. பரிசை (7:10) [329] 3. வாவி (5:18) [261]
பட்டாங்கு - மும்மொழியுள் ஒன்று (12:3) [594]
பட்டாடை - 1. கோசிகம் 2. பாளிதம் (7:41) [360]
பட்டார் - முப்பத்திரண்டுஅறத்துள் ஒன்று (12·61) [651]
பட்டாரகர் - ► கடவுள்பொது (1:34) [34]
பட்டி - ► இடம் (5:46) [289]
பட்டிமை - ► வஞ்சனை (8:44) [409]
பட்டினம் - ► 1. ஊர் (5:24) [267] 2. களவு(9:6) [429] 3. நெய்தல்நிலத்துஊர் (5:25) [268]
பட்டுத்துகில்அமைத்தல் - ► காருக வினைத்தொழில் (12:25) [615]
படகம் - ஆனகம் (7:22) [341]; ► பல்வகைப் பறை (7:24) [343]
படப்பை - ► தோட்டம் (5:43) [286]
படம் - ► 1. இடுதிரை (7:44) [363] 2. கூறை (7:41) [360]
படர் - 1. உன்னல் 2. செலவு 3. பரிவு (11:53) [559]; ► துன்பம் (8:41) [406]
படர்க்கை - மூன்றுஇடத்துள் ஒன்று (12:3) [593]
படர்ச்சி - ► பரந்தவடிவு (8:4) [369]
படர்தல் - ► போகல் (9:10) [433]
படலம் - ஒரு மொழி(பொருள்) மட்டுமன்றி தொடர்புடைய பொது மொழிகளையும் (பொருள்களையும்) தொகுத்துக் கூறுவது (10:19) [492]
படலை - பகை (11:45) [551]; ► 1. பரந்தவடிவு (8:4) [369] 2. மாலை (4:42) [242]
படாகை - ► கொடி (7:44) [363]
படாம் - ► 1. கூறை (7:41) [360] 2. பஞ்ச சயனம் (12:21) [611]
படி - ► பூமி (5:5) [248]
படிகம் - 1. காழ் 2. பருக்கை 3. பளிங்கு (6:6) [299]
படிதல் - ► சார்வு (9:37) [460]
படிமக்கலம் - ► கண்ணாடி (7:19) [338]
படியிடந்தோன் - ► திருமால் (1:8) [8]
படிவம் - 1. அவிர்தல் 2. வடிவம் (11:68) [574]; ► உடம்பு (2:58) [132]
படிற்றுஒழுக்கர் - ► தூர்த்தர் (2:29) [103]
படு - ► 1. கள் (6:21) [314] 2. பண்ணை (11:5) [511] 3. வாவி (5:18) [261]
படுகர் - ► 1. இழிவேற்றவழி (5:44) [287] 2. பள்ளம் (5:46) [289]
படுகளம் - ► போர்க்களம் (5:38) [281]

படுதல் - ► பாடு (11:15) [521]
படுமலை - ► 1. குறிஞ்சியாழ்த்திறன் (10:28) [501]; 2. பாலையாழ்த்திறன் (10:29) [502]
படுவர் - ► கள்விற்போர் (2:21) [95]
படை - 1. ஆயுதம் 2. சயனம் 3. தானை 4. நாஞ்சில் (11:60) [566]; 5. அரசியல்ஆறனுள் ஒன்று (12:28) [618]; ► 1. அரி (11:78) [584] 2. ஆயுதம் (7:8) [327] 3. கலனை (7:11) [330] 4. கலப்பை (7:28) [347] 5. வாள் (11:76) [582]
படைக்கலம் - ► 1. ஆயுதம் (7:8) [327] 2. கருவி (11:51) [557]
படைக்கலம்இயற்றல் - அரசர் அறுதொழிலுள் ஒன்று (12:24) [614]
படைக்கலம்பயிலல் - அரசர் அறுதொழிலுள் ஒன்று (12:24) [614]
படைத்தலைவர் - ► அரசர்துணைவர் (12:57) [647]
படைத்தவன் - ► பிரமன் (1:9) [9]
படைத்திரள் - 1. அநிகம் 2. சேனை 3. தண்டம் 4. தார் 5. தானை 6. நிதனம் 7. பதாகினி 8. பதாதி 9. மன்பகுதி 10. வருதினி (2:55) [129]; 11. அணிகம் 12. யூபம் (2:56) [130]
படைபயில்களம் - ► கழகம் (5:34) [277]
படையாளர் - 1. கூளியர் 2. பொருநர் 3. மண்டர் 4. மள்ளர் 5. மறவர் 6. மானவர் 7. வயவர் 8. வாளுழவர் 9 விறலர் 10. வீரர் (2:35) [109]
படையுறை - கருவிப்புட்டில் (7:9) [328]
படைவீடு - ► பாடி (11:56) [562]
பண் - ► 1. இசை (10:26) [499] 2. கலனை (7:11) [330] 3. பண்பின்இயல்பு (8:1) [366]
பண்டம் - முப்பத்திரண்டுஅறத்துள் ஒன்று (12 61) [651];► வளம் (11:66) [572]
பண்டர் - ► பாடலில்தாழுமவர் (2:22) [96]
பண்டாரம் - 1. கோசம் 2. தண்டம் (6:4) [297]
பண்டி - 1. உருள் 2. ஒழுகை 3. சகடு 4. சாகாடு 3. சாடு 6. வையம் (7:27) [346]; ► உரோகணி (1:54) [54]
பண்டிதன் - ► புதன் (1:47) [47]
பண்ணம்பணத்தி - ► கொற்றவை (1:30) [30]
பண்ணல் - ► செயல் (9:1) [424]
பண்ணவர் - ► 1. கடவுள்பொது (1:34) [34] 2. பற்றற்றோர் (2:1) [75]
பண்ணவன் - ► அருகன் (1:20) [20]
பண்ணிகாரம் - ► பலபண்டம் (6:7) [300]
பண்ணியம் - ► பலபண்டம் (6:7) [300]
பண்ணை - 1. நன்னுதலார்(மகளிர்) விளையாட்டு 2. படு (11:5) [511]; ► 1. மக்கள் கூட்டம் (2:57) [131] 2. மகள்விளையாட்டு (9:2) [425]

பண்பின்இயல்பு - 1. அளவு 2. உணர்வில் புலப்படும் உண்மைப்பொருள் 3. காண்டலுற்ற பொருள் 4. குணம் 5. பண் 6. வடிவு 7. வண்ணம் (8:1) [366]
பண்பு - 1. குணம் 2. நிறம் (8:57) [422]; 3. வேந்தன்ஏழுபண்புள் ஒன்று (12:39) [629], ► நீர்மை (8:56) [421]
பண்புஉரைப்போர் - ► தூதர் (2:25) [99]
பணம் - ► பாம்பின்படம் (3 33) [179]
பணவை - ► பரண் (7·31) [350]
பணி - ► 1. அரவு (3:34) [180] 2. அரி (11:78) [584]
பணிஆடி - ► திருமால் (1:8) [8]
பணிஆபரணன் - ► சிவன் (1·4) [4]
பணிதல் - ► தொழுதல் (9·21) [444]
பணிலக்குழையான் - ► சிவன் (1:2) [2]
பணிலத்தி - ► கொற்றவை (1:30) [30]
பணிலம் - ► சங்கம் (3:50) [196]
பணை(பொது) - 1 தூரியம் 2. பீலி 3. முரசு 4. முருடு 5. முழவு 6. கோடணை (7:23) [342]; 7. கழை 8. பழனம் 9. பணைத்தல் 10. புரவிப்பந்தி 11. பெருத்தல் 12. மணமுரசு 13 மரக்கோடு (11.26) [532]; ► 1. அரசு (4:3) [203] 2. குறிஞ்சி (5:23) [266] 3. பெருமை (8:6) [371] 4 பேரிகை (7·23) [342] 5. மரக்கொம்பு (4 21) [221] 6. மருதப்பறை (7:21) [340] 7 மருதம் (5.22) [265] 8. மாப்பந்தி (5:36) [279] 9. மூங்கில் (4:13) [213]
பணைத்தல் - ► பணை (11:26) [532]
பத்திரம் - ► 1. அம்பு (7:4) [323] 2. இலை (4·22) [222]
பத்திரை - ► இரண்டாம்பக்கம் (1:66) [66]
பத்மம் - ► பற்மநிதி (6:4) [297]
பதக்கம் - 1. ஆரம் 2. கண்டிகை (7·15) [334]; ► மாதர்முலையணிவடம் (7:15) [334]
பதகிண்கிணி - 1. நூபுரம் 2. பரிபுரம் 3. பரியகம் (7:13) [332]
பதங்கம் - 1. பறவைப்பொது 2. விட்டில் (11:53) [559]; ► 1. ககம் (3:42) [188] 2. விட்டில் (3:45) [191]
பதங்கன் - ► சூரியன் (1:45) [45]
பதடி - ► பதர் (4:31) [231]
பதப்பாடு - ► மதில்உறுப்பு (5:40) [283]
பதம் - 1. எல்லுறுகாலம் 2. சொல் 3. சோறு 4. நிதி 5. நிறம் 6. பாவலர் 7. பொருள் 8. வழி (11:31) [537]; ► 1. சோறு (6:15) [308] 2. நாழிகை (1:64) [64] 3. பாதம் (2:59) [133] 4. பொழுது (1:64) [64] 5. வழி (5:45) [288]
பதர் - பதடி (4·31) [231]

பதலை - 1. தாழி 2. பரந்தவாய்ப்பறை (11:42) [548]; ► 1. குன்று (5:10) [253] 2. தாழி (7:39) [358] 3. வாய்பரந்தபறை (7:22) [341]

பதவை - ► வழி (5:45) [288]

பதனழிவு - 1. அடைத்தல் 2. ஊழ்த்தல் 3. செவ்வி 4. தழைத்தல் (9:39) [462]

பதாகினி - ► படைத்திரள் (2:55) [129]

பதாகை - ► கொடி (7:44) [363]

பதாதி - கரிஒன்றும் சேவகர்பதின்மரும் தேர் ஒன்றும் மா(குதிரை) நான்கும் கொண்டது (12:71) [661]; ► படைத்திரள் (2:55) [129]

பதாதி மும்மடி கொண்டது - ► சேனம் (12:71) [661]

பதாயுதம் - ► கோழி (3:37) [183]

பதி - 1. இறையவன் 2 உறைவிடம் (11:30) [536]; ► 1. அரசன் (2:10) [84] 2. இல் (5:30) [273] 3. ஊர் (5:24) [267] 4. எப்பொருட்கும் இறை (2:8) [82] 5. கணவன் (2.54) [128] 6. நகரப்பதி (5:26) [269] 7. மருதநிலஊர் (5:26) [269] 8. மூத்தவர் (2:7) [81]

பதிகம் - பலவகைச் சொற்பொருள் கூட்டம் (நூலில் உள்ள பலவகைப் பொருள்களை யும் தொகுத்து உரைப்பது) (10:20) [493]

பதிதன் - ► ஆகாவழிச்செல்பவன் (2:24) [98]

பதியம் - ► பாசி (4:36) [236]

பதிவாழ்சதுரர் - நாகரிகர் (2:29) [103]

பதினாயிரம் - அயுதம் (12:72) [662]

பதினெட்டுவாசகர்(மொழியாளர்) - 1. அங்கர் 2. ஆரியர் 3 உமணர் 4. கவுசலர் 5. கலிங்கர் 6. களப்பரர் 7. கொங்கணர் 8. கொங்கர் 9. சிங்களர் 10. சிந்தவர் 11. சீனர் 12. சோனகர் 13. துளுவர் 14. மலையாளர் 15. மாகதர் 16. மாராடர் 17. மாளுவர் 18. வங்கர் (12:55) [645]

பதினெண்கணம் - 1. அசுரர் 2. ஆகாசியர் 3. இயக்கர் 4. இராக்கதர் 5. கந்திருவர் 6. கருடர் 7. கிம்புருடர் 8. சித்தர் 9. சுரர் 10. தக்கருகர் 11. பிசாசர் 12. பூதர் 13. போக பூமியர் 14. முனிவர் 15. வித்தியாதரர் (சில சொற்கள் விடுபட்டுள்ளன) (12:56) [646]

பதினெண்புராணம் - 1. ஆக்கினேயம் 2. இலிங்கம் 3. கச்சபம் 4. காந்தர்ப்பம் 5. காருடம் 6. சைவம் 7. நாரதம் 8. பவுடிகம் 9. பிரமம் 10. பிரமாண்டம் 11. மச்சம் 12. மார்க்கண்டை 13. வயினுவம் 14. வராகம் 15. வாமனம் (பதினைந்து சொற்களே உள்ளன) (12:59) [649]

பதுக்கை - ► 1. சிறுதிட்டை (5:11) [254] 2. சிறுதூறு (4:19) [219]

பதுமம் - ► தாமரை (4·38) [238]

பந்தம் - ► 1. திரள்வடிவு (8:3) [368] 2. மயிர் முடி (2:70) [144] 3. மித்திரர் (2:37) [111]

பந்தி - ► நிரை (6:25) [318]

பந்தித்தல் - ► யாத்தல் (9:29) [452]

பந்து - கந்துகம் (7:37) [356]

பம்பல் - ► பொலிவு (8:37) [402]

பம்பை - ► 1. பல்வகைப்பறை (7:24) [343] 2. முல்லையார்பறை (7:21) [340]

பம்மல் - ► எழுச்சிமிகுதி (9:36) [459]

பயத்தல் - ► உண்டாதல் (9:21) [444]

பயந்தவள் - ► பெற்றவள் (2:49) [123]

பயம் - ► 1. நீர் (1:42) [42] 2. பால் (6.19) [312]

பயன் - ► 1. அன்பின்நடையது (8.40) [405] 2. இலாபம் (8:49) [414]

பயன்நிலம் - ► மருதம் (11:68) [574]

பயனி - ► கூடுவது (8:9) [374]

பயனிலி - ► கொன் (11:29) [535]

பயிர் - 1. பசும்புல் 2. பைங்கூழ் (4:31) [231]; ► கூழ் (11:80) [586]

பயிரவி - ► காளி (1:27) [27]

பயில்தல் - ► எழுத்திலாஓசை (10:31) [504]

பயிலல் - ► அவித்தல் (9:42) [465]

பயின் - ► பரலின்உட்படுகுருத்து (4:23) [223]

பயோதரம் - ► முலை (2:61) [135]

பரசு - ► மழு (7:2) [321]

பரசுதரன் - ► சிவன் (1:1) [1]

பரசுராமன் - நாரணன்பத்துஅவதாரத்துள் ஒன்று (12:52) [642]

பரடு - ► காலடி (2:59) [133]

பரண் - 1. இதணம் 2. கழுது 3. பணவை (7:31) [350]

பரண்டம் - ► மேகம் (1:43) [43]

பரணி - 1. அடுப்பு 2. கானமீன் 3. சுல்லி 4. தருமன்நாள் 5. தாசி (1:53) [53]

பரத்தி - ► நெய்தல்கிழத்தி (2:46) [120]

பரத்தை - ► பொதுமகள் (2:41) [115]

பரதம் - ► 1. கூத்து (9:46) [469] 2. மேகம் (1:43) [43]

பரதர் - ► 1. நெய்தல்கிழவர் (2:46) [120] 2. வணிகர் (2:16) [90]

பரதவர் - ► குருகுலமன்னன் (2:10) [84]

பரந்தவடிவு - 1. படர்ச்சி 2. படலை (8:4) [369]

பரந்தவாய்ப்பறை - ► பதலை (11:42) [548]

பரந்தாமன் - ► திருமால் (1:8) [8]

பரப்பு - ► 1. பரவுதல் (8:9) [374] 2. பரவை (11:71) [577] 3. விரிவாமிடம் (8:8) [373]

பரம்பரம் - ► முறைமை (8:47) [412]

பரமன் - ► அருகன் (1:19) [19]
பரமேட்டி - ► பிரமன் (1:10) [10]
பரல் - ► காழ் (11:25) [531]
பரலடுத்துஉயர்நிலம் - முரம்பு (5:12) [255]
பரலின்உட்படுகுருத்து - பயின் (4:23) [223]
பரவல் - ► வாழ்த்து (10:4) [477]
பரவலர் - ► பகைவர் (2:36) [110]
பரவுதல் - 1. ஞெமிர்தல் 2. பரப்பு 3. பரவை 4. பாய்தல் (8:9) [374]; ► தொழுதல் (9:21) [444]
பரவை - 1. கடல் 2. பரப்பு (11:71) [577]; ► 1. கடல் (5:13) [256] 2. பரவுதல் (8:9) [374]
பராசம் - ► பொடி (6:14) [307]
பராதல் - ► தொழுதல் (9:21) [444]
பரி - 1. செலவு 2. பரி(குதிரை) 3. பாதுகாவல் 4. வருத்தம் (11:18) [524]; 5.நவதாரணையுள் ஒன்று (12:51) [641]; ► 1. அசுபதி (1:53) [53] 2. குதிரை (3:6) [152] 3. பருத்தி (6:15) [308] 4. பெருமை (8·6) [371]
பரி(குதிரை)வாய்புகுகருவி - 1. கரிள் 2. கலினம் (7:11) [330]
பரிஜங்கதி - 1. சரகதி 2. மயில்கதி 3. மல்லகதி 4. முயல்கதி 5. (வானரகதி) (12:22) [612]
பரிகம் - ► அகழ் (5:40) [283]
பரிகரித்தல் - ► நுகருதல் (6:16) [309]
பரிசனம் - ► 1. ஏவல்வினைஞர் (2:25) [99] 2. மித்திரர் (2:37) [111]
பரிசனன் - ► காற்று (1:37) [37]
பரிசிற்குரியார் - ► இரவலர் (2:34) [108]
பரிசு - ► நீர்மை (8:56) [421]
பரிசை - 1. கேடகம் 2. சேடகம் 3. தோல் 4. பட்டம் 5. வீதிகை (7:10) [329]
பரித்தல் - ► சுமத்தல் (9:14) [437]
பரிதல் - ► 1. நிலைபெறல் (9:14) [437] 2. போகல் (9:10) [433]
பரிபவம் - ► இழித்தகுவு (8:21) [386]
பரிபுரம் - ► பதகின்கிணி (7:13) [332]
பரிமளம் - ► நாறுதல் (8·54) [419]
பரிமாவடிப்பவர்(குதிரைப்பாகர்) - வாதுவர் (2:34) [108]
பரியகம் - ► பதகிண்கிணி (7:13) [332]
பரியங்கம் - ► கட்டில் (7:31) [350]
பரியாயம் - பன்முறை (8:51) [416]
பரியாளம் - ► அரசர்பரியாரம் (2:34) [108]
பரியுருவானவன் - ► திருமால் (1:6) [6]
பரிவீரர் - ► அரசர்துணைவர் (12:57) [647]
பரிவு - 1. இன்பம் 2. துன்பம் (11:6) [512]; 3. விருப்பு (11:17) [523]; ► 1. அன்பு (8:25) [390] 2. படர் (11:53) [559]
பரிவேடம் - 1. ஊர்கோள் 2. வட்டம் (1:73) [73]; ► உற்பாதம் (12:67) [657]
பருக்கை - ► படிகம் (6:6) [299]
பருகுதல் - ► உண்டல் (9:4) [427]
பருகுமவை(பொது) - பானம் (6:21) [314]
பருத்தி - 1. காற்பாசம் 2. பன்னல் (4:26) [226]; 3. காற்பாசம் 4. பஞ்சு 5. பன்னல் 6. பரி (6:15) [308]
பருதி - ► 1. சூரியன் (1:45) [45] 2. தேர்க்கால் (7:26) [345] 3. வட்டம் (8:2) [367]
பருந்து - 1. கங்கம் 2. சேனம் 3. பாறு (3:36) [182]
பருப்பதம் - ► மலை (5:9) [252]
பருமம் - ► கலணை (7:11) [330]
பருமை - 1. பரூஉம் 2. பீனம் (8·11) [376]; ► மா (11:10) [516]
பருவம் - 1 ஆனியம் 2. இருது (1:69) [69]; ► இளமை (8·48) [413]
பருவம்ஆறு - 1. இளவேனில்-சித்திரை, வைகாசி 2. கார்-ஆவணி, புரட்டாசி 3. கூதிர்-ஐப்பசி, கார்த்திகை 4. பின்பனி-மாசி, பங்குனி 5. முதுவேனில்-ஆனி, ஆடி 6. முன்பனி-மார்கழி, தை (1:68) [68]
பருவரல் - ► துன்பம் (8:41) [406]
பரூஉம் - ► பருமை (8:11) [376]
பல் - 1. எயிறு 2. தட்டம் 3. தந்தம் (2:64) [138]
பல்பண்டம் - ► கூலம் (11:61) [567]
பல்லணம் - ► கலணை (7:11) [330]
பல்லம் - 1. கரடி 2. சிலீமுகம் (11:58) [564]; ► 1. அம்பு (7:4) [323] 2. கரடி (3:14) [160]
பல்லவம் - ► தளிர் (4:22) [222]
பல்லியம் - இசைக் கருவிகளுடன் இராகத்தோடு பாடப்படும் பாடல் (10:26) [499]; ► 1. கருவி (11:51) [557] 2. பாணி (11:8) [514]
பல்வகைஆடல் - ► கரணம் (11:34) [540]
பல்வகைப்பறை - 1. அம்பணம் 2. ஆனகம் 3. சல்லரி 4. தக்கை 5. தடாரி 6. திண்டிகை 7. படகம் 8. பம்பை (7:24) [343]
பல்வகைப்பாடல் - ► கரணம் (11:34) [540]
பல - ஐம்பாலுள் ஒன்று (12:22) [612]
பலஉறுப்பாகியஓர்உறுப்பு - 1. கலப்பை 2. கலனை (7:28) [347]
பலகறை - 1. அலகு 2. கவடி 3. சோகி 4. வட்டி 5. வெள்வரகு (6:7) [300]
பலகை - 1. கட்டினம் 2. தட்டு 3. மாவட்டணம் (7:10) [329]; ► தோல் (11·9) [515]
பலபண்டம் - 1. கூலம் 2. பண்ணியம்

3. பண்ணிகாரம் 4. வளம் (6:7) [300]
பலம் - ► பழம் (4:23) [223]
பலர் - ஐம்பாலுள் ஒன்று (12:22) [612]
பலரறிசொல் - ► பெருஞ்சொல் (10:4) [477]
பலவகைச் சொற்பொருள் கூட்டம் - ► பதிகம் (10:20) [493]
பலவிதம் - ► நானாவிதம் (8:51) [416]
பலாலம் - ► வைக்கோல் (4:31) [231]
பலி - 1. ஐயம் 2. சோறு (11:71) [577]; ► 1. தேவருணவு (6:17) [310] 2 பிட்சை (9:20) [443]
பலித்தல் - ► இலாபம் (8:49) [414]
பவணம் - ► பூனை (3 15) [161]
பவம் - ► பிறப்பு (8:46) [411]
பவளம் - 1. அரத்தம் 2. துகிர் 3. துப்பு 4. துவர் 5. பிரவாளம் 6. வித்துருமம் (6:4) [297], ► துப்பு (11:33) [539]
பவனம் - ► 1. இல் (5:30) [273] 2 உலகு (5·7) [250] 3. காற்று (1:37) [37] 4. துறக்கம் (5:1) [244]
பவித்திரம் - ► தூய்மை (8·50) [415]
பவிலவங்கம் - ► குரங்கு (3:17) [163]
பவுடிகம் - பதினெண்புராணத்துள் ஒன்று (12.59) [649]; ► முதல்வேதம் (10:16) [489]
பவுத்தர் - ► புத்தர் (2:4) [78]
பவுரி - ► நடனவிகற்பம் (9:47) [470]
பழங்கண் - ► மெலிவு (8:42) [407]
பழங்கொல்லை - முதைப்புனம் (5:42) [285]
பழம் - 1. கனி 2. பலம் (4:23) [223]; ► செம்மல் (11:32) [538]
பழம்பூ - செம்மல் (4:41) [241]
பழமை - 1. தொடர்பு 2. தொண்டு 3. தொத்து 4. தொல்லை 5. தொன்மை 6. தொன்று 7. புராணம் 8. புராதனம் 9. பூருவம் 10. முதுமை 11. முந்தை 12. முன்னை (8:45) [410]; ► தொண்டு (11 14) [520]
பழமொழி - ► மூதுரை (10:17) [490]
பழனம் - ► 1. பணை (11:26) [532] 2. மருதம் (5:22) [265]
பழி - ► குற்றம் (8:43) [408]
பழிச்சல் - ► வாழ்த்து (10:4) [477]
பழிச்சொல் - 1. ஆம்பல் 2. கௌவை (10.4) [477]; ► சிறுசொல் (10:4) [477]
பழித்தல் - மும்மொழியுள் ஒன்று (12:3) [594]
பழியைத் தலைவன் முன் நின்று உரைத்தல் - ► குறுங்கலி (10:25) [498]
பழுது - ► குற்றம் (8:43) [408]
பழுமரம் - ► தொன்மரம் (4:3) [203]
பழுவம் - ► காடு (4:17) [217]
பழையர் - ► கள்விற்போர் (2:21) [95]
பள்ளம் - 1. அவல் 2 உவளகம் 3. கிழக்கு 4. கீழ் 5. படுகர் (5:46) [289]
பள்ளி - 1. இடன் 2 துயில் (11:46) [552]; ► 1. மக்கள்உறங்கிடம் (5·35) [278] 2. மாதவர் வாழிடம் (5:29) [272]
பள்ளிகொள்ளல் - ► துஞ்சல் (9:5) [428]
பள்ளை - ► ஆடு (3:10) [156]
பளிங்கு - ► 1. படிகம் (6:6) [299] 2. வெள்ளி (1:49) [49]
பளிதம் - ► கருப்பூரம் (6.8) [301]
பற்பநாபன் - ► திருமால் (1:6) [6]
பற்[த்]மநிதி - பத்மம் (6:4) [297]
பற்பம் - ► தாமரை (4:37) [237]
பற்மராகம் - நவமணியுள் ஒன்று (12:50) [640], ► மாணிக்கம் (6.3) [296]
பற்றல் - ► தொடுத்தல் (11.28) [534]
பற்றலர் - ► பகைவர் (2:36) [110]
பற்றற்றோர் - 1. அடிகள் 2. அறிவர் 3.இலிங்கிகள் 4. ஐம்புலன்வெல்லும்சாதகர் 5. ஐயர் 6. ஞானாதிகர் 7. தபோதனர் 8. தவத்தவர் 9. துறவோர் 10. பண்ணவர் 11. பொய்இகழ்ந்தநாதர் 12. போதனர் 13. மாதவர் 14. மிக்கோர் 15. முனிவர் 16. முனிவரர் 17. மெய்யர் 18. யோகிகள் (2:1) [75]; 19 அருந்தவர் 20. அறவர் 21. இருளற்றசிந்தையர் 22. உறுவர் 23. ஏற்றவருள் செறிபவர் 24 கனிகிழங்கு உண்பவர் 25 குற்றம்கடியுமவர் 26 கோபம் ஒழித்தவர் 27. புலவர் 28. பூஇறைவர் 29. பெரியோர் 30. மோனிகள் (2:2) [76]
பற்றிரும்பு - 1. அள்ளு 2. வலி 3. பறலிகை 4. பறளை (7:12) [331]
பற்றினர் - ► மித்திரர் (2:37) [111]
பற்று - ► 1. அன்பு (8:25) [390] 2 கழுமல் (11:22) [528] 3. விருப்பு (8·24) [389]
பற்றுக்கோடு - 1. ஆலம்பனம் 2. கந்து (8:48) [413]
பறந்தலை - ► போர்க்களம் (5:38) [281]
பறப்பான் - ► விரிச்சிகம் (1:52) [52]
பறம்பர் - ► தோல்விலைவாணர் (2:20) [94]
பறம்பு - ► மலை (5:8) [251]
பறலிகை - ► பற்றிரும்பு (7:12) [331]
பறவை(பொது) - 1. சகுனம் 2. பிணிமுகம் 3. புள் 4. போகில் (3:41) [187]; ► அரி (11:78) [584]
பறவைஇளமை - 1. பிள்ளை 2. பார்ப்பு (3:47) [193]

பறவைஇறகு - ► தூவு (11:52) [558]
பறவைஉணவு - 1. இரை 2. உண்டி (6:24) [317]
பறவைப்பொது - ► பதங்கம் (11:53) [559]
பறழ் - 1. ஏனம் 2. நரி 3. நாய் 4. புலி 5. முயல் (இவற்றின் குட்டி) (3:25) [171]; 6. ஊகம் 7. முசு 8. வெருகு (இவற்றின் குட்டி) (3:26) [172]
பறழ் - ► 1. ஆட்டுக்குட்டி (3:12) [158] 2. பார்ப்பினம் (3:25) [171]
பறளை - ► 1. பற்றிரும்பு (7:12) [331] 2. பார்ப்பினம் (3:25) [171]
பறித்தல் - ► களைதல் (9.22) [445]
பறை - ► இறகு (3:47) [193]
பன்முறை - ► பரியாயம் (8·51) [416]
பன்றி - 1. அரி 2. இருளி 3. ஏனம் 4. கருமா 5. கனலி 6. குத்திரம் 7. குரோட்டம் 8. கேழல் 9. கோலம் 10. சூகரம் 11. போத்திரி 12. வல்லுழி 13. வராகம் (3:13) [159]; ► 1 அரி (11:78) [584] 2. ஒருத்தல் (3:20) [166] 3. பாட்டி (3:24) [170] 4. பிணை (3:23) [169]
பன்றிமுகி - ஏழுமாதாவுள் ஒருவர் (12.38) [628]
பன்னகம் - ► அரவு(3:34) [180]
பன்னம் - ► இலை (4:22) [222]
பன்னல் - ► 1. சொல்லுதல் (10:2) [475] 2. பருத்தி (4:26) [226], (6:15) [308]
பன்னி - ► மனைவி (2:50) [124]
பன்னித்துறந்தது - ► குற்றிசை (10:25) [498]
பனசம் - ► வருக்கைப்பலா (4:9) [209]
பனி - 1. இமம் 2 துகினம் 3. நீர் (1.73) [73]; 4 அச்சம் 5. துன்பம் 6. நடுக்கம் (11:63) [569]; ► துன்பம் (8 41) [406]
பனிக்கதிர் - ► சந்திரன் (1:46) [46]
பனிச்சை - ஐம்பால்முடியுள் ஒன்று (12:21) [611]
பனித்தல் - ► 1 அச்சம் (8:39) [404] 2. புயல்சொரிதல் (9:33) [456] 3. விடாது சொரிதல் (1:72) [72]
பனிப்பருவம் - 1 கூதிர் 2. சிரநாள் (1.69) [69]
பனிப்பு - ► நடுக்குதல் (9:18) [441]
பனுவல் - ► எழுத்தின்ஓசைச்சொல் (10:1) [474], ► நூல் (7:40) [359], (10:16) [489], (11:64) [570],
பனுவல்தமிழ்மடந்தை - ► கலைமகள் (1:29) [29]
பனை - 1. தாலம் 2. தாளி 3. நீலம் 4. புல் 5. பெண்ணை 6. போந்தை (4·12) [212]; ► 1. அனுசம் (1:59) [59] 2. தாலம் (11:42) [548] 3. புறக்காழ்மரம் (4:18) [218] 4. முல்லை (5:23) [266]
பனைஇதழ் - ► மடல் (11:21) [527]
பனைஇலை - ► இதழ் (11:46) [552]

## பா

பா - ► யாப்பு (10:21) [494]
பாக்கம் - ► ஊர் (5:24) [267]
பாக்கன் - ► பூனை (3:15) [161]
பாக்கு - ► இடைச்சொல் (10:12) [485]
பாகசாதனன் - ► இந்திரன் (1·11) [11]
பாகல் - ► கூலம் (11:61) [567]
பாகவதர் - ► நாராயணன்சமையத்தவர் (2:3) [77]
பாகன் - ► புதன் (1:47) [47]
பாகு - ► 1. குழம்பு (6:18) [311] 2. சர்க்கரை (6:20) [313]
பாங்கர் - ► 1. இடம் (5:46) [289] 2. பக்கம் (5:47) [290]
பாங்கன் - ► நண்பன் (2:53) [127]
பாங்கி - 1. அணுக்கு 2. ஆயம் 3 இகுளை 4. இணங்கு 5 ஓரை 6. சேடி 7. தோழி 8. பொய்தல் (2:54) [128]
பாங்கு - ► உரிமை (8:49) [414]
பாசடை - ► இலை (4.22) [222]
பாசதரன் - ► நீர்இறை (1:44) [44]
பாசப்பாணியன் - ► விநாயகன் (1·15) [15]
பாசம் - 1. ஊசித்துளை 2. கயிறு (11:55) [561]; ► 1. கயிறு (7·38) [357] 2. நாண் (11 77) [583]
பாசறை - ► தெம்முனைசேர்சூரிடம் (5:26) [269]
பாசறைமுல்லை - கொண்கன்(தலைவன்) பாசறையில் இருந்து தலைவியை உள்ளல் (10:25) [498]
பாசி - 1. சேயீரம் 2. சைவலம் 3. நாரம் 4. பதியம் (4:36) [236]; ► நீர்இறை (1·44) [44]
பாசு - ► 1. பச்சைநிறம் (8:15) [380] 2. மரம் (4.14) [214]
பாசுபதர் - ► சைவத்தவப்பாலினோர் (2:3) [77]
பாட்டி - 1. நரி(பெண்) 2. நாய்(பெண்) 3. பன்றி(பெண்) (3 24) [170]; ► 1 பாண்மகள் (2:41) [115] 2. விலங்கின்பெண் (3:22) [168]
பாட்டு - ► யாப்பு (10:21) [494]
பாடகம் - பாதகடகம் (7:12) [331]
பாடம் - ஓதமையாடல் (10:17) [490]
பாடல் - ► வரை (11:70) [576]
பாடல்மகடூஉ - ► பாண்மகள் (2:41) [115]
பாடலம் - 1. பாதிரி 2. சிவப்பு (11:55) [561]; ► 1. குதிரைப்பண்பு (3:7) [153] 2. சிவப்பு (8:14) [379] 3. பாதிரி (4:8) [208]
பாடலி - ► கள்ளின்பேதம் (6:22) [315]
பாடலில்தாழுமவர் - 1. ஓவர் 2. பண்டர் (2:22) [96]

பாடலுக்குஏற்பது - செந்துறைப்பாட்டு (10:30) [503]

பாடவை - ► மிதுனஇராசி (1:51) [51]

பாடி - 1. சேரி (5:28) [271]; 2. நகரம் 3. நாடு 4. படைவீடு (11:56) [562]; ► 1. ஊர் (5:24) [267] 2. நகரப்பதி (5:26) [269] 3. முல்லைநில ஊர் (5:25) [268]

பாடினி - ► பாண்மகள் (2:41) [115]

பாடு - 1. ஒலி 2. படுதல் 3 பெருமை (11:15) [521]; ► 1. பக்கம் (5:47) [290] 2. பெருமை (8:6) [371]

பாடுநர் - ► புலவர் (11:36) [542]

பாண் - ► இசை (10:26) [499]

பாண்டரங்கம் - ► சிவன்ஆடல் (9:45) [468]

பாண்டரங்கன் - ► சிவன் (1·4) [4]

பாண்டியன் - 1. இந்துகுல(சந்திரகுல) இறையவன் 2. கவுரியன் 3. கைதவன் 4. கொற்கைச்செழியன் 5. சேல்எழுது புரலவன் 6. தென்னவன் 7. நிம்பத் தொடையினன் 8. பஞ்சவன் 9. பூழியன் 10. மதுரைமன் 11. மாறன் 12. மீனவன் 13. வழுதி 14. வைகைத்துறையவன் (2:13) [87]

பாண்டில் - ► 1. இடபஇராசி (1:50) [50] 2. ஏறு (3:8) [154] 3. நாடு (5:7) [250] 4. மூங்கில் (4:13) [213] 5. வட்டம் (8·2) [367]

பாண்டில்பூண்டஊர்தி - 1. சகடம் 2. சிவகை 3. வையம் (7:27) [346]

பாண்மகள் - 1. கூத்தி 2. நாடகவாள்நுதல் 3. பாட்டி 4. பாடல்மகடூஉ 5 பாடினி 6. மதங்கி (2:41) [115]

பாணம் - ► அம்பு (7:4) [323]

பாணர் - 1. இன்னிசைகாரர் 2. சூதர் 3. சென்னியர் 4. மதங்கர் 5 மாகதர் 6. வயிரியர் (2·22) [96]

பாணி - 1. கை 2. நீர் 3. நெடித்தல்பொழுது 4. நேராடல் 5. பல்லியம் (11:8) [514]; ► 1. இசை (10:26) [499] 2. கைத்தலம் (2:62) [136] 3. பொழுதுநீட்டித்தல் (9:34) [457]

பாணியம் - ► நீர் (1:42) [42]

பாத்தி - ► வயல் (5:42) [285]

பாத்தில் - ► இல் (5:30) [273]

பாதகடகம் - ► பாடகம் (7:12) [331]

பாதகம் - ► நரகம் (5·6) [249]

பாதசாலம் - ► காலில(ங்)குமணிவடம் (7:13) [332]

பாதம் - 1. அடி 2. கழல் 3. கால் 4. சரணம் 5. தாள் 6. பதம் (2:59) [133]

பாதலம் - 1. அரம் 2. பிலம் (5:12) [255]; ► நரகம் (5:6) [249]

பாதவம் - ► மரம் (4.14) [214]

பாதாளம் - ► நரகம் (5:6) [249]

பாதிரி - பாடலம் (4:8) [208]; ► 1. பாடலம் (11.55) [561] 2. மூங்கில் (4:13) [213]

பாதீடு - 1. அளித்தல் 2. பொய்தல் (9:32) [455]

பாதுகாத்தல் - 1. ஓம்பல் 2. போற்றல் (9:19) [442]; ► போற்றல் (11:20) [526]

பாதுகாவல் - ► பரி (11.18) [524]

பாதுகை - ► அடிதொடுவது (7:38) [357]

பாதை - ► மரக்கலம் (7:32) [351]

பாந்தள் - ► 1. அரவு (3·34) [180] 2. பெரும் பாம்பு (3:34) [180]

பாம்பின்படம் - 1 பணம் 2. பை (3:33) [179]

பாமகள் - ► கலைமகள் (1:29) [29]

பாய்தல் - 1. உகள்தல் 2. குதித்தல் 3. குப்புறல் (9:13) [436]; ► பரவுதல் (8:9) [374]

பாயல் - ► மக்கள்உறங்கிடம் (5:35) [278]

பாயிரம் - 1. நூன்முகம் 2. புறவுரை (10:18) [491]

பார்உண்டவன் - ► திருமால் (1.7) [7]

பார்த்திபன் - ► அரசன் (2:10) [84]

பார்ப்பார் - 1. முப்புரிநூலர் 2. வேதியர் (2.4) [78], 3 அறுதொழிலாளர் 4. ஐயர் 5. பூசுரர் 6. மறையவர் 7. மிக்கோர் 8. முற்குலத்தோர் 9. வேள்வியர் (2:5) [79]

பார்ப்பினம் - 1. கன்று 2. குட்டி 3. குருளை 4. குழவி 5. பறழ் 6 பறளை 7. மறி (3:25) [171]

பார்ப்பினி - ஏழுமாதாவுள் ஒருவர் (12:38) [628]

பார்ப்பு - தவழ்சாதி(யின்இளமை) (3:27) [173]; ► பறவைஇளமை (3:47) [193]

பார்மைந்தர் - ► காராளர் (2:17) [91]

பார்வதி - 1. அகண்டபூரணி 2. அம்பிகையாள் 3. அயிராணி 4. அரன்பாரி 5. ஆரியை 6. ஆள் 7. இமைய மடந்தை 8. உமை 9. எண்ணான்கு அறம் செய்தவள் 10. கவுரி 11. சங்கரி 12. சத்தி 13. பாரி 14. புராதனி 15. முக்கண்ணி 16. முப்புவிஅளித்தகாரணி 17. வல்லி (1:24) [24]

பார்வை - ► கண் (2:66) [140]

பாரகம் - ► பூமி (5:5) [248]

பாரதம் - மத்தியம் பத்து (12:74) [664]

பாரதம் பத்து - ► பிரமகற்பம் (12:74) [664]

பாரதி - ► கலைமகள் (1:29) [29]

பாரம் - ► கடற்கரை (5:15) [258]

பாராட்டு - 1. கொண்டாடல் 2. மகிழ்வு (9:2) [425]

பாராவதம் - ► புறா (3:40) [186]

பாராவாரம் - ► கடல் (5:14) [257]

பாரி - ► 1. கட்டில் (7·31) [350] 2. நல்லாடை (7:42) [361] 3. பார்வதி (1:24) [24] 4. மனைவி (2:50) [124]

பாரிசாதம் - ► தருவின்வகை (4:1) [201]

பாரிடம் - ► பூதகணம் (1:36) [36]

பாரித்தல் - ► மிகுத்தல் (9:31) [454]

பால் - 1. அமுதம் 2. கீரம் 3. பயம் (6:19) [312]; 4. இயல்பு 5. திசை 6. பக்கம் 7. பகுத்தல் (11.25) [531]; 8. எழுகடலுள் ஒன்று (12:35) [625]; ► 1. இடம் (5:46) [289] 2. இடவகை (5:50) [293] 3. நீர்மை (8:56) [421] 4. பக்கம் (5:47) [290] 5. வெண்மை (8:15) [380]

பால்நிறத்தி - ► கலைமகள் (1:29) [29]

பால்மரம்எல்லாம் - ► வெளிற்றுமரம் (4:18) [218]

பாலி - ► கள்ளின்பேதம் (6:22) [315]

பாலிகை - ► 1. மெய்யுறை (7:9) [328] 2. வட்டம் (8:2) [367]

பாலுறுபீர் - ► உறை (11:2) [508]

**வன்மை** - ▶ 1. அள் (11:46) [552] 2 வயிரம் (11:54) [560]

**வன்னி** - 1. கலீகம் 2. சமி (4:6) [206]; ▶ 1. அங்காரகன் (1·40) [40] 2. கிளி (3:39) [185]

**வனசம்** - ▶ தாமரை (4.37) [237]

**வனசரம்** - ▶ யானைபிறந்த திணை (3:5) [151]

**வனசரர்** - ▶ பாலைநிலமக்கள் (2.44) [118]

**வனப்பு** - ▶ 1. கட்டழகு (8:18) [383] 2. தோல் (11·9) [515] 3. மஞ்சு (11:7) [513] 4 மதவு (11:47) [553]

**வனம்** - 1. கான் 2. புனல் (11·63) [569]; ▶ 1. காடு (4:17) [217] 2. நீர் (1:42) [42]

**வனம், மலை, புனல் ஆகியவற்றில் மிகுந்தது** - ▶ கருநிலம் (5·23) [266]

**வனம்சார்நிலம்** - ▶ முல்லை (5:22) [265]

**வனிதை** - ▶ மடவரல் (2:39) [113]

**வனைதல்** - ▶ 1. ஒப்பனை (9:3) [426] 2. செயல் (9:1) [424]

### வா

**வாக்கி** - 1. அறம், பொருள், இன்பம், வீடு இவை மெய் விளங்க உரை செய்யும் ஆற்றல் உடையான் (12:12) [602], 2. நாற்புலவோருள் ஒருவர் (12.10) [600]

**வாக்கு** - முப்பொறியுள் ஒன்று (12:2) [592]

**வாக்குரைத்தல்** - எட்டுமெய்ப்பரிசத்துள் ஒன்று (12:46) [636]

**வாகினி** - கணம் மும்மடி கொண்டது (12:71) [661]

**வாகினி மும்மடி கொண்டது** - ▶ பிராதனை (12:71) [661]

**வாகு** - ▶ புயம் (2.62) [136]

**வாகை** - 1. வெற்றிபூ (4:41) [241]; 2. எண்ணெண் கலையில், ஈகையில், பண்பில், நண்ணும் செயலில், மரபினில், செல்வத்தில், அறிவில், தருமத்தில், வீரத்தில், ஐம்புலன் காத்து முத்தி பெறு நெறியில் பேர் பெறுவது (11:83) [589]; 3. எண்வகைப்போர்த்தொழிலுள் ஒன்று (12:47) [637]; ▶ வெற்றி (8.22) [387]

**வாங்கல்** - ▶ வளைவு (8:2) [367]

**வாசப்பண்டம்** - 1. இலவங்கம் 2. ஏலம் 3. கச்சோலம் 4. கோட்டம் 5. சாதிக்காய் 6. தகரம் 7. தற்[க்]கோலம் 8. மாஞ்சி (4:27) [227]

**வாசம்** - ▶ 1. நாறுதல் (8:54) [419] 2. வதுவை (11·38) [544]

**வாசவன்** - ▶ இந்திரன் (1·12) [12]

**வாசி** - 1. அறுவகைத்தானையுள் ஒன்று (12:27) [617] 2. தசாங்கத்துள் ஒன்று (12:53) [643]; ▶ 1. அரி (11:78) [584] 2. கன்று (3:27) [173] 3. குதிரை (3:6) [152] 4. பிணா (3:24) [170] 5. பெட்டை (3:23) [169]

**வாசிகை** - சிகழிகை (4:42) [242]; ▶ மாலை (4:42) [242]

**வாட்கை** - ▶ மருதநிலவூர் (5:25) [268]

**வாட்கோரை** - செருந்தி (4:36) [236]

**வாடை** - ▶ 1. காற்று (1:38) [38] 2. வடகாற்று (1:39) [39]

**வாணரம்** - ▶ குரங்கு (3:17) [163]

**வாணி** - ▶ 1. எழுத்தின்ஓசைச்சொல் (10:1) [474] 2. கலைமகள் (1:29) [29]

**வாணிகம்** - 1. உழவர்அறுதொழிலுள் ஒன்று (12:25) [615] 2. வணிகர்அறுதொழிலுள் ஒன்று (12.24) [614]

**வாணிகன்** - ▶ துலாம் (1:52) [52]

**வாணிபம்** - ▶ கன்மபூமிப்பயன் (12:31) [621]

**வாதம்** - உயிர்வேதனை பன்னிரண்டனுள் ஒன்று (12·54) [644]; ▶ காற்று (1.38) [38]

**வாதனம்** - ▶ கூறை (7:41) [360]

**வாதாயனம்** - ▶ சாளரம் (5:31) [274]

**வாதி** - 1. ஏதுடன் மேற்கோள் எடுத்து உடன் காட்டித் தன் கோள் வர நிறுவிப் பின் பிறன் கோள் மறுப்பவன் (12.12) [602]; 2. நாற்புலவோருள் ஒருவர் (12.10) [600]

**வாதுவர்** - ▶ 1. கரிப்பாகர் (2:33) [107] 2 பரிமாவடிப்பவர் (2:34) [108]

**வாமம்** - 1. இடப்பால் 2. குறங்கு 3 குறள் (11.7) [513]; 4. புராரி ஐம்முகத்துள் ஒன்று (12·22) [612]; ▶ கட்டழகு (8:18) [383]

**வாமன்** - ▶ புத்தன் (1:22) [22]

**வாமனம்** - 1. கோடி நூறு பத்து (12:73) [663]; 2. எட்டுத்திக்குயானையுள் ஒன்று (12:48) [638] 3. நாரணன்பத்து அவதாரத்துள் ஒன்று (12:52) [642] 4. பதினெண்புராணத்துள் ஒன்று (12:59) [649]

**வாமனம்பத்து** - ▶ சங்கு (12:74) [664]

**வாமனன்** - ▶ திருமால் (1.5) [5]

**வாய்** - ▶ இடம் (5:46) [289]

**வாய்க்கால்** - ▶ மகம் (1:57) [57]

**வாய்த்திரம்** - ▶ பொய் (10:3) [476]

**வாய்தட்டல்** - ஆவலங்கொட்டல் (9:48) [471]

**வாய்தல்** - 1. துவாரம் 2 தோட்டி 3. வாரி (5:41) [284]

வாய்ப்பு - ► வளமை (8·52) [417]

வாய்ப்புள் - ► நிமித்தம் (10:7) [480]

வாய்பரந்தபறை - பதலை (7:22) [341]

வாய்மை - ► உண்மை (10:3) [476]

வாய்மைச்செயல் - உவளித்தல் (9:24) [447]

வாயசம் - ► காக்கை (3:38) [184]

வாயலகு - 1 துண்டம் 2. மூக்கு (3:47) [193]

வாயில் - 1. திறன் 2. புலன் (11:39) [545]; ► காரணம்தெரிசொல் (8:47) [412]

வாயிலோர் - ► தமிழ்க்கூத்தர் (2:23) [97]

வாயுசகன் - ► நெருப்பு (1:40) [40]

வார் - 1. வகிர் 2. வள் (7:38) [357], ► 1. ஆயுதக் கூர்மை (7:8) [327] 2. கச்சு (7:43) [362] 3. நீர் (1:42) [42]

வார்க்கட்டு(யாழ்) - திவவு (7:25) [344]

வார்த்தையாடலில்வல்லோர் - ► காராளர் (2:17) [91]

வாரணம் - 1. சங்கு (3:50) [196]; 2. கோழி 3 வேழம் (11·9) [515]; ► 1. கோழி (3·37) [183] 2 சங்கம் (3:50) [196] 3. சட்டை (7:43) [362] 4. யானை (3:3) [149]

வாரம் - 1. கிழமை 2 பகுதி 3. மலைச்சார்வு (11:75) [581]; ► மலைப்பக்கம் (5:10) [253]

வாராணை - ► தடுத்தல் (9:31) [454]

வாரி - 1. கடல் 2. கதவு 3. தடை 4 நூல் 5. வெள்ளமிகுதி (11:38) [544]; 6. ஏழ் முகிலுள் ஒன்று (12:67) [657]; ► 1. கடல் (5:14) [257] 2. கதவு (7:30) [349] 3. நிறைபுனல் (5.20) [263] 4. நீர் (1:42) [42] 5. பூமி (5:5) [248] 6 பெருவெள்ளம் (1:44) [44] 7. மதில்சுற்று (5.40) [283] 8. வாய்தல் (5:41) [284]

வாரிஅமுதத்துள்வந்தவள் - ► திருமகள் (1:26) [26]

வாரிசம் - ► தாமரை (4:37) [237]

வாரித்தல் - ► தடுத்தல் (9:31) [454]

வாருண்டகம் - ► வன்சிறைப்புள் (3:36) [182]

வாருதி - ► கடல் (5 13) [256]

வால் - ► 1. ஒளி (8:17) [382] 2. வெண்மை (8:15) [380]

வால்கீழ்இடம் - வெருகம் (3:38) [174]

வாலதி - ► வாலுறுப்பு (3:29) [175]

வாலாமை - ► தூய்தன்மை (8:50) [415]

வாலுகம் - ► வெள்ளைமணல் (5:21) [264]

வாலுவர் - ► மடையர் (2:24) [98]

வாலுறுப்பு - 1. இலாங்குலம் 2. கூலம் 3. தோகை 4. வாலதி (3:29) [175]

வாலேயம் - ► கழுதை (3:13) [159]

வாவி - 1. அலந்தை 2 ஆவி 3. இலஞ்சி 4. உவளகம் 5 ஏரி 6. ஓடை 7. கயம் 8. கிடங்கு 9. குட்டம் 10. குண்டம் 11. குளம் 12. கேணி 13. கோட்டகம் 14. சலந்தரம் 15. சுனை 16. சூழி 17. தடம் 18. தடாகம் 19. பட்டம் 20. படு 21. பொய்கை 22. மடு 23. மலங்கல் 24. வலையம் (5·18) [261]; ► சூழி (11:17) [523]

வாவுதல் - ► கடத்தல் (9:9) [432]

வாழ்த்தல் - மும்மொழியுள் ஒன்று (12:3) [594]

வாழ்த்து - 1. ஆசில் (10:3) [476]; 2. ஏத்தல் 3. துதித்தல் 4. பரவல் 5. பழிச்சல் 6. போற்றல் 7. வழுத்தல் (10:4) [477]

வாழ்நாள் - 1. ஆயுள் 2 ஆயுகம் (1:70) [70]

வாழை - அரம்பை (4:12) [212]

வாள் - 1. எந்திரம் 2. ஏதி 3. கட்கம் 4 கண்டம் 5. கரவாளம் 6. கோணம் 7. நாந்தகம் 8. வசி (7:5) [324], 9. ஒளி 10. படை (11.76) [582]; 11. அறுவகைத் தானையுள் ஒன்று (12·27) [617]; ► 1. அரி (11:78) [584] 2. கண்டகம் (11:18) [524] 3. கண்டம் (11.19) [525] 4. கூரம் (11:76) [582] 5 வள் (11:46) [552]

வாளா - ► மோனம் (10 7) [480]

வாளி - ► 1. அம்பு (7:4) [323] 2. மண்டலம் (9:13) [436]

வாளுழவர் - ► படையாளர் (2:35) [109]

வான் - அட்டமூர்த்தத்துள் ஒன்று (12:41) [631]; ► மேகம் (1:71) [71]

வான்கூறுபுள் - ► சாதகம் (3:36) [182]

வான்மீன் - ► சித்திரை (1:58) [58]

வானகம் - ► துறக்கம் (5.1) [244]

வானதி - ► கங்கை (1:25) [25]

வானம் - ► ஆகாயம் (1:37) [37]

வானரகதி - பரிஐங்கதியுள் ஒன்று (12.22) [612]

வானவர் - ► தேவர் (1:33) [33]

வானவர்மாதர் - 1. அரம்பை 2 அரமாது (1.32) [32]

வானவரம்புஎல்லையன் - ► சேரன் (2:11) [85]

வானவன் - ► 1. இந்திரன் (1·11) [11] 2 சேரன் (2·11) [85]

வானவில் - இந்திரவில் (1:73) [73]

வானன் - ► கார்த்திகை (1.54) [54]

வானி - ► 1. ஆன்பொருனை (5:17) [260] 2. கொடி (7:44) [363]

## வி

விக்கிரகம் - ► உடம்பு (2:58) [132]

விகங்கம் - ► ககம் (3:42) [188]

விகடம் - ► வேறுபடல் (8:53) [418]

விகலை - ► நாழிகை (1:64) [64]

விகிர்தம் - ► வேறுபடல் (8:53) [418]
விச்சுவநாள் - ► உத்திராடம் (1:61) [61]
விசாகம் - 1. சுளகு 2. முற்றில் 3. முறம் 4. வைகாசி (1:59) [59]
விசாகன் - ► முருகன் (1:14) [14]
விசாலம் - ► 1. கடம்பு (4:9) [209] 2. விரிவா மிடம் (8:8) [373]
விசிகம் - ► அம்பு (7:4) [323]
விசிகரம் - ► நீர்த்திரை (5:15) [258]
விசித்தல் - ► யாத்தல் (9.29) [452]
விசித்திரம் - ► பேரழகு (8·18) [383]
விசிறி - ► ஆலவட்டம் (7:36) [355]
விசுணி - ► கள்ளின்பேதம் (6:22) [315]
விசும்பிடம் - ► துறக்கம் (5:1) [244]
விசும்பு - ► ஆகாயம் (1:37) [37]
விசுவத்துவம் - அட்டமாசித்தியுள் ஒன்று (12:41) [631]
விசையம் - ► 1. சர்க்கரை (6:20) [313] 2. வெற்றி (8:22) [387]
விசையை - ► கொற்றவை (1:30) [30]
விஞ்சையர் - 1. கேசரர் 2 வித்தியாதரர் (1:35) [35]
விஞ்சையர்சேர்விடம் - 1. சேடி 2. சேணி (5.2) [245]
விட்டில் - 1. சலபம் 2 பதங்கம் (3:45) [191]; ► பதங்கம் (11:53) [559]
விட்டேறு - ► வேல் (7:3) [322]
விடக்கு - ► ஊன் (3:32) [178]
விடங்கம் - 1. அழகு 2. முகடு (11:45) [551]; ► 1. கட்டழகு (8:18) [383] 2. முகடு (5:31) [274]
விடம் - உயிர்வேதனை பன்னிரண்டனுள் ஒன்று (12:54) [644]; ► 1. கடு (11:19) [525] 2. நஞ்சு (6:23) [316]
விடர் - ► மலைப்பிளப்பு (5:11) [254]
விடர்(வெடிப்பு) - 1. அவிப்பு 2. கமர் (5:12) [255]
விடர்தரும்பாலை - ► பாலையாழ்த்திறன் (10:29) [502]
விடருகம் - ► பூனை (3:15) [161]
விடல் - 1. ஈர்த்தல் 2. தீர்த்தல் (9:29) [452]
விடலை - ► 1. பாலைத்திணைமக்கள் (2:43) [117] 2. விறலோன் (2:29) [103]
விடாதுசொரிதல்(விடாமழை) - 1. சோனை 2. பனித்தல் (1:72) [72]
விடிதல் - ► நீளம் (8:9) [374]
விடியல் - ► காலை (1:64) [64]
விடுதல் - வியோகம் (9:43) [466]; ► போகல் (9:10) [433]
விடை - ► 1. ஏறு (3:8) [154] 2. வினா எதிர் சொல் (10:9) [482]
விடைக்கொடியன் - ► சிவன் (1:3) [3]
விடைமுரிப்பு - இமில் (3:31) [177]
விடையன் - ► சிவன் (1:3) [3]
விண் - ► 1. அம்பரம் (11:27) [533] 2. ஆகாயம் (1:37) [37] 3. நாகம் (11:40) [546] 4. மேகம் (1:71) [71]
விண்டார் - ► பகைவர் (2:36) [110]
விண்டு - 1 மாயன் 2. வெற்பு (11:11) [517]; ► 1. திருமால் (1:7) [7] 2. மலை (5:8) [251] 3. மூங்கில் (4:13) [213] 4. மேகம் (1:71) [71]
விண்ணவன் - ► 1. அருகன் (1:20) [20] 2. திருமால் (1:8) [8]
விண்ணுலகம் - ► துறக்கம் (5:1) [244]
விண்ணோர் - ► தேவர் (1:33) [33]
விண்ணோர்இறையவன் - ► இந்திரன் (1:12) [12]
வித்தகர் - ► கண்ணாளர் (2:19) [93]
வித்தம் - ► நடனவிகற்பம் (9.47) [470]
வித்தாரகவி - கோவை, பரணி, உலா, மடல், சின்னம், புராணம், காவியம்,. இயல், இசை, நாடகத்தோடு எவையும் விரிதரப் பாடுதல் (12:15) [605]
வித்தாரம் - நாற்கவியுள் ஒன்று (12:11) [601]
வித்தியாதரர் - பதினெண்கணத்துள் ஒன்று (12·56) [646]; ► விஞ்சையர் (1:35) [35]
வித்துரு - ► மின் (1:73) [73]
வித்துருமம் - ► பவளம் (6:4) [297]
வித்தை - ► கன்மபூமிப்பயன் (12:31) [621]
விதப்பு - ► 1 மதில்உறுப்பு (5:40) [283] 2. மிகுதி (8:7) [372]
விதலை - ► நடுக்குதல் (9:18) [441]
விதாதா - ► பிரமன் (1:9) [9]
விதானம் - ► மேற்கட்டி (7:43) [362]
விதி - 1. இயல்பு 2. செயல் (11:73) [579]; ► 1. நீர்மை (8:56) [421] 2. பிரமன் (1:9) [9] 3. வியாழன் (1:48) [48]
விதிர்ப்பு - ► 1. அச்சம் (8:39) [404] 2. நடுக்குதல் (9:18) [441]
விது - ► சந்திரன் (1:46) [46]
விந்தர் - ► முல்லைநிலமக்கள் (2:44) [118]
விந்து - 1. ஏழுதாதுள் ஒன்று (12:38) [628] 2. மூவகைச்சீவஅனலுள் ஒன்று (12:4) [594]
விந்தை - ► கொற்றவை (1:31) [31]
விநதாசுதன் - ► கருடன் (3:35) [181]
விநாயகன் - 1. அங்குசப்பாணியன் 2. ஆகுபரிப் புங்கவன் 3. ஆனைமுகத்தோன் 4. ஐங்கரன்

5. ஒற்றைக்கொம்பன் 6. கணபதி 7. சங்கரன் மைந்தன் 8. சண்முகன்தன் முன்வந்தோன் 9. பங்கயப்பாணியன் 10. பாசப்பாணியன் 11. பொழிமதத்தோன் 12. மால்மருகன் 13. மோதகப்பாணியன் (1:15) [15]

**விபஞ்சிதம்** - ► யாழ் (7:25) [344]

**விபவம்** - ► செல்வம் (8:53) [418]

**விபுதபுராதனி** - ► திருமகள் (1:26) [26]

**விபுதர்** - ► 1. தேவர் (1:33) [33] 2. மிகக்கற்றவர் (2:6) [80]

**விபுலம்** - ► 1. பெருமை (8:6) [371] 2 விரிவாமிடம் (8:8) [373]

**விபுலை** - ► பூமி (5:4) [247]

**விம்பம்** - ► கொவ்வை (4:34) [234]

**விம்மல்** - ► ஓசை (11:4) [510]

**விம்மிதம்** - ► அதிசயம் (8·27) [392]

**விமலம்** - ► அழுக்கின்மை (8.49) [414]

**விமலன்** - ► சிவன் (1·3) [3]

**விமலை** - ► கங்கை (1 25) [25]

**வியங்கோள்** - 1 ஆணை 2. ஏவல் (11.69) [575]; ► ஏவல் (9:42) [465]

**வியத்தகை** - ► பெருமை (8:6) [371]

**வியந்தை** - ► மருதயாழ்த்திறன் (10.29) [502]

**வியப்பு** - நவரசத்துள் ஒன்று (12:51) [641]; ► 1. அதிசயம் (8:27) [392] 2 இறும்பூது (11:42) [548]

**வியர்த்தல்** - ► உளம்வெம்பிக்காட்டல் (8.32) [455]

**வியர்ப்பு** - ► சினக்குறிப்பு (8·27) [392]

**வியல்** - ► பெருமை (8:6) [371]

**வியலிடம்** - ► அகலம் (8·10) [375]

**வியவன்** - ► ஏவுவான் (2:30) [104]

**வியாக்கிரம்** - ► புலி (3:2) [148]

**வியாகரணம்** - ► ஆறுஅங்கத்துள் ஒன்று (12:26) [616]

**வியாழன்** - 1. அந்தணன் 2. ஆண்டளப்பான் 3. குரு 4. தேவர்குரு 5. பகற்பதி(பிரகற்பதி) 6. பீதகன் 7. பைந்தருவாளியின்(இந்திரனின்) ஆசான் 8. பொன் 9. மதி 10. மந்திரி 11. மறையோன் 12. விதி (1:48) [48]

**வியாளம்** - ► அரவு(3:34) [180]

**வியோகம்** - ► விடுதல் (9.43) [466]

**விரகம்** - ► காமக்கவலை (8·25) [390]

**விரதன்** - ► அருகன் (1:19) [19]

**விரல்** - அங்குலி (2.62) [136]

**விரா** - ► விருப்பு (8:24) [389]

**விராமை** - ► ஒற்றெழுத்து (10:23) [496]

**விராளம்** - ► ஆண்பூனை (3:15) [161]

**விரிச்சி** - ► நிமித்தம் (10:7) [480]

**விரிஞ்சன்** - ► பிரமன் (1:9) [9]

**விரித்துரை** - மெய்யுரையின் பொருள் திறம் (10:19) [492]

**விரிதல்** - 1. எதிர்தல் 2. மலர்தல் 3. வெடித்தல் (9:39) [462]

**விரிப்பாய்** - ► பஞ்சசயனம் (12.21) [611]

**விரியல்** - ► ஒளி (8:17) [382]

**விரிவாதல்** - ► நீளம் (8:9) [374]

**விரிவாமிடம்** - 1. பரப்பு 2. விசாலம் 3. விபுலம் (8:8) [373]

**விரி[ரு]ச்சிகம்** - 1. தேள் 2. தெறுக்கால் 3. நலம் 4. பறப்பான் (1:52) [52]; ► தேள் (3:52) [198]

**விருச்சிகன்** - ► சூரியன் (1:44) [44]

**விருத்தம்** - ► வட்டம் (8:2) [367]

**விருத்தி** - 1. உரிய பொருள் விரிதர ஓதல் 2. முதுமொழி (11.41) [547]

**விருத்திநடையது** - 1 இலம்பகம் 2. சருக்கம் (10:19) [492]

**விருந்தம்** - ► விலங்கின்கூட்டம் (3:29) [175]

**விருந்து** - ► புதுமை (8.46) [411]

**விருப்பு** - 1. அவா 2. ஆதரவு 3. ஆர்வம் 4. இவரல் 5 காதல் 6. காமம் 7. காமர் 8. தாழ்தல் 9. நசை 10. பற்று 11. பெட்டல் 12. பெட்பு 13. மாதர் 14. மெய்வாஞ்சை 15. விரா 16 வீழ்தல் 17. விழைவு 18. வெஃகல் 19. வெம்மை (8:24) [389], 20. இனியஆடல் 21. இனியபாடல் (11:3) [509], ► பரிவு (11:17) [523]

**விரும்பல்** - ► 1. இவர்வு (11:13) [519] 2. கருத்து (8·23) [388]

**விரும்பினர்** - ► காதலித்தோர் (2:28) [102]

**விரை** - ► 1. கஞ்சா (11:23) [529] 2. சாந்து (6:8) [301] 3. நாறுதல் (8.54) [419] 4. வெறி (11:7) [513]

**விரைவு** - 1. ஒல்லை 2. கடுகல் 3. கதழ்வு 4. துனை 5. நொறில் 6. முடுகல் 7. வல்லை (9:11) [434], ► கடி (11·82) [588]

**விரைவுக்குறிப்பு** - 1. கதும்-எனல் 2. ஞெள்ளல் 3. நொய்து-எனல் 4. பொள்ளல் 5. வெய்து-எனல் (9:11) [434]

**வில்** - 1. கார்முகம் 2. கொடுமரம் 3. கோதண்டம் 4. சராசனம் 5. சாரங்கம் 6. சாபம் 7. தவர் 8. தனு 9 பினாகம் (7:3) [322]; 10. இரட்டை 11. ஒளி (11:76) [582]; 12. அறுவகைத்தானையுள் ஒன்று (12:27) [617]; ► 1. ஒளி (8:17) [382] 2. களரி (11:24) [530] 3. சிலை (11:11) [517] 4. புருவம் (2·66) [140] 5 மூலம் (1:60) [60]

**வில்லவன்** - ► 1. சேரன் (2:11) [85] 2. மன்மதன் (1:16) [16]

**வில்லாளி** - ► மன்மதன் (1:16) [16]

**வில்லுவம்** - 1. கூவிளம் 2. கூவிளை 3. மாலூரம் (4:8) [208]

**வில்வம்** - ► விளா (4:7) [207]

**விலங்கின்கூட்டம்** - 1. கணம் 2. சாலவம் 3. நீலம் 4. பூகம் 5. விருந்தம் (3:29) [175]

**விலங்கின்பெண்** - 1. நாகு 2. பாட்டி 3. பிணவு 4. பிணை 5. பெட்டை (3:22) [168]

**விலங்கினில்ஏற்றை** - 1. உம்பல் 2. ஒருத்தல் 3. களிறு (3:19) [165]

**விலங்கு** - 1. மா 2. மான் (3:28) [174]; 3. நாற்கதியுள் ஒன்று (12:9) [599]; ► தளை (7:12) [331]

**விலங்குஅனம்** - முப்பத்திரண்டுஅறத்துள் ஒன்று (12:61) [651]

**விலங்குஉணவு** - 1. குளகு (6:23) [316]; 2. இரை 3. உண்டி (6.24) [317]

**விலாழி** - யானை உமிழ்நீர் (3:30) [176]

**விலாளம்** - ► பூனை (3:15) [161]

**விலை(விலைகூறல்)** - 1. நொடை 2. பகர்தல் 3. விற்றல் (9:17) [440]

**விலோசனம்** - ► கண் (2:66) [140]

**விலோதம்** - ► குழன்றமயிர் (2:70) [144]

**விலோதனம்** - ► கொடி (7:44) [363]

**விவேகம்** - ► வேகம் (9:43) [466]

**விழவு** - 1. சாறு 2. சேறு 3. முருகு (9:3) [426]; ► 1. சாறு (11:13) [519] 2. முருகு (11:59) [565]

**விழி** - ► கண் (2:66) [140]

**விழுக்கு** - ► நிணம் (3:33) [179]

**விழுங்கல்** - ஐந்துஉண்டியுள் ஒன்று (12:21) [611]; ► நுகர்தல் (9:5) [428]

**விழுதல்** - ► மறித்தல் (9:40) [463]

**விழுமம்** - 1. இசை(புகழ்) 2. இடும்பை 3. சிறப்பு 4. சீர்மை (11:1) [507]; ► துன்பம் (8:42) [407]

**விழைச்சு** - ► காமவினைத்தொடர்பு (9.21) [444]

**விழைதல்** - ► தெவிட்டல் (9:33) [456]

**விழைவு** - ► விருப்பு (8:24) [389]

**விழைவுறுசொல்** - 1. அசதி 2. நகை (10:9) [482]

**விள்ளல்** - ► 1. தழீஇக்கோடல் (9:37) [460] 2. வேற்றுமை (9:27) [450] 3. வேறுபடுத்தல் (9:27) [450]

**விளக்கம்** - ► கடி (11:82) [588]

**விளக்கு** - 1. சுடர் 2. தீபம் (1:41) [41]; ► சோதி (1:59) [59]

**விளங்கொளி** - ► 1. அருகன் (1:19) [19] 2. கேட்டை (1:60) [60]

**விளம்பல்** - ► சொல்லுதல் (10:2) [475]

**விளரி** - 1. இளமை 2. யாழ்நரம்பு 3. வேட்கை (11:77) [583]; ► 1. நெய்தல்யாழ்த்திறன் (10:30) [503] 2. பாலையாழ்த்திறன் (10.29) [502]

**விளா** - 1. வில்வம் 2. வெள்ளில் (4:7) [207]

**விளித்தல்** - 1. அழைத்தல் 2. அறைகூறல் 3. உளைத்தல் 4. கரைதல் 5. சாதல் 6. சொல்லல் 7. விளைத்தல் (10:8) [481]

**விளிதல்** - ► சாதல் (9:27) [450]

**விளிவு** - ► கோபம் (9:8) [431]

**விளை** - நாட்டுவகைஆறனுள் ஒன்று (12:28) [618]

**விளைத்தல்** - ► விளித்தல் (10:8) [481]

**விளைப்பவர்** - ► காராளர் (2:17) [91]

**விளையாட்டின் இடையில் வரும்** - ► நகை (11:79) [585]

**விளையுள்** - ► வயல் (5:41) [284]

**விற்றல்** - ► விலை (9:17) [440]

**விறல்** - ► 1. ஆணை (11:47) [553] 2. பூசல் (9:30) [453] 3. வலம் (11:66) [572] 4. வீரம் (8 21) [386]

**விறலர்** - ► படையாளர் (2:35) [109]

**விறலோன்** - விடலை (2:29) [103]

**விறைப்பு** - ► செறிவு (8·12) [377]

**வினா** - ► எழுத்தின்ஓசைச்சொல் (10:1) [474]

**வினாஎதிர்சொல்** - விடை (10:9) [482]

**வினாஐந்து** - 1. அவன்பாற்கோடல் 2. அறியான் வினாதல் 3. அறிவொப்புக்காண்டல் 4. ஐயம் அறுத்தல் 5. மெய்காட்டல் (12:23) [613]

**வினாவல்** - கடாவல் (10:9) [482]

**வினை** - ► 1 கோபம் (9·8) [431] 2. தொழில் (9:1) [424] 3. பூசல் (9:30) [453]

**வினைஉரைப்போர்** - ► தூதர் (2:25) [99]

**வினைஞர்** - ► வணிகர் (2:16) [90]

**வினைமாற்று** - ► மற்று (11:54) [560]

**வினோதத்தின் இடையில் வரும்** - ► நகை (11.79) [585]

**வினோதம்** - ► பொழுதுகழித்துவிளையாடல் (9:2) [425]

## வீ

**வீ** - ► மலர் (4:40) [240]

**வீக்குதல்** - ► யாத்தல் (9:29) [452]

**வீங்கல்** - ► செறிவு (8:12) [377]

**வீசல்** - 1. எறிதல் 2. கொடுத்தல் (11:55) [561]

**வீடல்** - ► சாதல் (9:27) [450]

**வீடு** - ► இல் (5:30) [273]

**வீணை** - ► 1. யாழ் (7:25) [344] 2. வேய் (11:39) [545]

**வீணைத்தனுவினர்** - ▶ கந்திருவர் (1:35) [35]
**வீதல்** - ▶ சாதல் (9:27) [450]
**வீதி** - ▶ 1. தெரு (5·28) [271] 2. நேர்செலல் (9:13) [436]
**வீதிகை** - ▶ பரிசை (7:10) [329]
**வீது** - ▶ வறுமை (9:42) [465]
**வீய்தல்** - ▶ குன்றல் (8:11) [376]
**வீரம்** - 1. விறல் 2. வெற்றி (8:21) [386]; 3. நவரசத்துள் ஒன்று (12:51) [641] 4. மும்முரசுள் ஒன்று (12:2) [592]; ▶ மறம் (11 36) [542]
**வீரர்** - ▶ 1. படையாளர் (2·35) [109] 2. பொருநர் (11:37) [543] 3. மள்ளர் (11·30) [536]
**வீரன்** - ▶ 1. அருகன் (1:20) [20] 2. சோழன் (2:12) [86]
**வீரிட்டதானம்** - ▶ நடனவிகற்பம் (9.47) [470]
**வீரை** - ▶ கடல் (5:14) [257]
**வீழ்க்கை** - ▶ சோதி (1.59) [59]
**வீழ்த்தல்** - ▶ மேவல் (9:40) [463]
**வீழ்த்துதல்** - ▶ இகுத்தல் (11·45) [551]
**வீழ்தல்** - ▶ 1. மறித்தல் (9·40) [463] 2. விருப்பு (8:24) [389]
**வீற்று** - ▶ 1. வேற்றுமை (9:27) [450] 2. வேறு படுத்தல் (9:27) [450]

## வெ

**வெஃகல்** - ▶ விருப்பு (8:24) [389]
**வெகுட்சி** - ▶ உருத்தல் (11:36) [542]
**வெகுளி** - 1. உட்பகைஆறனுள் ஒன்று (12:27) [617] 2. உலகர்க்குஉறுதுயர்பதினெட்டனுள் ஒன்று (12:58) [648] 3. முக்குற்றத்துள் ஒன்று (12:3) [593]; ▶ 1. கோபம் (9:8) [431] 2. செற்றம் (8:26) [391]
**வெங்களம்** - ▶ போர்க்களம் (5:38) [281]
**வெஞ்சமம்** - ▶ பூசல் (9:30) [453]
**வெட்சி** - 1. செச்சை 2. செந்தூரம் (4:25) [225]; 3. எண்வகைப் போர்த்தொழிலுள் ஒன்று (12:47) [637]; ▶ செச்சை (11:34) [540]
**வெட்சிமலரோன்** - ▶ முருகன் (1:14) [14]
**வெட்டல்** - 1. அறுத்தல் 2. ஈர்த்தல் 3 எரித்தல் 4. ஒறுத்தல் 5. தடிதல் 6. துணித்தல் 7. துமித்தல் 8. பிளத்தல் 9. வகிர்ந்திடல் (9·22) [445]; 10. எட்டுமெய்ப்பரிசத்துள் ஒன்று (12:46) [636]; ▶ கொலைத்தொழில் (9:26) [449]
**வெட்பாலை** - 1. குடசம் 2. வற்சம் (4:7) [207]
**வெடி** - 1. வெருவுதல் 2. வெள்ளிடை (11:59) [565]
**வெடித்தல்** - ▶ 1. முளைத்தல் (9:39) [462] 2. விரிதல் (9:39) [462]
**வெண்கலம்** - கஞ்சம் (6:4) [297]
**வெண்குடை** - 1. கவிகை 2. சத்திரம் 3. தொங்கல் 4. பிச்சம் (7:36) [355]
**வெண்சாமரம்** - ▶ சாமரம் (6:11) [304]
**வெண்டுறை** - ▶ ஆடலுக்குஏற்பது (10:30) [503]
**வெண்டேர்** - ▶ பேய்த்தேர் (6:24) [317]
**வெண்பலி** - ▶ சாம்பல் (6:13) [306]
**வெண்பா** - முதற்பா (10:21) [494]; ▶ வெள்ளை (11·74) [580]
**வெண்மை** - 1. சுவேதம் 2. தவளம் 3 பால் 4. வால் (8:15) [380]; ▶ 1. தண்மை (8:20) [385] 2. வண்ணம் (8·13) [378] 3. வெள்ளை (11:74) [580]
**வெதிர்** - ▶ 1. செவிடர் (2:25) [99] 2. மூங்கில் (4:13) [213] 3. வேழம் (11·17) [523]
**வெதிர்ப்பு** - ▶ கலக்கம் (9:17) [440]
**வெந்** - ▶ முதுகு (2:63) [137]
**வெப்பம்** - உருப்பம் (1:67) [67]; ▶ அழல் (8:20) [385]
**வெம்மை** - வேண்டல் (11·3) [509]; ▶ 1. அச்சம் (8:39) [404] 2. விருப்பு (8:24) [389]
**வெய்துறல்** - ▶ 1. சினக்குறிப்பு (8:27) [392] 2. துன்பம் (8:42) [407]
**வெய்து-எனல்** - ▶ விரைவுக்குறிப்பு (9:11) [434]
**வெய்யவன்** - ▶ மகசிரம் (1:55) [55]
**வெய்யோன்** - ▶ சூரியன் (1:45) [45]
**வெயில்** - 1. ஆதபம் 2. என்றூழ் (1:65) [65]; ▶ ஒளி (8:17) [382]
**வெரிந்** - ▶ முதுகு (2:63) [137]
**வெருகம்** - ▶ வால்கீழ்இடம் (3:38) [174]
**வெருகு** - ▶ 1. ஆண்பூனை (3:15) [161] 2. குட்டி (3:26) [172] 3. பறழ் (3:26) [172] 4. பூனை (3:15) [161]
**வெருவல்** - ▶ கலக்கம் (9:17) [440]
**வெருவு** - ▶ அச்சம் (8:39) [404]
**வெருவுதல்** - ▶ வெடி (11:59) [565]
**வெள்கல்** - ▶ நாணம் (8:30) [395]
**வெள்வரகு** - ▶ பலகறை (6:7) [300]
**வெள்ளமிகுதி** - ▶ வாரி (11:38) [544]
**வெள்ளாட்டுஏறு** - 1. உதள் 2. கொச்சை 3. மோத்தை (3:12) [158]; ▶ செச்சை (11:34) [540]
**வெள்ளாடு** - 1. கொச்சை 2. தகர் 3. வற்காலி 4. வெள்ளை (3:11) [157]; ▶ வெள்ளை (11:74) [580]
**வெள்ளாம்பல்** - குமுதம் (4:39) [239]
**வெள்ளி** - 1. சல்லியன் 2. சிதன் 3. சுக்கிரன் 4. சுங்கவன் 5. திங்கள் 6. பளிங்கு 7. பிரசுரன்

8. புகர் 9. மந்திரி 10. மழைக்கோள் (1:49) [49]; 11. இரசதம் 12. களதபுதம் 13. தாரம் (6:5) [298]; 14. ஐந்துஉலோகத்துள் ஒன்று (6:2) [295]; ► திரிபுரம் (12:8) [598]

வெள்ளிடை - ► வெடி (11:59) [565]

வெள்ளிமலைப்புறமேல் - ► தேவகுருவம் (5:3) [246]

வெள்ளில் - ► விளா (4·7) [207]

வெள்ளை - 1. வெண்பா 2. வெண்மை 3. வெள்ளாடு (11:74) [580]; ► 1. ஆடு (3:10) [156] 2. வெள்ளாடு (3:11) [157]

வெள்ளைநளினவல்லி - ► கலைமகள் (1:29) [29]

வெள்ளைமணல் - வாலுகம் (5:21) [264]

வெள்ளைவாரணத்தோன் - ► இந்திரன் (1:12) [12]

வெளி - ► ஆகாயம் (1:37) [37]

வெளில் - ► 1. அணில் (3:19) [165] 2. தந்தி அணைதறி (7:29) [348] 3. தூண் (7:29) [348]

வெளிற்றுமரம் - 1. பால்மரம்எல்லாம் 2. முருக்கு (4:18) [218]

வெளிறு - ► தண்மை (8:20) [385]

வெற்பன் - ► குறிஞ்சித்திணைமகன் (2:42) [116]

வெற்பு - நாற்புகலுள் ஒன்று (12:9) [599]; ► 1. கோடு (11:15) [521] 2. மலை (5:8) [251] 3. விண்டு (11:11) [517]

வெற்புஎடுத்தோன் - ► திருமால் (1:7) [7]

வெற்றி - 1. ஆடல் 2. ஆடு 3. கொற்றம் 4. வலம் 5. வாகை 6. விசையம் (8:22) [387]; ► 1. கொற்றம் (11:54) [560] 2. வீரம் (8:21) [386]

வெற்றிபூ - ► வாகை (4:41) [241]

வெறி - 1. அணங்காட்டு 2. நாற்றம் 3. விரை (11:7) [513]; ► 1. அச்சம் (8:39) [404] 2. நாறுதல் (8:54) [419] 3. வேலன்ஆடல் (9:48) [471]

வெறிப்பு - ► கலக்கம் (9 17) [440]

வெறியாட்டாளன் - ► வேலன் (11:41) [547]

வெறியாடுவேலன் - ► முருகு (11:59) [565]

வெறுக்கை - ► 1. செல்வம் (8:53) [418] 2. பொருள் (11:79) [585] 3. பொன் (6:1) [294]

வெறுத்தல் - ► நெரித்தல் (9:23) [446]

வெறுநுகம் - ► சோதி (1:59) [59]

வெறுப்பு - உலகர்க்குஉறுதுயர்பதினெட்டனுள் ஒன்று (12:58) [648]; ► செறிவு (8:12) [377]

வென்றி - ► முல்லை (11:23) [529]

## வே

வேகம் - 1. கடுமை 2. விவேகம் (9:43) [466]; ► கோபம் (9:8) [431]

வேங்கை - 1. கணி 2. திமிசு 3. திமில் (4:9) [209]; ► 1. அளிப்பயிலாமரம் (4:14) [214] 2. சிங்கம் (3:1) [147] 3. புலி (3:2) [148]

வேசரி - ► கழுதை (3:13) [159]

வேட்கை - ► 1. மால் (11:10) [516] 2. விளரி (11.77) [583]

வேட்கைப்பெருக்கம் - வேணவா (8:26) [391]; ► வயா (11:18) [524]

வேட்கையர் - ► காதலித்தோர் (2:28) [102]

வேட்கோபர் - ► குயவர் (2:18) [92]

வேட்டல் - 1. அந்தணர்அறுதொழிலுள் ஒன்று (12:23) [613] 2. அரசர்அறுதொழிலுள் ஒன்று (12:24) [614] 3. வணிகர்அறுதொழிலுள் ஒன்று (12:24) [614]

வேட்டுவன் - ► மகம் (1:57) [57]

வேட்பவர் - ► காதலித்தோர் (2:28) [102]

வேட்பித்தல் - அந்தணர்அறுதொழிலுள் ஒன்று (12:23) [613]

வேடகம் - ► காதணி (7:17) [336]

வேடர் - ► பாலைநிலமக்கள் (2:44) [118]

வேடர்பறை - துடி (7:21) [340]

வேண்டல் - ► வெம்மை (11:3) [509]

வேணவா - ► வேட்கைப்பெருக்கம் (8·26) [391]

வேணி - ► 1. சடை (2:69) [143] 2. சுடிகை (11·69) [575]

வேணு - ► மூங்கில் (4:13) [213]

வேத்திரம் - ► பிரம்பு (4:17) [217]

வேதண்டம் - ► மலை (5:8) [251]

வேதத்தின்உட்பொருள் - ► உபநிடதம் (10:15) [488]

வேதநூலின்இருவகைப் பொருள் - 1. கருமபாகை 2. ஞானபாகை (10:15) [488]

வேதம் - 1. ஆதிநூல் 2. எழுதாக்கேள்வி 3. சாகை 4. சுருதி 5. மறை (10:14) [487]; ► 1. கடிகை (11:53) [559] 2. மறை (11:43) [549]

வேதமார்க்கம் - ► வைதிகம் (10:15) [488]

வேதன் - ► பிரமன் (1:9) [9]

வேதனை - ► அலைப்பு (9:26) [449]

வேதா - ► பிரமன் (1:9) [9]

வேதாளம் - ► பசாசு (1:36) [36]

வேதாளி - ► காளி (1:27) [27]

வேதாளியர் - ► சூதர் (2:33) [107]

வேதி - ► 1. கேட்டை (1:60) [60] 2. வேள்விக் குண்டம் (5:36) [279]

வேதிகை - ► 1. திண்ணை (5:32) [275] 2. நல்லாடை (7:42) [361]

வேதியர் - ► பார்ப்பார் (2:4) [78]

**வேதியன்** - ► அரசர்துணைவர் (12·57) [647]

**வேதினம்** - ► ஈர்வாள் (7:6) [325]

**வேந்தன்** - ► 1. அரசன் (2:9) [83] 2. அருகன் (1·20) [20]

**வேந்தன்ஏழுபண்பு** - 1. அறம் 2. இன்பம் 3 பண்பு 4. புகழ் 5. பொருள் 6. மதி 7. மறுமை (12:39) [629]

**வேம்பு** - நிம்பம் (4:4) [204]

**வேய்** - 1 அமை 2. ஒற்று 3. வீணை (11:39) [545]; ► 1. ஒற்றல் (9·17) [440] 2. ஒற்று (2:25) [99] 3. மூங்கில் (4:13) [213]

**வேய்தல்** - ► 1. ஒப்பனை (9:3) [426] 2. சூடுதல் (9:5) [428] 3. வேயுள் (5:32) [275]

**வேயுள்** - வேய்தல் (5:32) [275]

**வேர்** - ► மூலம் (11:61) [567]

**வேர்த்தல்** - ► கோபம் (9:8) [431]

**வேரல்** - ► மூங்கில் (4:13) [213]

**வேல்** - 1. அயில் 2. அரண் 3. உடம்பிடி 4. எஃகம் 5. குந்தம் 6. சத்தி 7. ஞாங்கர் 8. விட்டேறு (7:3) [322]; 9. அறுவகைத்தானையுள் ஒன்று (12:27) [617]; ► 1. எஃகம் (11:76) [582] 2. சூலப்படை (7:1) [320]

**வேலன்** - 1. முருகன் 2. வெறியாட்டாளன் (11:41) [547]; ► 1 தேவராளன் (2:25) [99] 2. முருகன் (1:13) [13]

**வேலன்ஆடல்** - 1. அணங்கு 2. கழங்கு 3. வெறி (9:48) [471]

**வேலாவலையம்** - ► 1. கடல் (5:13) [256] 2. பூமி (5.4) [247]

**வேலி** - 1. காவல் 2. மதில் (11.61) [567]; ► 1. ஊர் (5:24) [267] 2. கள்ளின்பேதம் (6·22) [315]

**வேலை** - 1. கடற்கரை 2. கடல் 3. காலம் (11:52) [558]; ► 1. கடல் (5·13) [256] 2. கடற்கரை (5:15) [258]

**வேழம்** - 1. இபம் 2. கன்னல் 3. கொறுக்கை 4. வெதிர் (11:17) [523]; ► 1. கரும்பு (4:12) [212] 2. தோல் (11:9) [515] 3. மூங்கில் (4:13) [213] 4 யானை (3:4) [150] 5. வாரணம் (11:9) [515]

**வேழம்பர்** - ► கழாய்க்கூத்தர் (2:23) [97]

**வேள்** - ► 1. மன்மதன் (1:16) [16] 2. முருகு (11:59) [565]

**வேள்புலக்கோ** - ► சளுக்கிஅரசன் (2:14) [88]

**வேள்வி** - 1. இட்டி 2. எச்சம் 3. ஓமம் 4. கிருது 5. மகம் 6. யாகம் (9·19) [442]; ► தியாகம் (9.18) [441]

**வேள்விக்குண்டம்** - 1. தீத்தம் 2. வேதி (5:36) [279]

**வேள்வித்தறி** - யூபம் (7:29) [348], (9.19) [442]

**வேள்விப்பிரான்** - ► இந்திரன் (1:11) [11]

**வேள்வியர்** - ► பார்ப்பார் (2:5) [79]

**வேளாண்மை** - 1 உபகாரம் 2. உபசாரம் 3. மெய் (11:40) [546]; ► தியாகம் (9:18) [441]

**வேளாளர்** - ► காராளர் (2:17) [91]

**வேளிர்** - ► 1. காராளர் (2:17) [91] 2. குறுநில மன்னவர் (2:14) [88]

**வேளின்குடை** - ► சந்திரன் (1:46) [46]

**வேளைவென்றோன்** - ► அருகன் (1:20) [20]

**வேற்கரன்** - ► முருகன் (1.13) [13]

**வேற்றுமை** - 1. திரிவு 2. பேது 3. விள்ளல் 4. வீற்று (9:27) [450]

**வேற்றுமைஉருபு** - 1. அது 2. இன் 3. ஐ 4. ஒடு 5. கண் 6. கு (10:13) [486]

**வேறு** - ► கூறுபாடு (8:22) [387]

**வேறுபடல்** - 1. விகடம் 2 விகிர்தம் (8·53) [418]

**வேறுபடுத்தல்** - 1. திரிவு 2. பேது 3. விள்ளல் 4. வீற்று (9:27) [450]

### வை

**வை** - 1. கூர்மை 2. நெல்தாள் 3. புல்லு (11:16) [522]; ► 1. ஆயுதக்கூர்மை (7:8) [327] 2. எஃகம் (11:76) [582] 3 வைக்கோல் (4.31) [231]

**வைக்கோல்** - 1. அழி 2. பலாலம் 3. வை (4·31) [231]

**வைகல்** - 1. கழிதருநாள் 2. தங்கல் 3. புலரிக் காலம் (11:14) [520]; ► தினம் (1:66) [66]

**வைகாசி** - ► விசாகம் (1:59) [59]

**வைகைத்துறையவன்** - ► பாண்டியன் (2:13) [87]

**வைதிகம்** - வேதமார்க்கம் (10 15) [488]

**வைப்பு** - ► இடம் (5:46) [289]

**வைப்புறுத்தல்** - 1. தெருட்டல் 2. வருட்டல் (9:38) [461]

**வையம்** - 1 அவனி 2 எருது 3. சகடம் 4. சிவிகை 5. தேர் (11.76) [582], ► 1. உரோகணி (1:54) [54] 2. தேர் (7.26) [345] 3. பண்டி (7:27) [346] 4. பாண்டில்பூண்டஊர்தி (7:27) [346] 5. பூமி (5:5) [248]

***

# பாரதிதீபம்

## மூலம்

# செய்யுள் அமைப்பு

தொகுதி எண் ← 3. விலங்கின் பெயர்த் தொகுதி → தொகுதிப் பெயர்

சிங்கம் → செய்யுள் தலைப்பு

செய்யுள் தொடர் எண் ← 147. அரி ஆளி சீயம் வயப்போத்துச் சிங்கம் பஞ்சானனம்
கேசரியாம் மடங்கல் முடங்குளை கோளரி தாம் வயமா
மிருகாபதி அரிமாவே வயப்புலி வேங்கை இபம்
பொருகான் நகாயுதம் கண்டீரவம் எனப் போற்றினமே. (1) → செய்யுள் எண்

## திருவேங்கட பாரதி
## இயற்றிய
# பாரதிதீபம்

## 1. தெய்வப் பெயர்த் தொகுதி

### சிவன்

1. அரன் இறைவன் சிவன் சங்கரன் நித்தன் அமலன் கங்கா
தரன் உமைபங்கன் மலைவில்லி தற்பரன் தாணுச் சம்பு
புரதகனன் புனிதன் பிறைசூடி புலியதளோன்
பரசுதரன் கயிலாயன் கபாலி பசுபதியே (1)

2. மழுவாளி யானைஉரித்தோன் முக்கண்ணவன் மான்இடத்தோன்
அழலார்கரன் பித்தன் பிஞ்ஞகன் சூலதரன் பெருமான்
கழையான் முத்தன் திரியம்பகன் காளகண்டன் பணிலக்
குழையான் பினாகி ஐயானனன் ஆதி செங்கோலத்தனே (2)

3. விடையவன் காமதகனன் கங்காளன் விமலன் சித்தன்
சுடலையில்ஆடி கறைக்கண்டன் கூற்றுஉதைத்தோன் சடையோன்
நடம்நவில்பாதன் நல்நாரிபாகத்தன் நாதன் விடைக்
கொடியன் உருத்திரன் நீறுஅணிந்தோன் முடிக்கொன்றையனே (3)

4. பிறப்பிலி கண்நுதல் ஈசன் பெம்மான் பெண்ணிடத்தன் அத்தன்
மறைத்தவன் யோகி மதிசூடியோன் அந்திவண்ணன் நம்பன்
இறைப் பணிஆபரணன் பாண்டரங்கன் இதளியங்கன்
கறைக்கடுஉண்டவன் காமாரி காலனைக்காய்ந்தவனே (4)

### திருமால்

5. மாதவன் அச்சுதன் வாமனன் கோவிந்தன் மாயன் மது
சூதனன் கண்ணன் முராரி முகுந்தன் துளவுஅணிந்தோன்
சீதரன் கேசவன் தான் உந்திபூத்தோன் திருவின்பிரான்
பீதகஆடையன் சங்குஆழிஏந்தி பெரியவனே. (5)

6. அரி நெடுமாலவன் தாமோதரன் அரவில்துயில்வோன்
கருடபதாகையன் காகுத்தன் அத்தன் கமலக்கண்ணன்
பரியுருவானவன் பாற்கடலோன் பற்பநாபன் பச்சை
மரகதமேனியன் பஞ்சாயுதன் கடல்வண்ணத்தனே. (6)

7. விண்டு நராந்தகன் சாரங்கபாணியன் வெற்புஎடுத்தோன்
கொண்டல்நிறத்தன் உலகளந்தோன் குஞ்சரம்உதைத்தோன்
வண்டுஉருவத்தன் கருணாகரன் நரவாள்அரி பார்
உண்டவன் கோவலன் நாராயணணன் புருடோத்தமனே. (7)

8. கடல்துயில்வண்ணன் திருவிக்கிரமன் கவிப்பின்சென்றோன்
படப்பணிஆடி பரந்தாமன் நித்தன் படியிடந்தோன்
இடைக்குலநாதன் உபேந்திரமூர்த்தி இறையவன் ஏழ்
விடைக்குஎதிராமவன் காயாமலர்வண்ணன் விண்ணவனே. (8)

### பிரமன்

9. போதகன் உந்தியில்வந்தோன் படைத்தவன் பூமிசையோன்
ஓதிமவாகனன் வேதா விரிஞ்சன் உபநிடத்து
நாதன் பிதாமகன் நான்முகன் மால்மகன் நாள்மலரோன்
வேதன் புனிதன் விதாதா முதுவன் விதி அயனே. (9)

10. இரணியகெற்பன் பரமேட்டி மண்பொதுத்தந்தை இறை
குரவன் எண்கண்ணினன் ஆதா எகினக்கொடியுடையோன்
பிரமன் வரன் புவிதந்தோன் மறையவன் பீதகம்சேர்
உருவன் புராதனன் அம்போருகத்தில்உறைபவனே. (10)

### இந்திரன்

11. வானவன் வேள்விப்பிரான் பாகசாதனன் மஞ்ஞைஉரு
வானவன் கோகிலவண்ணன் வலாரி அரி அமரர்
கோன் அசலத்தின்சிறகுஅரிந்தோன் குலிசப்படையோன்
தானவர்கோபன் குணதிசைக்காவன் சசிபதியே. (11)

12. புரந்தரன் வாசவன் விண்ணோர்இறையவன் பொன்னகர்இந்
திரன் புனிதன் வெள்ளைவாரணத்தோன் வச்சிரகரத்தோன்
தரும்தருஆளி சதக்கிருது ஆகண்டலன் மகவான்
கரும் புயல்ஊர்தி சுரர்பதி ஆயிரக்கண்ணினனே. (12)

### முருகன்

13. முருகன் கடம்பன் குமரன் சுவாமி முதலவன்சேய்
குருகின்பெயரிய குன்றுஎறிந்தோன் கொடிச்சேவலன் வேற்
கரன் கந்தன் ஆறுமுகன் வள்ளிநாயகன் கார்த்திகையன்
சுரர்தம்பதிஅளித்தோன் செட்டி வேலன் தொழுபவனே. (13)

14. சூதகுலாரி நகாரி சரவணத்தோன் அறுமீன்
காதலன் சூர்ப்பகை சேந்தன் செவ்வேள் பொழிகார்க் குறிஞ்சி
நாதன் சிகாவளவாகனன் சேய் வெட்சிநாள்மலரோன்
தாதுஅவிழ் காந்தளந்தாரோன் விசாகன் சொல்சண்முகனே. (14)

### விநாயகன்

15. சங்கரன்மைந்தன் விநாயகன் சண்முகன்தன்முன்வந்தோன்
ஐங்கரன் ஆனைமுகத்தோன் கணபதி ஆகுபரிப்
புங்கவன் மால்மருகன் ஒற்றைக்கொம்பன் பொழிமதத்தோன்
பங்கயம் மோதகம் பாசாங்குசம் பயில் பாணியனே. (15)

### மன்மதன்

16. மாரன் அனங்கன் மதன் சம்பராரி மதிக்குடையோன்
கார்இருள்வாரணன் பூவாளி மன்மதன் கந்தர்ப்பன் வேள்
ஆரவில்லாளி குயிற்காகளத்தன் ஐந்துஅம்புஉடைய
வீரன் வசந்தன் ரதிபதி மீனவன் வில்லவனே. (16)

### மன்மதன், வயிரவன், ஐயன்

17. காமன் மனோபவன் சித்தசன் நல்கரும்பாளி கடல்
மாமுரசன் தென்றல்தேரோன் மகரக்கொடியவனாம்
சாமளன் காரி வடுகன் வயிரவன் சாத்தன் ஐயன்
தீமைஇல் காரியன் சாதவாகனன் சிவன்மகனே (17)

### குபேரன்

18. இருநிதிஆளி குபேரன் தனதன் எரிவிழிசேர்
அரன்உயிர்நண்பன் நிதிக்கோன் இயக்கன் அளகைப்பிரான்
பொருள்இறை பிங்கலன் உத்தரதிக்கன் நல்புட்பகன்
மந்திரி கனசெல்வன் நரவாகனன் வச்சிரவணனே. (18)

### அருகன்

19. அருகன் அசலன் அறவாழிஅந்தணன் ஆதி அண்ணல்
வரதன் சினவரன் பொன்னெயில்நாதன் மலரின்வந்தோன்
பரமன் புனிதன் அதிகுணன் எண்குணத்தோன் பகவன்
விரதன் சினேந்திரன் புண்ணியமூர்த்தி விளங்கொளியே. (19)

20. பூரணன் பண்ணவன் வேளைவென்றோன் முக்குடைப்புங்கவன்
வீரன் திகம்பரன் விண்ணவன் தேவன் விறல்முனிவன்
காரணன் சாந்தன் அருளாளி வேந்தன் கலையுணர்ந்தோன்
பேர்அரியாசனன் ஆசான் அசோகின்பெருந்தகையே. (20)

### புத்தன்

21. அண்ணல் அருங்கலைநாயகன் போதியவன்பகவன்
புண்ணியன் ஆதி முதல்வன் புனிதன் சொற்புங்கவன் மெய்த்
தண்ணளியாளன் சிவன் வரன் புத்தன் தருமஅருள்
நண்ணியசெல்வன் அகளங்கன் பூவில்நடந்தவனே. (21)

22. காந்தன் முக்குற்றம்கடிந்தபிரான் பஞ்சதாரைவிட்டோன்
மாந்தர்க்கு அருளிடுவோன் ஏகதேவன் மறைவயிரி
காந்தன் அனந்தவிலோசனன் ஆதி கடவுள் அரி
ஏந்தியநீழலன் வாமன் சிங்காதனம்ஏற்றவனே. (22)

### யமன், யமபடர்

23. சமனன் செங்கோல்இறை சண்டன் மறலி தருமன் தென்னன்
நமன் அந்தகன் யமன் வெங்காலன் கூற்று நடுவன் என்பர்
அமர்வெஞ்சமன் சண்டன் வெங்கூற்றுக் காலன் நடன் மறலி
நிமிர்தண்டதரன் யமன்படர் பேர்என்பர் நேரிழையே. (23)

### பார்வதி

24. ஆரியை சத்தி அயிராணி அம்பிகையாள்அண்ட
பூரணி வல்லி உமை சங்கரி முப்புவிஅளித்த
காரணி முக்கணி இமையமடந்தை கவுரி அரன்
பாரி புராதனி எண்ணான்கு அறம்செய்த பார்வதியே. (24)

### கங்கை

25. சீநதி சிந்துநதி சுரர்ஆறு திரிபதகை
வானதி ஆபகை மந்தாகினி விமலை தவள
மான பகீரதி ஆகாசகாமி அமரர்நதி
தீநெறி மேவிய பாவங்கள் தீர்க்கும் சிவகங்கையே. (25)

### திருமகள்

26. பால்நிற வாரிஅமுதத்துள்வந்தவள் பைந்துளவோன்
மேனியில் வாழும் விபுதபுராதனி வேண்டும் இன்ப
மானவை நல்கும் அபிராமி மா பொறி ஆக்கம் செல்வி
பூநலனுற்றவள் செய்யவள் இந்திரை பொன் திருவே. (26)

### காளி

27. சண்டி முக்கண்ணி பயிரவி தாருகற்காய்ந்தவள்
சாமுண்டி எண்தோள்வல்லி யாமளி காளி முடிக்கவுரி
மண்டிய பேய்க்கொடி மாகாளி யோகினி மாரி வடக்கு
ஒண்தொடிமாது இருவேதாளி யாளியை ஊர்பவளே. (27)

### காளி, மூதேவி

28. காரியைப்பெற்றகொடி காடுகாள் கொற்றி கார்வடுகி
சூரி சொன்மாரி சுடர் மூதணங்கு என்பர் தொன்முகடி
கார்இருள் காக்கைக்கொடிச்சி கலதி தவ்வை கழுதைஊரி
திரைச் சேட்டையள் மூதேவி கேட்டை என்று ஓதுவரே (28)

### கலைமகள்

29. நாமகள் பாரதி கீர்வாணி வெள்ளைநளினவல்லி
பாமகள் சொல்லின்கிழத்தி கலைமகள் பால்நிறத்தி
தாமரைஆசனநாரி பனுவல்தமிழ்மடந்தை
தேமல்கு சாவித்திரி வாணி காயத்திரி என்பரே. (29)

### கொற்றவை

30. மாலுக்குஇளையவள் நாராயணி குமரி கவுரி
பாலைக்கிழத்தி பகவதி பண்ணம்பணத்தி ஐயை
நீலி சயத்தி மயிடனைக்காய்ந்தாள் நெறி விசையை
ஓலப் பணிலத்தி கார்த்திகை கேசரிஊர் திருவே. (30)

## கொற்றவை, இந்திரன்தேவி

31. மேதித்தலையவள் எண்தோளி விந்தை விறல்கொற்றவை
காதிப் பொருகன்னி அந்தரி பேர்என்பர் கற்பகத்தின்
போதுற்றவல்லி சசி அயிராணி புலோமிசை மெய்த்
தீதற்ற சுந்தரி இந்திரன்தேவி செறிபெயரே. (31)

## இடாகினி, யோகினி, வானவர் மாதர், தெய்வப்பெண் பொது

32. மாயமடந்தை வலவை இடாகினி வஞ்சனி
சூராயவள் சண்பனி யோகினி தான்என்பரால் அரம்பை
அரமாது என்பர் வானவர் மாதரை சூர்அணங்கு
சேய தெய்வப்பொதுப் பெண் பெயர்ஆகும் திருந்திழையே. (32)

## தேவர்

33 வானவர் தேவர் இமையோர் புத்தேளிர் வரர் விபுதர்
தானவர்மாற்றலர் அண்டர் விண்ணோர் அமுதாசனர் மெய்ஞ்
ஞான இலேகர் புலவோர் அமரர் நலக்கடவுள்
ஆனவர் ஆதித்தர் உம்பர் பொன்னாட்டில் அமர்ந்தவரே. (33)

## கடவுள்பொது, அசுரர், இராக்கதர்

34. பகவர் பட்டாரகர் புங்கவர் பண்ணவர் தீர்த்தர் என்றே
புகலும் கடவுள்பொதுப்பேர் அவுணர் பொரும்அசுரர்
தகுவர் தயித்தியர் தானவர் நான்கும் நிசாசரரும்
இகலும் அரக்கர் நிசிசர் நிசாசர் இராக்கதரே. (34)

## அரக்கர்இனத்தவர், விஞ்சையர், கந்திருவர்

35. கரை யாதுதானர் நிருதர் வெஞ்சாலகடங்கடர்
முரைசார் அரக்கர்இனத்தவர் விஞ்சையர் ஓங்கு வித்தியா
தரர் கேசரர் என்பர் கின்னரர் வீணைத்தனுவினர்
தந்திரர் யாழ்உடையவர் என்னலும்ஆம் கந்திருவரையே. (35)

## பசாசு, பூதகணம்

36. கழுது பசாசு பிரேதகம் சோகு கடி கண்[ணம்] மண்ணை
அழல்உமிழ் கூளியின் வேதாளம் சாவோடு அணங்குஅலகை
பழிதரு கூளி கிருத்திமம் சாதகம் பாரிடம்
மொழிதரு பூதங்கணம் குறள் ஆக மொழிகுவரே. (36)

## ஆகாயம், காற்று

37. அம்பரம் ஆசினி ஆகாயம் அந்தரம் அண்டம் மங்குல்
உம்பர்இடம் குடில் விண் வெளி மாகம் உயர்க் ககனம்
அம்பரம் வானம் விசும்பு என்பர் வந்து பரிசனன்
வாதம் பவனம் கொண்டல் கோடை சமீரணன் சதாகதியே. (37)

## காற்று, தென்றல்

38. ஊதை மருத்து வங்கூழ் கால் அனிலம் உலவை வளி
கூதை உயிர்ப்பு அரி மாருதம் மாபெலன் கோதை ஒலி
சீதள வாடை வெங்காற்று என்பர் தென்றல் தென்கால் இரத
வாதம் வசந்தம் மலையாநிலம் மந்தமாருதமே. (38)

## குடகாற்று(மேல்காற்று), குளிர்காற்று, வடகாற்று, குணதிசைவந்து(கீழ்காற்று), சுழல்அனிலம்(சுழல்காற்று), அங்காரகன்

39. குடகாற்றுக் கோடை குளிர்காற்றுக் கூதையும் ஊதையும்ஆம்
வடகாற்று வாடை வடந்தை குணதிசைவந்து கொண்டல்
அடர்காற்றுச் சூறைவளியே சுழலும்அனிலம் என்பர்
சுடர் தீக்கனல் அனலோன் சுசி அழல் தூமத்தனே. (39)

### அங்காரகன், நெருப்பு

40. அரி தகனன் தழல் பாவகன் வன்னி அங்காரகன் பேர்
எரி புவமானன் ஞெகிழி உதாசனன் கனலி
திரிகுணன் வாயுசகன் சித்திரபானுச் சிகி சுவலன்
நிரை எழுநாவன் தனஞ்செயன் அங்கி நெருப்பு என்பரே. (40)

### ஊழிஅங்கி (ஊழித்தீ), தீக்கடைகோல், விளக்கு, தீக்கடவுள்

41. தாழும் வடவை கடையிற்கனல் உத்தரம் மடங்கல்
ஊழியின் அங்கி ஞெலிகோல் செந்தீக்கடையும்கொழுங்கோல்
சூழும் சுடர் விளக்கும் தீபம் என்பர் சுடர்க்கனலில்
வாழும் அணங்கு வெம்பாவகனாக வகுத்தனரே. (41)

### நீர்

42. வாரி சலம் சலிலம் தோயம் அம்பு வனம் புவனம்
நீர் உதகம் பயம் வார் பாணியம் குசம் நீரம் அப்பு
நாரம் அயம் சம்பாங்கம் கமலம் புனல் அறல்
சேர்அம்புதம் அலர் கீலாலம் கோ உறை சீவனமே. (42)

### மேகம்

43. மேகம் வருணம் முகில் சீமுதம் விரி புட்கரமே
ஆகும் கவந்தம் கனரதம் சீவனியாம் அமுதம்
பாகம்கொள் பரண்டம் நல்பானீயம்ஆம் அளகம் பரதம்
போகம்கொள் காண்டம் அப்பெயராக புகன்றனரே. (43)

### பெருவெள்ளம், நீர்இறை(நீர்க்கடவுள்), சூரியன்

44. வாரி பிரளையம் நீத்தம் பெருவெள்ளம் வருணன்
நீர்இறை பாசதரன் பாசி என்று நிறை கிரணன்
சூரியன் ஆதவன் என்றூழ் கனலி சுடர்க் கதிரோன்
மேரு வலம்செய் அரி இனன் பானு விருச்சிகனே. (44)

### சூரியன்

45. தரணி தினகரன் வெய்யோன் தபனன் சலசபதி
இரவி திவாகரன் ஞாயிறு பாற்கரன் எல்லை(எல்ஐ) கதிர்
பருதி பகலவன் சான்றோன் அருக்கன் பதங்கன் ஒளி
அருணன் இருள்வலி மார்த்தாண்டன் காலையன் ஆதித்தனே. (45)

### சந்திரன்

46. மதி அம்புலி திங்கள் மான்இடத்தோன் மறுமண்டலத்தோன்
விது இந்து வேளின்குடையாம் உடுபதி வெண்பிறை
அமுதகதிர் அல்லவன் சோமன் சசி குமுதம் அலர்த்தும்
பதி சந்திரன் இரவாளி குபேரன் பனிக்கதிரே. (46)

### செவ்வாய், புதன்

47. சேய் அரிவன் குசன் வக்கிரன் பூமகன் தீஉருவம்
ஆயஅங்காரகன் செவ்வாய் நீலமகன் ஆரல் என்பர்
தூய மதிமகன் பாகன் அருணன் மெய்த்தூதுவன் மால்
மேய கணக்கன் அனுவளி பண்டிதன் மேதையனே. (47)

### புதன், வியாழன்

48. புந்தித[க]ன் சாமன் தனவன் புலவன் புதன் தெளியும்
சிந்தையன் என்பர் குரு விதி அந்தணன் தேவர்குரு
மந்திரி பீதகன் ஆண்டளப்பான் பொன்மதி மறையோன்
பைந்தருவாளி தன் ஆசான் வியாழம் பகற்பதியே. (48)

### வெள்ளி, சனி

49. திங்கள் பிரகுரன் சல்லியன் வெள்ளி சிதன் பளிங்கே
சுங்கவன் மந்திரி மாமழைக்கோள் புகர் சுக்கிரன்பேர்
பங்கு சவுரி முடவன் க(ரியவன்)...
(த)ங்கிய கீழ்மகன் மந்தன் சனி சந்திரசாவகனே. (49)

### அனந்தன், இராகு, கேது, மேடஇராசி, இடபஇராசி

50. சேடன் அனந்தன் கரியோன் இராகு சிவந்தவண்ணன்
கூடிய கேது(க் கொறி மையுதள) .. வருடை
மேடஇராசி பசு மூரி ஏறு வெம்பாறல் புல்லம்
மாடர் பாண்டில் இடபஇராசிக்கு வாய்த்ததுவே. (50)

### மிதுனஇராசி, கர்க்கடகம், சிங்கம்

51 இவரும் யாழ் மறி தண்டு பாடவை உவளெயிரமடை[ஆடவள் இரட்டை]
சவைமகள் ஆகும் மிதுனஇராசி தயங்கு குளிர்
கவையடி ஞெண்டு அலவன் களவன் கற்கடகம் என்பர்
திவள் அரிமாப் புலி யாளி ஐயானனம் சிங்கத்ததே (51)

### கன்னிஇராசி, துலாம், விருச்சிகம், தனு

52 நிலமிகு பெண்பெயர் கன்னிஇராசி நிறை கட்டளை
துலை குல வாணிகன் கோல் நிறுப்பான் துலாத்தது என்பர்
நலம்மிகு தேள் தெறுக்கால் பறப்பான் என நாட்டியபேர்
தலைமை விரிச்சிகம் காண்டீபம் சாபம் தனு என்பரே. (52)

### மகரம், கும்பம், மீனம், அசுபதி, பரணி

53. குல மீன் சுறவு கலை மகரம் குயம் சாடி கும்பம்
அலை மீன் பலபெயர் மீனம் என்று ஓதுவர் ஐப்பசி
தலைநாள் இரலை பரியே அசுபதி தாசி சுல்லி
பல கானமீன் தருமன்நாள் அடுப்புப் பரணியதே. (53)

### கார்த்திகை, உரோகனி

54 வானன் அளக்கர் இறால் ஆரல் நாவிதன் மன்னும் அறு
மீன் அழல் அங்கி என்று ஓதுவர் கார்த்திகை வெல்சகடம்
ஊனம்இல் வையம் வெஞ்சாகாடு பண்டி உருள் பெருந்தேர்
ஆனவை தன்னை உரோகணியாக அறைவர்களே. (54)

### மகசிரம்(மிருகசீரிடம்), ஆதிரை(திருவாதிரை), புனர்பூசம்

55. மதிநாள் நரிப்புறம் மான்தலை மார்கழி மாழ்கு இந்திரன்
முதுபாலை வெய்யவன் மும்மீன் மகசிரம் மூதுரையே
அதிசாதன் அங்கை அரன்தினம் ஆதிரையாம் அதிதி
புதுநாள் புணர்தம் கரும்பு ஆவணம் புனர்பூசத்ததே. (55)

### புனர்பூசம், பூசம், ஆயிலியம்

56. புனிதம் பாலை மூங்கில் முன்னைப் புணர்தம்என்பர்
வனவண்டு கொடிறு குளம் தேவர்வரகுருநாள்
அனையன பூசம் பெறும் பெயராம் என்பர் ஆயிலியம்
தனை அரவின்தினம் கவ்வை என்றே மறை சாற்றியதே. (56)

### மகம், பூரம்

57. கொடுநுகம் வேட்டுவன் வாய்க்கால் எழும்சனி கூறு எழுவாய்
வடிவுறு மாசி பிதிர்தினமாம் மகம் வன்கணையே
இடையது எழும்சனி நாவிதன் துர்க்கை எலி பகவன்
உடைய தினம் தனையே பூரமாக உரை செய்வரே. (57)

### உத்திரம், அத்தம், சித்திரை

58. பன்னு கடையது எழும்சனி பாற்குனி பங்குனி வான்
உன்னிய மாலிதினம் உத்திரம் களிறு ஓங்கு நவ்வி
கன்னி கைம்மீன் ஐவிரல் காமரம் கௌத்துவம் அத்தம்
தென்னெறி நெய்வான் மீன் துவட்டாத்தினம் சித்திரையே. (58)

### சோதி, விசாகம், அனுசம்

59. வெறுநுகம் வீழ்க்கை வளிநாள் விளக்கு மிகுமரக்கால்
பெறுவது சோதி சுளகு வைகாசி பெரிதனனாண்*
முறம் முற்றில் என்பர் விசாகம் புல்தாளி முடப்பனை தேள்
அறிதரு போந்தை அதுவே அனுசத்து அடைத்ததுவே. (59)

### கேட்டை, மூலம், பூராடம்

60. எரி அழல் வேதி வல்லாரை விளங்கொளி இந்திரைநாள்
தருவது கேட்டை அசுரர்தினம் கொக்குத் தாவில் அன்றில்
குருகு செந்தேட்கடையாம் ஆனி மூலம் குறி முற்குளம்
பொருவில் உடைகுளம் பூராடம் நீர்த்தினம் பொற்றனமே (60)

### உத்திராடம், திருவோணம், அவிட்டம்

61 ஆனி கடைக்குளம் ஆடி உத்திராடம் விச்சுவநாள்
தான்உறை நாள் என்பதுஆகும் சிரவணம் தாவு உலக்கை
சோணை வயிரம் அரிதினம் ஓணம் சுடர் அவிட்ட
மீனுஅது காக்கை வசுநாள் புள் ஆவணி மேவியதே (61)

### சதையம், பூரட்டாதி, உத்திரட்டாதி

62. வருணன்தினம் குன்று போர் சுண்டன் செக்கு வரு சதையம்
குரை புரட்டாதியும் நாழியும் முற்கொழுங்கோலும் என்ன
வருபெயர்ஆகியது பூரட்டாதி அறிவன் நன்னாள்
இறை முரசம் கொழுங்கோல் முற்றில் உத்திரட்டாதியதே. (62)

### இரேவதி, அருந்ததி, நட்சத்திரம், காலநுட்பம்

63. சுடரார் புருடன்தினம் தோணி சூலம் தொடர்ந்த தொழு
கடைநாள் பஃறி சொல் நாவாய் இரேபதி சாலி கற்பின்
வடமீன் அருந்ததியாம் தாரை தாரகை வாள் கணம் நாள்
உடு மீன் கலை துடி ஓர் காலநுட்பம் ஒளிவளையே. (63)

### நாழிகை, பொதுது, பின்னை, உச்சி, காலை, சந்தி

64. கடிகை இருத்தை விகலை பதம் கன்னல் நாழிகையாம்
படர்தரு காலம் அமையம் வெங்காலை பதம் பொழுதுஆம்
உடன்உறை பிற்றையும் பின்றையும் பின்னை நல்உச்சி பகல்
அடர்தரு காலை விடியல் உடன் அந்தி சந்தியதே. (64)

### பகல், யாமம், வெயில், இரவு

65. எல்லை நெடும்பகல் யாமமும் சாமம் இலகுவெயில்
சொல்லிய ஆதபம் என்றூழ் இரசுனி சூழும் இருள்
அல்லு நிசா நிசி யாமினி யாமம் அடர் திமிரம்
புல்லிய கங்குல் தமம் நத்தம் நீலம் பொரும் இரவே. (65)

### தினம், முனநாள், பக்கம், மதி, முதல்பக்கம், இரண்டாம்பக்கம்

66. தினம் ஆனியம் பகல் வைகல் திவசம் திவா எனலாம்
முனநாள் நெருனலும் நென்னலும் பக்கம் மொழி திதியாம்
வனம்மேவு திங்கள் மதி முதல்பக்கம் வகுத்த நந்தை
இனம்மேவு பத்திரையாம் இரண்டாம்பக்கம் ஏந்திழையே. (66)

### திரிதி, சதுர்த்தி, பூரணம், பானாள், கணம், ஊழி, வெப்பம், முதுவேனில்

67. சயை பக்கம் ஆகும் திரிதி இருத்தை சதுர்த்தி அஞ்சு
ஆகிய பக்கம் பூரணம் பானாள் அரை இருள் கேடுஇல்கணம்
உயர்வுற்ற மாத்திரையாம் ஊழி காலம் உருப்பம் வெப்பம்
துயர்உற்ற கோடை முதுவேனில் என்பர் துடியிடையே. (67)

### சிறுபொழுது, பருவம்ஆறு

68. சிறுவரை ஒல்லை சிறுபொழுதாம் உம்பர் சேர்வலன் மேக்கு
அறிபவர் மேசென்பர் கார் கூதிர் முன்பனி அப்பின்பனி
விறல் இளவேனில் முதுவேனில் ஆறும் மிகுபருவ
முறையில் இரண்டுஇரன்டாம் திங்கள் ஆவணி முன்எண்ணலே. (68)

### மழைபெய்காலம், பனிப்பருவம், பருவம், காலம், உகம், நான்முகன்வாழ்நாள்

69. மழைபொழிநாள் சரம் கூதிர் பனிப்பருவம் சிரனாள்
பழைய பளங்கு ஆனியமே இருதுப் பருவம் யாண்டு
ஒழுகிய காலம் மடங்கலும் ஊழியும் ஓர்உகமாம்
கழிதரு நான்முகன் வாழ்நாள் சொலில் கற்பமாம் என்ப. (69)

### வாழ்நாள், வருடம், காலம்

70 தெளி ஆயுள் ஆயுகம் வாழ்நாள் உதகம் சிதறி உறை
துளி ஆலி சீகரம் தூவல் பெயல் மாரி தூறல் உடன்
வளியார் பெயலை துவலையும் மாசுஇல் வருடம் அதுஆம்
களியாரும் ஊழியும் ஊழ்முறையும் சொல்லில் காலமதே. (70)

### மேகம், இடி

71. மஞ்சே மழை முகில் மால் கொண்டல் செல் கனம் வான் மை
மேகம் சீதம் அம்புதம் கார் குயில் கந்தரம் விண்டு கொண்மூவும்
சீமுதம் விண் எழிலி புயல் என ஓதும் உருமும்
செல் அசனி உருமேறு இடியாய் மொழிகுவரே. (71)

### துவலை, மழைவிடல், விடாமழை, துளி, பெருமழை, ஆலங்கட்டி

72 சிகரம் சிதர் சொரி தூவல் பிதிர் சீகரம் துவலை
பகரும் தலையல் மழைவிடல் சோனை பனித்தல் விடாது
கவின் சொரிதல் பெயல் துளி ஆலி உறை துளியாம்
அகலில் ஆசாரம் பெருமழை ஆலி ஆலங்கட்டியே. (72)

### மின்னல், இடி, பனி, பரிவேடம், கரும்புவில், வானவில்

73. மிளிர் தடித்துச் சம்பை வித்துருச் சஞ்சலை மின்னாம் இடி
ஒளிபேர் இகும் இமம் நீர் துகினம் பனி ஊர்கோள் வட்டம்
களி பரிவேடம் தரங்கரம் காண்டம் கருப்புவில்லாம்
எளி[ழி] வானவில் இந்திரவில் அது என்பர் இரட்டைவில்லே. (73)

### பாரதிதீப வரலாறு

74. திதம் மா உறை நளினத்தடம் சூழ் தென் கடம்பையின் சொல்
இதமானது செறி பாரதி ஏத்தி என் ஏத இருள்
விதமே வருந்தலவே வைத்த பாரதிதீபம் தன்னில்
முதலாவது தெய்வப் பேராம் தொகுதி முடிந்ததுவே. (74)

## 2. மக்கள் பெயர்த் தொகுதி

### பற்றற்றோர்

75. மாதவர் ஐயர் துறவோர் முனிவர் வரர்அவர்
தபோதனர் மெய்யர் அடிகள் இலிங்கிகள் பொய்இகழ்ந்த
நாதர் யோகிகள் ஞானாதிகர் ஐம்புலன்வெல்லும்
சாதகர் பண்ணவர் மிக்கோர் அறிவர் தவத்தவரே. (1)

76. அறவர் அருந்தவர் குற்றம்கடியுமவர் பெரியோர்
உறுவர் கனிகிழங்குஉண்பவர் கோபம்ஒழித்தவர்
பூஇறைவர் புலவர் இருளற்றசிந்தையர் ஏற்றவருள்
செறிபவர் மோனிகள் பற்றற்றோர் பேர் எனச் செப்பினரே. (2)

### சைவத்தவப்பாலினோர், நாராயணன்சமயத்தவர், சமணர்

77. பாலாய காளாமுகர் மாவிரதியர் பாசுபதர்
மேலாய சைவத்தவப்பாலினோர் மிகு பாகவதர்
மாலாய நாராயணன் சமையத்தர் வண் சாவகர்ஓடு
ஆலா அருகர் எனும் சமண் ஆசிவகத்தவரே. (3)

### புத்தர், சமன்முனிவர், சடைமுடியோர், பார்ப்பார்

78. சீவகர் சாக்கியர் புத்தர் பவுத்தரும் தேரரும் என்று
ஆவது அத்தவத்தோர் அமண் சாரணர்ச் சமண்முனிவரோ
அறு தாபதர் ஆகும் சடைமுடியோர் வேதியர்
வீவறு முப்புரிநூலர் பார்ப்பார் என்ப வேதியரே. (4)

### பார்ப்பார், ஓத்துரைப்போர், கலைவல்லவர், மிக்கவர்

79. அறுதொழிலாளர் மறையவர் பூசுரர் ஐயர் மிக்கோர்
உறவுறு வேள்வியர் முற்குலத்தோர் என்பர் ஒத்துஉரைப்போர்
அறி கணக்காயர் கவிஞர் கலைவல்லவர் உயர்ந்தோர்
விறல் அறிவுற்றவர் சான்றோர் உலகு உடன் மிக்கவரே. (5)

### புலவர், மிகக்கற்றவர்

80. கவிஞர் கலைஞர் அறிவோர் முதுவர் கற்றோர் புதரே
அவையவர் மூத்தவர் ஆன்றவர் ஆய்ந்தவரான சங்கம்
சவை புலவோர் என்பது ஆத்ம விபுதர் தனி நிபுணர்
கவலையில்லாத குசலர் என்போர் மிகக்கற்றவரே. (6)

### மூத்தவர், பெருமையின் மிக்கவர்

81. குரவோன் சுவாமி மன் கோமான் பதி அத்தன் கோ ஐயனும்
பெருமானும் நாதனும் ஈசனும் மூத்தவர் பேர் அது என்பர்
அருளாளர் குரிசிலும் ஏந்தலும் செம்மலும் அண்ணலுமாய்
வருபேர் பெருமையின்மிக்கவர் பேர்என வாய்த்ததுவே. (7)

### எப்பொருட்கும் இறைவன், உயர்ந்தோர்

82. ஆதி பிரான் செம்மல் கேள்வன் இறைவன் அரசன் மன்னன்
நாதன் தலைவன் கொழுநன் அதிபன் மன் நாயகன் சேர்க்
காதலன் ஈசன் பதி காந்தன் காவலன் கோ எனலாம்
ஓது எப்பொருட்கும்இறை உயர்ந்தோரை உலகு என்பரே. (8)

### கோட்டி, அரசன்

83. தொழுதி திரள் சங்கம் கூட்டம் குவிதல் தொகுதி கணம்
குழு நீலகம் சமவாயம் சவை அவை கோட்டி என்பர்
மொழியும் நிருபன் நரபதி வேந்தன் முதல்வன் கோ
வழுஇல் புரவலன் ஏந்தல் மண்காவலன் மன்னவனே. (9)

### அரசன், குருகுலமன்னன்

84. அரசன் இறையவன் பூபாலன் பார்த்திபன் அண்ணல் பிரான்
குருசில் தலைவன் பதி பெருமான் என்பர் கொற்றவர்பேர்
பரவும் குருகுலமன்னவர் நாமம் பரதவர் பார்
கருதும் கவுரவர் என்பர் நல்நூல் நெறி கற்றவரே (10)

### சேரன்

85. வில்லவன் கேரளன் வானவன் வஞ்சிக்குவேந்தன் குடக்
கொல்லியன் குன்றன் குடநாடன் குட்டுவன் கோதை கொங்கன்
மல் உதியன் பொறையன் போந்தின் மாலையன் வானவரம்பு
எல்லையன் சேரலன் சேரன் பொருநைக்குஇறையவனே. (11)

### சோழன்

86. பொன்னிநன்னாடன் புகார்இறை கிள்ளி புலிஉயர்த்த
மன்னவன் நேரியன் வீரன் இரவிகுலன் வளவன்
சென்னி இமையவன் செம்பியன் கண்டன் திறல்அபையன்
நன்னெறிஆர்அத்தன் சோழன் உறந்தைக்கு உரியவனே. (12)

### பாண்டியன்

87. வழுதி கவுரியன் பஞ்சவன் மீனவன் மாறன் கொற்கைச்
செழியன் மதுரைமன் பூழியன் கைதவன் தென்னவன் சேல்
எழுதுபுரவலன் வைகைத்துறையவன் இந்துகுலம்
பழகும்இறையவன் நிம்பத்தொடையினன் பாண்டியனே. (13)

### குறுநிலமன்னவர், சளுக்கியரசன், மந்திரி

88. வேளிர் புரோசர் குறுநிலமன்னவர் வேள்புலக்கோ
ஆளும் சளுக்கிஅரசன் குரவர் அமைச்சர் முன்னோர்
நாளும் நுண்தேர்ச்சியர் மூத்தோர் உழையர் நனூல்இறைவர்
கேள்வியில்சூழ்பவர் மந்திரி ஆனவர் கேளினமே. (14)

### மந்திரிதந்திரி, அரசற்குளாங்கருமத்தர், போர்த்தலைவன்

89. ஏனாதி காவிதி இன்சொல் அமாத்தியன் என்னும்அவன்
தான்ஆகும் மந்திரி தந்திரி வள்ளுவன் சாக்கை எனல்
ஆனா அரசற்குளாங்கருமத்தர் அரும்பெரும் போர்க்
கோன்ஆம் அவனைப் பொருநர் என்று ஓதுவர் கோமளமே. (15)

### வணிகர்

90. எட்டி கவிப்பர் வயிச்சியரே இளங்கோக்கள் இப்பர்
செட்டி சிலேட்டி அறுதொழில்நாயகர் திறல் வினைஞர்
மட்டவிழ் சீரகத்தாரார் பரதர் வணிகர் அயன்
கிட்டிய ஊருவில் வந்தோர் இறையவன்கீழினரே. (16)

### காராளர்

91. வேளிர் களமர் சதுர்த்தர் உழவர் விளைப்பவர்
வேளாளர் கொடையினர் (ஏர்வாழ்நர்) வார்த்தையாடலில் வல்லோர்
காளநெடுங்கடல் பார்மைந்தர் கங்கைகுலத்தர் அயன்
தாளினில் வந்தவர் காராளர் பேர்எனச் சாற்றுவரே. (17)

### மிலேச்சர், சோனகர், மருத்துவர், குயவர்

92. ஆதி மிலேச்சரும் ஆரியர் சோனகராம் யவனர்
வாதனை ஆயுள் மருத்துவ நூலர் மாமாத்திரர்
கோதுஇல் பிடகர் மருத்துவர் ஆகும் குலாலர் மண்மேல்
காதும் குயவர் வேட்கோபர் கும்பகாரருமே. (18)

### உப்பமைப்பவர், சித்திரகாரர், கண்ணாளர்

93. அயரும் உமணர் அமைப்பாளரும் உப்பமைப்பவர்
ஓவியர் சித்திரகாரர் தபதியர் சிற்பியர் வித்தகர் களனையர்
அக்கசாலையர் கம்மியர் கொல்லர் நலனறிவர்
மயன்உற்ற நூலர் யவனர் கண்ணாளர்க்கு மன்பெயரே. (19)

### தச்சர், கன்னார், வண்ணார், உறைகாரர், ஊன்விலைஞர், தோல்விலைஞர்

94. கருது மரவினைத் தச்சர் தபதியர் கன்னுவரே
அருள் கஞ்சகாரர் கன்னார் அவர் காழியர் ஆவர் வண்ணார்
உரவு உறைகாரரும் காரோடர் சூனரும் ஊன்விலைஞர்
பரவு பறம்பரும் தோல்விலை வாணர் பயில்பெயரே. (20)

### நாவிதர், கற்விற்போர், சண்டாளர்

95. நாமப் பெருமஞ்சிகரே மயிர்வினை நாவிதர்பேராம்
அப் பழையர் படுவர் துவசர் அவர் கள்விற்போர்
காமக் குணுங்கர் இழிஞர் கொலைஞர் கவுண்டர் வங்கர்
தாமப் புலைஞர் கனகதர் ஆவர் சன்டாளர்களே. (21)

### பாணர், இயவர், பாடலில்தாழுமவர், நரம்புக்கருவி கொள்மாந்தர்

96. சென்னியர் மாகதர் சூதர் வயிரியர் சேர்மதங்கர்
இன்னிசைப் பாணர் இயவர் கருவி இசைக்குமவர்
பண்ணிய ஓவரும் பண்டரும் பாடலில் தாழுமவர்
கொன்னின் நரப்புக்கருவி கொள் மாந்தர் குயிலுவரே. (22)

### தமிழ்க்கூத்தர், கழாய்க்கூத்தர், தொழில்காரர், புதியவர், அயலோர்

97. குல வாயிலோர் தமிழ்க்கூத்தர் கழாய்உற்றகூத்தினரே
கலைமேவு வேழம்பர் கம்மியர் செய் தொழில்காரர் என்பர்
புலமார் அதிதியர் வம்பலர் என்னில் புதியவராம்
உலகார் நொதுமலர் வம்பலர் தாம் அயலோர் என்பரே. (23)

### ஆகாவழிச்செல்வோன், அடிமை, மடையர், மீகாமன்

98. ஆகாவழிச்செல்பவன் பதிதன் தொழும்பு ஆள் அடிமை
சேகார் சிலதர் சிலதியர் சேடியர் சேடர் என்பார்
ஆகாய வாலுவர் கூவியர் ஆவார் மடையர் மற்று
நீகான் மரக்கலன் மீகாமன் என்பர் நிரைவளையே. (24)

### தூதர், ஏவல்வினைஞர், ஒற்று, தேவராளன், செவிடர், மூடவர்

99. வினை ஆறு பண்பு உரைப்போர் தூதர் ஏவல்வினைஞர் பரி
சனம் மாகுலர் என்பர் சார் வேய் ஒற்றுஆம் என்பர் சாரணன்
சின தேவராளன் வெறியாடும்வேலன் செவிடர் பெயர்
எனிலோ வெதிரர் மூடவர் பங்கு என்ன இயம்புவரே. (25)

### அலி, ஊமை, குறள், வறியோர்

100. பேடியர் பெண்டகர் பேடர் பெண்டு அலிப்பேர் என்பர்
கூடிய மூகையும் மூங்கையும் ஊமையாம் கோணல் சிந்து
நீடிய குஞ்சம் குறள் என்பர் ஆதுலர் நேர் வறியோர்
வாடிய ஆரத் துயருறுவோர் என்பர் வாள்நுதலே. (26)

### கீழ்மக்கள்

101. நெறியிலர் பேதையர் நீசர் சுமடர் கனிட்டர் புல்லர்
பொறியர் முசுடர் முசுண்டர் பொல்லாதவர் பூரியரே
சிறுமையர் ஆற்றலர் தேரலர் தீயவர் தீம்பர் கலர்
அறிவிலர் மூர்க்கர் அசடர் பொய்க் கீழ்மக்கள் ஆனவரே. (27)

### அறிவிலர், கள்வர், காதலித்தோர்

102. முழுமகன் ஐஞ்ஞை மடம் பேதை சேடுஅஞர் மூடன் அண்ணை
இழுதை குதலை அறிவிலர் சோரர் இகல் பகைவர்
கழிவில் கரவடர் கள்வர் தம் பேர் என்பர் காதலித்தோர்
விளைவு நயத்தல் ஆர்வம் வேட்டல் வேட்கை விருப்பு என்பரே. (28)

### மூதறிந்தோர், வல்லளான், விறலோன், பதிவாழ்சதுரர், தூர்த்தர்

103. முதுவர் கிழவர் உரியவர் மூதறிந்தோர் வயவன்
விதமான மீளி வல்லாளன் பெயர் விறலோன் விடலை
பதிவாழ்சதுரர் எனும் நாகரிகர் படிற்றொழுக்கர்
அதி காமமிக்கவர் தூர்த்தர் என்று ஓதுவர் ஆரணங்கே. (29)

### இளமையர், ஏவுவான், புகழ்விளைவீணன், கரியன், கணவன்பிழைத்தோள் மகன்

104. வள முருகன் குமரன் காளை சேடன் மழவன் என்போர்
இளமையர் ஏவுமவனே வியவன் இயவுள் புகழ்
விளைவீணன் ஆகும் கரியன் என் சோரன் மிக உரைக்கில்
களவன் கணவன் பிழைத்தோள் மகன் குண்டகன் என்பரே. (30)

### கன்னிமகன், கைம்மையள்மகன், குலமில்லவர், வல்லோர், வல்லவரல்லாதார், கூவல்நூலோர்

105. கலனுறு கன்னிமகன் கானீனன் கைம்மையின் புதல்வன்
குலவிய கோளகன் ஆகும் குலீனர் குலமில்லவர்
வலவை வல்லோர் என்பர் வல்லுனர்மாட்டார் அவலோர் என்பரே
தலமிசை வல்லவர் சல்லியர் கூவல்சொல் சாற்றினரே. (31)

### பாவலர், மங்கலப்பாடகர், நாடகர், கூத்தர்

106. பரவிய நாவலர் கற்றோர் கவிஞர் சொல்பாவலர்
கருதிய மங்கலப்பாடகர் எட்டர் கடிகைகளாம்
பொருநர் நிருத்தர் வயிரியர் கண்ணாளர் போற்று நடர்
குருவரு நாடகர் கோடியர் தாம் என்பர் கூத்தரையே. (32)

### சூதர், பூகதர், தேர்ப்பாகர், யானைப்பாகர்

107. மாகதர் வந்திகர் வேதாளியர் அவர் சூதர் மன்னும்
பூகதர் ஆவார் புகழ்பவர் சூதர் புனை வலவர்
ஆகிய பேர்எனில் தேர்ப்பாகர் ஆவார் அவருமன்றிப்
பாக பல் வாதுவர் ஆதோரணர் கரிப்பாகருமே. (33)

### பரிமாவடிப்போர், இரவலர், வரையாமலீபவர், அரசர்பரிவாரம்

108. பரிமாவடிப்பவர் வாதுவர் யாசகரே பரிசிற்கு
உரியார் இரப்பவர் இரவலர் பேர்என்ப உற்றபொருள்
வரையாமல் ஈபவர் வள்ளியோர் என்பர் மற்றுஅரசர்
அருகு ஆதரித்த பரியாளமும் பரியாரத்ததே. (34)

### படையாளர், அடுத்தோர்

109. கூளியர் மானவர் வீரர் பொருநர் கொலை மறவர்
வாளுழவர் மண்டர் மள்ளர் விறலர் வயவர் படை
யாளர் துடர்ந்தவர் ஒன்றுநர் துன்னினரே அடுத்தோர்
நாளும் அணுகுநர் ஒல்லுநர் நள்ளுநர் நண்ணுநரே. (35)

### பகைவர்

110 தரியலர் தெவ்வர் செருநர் ஒன்னார் எதிர்ந்தார் அரிகள்
கருதலர் செற்றவர் ஒல்லார் நிகரலர் கண்டலர்
பரவலர் ஒட்டலர் போற்றலர் மாற்றலர் பற்றலர் போர்ச்
செருவினர் நேரலர் விண்டார் பகையவர் சேரலரே. (36)

### மித்திரர்

111. சுற்றம் உறவு கிளை கேள் கடும்பு ஒக்கல் சூழும் நட்போடு
உற்றவர் சார்ந்தவர் பந்தம் குடும்பு நட்டோர் சிறந்தோர்
துற்ற பரிசனம் கூளி செறிவு துணை தமரே
பற்றினர் மேவினர் மித்திரராகப் பகர்ந்தனரே (37)

### ஆண்பெயர், ஏழுபருவப்பெண்பால்

112. ஆடவர் காளையர் ஆடூஉ மகன் மைந்தன் ஆளன் பூமன்
ஈடு குமரனும் ஆண்பெயர் பேதை நிகர் பெதும்பை
தேடிய மங்கை மடந்தை அரிவை தெரிவையுடன்
கூடிய பேரிளம்பெண் ஏழ் பருவம் செய் கோதையரே. (38)

### மடவார் (மடவரல்)

113. அங்கனை பேதை வனிதை இளம்பிடி ஆயிழை பெண்
மங்கை மடந்தை தெரிவை பிணா மகள் மாதர் அரிவை
பைங்கொடி வஞ்சனி காரிகை மானினி பாவை தையல்
இங்கிதை நாரி மடவலர்[மடவரல்] பேர் என்று இசைத்தனரே. (39)

### தலைவி, கலன்கழிமகளிர், மலடி

114. அடிகள் குரத்தி பெருமாட்டி கோமகள் ஐயை அத்தை
தடமலர் மாது இறைமையாட்டி சாமி தலைவி என்பர்
கடல்உலகு எண்ணிய கைம்மை(கயினி) கலன்கழிமான்
வடிவுறு வந்தியும் மைம்மையும் ஆகும் மலடிகளே. (40)

### வரத்தெழுமகளிர், பொதுமகள், பாண்மகள்

115. வரத்தெழு பைம்மை கவுந்தி கணிகை வண் சூளையுடன்
பரத்தை பொதுமகள் பாடினி பாட்டி பயில் மதங்கி
திருத்தகு பாடல்மகடூஉ நடத்திறல் கூத்தி இசை
விரித்தரு நாடகவாள்நுதல் பாண்மகள் மேல்வருமே. (41)

### குறிஞ்சிக்குஅதிபர், குறிஞ்சிநிலப்பெண், குறிஞ்சித்திணைமகன்

116 குறவர் புனவர் இறவுளர் கானவர் குன்றவர் என்று
அறைவர் குறிஞ்சிக்குஅதிபர் குறத்தி அடர் கொடிச்சி
மறுஇல் உழத்தியர் வெற்பன் பொருநன் மலையன் நண்பன்
திறல்புனை கானகநாடன் சிலம்பன் திணைமகனே. (42)

### பாலைநிலமக்கள், பாலைநிலப்பெண், பாலைத்திணைமக்கள்

117. மறவர் எயினர் வெம் பாலைக்கிழவர் மறத்தியரே
பிறைநுதல் மேவும் எயிற்றியர் அந்நிலப்பெண் பெயராம்
விறல்புனை காளையும் மீளியும் வெய்ய விடலையும் என்று
உறைபவர் பாலைத்திணை மக்களாக உரைசெய்வரே. (43)

### பாலைநிலமக்கள் பொதுப்பெயர், முல்லைநிலமக்கள்

118. கானவர் வேடர் மறவர் புளிஞர் கலைக் கொலைஞர்
ஈனர் வனசரர் சிலவர் கிராதர் எயினர் என்னல்
ஆனவர் அப்பொதுப்பேர் அண்டர் கோபாலர் ஆயர் முல்லைத்
தானவர் விந்தர் பொதுவர் இடையவர் தம்பெயரே. (44)

### முல்லைநிலமக்கள், முல்லைநிலப்பெண், முல்லைத்தலைமக்கள்

119. தொறுவர் குடவரும் கோவிந்தர் ஆய்ச்சி தொறுத்தியுடன்
முறைசெய் குடத்தி பொதுவி இடைச்சி மென் முல்லைமகள்
குறைவறு கானகநாடன் குறும்பொறைநாடன் அண்ணல்
நிறைபயில் தோன்றல் அவர் ஆவர் முல்லைநிலமக்களே. (45)

### நெய்தல்நிலமக்கள், நெய்தல்நிலப்பெண், நெய்தல்தலைமகன்

120 கலவர் பரதர் நுளையர் திமிலர் கருங்கடலர்
வலையர் அந் நெய்தல்கிழவர் நுளைச்சி வளர் பரத்தி
தொலைவில் கடல்பிணவு என்னில் கிழத்தி துறைவன் கொண்கன்
சிலைபயில் மெல்லம்புலம்பன் தண் சேர்ப்பன் திணைமகனே. (46)

### மருதநிலமக்கள், மருதநிலப்பெண், மருதநிலத்தலைவர், மருதத்தலைமகள்

121. தொழுவர் கடையர் உழவினர் கம்பளர் சூழ் களமர்
கழனியின் மள்ளர் கடைச்சி உழத்தி கழனிமகள்
கிழவனும் ஊரனும் கேடுஇல் மகிணனும் கேள் மருதம்
தழுவு தலைவர் மனைவி கிழத்தி தலைமகளே. (47)

### முல்லைத்தலைவி, தம்குடித்தமர், முறைப்பெயர், மூதாதை

122. ஆய மருதத்தலைவி அம் முல்லை அணங்கிற்குமாம்
தாயமும் சாதியும் தம்குடியில்தமர் தந்தை தந்தை
தூய பிதா ஐயன் அப்பன் அம்மான் அத்தன் தொன்முறைப்பேர்
ஏய பிதா தந்தை மூதாதையாம் என்று இசைத்தனரே. (48)

### தன்ஐ, மாதுலர், பெற்றதாய், செவிலி

123. தாதையும் தம்முனும் தன்ஐ ஒத்து அந்தத் தகுவர் அம்மான்
மாதுலன் பேர்என்பர் மாதாப் பயந்தவள் வாய்த்த தவ்வை
ஏதம்இல் ஈன்றவள் தாய் அன்னை ஆய் பெற்றவள் எனப் பேர்
ஓதிய தாதி கோடாய் செவிலி என்று ஓதினரே. (49)

### முன்பிறந்தாள், மணவாளன், மனைவி

124. அன்னையும் முன்பிறந்தாளும் செவிலியும் ஆகும் தவ்வை
மன்னிய கேள்வன் கணவன் கொழுனன் மணமகனே
சொல்நவில் காந்தன் மணவாளன் என்பர் துணைவி இல்லாள்
பன்னி உரிமை மனைவி மணமகள் பாரியுமே. (50)

### புதல்வன், மகள்

125. புதல்வன் பிறங்கடை சேய் தோன்றல் எச்சம் புனை சிறுவன்
மதலை தனையன் மருமான் மருவு மகன் மைந்தன்
விதமிகு சந்ததி புத்திரன் செம்மல் மிகு புதல்வி
உதவி சிறுவி தனையை மகள் பெயர் ஓதினரே (51)

### மகன்மகள்பொது, முன்தோன்றல், பின்தோன்றல், வழித்தோன்றல், பிள்ளைப்பன்மை

126 முறைமையின் எச்சம் இருபாற்கு உரியது முன்னை முன்னே
அறிவின் முன்தோன்றல் இளவலும் பின்னையும் ஆவர் பின்னோர்
உறு வழித்தோன்றல் மருமான் பிறங்கடை உம்பல் என்பர்
செறியும் மகார் செஞ் சிறார் பன்மை நாமம் சிறந்தவரே. (52)

### இளமை, நண்பன், தோழன்முன்னிலை

127. மழவும் குழவியும் பிள்ளையும் குட்டனும் மகவும்
விழைகின்ற சேயும் இளமைப் பெயர் நண்பன் மெய்த் துணைவன்
கெழுதகு கேள் எலுவன் பாங்கன் தோழன் கிளைஞன் என்பர்
மொழிதரு தோழனை ஏடா என்று ஓதுவர் முன்னிலையே. (53)

### பாங்கி, தோழியர்முன்னிலை, கணவன்

128. அயர் ஓரை பொய்தல் இகுளை மெய் ஆயம் அணுக்கு இணங்கொடு
இயல் சேடி தோழி மெய்ப் பாங்கி எல்லாஉடன் ஏடி என்ப
பயில் நாமம் தோழியர் முன்னிலை நாமம் பதி கணவன்
மயல்தீர் தலைவன் இறை தோழன் காதலன் மன்பெயரே. (54)

### காதலி, துணைவன், படைத்திரள்

129. தோழி மனைவி புதல்வியும் காதலி சொல் துணைவன்
வாழிய தோழன் கணவன் வரூதினி மன்பகுதி
தாழும் நிதனம் அநிகம் பதாதி மெய்த்தார் தண்டமே
பாழிய தானை பதாகினி சேனை படைத்திரளே. (55)

### படைத்திரள், கொடிப்படை, படைவகுப்பு, மானிடர்

130. ஆசுஇல் அணிகமும் யூபமும் அப்படையாம் நிரை தார்
தூசி கொடிப்படை ஆக்கமுமாம் என்பர் சூழ்ந்த அவணி
காசுஅறு யூபம் உடன் உண்டையோடு இவை கைவகுத்தல்
மாசுஇல் மனிதர் நரர் மக்கள் மானிடர் மண்ணவரே. (56)

### மக்கள்பொது, மக்கள்கூட்டம், உடற்குறை

131. மக்கள் பொதுப்பெயர் மாந்தர்கள் பைஞ்ஞீல் மன்பதையும்
தொக்க நரர்திரள் ஓரையும் ஆயமும் சூழ் குழுவும்
தக்கதோர் பண்ணையும் மக்களின் கூட்டம்தனை உரைப்பர்
மிக்க கவந்தமும் மட்டையும் யூபமும் மெய்க்குறையே. (57)

### உடம்பு, பிணம்

132. புரம் உறுப்பு அங்கம் தனு ஆக்கை காத்திரம் பூட்சி மெய் விக்
கிரகம் களேபரம் தேகம் படிவம் குகை குடிலம்
உருவம் உடம்பு கனம் காயம் என்பர் உயர் குணபம்
கருதும் அழன் பிணமே சவம் ஆகும் களேபரமே. (58)

### பாதம், காலடி, துடை, அல்குல்

133. பாதம் சரணம் கழல் கால் அடி பதம் தாள் பரடும்
ஓதும் கரடும் மிசைத்திரள் காலடி ஊருக் கவான்
தீதுஒன்று இலவாம் குறங்கே துடை என்ப சேர் நிதம்பம்
காதும் கடிதடம் அல்குல் என்று ஓதுவர் கற்றவரே. (59)

### இடை, மருங்குல், வயிறு, கொப்பூழ்

134. மருங்குல் நுசுப்பு நடு இடை ஒக்கலையாம் மருங்குல்
வரும் புறம் குக்கி சடரம் உதரம் வயின் அகடுஆம்
திருந்து வயிறு உந்தி நாபி மிதலை திகழ் இலஞ்சி
தரும்பெயரே எனில்ஆன கொப்பூழ் என்று சாதிப்பரே. (60)

### ஆண்குறி, மாதர்குறி, மார்பு, முலை

135. ஓதும் இலிங்கமும் கோசமும் ஆண்குறி யோனி பகம்
மாதர் பெருங்குறி மார்பம் அகலம் மருமம் உரம்
தாதுஅவிழ் ஆகம் குயம் சொர்க்கம் கொங்கை தனம் நகிலே
மீது குருக்கண் அம்மம் பயோதரம் மென்முலையே. (61)

### சுணங்கு, கைத்தலம், அகங்கை, விரல், நகம், புயம்

136. துத்தி திதிலை பொறி வந்திகை உத்தி சூழ் சுணங்காம்
அத்தம் உடன் கரம் தோள் பாணி கைத்தலம் அங்கை என்னில்
ஒத்த குடங்கை அகங்கை விரல் அங்குலி உகிராம்
பத்தி நகம் புயம் தோள் வாகு மொய்ம்பு எனப் பாவிப்பரே. (62)

### முதுகு, தோள்மேல், கழுத்து, பிடரி

137. நிகர்இல் வெரின் புறம் வெந் முதுகு என்பர் நிகலம்உடன்
செகிலம் சுவல் எனில் தோள்மேல் கழுத்துச் சிறந்த கண்டம்
புகலும் கிரீபம் மிடறு களம் கந்தரம் பொருந்தும்
அகலும் கயில் எருத்தம் சுவலே பிடர் ஆனதுவே. (63)

### பிறக்கு, முகம், உதடு, பல், சிரிப்பு

138 பிறக்கும் பிறகு அபரம் முகம் ஆனனம் பேர்வதனம்
சிறக்கின்ற ஓட்டம் உதடே அதரம் திகழ் இதழாம்
நிறக்கின்ற தட்டம் எயிறு பல் தந்தம் நிலா முறுவல்
முறைத்தங்கு மூரல் நகை சிரிப்பாக மொழிகுவரே. (64)

### மேல்வாய், கீழ்வாய், உள்நா, நா, மூக்கு, கவுள்

139. அணரியும் அண்ணமும் மேல்வாய் கீழ்வாய் அணர்ஆம் அதன்பேர்
தணிவரும் அண்ணம் உள்நா ஆகும் தாலமும் தாலுவும் நா
துணைபெறு நாசியும் துண்டமும் மூக்கு என்பர் தொல் கவுளே
நணுகு கபோலம் கொடிறு என்று கூறுவர் நல்தவரே. (65)

### கண், நெற்றி, புருவம்

140. பழுதறு நாட்டம் நயனம் விலோசனம் பார்வை கண் கோ
விழி திருக்கு அம் அக்கம் நேத்திரம் நோக்கம் அம்பகம் வில்நுதல்
எழில் மத்தகம் குளம் முண்டகம் நெற்றி இலாடம் என்பர்
அழிவுஇல் புரூரம் புருவம் பிருகுடியாம் என்பரே. (66)

### காது, தலை, முடி, மயிர்ப்பரப்பு

141 கன்னம் உடன் செவி காதுஆம் சிரம் உச்சி கம் தலையே
சென்னி உவ்வி நவிர் சேகரம் அந்தரம் சீர்இப[ட]மாம்
முன்னிய சேகரம் சென்னி சிரம் உச்சியே முடியே
மன்னு சிரோமம் உரோமம் செறிந்த மயிர்ப்பரப்பே. (67)

### ஆண்மயிர், பெண்மயிர்

142. தொங்கல் நவிர் குஞ்சி ஓரி குடுமி சுருள் உழையே
பங்கி சிகை பித்தை ஆண்மயிர் கூழை ஐம்பால் சுரியல்
அம்குழல் கேசம் கதுப்பு மராட்டம் அளகம் குரல்
தங்கிய ஓதி சுருள் கூந்தல் கோதை பெண்தன்மயிரே. (68)

### ஆண்மயிர், பிறமயிர், சடை

143. கேசம் சுரியல் கதுப்பு ஆண்மயிர்க்குக் கிளக்கும் பங்கி
வாசம் செறி உளை ஓரி உரோமம் மராட்டம் இவை
பேசும் பிறமயிர் கோடீரம் பின்னல் பின்னும் சடிலம்
தேசுஒன்றும் வேணிச் சடை சூடம் என்னச் சிறந்ததுவே. (69)

### குழன்றமயிர், மயிர்முடி, அவயவம்

144. கொந்தளம் மாலை அளகம் இலோதம் குழன்றமயிர்
பந்தம் முடி பின்னகம் கொண்டை முச்சி பயில் சுடிகை
உந்தும் சிகழிகை ஆகும் மயிர்முடி ஓர் உறுப்புச்
சந்தம் அவையவமே சினை காத்திரம் தான் அங்கமே. (70)

### உடல்தழும்பு, கழலை, நரம்பு, தலையோடு, எலும்பு, கழியெலும்பு

145. பிறங்கு அங்கிதம் செதுகை மெய்த்தழும்பு பெருங்கழலை
செறிந்த அரலை நரம்புஉடன் நாடி சிரை எனலாம்
இறஞ்சிய வெண் தலையோடே கபாலம் எலும்பு என்பு அதுஆம்
குறைந்து கழியென்பு கங்காளமாக முற்கூறினரே. (71)

### குடுமி, உச்சி, பாரதிதீப வரலாறு

146. சிக்கம் குடுமி சிமையம் சிகை உச்சி சேர் நவிரம்
தொக்கசெஞ் சூடி சுடிகையும் சூளி தொகுபுலமை
மிக்கவன் பாரதி பாரதிதீபத்தின் மெய்தெரிந்த
மக்கள் தொகுதி இரண்டாவது முற்றி வந்ததுவே. (72)

## 3. விலங்கின் பெயர்த் தொகுதி

### சிங்கம்

147. அரி ஆளி சீயம் வயப்போத்துச் சிங்கம் பஞ்சானனம்
கேசரியாம் மடங்கல் முடங்குளை கோளரி தாம் வயமா
மிருகாபதி அரிமாவே வயப்புலி வேங்கை இபம்
பொருகான் நகாயுதம் கண்டீரவம் எனப் போற்றினமே. (1)

### புலி

148. குயவரி வல்லியம் சித்திரகாயம் கொலை வயமா
வயவரி வேங்கை தரக்கு வியாக்கிரம் வல் உழுவை
சயமிகு தீவியம் சார்த்தூலம் புண்டரிகம் சமரம்
பயில் மிருகாதி புல் எனப் பேர் புலிக்குப் பகர்ந்ததுவே. (2)

### யானையாளி, யானை

149. அறுகு புழைக்கை அடல் யானையாளி கை அத்தி உவா
மற(மலி) தும்பி புகர்முகம் தோல் இபம் வாரணம் மாக்
கறையடி போதகம் மாதங்கம் நாகம் கரி களிறு
திறல்மிகு நால்வாய் ஒருத்தல் மதகயம் சிந்துரமே. (3)

150. கயமே கருணி கடுவை பகடு களபம் தந்தி
வயமா வழுவை இருள்மா எறும்பி மதவனமே
சயவேழம் தூங்கல் கைம்மா உம்பல் கும்பி தந்தாவளமே
குயமேவு மாதிரம் வல்விலங்காம் என்பர் குஞ்சரமே. (4)

### யானைக்கன்று, கிளர்ச்சியானை, யானை பிறந்த நிலப்பெயர்

151. களபம் துடியடி போதகம் வெய்ய கயமுனியே
தளருங் கரிக்கன்று தந்தி மதகரி தான் உரைக்கில்
கிளர் வன்கை யானை வனசரம் ஓங்கு கிரிசரமே
தெளியும் நதிசரம் யானை பிறந்த திணைப்பெயரே. (5)

### குதிரை

152 துரகம் குதிரை அரி வாசி கிள்ளை துரங்கம் கற்கி
குரகதம் மண்டிலம் அத்திரி மாப் பரி கொக்கு இவுளி
புரவி குந்தம் கொய்யுளை கோணம் கோடகம் போற்றிய கந்
திருவம் சையிந்தவம் அச்சுவம் ஆம்எனச் செப்பினரே. (6)

### குதிரைப்பண்பு, குதிரைமார்க்கம், குதிரைக்குளம்பு, பசுப்பொது

153. பாடலம் கந்துகம் கோரம் கனவட்டம் பண்பு எனலாம்
கூடிய மாதிகம் மார்க்கம் குரம் குளம்பு ஆகும் பெற்றம்
மாடு குடம் சுட்டுக் கோ ஆன் பசுவினம் வாலிய ஆன்
நீடிய சாதிப் பொதுப் பெயராக நிலைபெறுமே. (7)

### பசுப்பெண்பால், ஏறு

154. தேனுச் சுரபி சுரையே கபிலை செழுங்குரம்
கோனுற்ற கோமளம் சேதாப் பெண்பால் என்பர் கோ இடபம்
ஆனுற்ற பாறல் இறால் மூரி பாண்டில் அடல் விடை சே
வானத்து எருது பெற்றம் புல்லம் ஏறு அதன்பேர் என்பரே. (8)

### எருமைச்சாதி, எருமை, எருமைஆண், மலட்டெருமை

155. எருமையின் சாதி இருபாற்குஉரியது இகல் மயிடம்
கருதிய காரசம் காரான் மை மேதி கவரி என்பர்
பொருளில் பகடும் கடாவும் அவற்றினில் போத்து மைமை
தெரியின் அவற்றின் மலட்டின் பெயர் எனச் செப்பினரே. (9)

### காட்டுஆ, ஆடு

156. அறிவில் கவையமும் ஆமாவும் காட்டினில்ஆ எனலாம்
மறி உதள் மேழகம் மோத்தை கிடாய் தகர் மை வருடை
கொறி துருவை செம்மறி பள்ளை வெள்ளை கொச்சை புருவை
செறிதரு மேடம் வற்காலியும் ஆடு எனச் செப்பினரே. (10)

### துருவாடு, வெள்ளாடு, துருவாட்டுஏறு

157. துள்ளு துருவை கொறி மை இவை துருவாடு அது என்பர்
வெள்ளை வற்காலி வெங் கொச்சை வெள்ளாடு மிகு தகரே
தெள்ளிய மேழகம் ஓங்கும் கிடாய் திண்ணகம் உடனே
எள்ளிய செய்ய துருவாட்டின் ஏறு என்று இசைத்தனரே. (11)

### வெள்ளாட்டுஏறு, ஆட்டுக்குட்டி, வரையாடு, கவரிமா

158. உதள் கொச்சை மோத்தை வெள்ளாட்டினில்ஏறு என்பர் ஓங்கு மணங்கு
எதிர் குட்டம் மென் பறழ் சேர் மறியே குட்டி ஏர் வருடை
மதுகைச் சரபம் வரையாடு எகினம் வளர் சவரம்
கதமுற்ற மானமிருகம் கவரிக்குக் கற்பித்ததே. (12)

### கழுதை, பன்றி

159. கத்தபம் வேசரி வாலேயம் கோகு கரம் கழுதை
அத்திரி என்ப கருமா இருளி அரும்கனலி
குத்திரம் சூகரம் கேழல் வராகம் குரோட்டம் பன்றி
மைத்திகழ் ஏனம் அரி கோலம் போத்திரி வல்லுழியே. (13)

### முட்பன்றி, மான், புல்வாய், கரடி

160. எழில்புனை சல்லியம் முள்ளார் மிருகம் எய்யே பன்றியாம்
உழை மறி நவ்வி அருணம் மான் அம் பிணை ஓங்கு இரலை
விழை கலை என்பர் இரலை புல்வாய் என்பர் வெல் உளியம்
கழிதரு பல்லம் கரடி எண்குஆம் என்பர் கற்றவரே. (14)

### நரி, ஓரி, பூனை, ஆண்பூனை

161. இகலன் நரி சம்புக் கோமாயு என்க இகலன் எனப்
பகர்வது ஓரி விலாளம் விடருகம் பாக்கன்
வெருகு அப் பவணம் திறல் பூசையும் பூனைஅதுஆம் கடுவன்
மிகைசெய் விராளம் வெருகு என ஆண் பெயர் மேவியதே. (15)

### கீரி, முயல், கத்தூரி, நாய்

162. கீரி நகுலம் சசம் முயல் நாவி கிளர் மறி கத்
தூரி மை மான்மதம் நானம் அறிவன் துருக்கம் என்பர்
மூரி எகினம் சுணகன் ஞமலி முடுவல் சுவாக்
கூரிய நாய் சுணங்கன் ஞாளி சூரன் வெங் குத்திரனே. (16)

### பெண்நாய், குரங்கு

163. முடுவல் பெண்நாய் என்பர் கானவன் மற்கடம் மூரி அரி
கடுவன் வலிமுகம் சாகாமிருகம் கவி குரங்கு
திட கோகுலம் பவிலவங்கம்[பிலவங்கம்] வானரம் சீறும் மந்தி
உடலிய கோடரமே யூகம்ஆம் என்று உரைத்தனரே. (17)

### கருங்குரங்கு, பெண்குரங்கு, முசு, உடும்பு, கோம்பி

164. கானவல் யூகம் கருங்குரங்கு ஊகம் கருது மந்தி
யானது பெண்பெயர் ஓரி அக் கள்வன் அடந்த த[க]லை
தானும் முசு என்பர் கோதா முசலி தரும் உடும்பு
கூனும் எழில் தி[த]ண்டு உடன் காமரூபியும் கோம்பியதே. (18)

### மூஞ்சூறு, எலி, அணில், விலங்கினில்ஏற்றை

165. சுந்தரியே சுண்டன் மூஞ்சுறு சூரன் எனச் சொல்லுவர்
முந்து சிகரி கருப்பை இரும்பன் மொழியில்எலி
வந்த அணில் வெளில் போத்தே ஒருத்தல் வயக்களிறோடு
ஒந்திய உம்பல் விலங்கினில் ஏற்றைக்கு உரியனவே. (19)

### களிறு, ஒருத்தல், ஏறு

166 கரி கேழல் என்னில் களிறுஆம் கவரி கரடி பன்றி
மரை யானை மான் புலி புல்வாய் எருமை வரும் ஒருத்தல்
இருளார் கவரி மரை மான் எறுளி புல்வாய் எருமை
நிரையாரும் பெற்றம் சுறா இவை ஏறு என நேர்படுமே. (20)

### போத்து, பகடு, தகர்

167. பெற்றம் எருமை மரையே புல்வாய் புலி ஏற்றம்அரி
உற்ற பயத்தில் உறைவன போத்து என்பர் ஓங்குஎருமை
மற்று இபம் பெற்றம் பகடுஆம் சுறவு வயக்களிறு
தன்திறல் ஆளி துருவாட்டின் ஏற்றைத் தகர் என்பரே. (21)

### உம்பல், சேவல், கடுவன், விலங்கின் பெண்பெயர்

168. உழையே முசுக் கலை ஆட்டினில் ஏற்றே உலாவும் உம்பர்
எழிலார் மயூரமும் கோழியும் சேவல் இகல் குரங்கு
விழைவார் கடுவன் எனப்பெறும் பாட்டி மிகுபிணவும்
கொழுநாகு பெட்டை பிணை என்று பெண்பெயர் கூறினரே. (22)

### பெட்டை, பிணை, நாகு

169. ஒட்டகம் வாசி கழுதை மரை என ஓங்கியபேர்
பெட்டை புலி உழை புல்வாய் கவரி பிணை எனலாம்
வட்டிய பன்றி புல்வாய் நாய் பிணை என்பர் ஆ மரையும்
கிட்டிய ஆவும் எருமை நாகு எனும் கேண்மையதே. (23)

### நாகு, பாட்டி, மந்தி, பிணா, ஆண், பெண்

170. பசு எருமை மரை நாகு நாய் பன்றி பாட்டி கலி
முசுவே எனின் மந்தி ஒட்டகம் வாசி முழங்கு கரி
திசையார் கழுதை பிணா நரி பாட்டி எனத் திகழும்
இசைவான ஆண் பெண் அவைஅவையாக விளம்பினரே. (24)

### பிணவு, போதகம், பார்ப்பினம், குருளை, பறழ்

171. புனை பெண் பிணவு புலி அரிமாக் கரி போதகம் ஆம்
வனவெங் குருளை பறழே குழவி மறி கன்று பார்ப்பினம்
மேவு குட்டி விலங்கின் பறளை இகல் முயல் நாய்
பனியார் நரி புலி ஏனம் குருளை பறழ் என்பரே. (25)

### பிள்ளை, பிணை, மறி, ஊகம், குட்டி

172. பிள்ளை எனும் பெயர் நாய் அன்றி எய்தும் பிணை அழுங்கு
வள்ளிய ஆடு மறி என்பர் கோடுற வாழ்விலங்கு
முள்ளெயிர் உற்ற குரங்கு என்பர் ஊகம் முசு வெருகு
துள்ளுமணி பறழ் குட்டியின் பேர்பெறும் தோகையரே. (26)

### கன்று, குழவி, பார்ப்பு

173. வாசி கடமை மரை யானை ஒட்டகம் மான் கவரி
காசறு மோட்டு கழுதை கராம் கன்று கார்க் கடமை
ஓசை இபம் மரை மான் மேதி ஒட்டகமாம் குழவி
பேசிய பார்ப்புத் தவழ்சாதி எய்தப் பெறும் என்பரே. (27)

### குருளை, கன்று, விலங்கு, தொறு, வால்கீழ்இடம்

174. குருளை கன்று என்பர் உழையை முசுவைக் குருளை என்பர்
சுரிமுக நந்தினில் ஏறுடன் மாவும் சொலில் குருளை
மருவுறு மான்உடன் மாவும் விலங்கு என்பர் வல் காலியின்
நிரை தொறு என்பர் வெருகமும் வால்கீழ் நிலை இடமே. (28)

### விலங்கின்கூட்டம், வாலுறுப்பு, முதுகு

175. சாலவம் நீலம் கணம் பூகம் கூட்டம் தரு விருந்தம்
மேலவை என்னில் பிறற்பாற்கும் எய்தும் மென் தோகையுடன்
வாலதி கூலம் இலாங்குலமாம் என்பர் வாலுறுப்பே
சீலம் உடன் மஞ்சு நீள் முதுகு என்பர் தெரியிழையே. (29)

### யானைச்செவி, மதம், மதம்பாய்சுவடு, கால், விலாழி, வால்

176. கரிச்செவியாம் கன்னம் தாலம் மதம் கடம் தானம் கடாம்
மருக் கடம்பாயும் சுவடு ஆம் கரடம் காத்திரமே
வெருச்செயும் அங்கிதம் கால்ஆம் விலாழி வேட்கையுறு
தரத்தகு நீர் அதின் வால் தாலவட்டம் தகும் என்பரே. (30)

### விடை(காளை)முரிப்பு, கொம்பு, தோல்

177. விடைபயின் மூரி முரிப்பு இமில் என்பர் வெண் மருப்பும்
வடிவுறு கோடும் உலவையும் கொம்பு வடகம் பச்சை
உடலுக் கிருத்திமம் தொக்குச் சருமம் உரிவை அதள்
துடரும் புறணி துருத்தி துவக்கு இவை தோல் என்பரே. (31)

### ஊன், பெற்றத்தின்ஊன், இரத்தம்

178. தசை தடி தூவு புலாலே புறணி சடம் விடக்குப்
பிசிதம் வள்ளூரம் புலவே மெய் ஊன் என்ப பெற்றத்தின்ஊன்
தசையும் வள்ளூரம் பெருகு செந்நீர் இரத்தம் குருதி
கசிதரு சோரி உதிரம் நெய்த்தோர் செங்கறை என்பரே. (32)

### நிணம், மூடை, சூல், பாம்பின்படம்

179. இழுது விழுக்கு நிணமே நெய் ஆகும் என உரைப்பர்
புழு வேர் அழுகும் தசை பூழ்தியொடு ஊழ்த்தல் புலவு முடை
தொழில்புனை பீள் வெஞ் சினையே கரு இவை சூல் அது என்பர்
பழகிய பையும் பணமும் வெம் பாம்பின்படம் என்பரே. (33)

### அரவு(பாம்பு), பெரும்பாம்பு

180. அரவு புயங்கம் பணி மாசுணம் சற்பம் அங்கதமே
உரகம் வியாளம் மகி பாந்தள் நாகம் உரவு அரியே
கரளதரம் பன்னகம் தந்தசூகம் வெங் கட்செவியாம்
பரவிய மாசுணம் பாந்தள் எல்லாம் பெரும்பாம்பு என்பரே. (34)

### பாம்பின் படப்பொறி, கருடன், கழுகு

181. உரகன் படப்பொறி உத்தியும் துத்தியும் ஓங்கு உவணன்
கருடன் கலுழன் அரவுஆசனத்தன் ககபதி புள்
அரசன் திறல் வயிநதேயன் விநதாசுதன் ஆகும் என்ப
இரையும் கழுகு என்பதாம் உவணப்புள் எருவையுமே. (35)

### வன்சிறைப்புள், பருந்து, சாதகம், குயில்

182. மாறெதிர் சிம்புள் வாருண்டகம் உயர் வன்சிறைப்புள்
பாறு உடன் சேனமும் கங்கமும் ஆகும் பருந்து அகல் வான்
கூறுபுள் சாதகம் கூட்டிசைப் பிள்ளை குணம் குயில்கு
வேறுள கோகிலமே காளகண்டம் விதித்ததுவே. (36)

### செம்போத்து, கோழி, கூகை, மயில்

183. குக்கில் செம்போத்துச் சகோரமும்ஆம் குக்குடம் கொடுமை
மிக்க பதாயுதம் வாரணம் கோழி விறல் குடிஞை
மைக்கட் குரால் உடன் கோட்டானும் கூகை மயூரம் மஞ்ஞை
தொக்க சிகண்டி சிகாவலம் கேகயம் தோகையதே. (37)

### மயில், மயிற்பீலி, சிறகின் முதல் முள், காக்கை

184. சிகியே பிணிமுகமும் மயில்ஆம் தொங்கல் திண்கலபம்
இகல் பீலி கூழை இறகு என்று உறைப்பர் எழு முருந்து
தகுமே இறகின் முதன்முள் என்று ஓதும் தயங்குகொடி
ககமேவு காரி அல் வாயசம் காக்கை கரும்பிள்ளையே. (38)

### வலியான், கருங்குருவி, கிளி, கவுதாரி

185 வயவன் வயானன் வலியான் பெயர்பெறும் மா வலியன்
கயவாய் இரண்டும் கருங்குருவிப் பெயர் காமர் கிள்ளை
நயவன்னி தத்தை சுகம் கிளியாம் என்பர் நாடும் இகல்
சயம்மேவு பூழ் சிதல் தான் கவுதாரிக்குத் தக்கதுவே. (39)

### புறா, அன்றில், ஊர்க்குருவி, பகண்டை

186. கணம்பயில் மென்பறைப் பாராவதம் கபோதமும்
தூதுணும் புறவும் புறாஆகும் தரிஞ்சமும் சொல்லில் அன்றில்
குணங்கொள் சகடம் எனில் ஊர்க்குருவி குலப்பகண்டை
இணங்கும் இதலி குறும்பூழ் சிவல் என்று இயம்புவரே. (40)

### நாகணவாய், குறும்பூழ், மீனெறியும்சிறுபறவை, பறவைப்பொது, கொக்கு

187. பூவை மென் சாரிகை நாகணவாய் குறும்பூழ் உரைக்கில்
சேவலங் காடை சிரல் மீனெறியும் சிறுபறவை
போவிச் சகுனம் போகிலே பிணிமுகம் புள் பறவைக்கு
ஆவும் பொதுப்பெயர் கொக்குக் குரண்டம் அடல் பகமே. (41)

### ககம்(பறவைப்பொது), அன்னம், அன்னத்திறகு, சகோரம்

188. ககமே விகங்கம் பதங்கமும் ஆகும் செங்கால் எகினம்
வகைமேவும் அன்னம் பிணிமுகம் ஓதிமம் அஞ்சம் மதி
நிகர் தூவி அன்னத்து இறகே சகோரம் நன் நேமிப்புள்ளுட்
புகழ்மேவு சக்கரவாகப்புள் என்னப் புகன்றனரே. (42)

### பெருங்குருகு, நாரை, குருகு, சம்பங்கோழி, நீர்க்காக்கை

189. பேர் ஆனைஉண்குருகு என்னில் பெருங்குருகு என்னப்பெறும்
போரார் பிதாவும் அப் போதாவும் நாரை புனை குருகு
சீரார் வண்டானம் திகழ் சம்பங்கோழி சிறந்த கம்புள்
காராரும் காரண்டம் நீர்க்காக்கையாம் என்பர் கற்றவரே. (43)

### வண்டு

190. அரி சஞ்சரீகம் ஞிமிறு மதுகம் அறுபதமாம்
வரி அளி தும்பி சுரும்பு கழுது மதுகரமே
பிரமரம் தேன் வண்டு சாரங்கம் கோரம் இசை பிரசம்
விரைமலர்த் தாழுய ஆற்பதம்ஆக விளம்பினரே. (44)

### ஆண்வண்டு, இந்திரகோபம், விட்டில், சிள்வீடு, நுளம்பு

191. தூய சுரும்பு அவற்றுஆணே மதுகரம் தும்பி என்பர்
ஈயல் இயங்கிய மூதாய் செங்கோபம் இகல் பதங்கம்
ஏய க[ச]லபம் எனில் விட்டில் சில்லி விறல் சிகடி
ஆய சிள்வீடு நுளம்பு ஆகும் நுள்ளல் நுளுவலுமே. (45)

### கொசு, சேவல், போத்து, பறவைப்பெண், அளகு

192. கொசுகே மசகம் கோமயில் அன்றில் குலப்பறவைக்கு
இசைவாகும் சேவல் இகல் போத்து மஞ்ஞை எழால் என்னலாம்
திசைமேவு பேடையும் பெட்டையும் புள்ளில் திகழ் பெண் என்பர்
அசை கோழி கூகை பெண் பேராம் அவற்றை அளகு என்பரே. (46)

### பறவையின் இளமை, முட்டை, வாயலகு, இறகு

193. பறவை அவற்றின் இளமையும் பிள்ளையும் பார்ப்பும் என்பர்
முறை சினை அண்டம் குடம்பையும் முட்டை மெய் மூக்கு துண்டம்
அறைகுவர் வாயலகுஆகப் பறையோடு அரந்த பிச்சம்
சிறு தூவி கூழை சிறை இறகு என்னவும் செப்பினரே. (47)

### தொழுதி, முதலை, ஆண்முதலை, சுறவு(சுறாமீன்), இறால், கெளிறு

194. துடர்ந்தெழு புள்ளொலிக் கூட்டம் தொழுதி துயர் வெங் கரா
இடங்கர் கிஞ்சும்மாரம் வன்மீன் முதலை இகலும் கராம்
அடங்கு அவற்று ஆண் என்பர் ஆடல் மகரம் அடல் சுறவுஆம்
கிடங்கின் இலா[றா]ல் இறலா[வா]கும் கெளிறு கெடிற்று என்பரே. (48)

### மீன், திமிங்கிலம், திமிங்கிலகீலம், மலங்கு

195 மச்சம் சலசரம் மீன் அதை நுங்கிய மச்சம் எனின்
மெச்சும் திமிங்கிலமாம் அந்த மீனை விழுங்கிய மீன்
நிச்சிய மான திமிங்கிலகீலம் நெடுமலங்கு
நச்சிய நுறை எனவே உரைக்கும் இந் நானிலமே. (49)

### சங்கம்(சங்கு), வலம்புரி, சலஞ்சலம், வாரணம்

196. நந்து பணிலம் சுரிமுகம் கோடே நாகு நத்து
வந்தெழு கம்பு வளை சங்கம் ஆகும் வலம்புரியின்
சந்தம் உரைத்திடின் மிக்க க[த]திலும் சலஞ்சலமே
சுந்தரம் மிக்கது அச் சங்குக்கு வாரணம் சொல்லுவரே. (50)

### நத்தை, ஏரல், தவளை, ஆமை

197. நாகு சுரிமுகமே கருநந்து எனின் நத்தை இறவு
ஆகும் இறால் அது எருந்து ஏரல் தேரை அரி மரையே
நீகம் மண்டூகம் தவளை கமடம் நன்னீர்க் கச்சபம்
மோகர கூருமம் ஆமையின் நாமம் மொழிகுவரே. (51)

### நண்டு, நண்டின்ஆண், தேள், சிலம்பி, எறும்பு

198. அளைபயில் நள்ளி குளிர் கற்கடகம் அலவன் நண்டு
களவன் அவற்றினில் ஆண் என ஓதும் கருந்தெறுக்கால்
தெளியில் விருச்சிகம் தேள்ஆம் உலூதை சிலம்பி என்பர்
உளு உசு ஆகும் உறவியும் தான் என்பர் ஊர் எறும்பே (52)

### நாகரவண்டு, சிதலை, புழு, தேன்கூடு, கோற்புழு

199. சிறு நாகரவண்டு நொள்ளை செல் ஆழல் சிதலை என்ப
கறையான் கிருமி வெங் கீடம் புழு என்ப கற்பிரசம்
குறையாதது என்றும் தேன்கூடு இறால் என்பர் கோற்புழுவும்
உறையான கீடம் உடனே உலண்டு என ஓதுவரே (53)

### பாரதிதீப வரலாறு

200. மீன்தாவு வாவிக் கடம்பையில் வாழ் திருவேங்கடவன்
ஏன்றுஆசு கூறும் கவிவேந்தன் பாரதி ஏற்ற மலர்த்
தேன்தாழ் தொடைப்புயன் செப்பிய பாரதிதீபம் தன்னில்
மூன்றாவது விலங்கின் பேர்த் தொகுதி முடிந்ததுவே. (54)

## 4. மரப்பெயர் தொகுதி

### தருவின் வகை, சந்தனம், அகில்

201. சந்தானம் தேவதருப் பாரிசாதம் தடக் கற்பகம்
மந்தாரம் என்பர் சந்திரதிலகம் மலையசமே
கொந்துஆரம் சந்து இவை சந்தனம்ஆம் என்பர் கூர் அகரு
நந்தாத காகதுண்டம் பூழிலே அகில் நாமங்களே (1)

### ஆச்சா, மராமரம், இத்தி, மகிழ்மரம், தேக்கு, சண்பகம், அசோகு

202. ஆஎன ஓதுவர் ஆச்சா மராமரம் ஆனமரம்
மேவிய சாலம் இறலி இத்தி என்பர் மெய் வகுளம்
தாவி இலஞ்சி மகிழ் சாதி தேக்கு என்பர் சண்பகமே
தூவலர்ச் செண்பகம் பிண்டி செயலை அசோகு என்பரே. (2)

### தொன்மரம்(ஆல்), அரசு, மருதம், கொன்றை

203. குலவு வடம் தொன்மரம்ஆம் பழுமரம் கோழியும்ஆம்
இலையில் கணவம் பணையே மராமரம் அச்சுவத்தம்
மலிதரு போதி அரசுஆம் அருச்சுனமாம் மருதம்
இலகும் இதழி கடுக்கை மதலை எனும் கொன்றையே. (3)

### குடவு, நாவல், வேம்பு, காஞ்சிரை, அத்தி, கோங்கு

204. கொட்டம் குடிலம் குடவு என்று உரைப்பர் குலவு சம்பு
மட்டவிழ் நாவல் மலி நிம்பம் வேம்பு வன் காஞ்சிரையாம்
எட்டி அதவும் உதும்பரமும் அத்தி என்பர் க[கு]யா
கட்டவிழ் சூட்டிணர் மென் கோங்கு அதுஆம் கன்னிகாரமுமே. (4)

### புளிமா, மாமரம், செருந்தி, புன்னாகம், மஞ்சாடி

205. போதவிழ் ஆம்பிரமே சூதம் மாழை புகழ் புளிமாச்
சூதம் என் சேகரம் மாமரம் கொக்குத் தூயநன்மாச்
சீதள பஞ்சரம் செங்கோடு உரைக்கில் செருந்தி புன்னை
ஓது புன்னாகம் திலகம் மஞ்சாடி என்று ஓதுவரே. (5)

### வன்னி, கடுக்காய், பச்சிலைமரம், கருங்காலி, ஆத்தி, குருந்தம், நெல்லி

206. சமியே கலீகமும் வன்னி அரிதகி தான் கடுக்காய்
கமழும் தமாலம் பசும்பிடி பச்சிலை காற கத்திரம்
அமர் கருங்காலி ஆர் தாதகி ஆரமும் ஆத்தி குந்தம்
நிமிர் குருந்து என்பர் நிரை ஆமலகமும் நெல்லியுமே. (6)

### செங்கருங்காலி, புளி, இல்லம், வெட்பாலை, விளா

207 கந்தமிகும் சிறுமாரோட்டம் செங்கருங்காலி சிந்தம்
சிந்துரம் ஆம்பிலமே எகினம் திந்துருணி புளி
கொந்து இல்ல[லவ]ம் பொங்கலா[ரா]ம் வெட்பாலை (வற்சம்) குடசம் என்பர்
முந்திய வெள்ளில் விளா வில்வமாம் என்பர் மொழிகுழலே. (7)

### குமிழ், முருக்கு, குடைவேல், பாதிரி, சேமரம், ஈரப்பலா, வில்லுவம்

208. கடம்பல் மென் கூம்பல் குமிழ் கிஞ்சுகம் கவிரே முருக்குஆம்
உடை குடைவேல் என்பர் பாடலம் பாதிரி ஓங்கு அழிஞ்சில்
அடர்தரும் சேமரம் அங்கோலம் ஆசினி ஈரப்பலா
மிடைதரு கூவிளம் மாலூரம் கூவிளை வில்லுவமே. (8)

### கடம்பு, வேங்கை, வருக்கைப்பலா, தாதுமாதுளை, மாதுளை, எலுமிச்சை

209. கடம்பு விசாலம் உடன் நீபமே கதம்பம் திமிசு
படும் திமிலே கணி வேங்கை வருக்கைப்பலாப் பனசம்
மடங்கிய தாதிமமும் தாதுமாதளை மாதுளங்கம்
இடந்தெழு மாதுளை சம்பு முருக்கு எலுமிச்சமுமே. (9)

### குருக்கத்தி, நாரத்தம், அகத்தி, களா, காயா, இலந்தை, நறவம், ஞாழல்மரம்

210. குருகு குருக்கத்தி மாதவி ஆகும் குல நரந்தை
கருதிய நாரத்தம் அச்சம் அகத்தி களம் களாஆம்
இருள்காசை பூவை மென் காயா இரத்தி இலந்தை த[சு]ள்ளி
மருவு நறவம்அது நாகம் ஞாழல்மரம் என்பரே. (10)

### குங்குமம், உலவை, ஒடு, உன்னம், கமுகு, தணக்கு

211. மலி மாதவம் துருக்கம் குங்குமமாம் மரம் உழுஞ்சில்
உலவை ஒடுவை ஒடுப்பையோடு ஆண்மரம் உன்னம் என்பர்
கலிகெழு பூகமும் பூக்கமும் கந்தி கமுகு அது என்பர்
தலமிசை மேவும் நுணவை தணக்கு எனச் சாற்றுவரே. (11)

### பனை, இளம்பனை, வாழை, தெங்கு, கரும்பு

212. புனை தாலம் நீலம் பொரு பெண்ணை போந்தை புல் தாளி என்னில்
பனை ஆகும் போந்தை இளம்பனை வாழை பயில்அரம்பை
கனி நாளிகேரம் தாழையும் தெங்கு என்ப கன்னல் கழை
இன வேழம் இக்குக் கரும்பு என ஓதும் எழுபுவியே. (12)

### மூங்கில்

213. வரை வேழம் காம்பு திகிரி முந்தூழ் தட்டை வாங்கிய
பாதிரி கீசகம் வெதிரே பணை வேணுச் சிறந்த கழை
நிரை வேரல் விண்டு வேய் கண் பாண்டில் ஓங்கல் நெடுங் கிளையே
அரி மேவு தூம்புடன் சந்தி இவை மூங்கில் அமை என்பரே. (13)

### தாழை, பூவாது காய்க்கும்மரம், வண்டுணாமலர்மரம், மரப்பொது

214 கேதகை தாழை முடங்கல் மடி கைதை கேள் கண்டல்ஆம்
போது அணுகாத குணமரம் கோளி புனை செண்பகம்
தாதுஅவிழ் வேங்கை அளி பயிலாமரம் தாபரமே
பாதவம் தாருத் தரு மரப்பேர்பொதுப் பாசு என்பரே. (14)

### மரச்செறிவு, பொதும்பு, நந்தவனம்

215. கோல மரச்செறிவு ஆகும் பொதும்பரும் கோடரமும்
சாலும் பொதும்பு உத்தியானம் உய்யானம் மென் தண்டலையே
சோலை தண் காவல் பொழில் நந்தவனம் துடவை நறாக்
காலும் உபவனம் தோட்டம் இளமரக்கா என்பரே (15)

### இலையுதிர்காடு, கரிகாடு, காவற்காடு, தூறு, இண்டை, முள், முள்ளுடைமூலம்

216. இலையுதிர்காடு முதை சுரம் பொச்சை எனில் கரிக்காடு
அலகில் அரண் மிளை காவற்காடு என்பர் அரள் இறும்பு
கலிகெழு தூறு இண்டை ஈங்கை கடுக் கண்டகமும் முள்ளும்
மலிதரு முண்டகம் முள்ளுடைமூல வகை பெறுமே (16)

### காடு, பிரம்பு

217 அடவி முளரி வனம் கானம் ஆரணியம் களரி
கடறு குறும்பொறை காந்தாரம் கட்சி வெங் காண்டம்அத்தம்
படர் த[சு]ரம் சீரணி பொச்சை கவனம் பழுவம் தில்லம்
விடர் இவை காடு என்பர் வேத்திரம் சாதி விறல் பிரம்பே. (17)

### மரக்காழ், அகக்காழ், வெளிற்றுமரம், புறக்காழ்மரம்

218. அரி கலை ஆசினி சேகே வயிரம் அவை மரக்காழ்
உர வன்மாமரம் அகக்காழ் எலவே உயர் முருக்கு
மருவிய பால்மரம் எல்லாம் வெளிற்றுமரம் என்பர்
கருதிய நல் புறக்காழ் பனையே தெங்கு காழ்கமுகே. (18)

### சிறுதூறு, மருந்து, சல்லியகரணி

219. திரண்ட பதுக்கை அரில் சிறுதூறு செழும்புதலே
பொருந்திய வல்லி மரம் பூடு புல்லுப் புகழ்ந்து உரைக்கில்
மருந்து எனலாம் சத்திரமே உறாவகை மாற்றுவதே
இருந்திறல் சல்லியகரணியாக அறைந்தனரே. (19)

### சந்தானகரணி, சமனகரணி, உயிர்தரும்மருந்து

220. சிந்தும் உடல் துணிபு எல்லாம் ஒருவகை சேரும் வண்ணம்
சந்து செய்விப்பது சந்தானகரணி சார் தழும்பு
வந்த விரணமும் போக்கி விடும் சமனகரணி
உந்திய மா மிருதசஞ்சீவனியும் உயிர்தருமே. (20)

### மரத்தின்இளமை, இளமைப்பெயர் பெறாதவை, மரக்கொம்பு

221. குழவி கன்று பிள்ளை போத்து என் கிளவியும் கூறின் அம் மரத்து
எழில் இளமைப்பெயர் நெல்உடன் புல் எனில் எய்தலுறா
ஒழுகிய பொங்கர் சினை பணை சாய்கை உறுப்பு உலவை
கொழுவிய கோடரம் கோடு பிறக்கம் மென் கொம்பு என்பரே. (21)

### தழை, இளங்கொம்பு, இலை, தளிர்

222. தழை உலவை வளர் இளங்கொம்பு என்பர் தண்ணடையே
எழில் ஓலை பாசடை பத்திரம் சாய்கை இலகு பன்னம்
விழைவார் தமாலம் இலை வல்லரி முரி மென் கிளையே
குழை ஆர் கிசலையம் மஞ்சரி பல்லவம் கொய்தளிரே. (22)

### தளிர்த்தல், குருந்து, இணர், பழம், பரலின்உட்படுகுருத்து

223. குழைத்தல் இலிர்த்தல் தளிர்த்தல் முருந்து குருந்து எனலாம்
எழில் தகை மஞ்சரி கொத்துத் துணர் உடன் தொத்து இணர்ஆம்
பழப்பெயர் என்னில் பசுங் கனிஆம் பழம் பரலின்உட்பட்டு
ஒழுக்கிய மென் குருத்துப் பயின்ஆக உரைத்தனரே. (23)

### நந்தியாவத்தம், கஞ்சா, நொச்சி, கார்த்திகைநாள்மலர், காந்தள்

224. மல்லல் வலம்புரி தான் நந்தியாவத்தம் மன்னு கஞ்சம்
குல்லை கஞ்சா நொச்சியே சிந்துவாரம் மென் கோடல்உடன்
நல்ல செங்காந்தள் தோன்றியும் கார்த்திகை நாள் மலராம்
புல்லும் வெங் காந்தளும் கோடல் என்றே சொல்லும் பூதலமே. (24)

### ஊமத்தை, ஆமணக்கு, குறிஞ்சி, அலரி, வெட்சி

225. இலகிய பூமத்தகம் எனில் ஊமத்தை ஏரண்டமே
குலவிய ஆமணக்கு ஆகும் குறிஞ்சியும் கோரண்டமாம்
அலரி கணவரி மென் கரவீரம் அணுகும் செச்சை
உலைவில் செந்தூரம் அவை வெட்சியாக உரை செய்வரே. (25)

### சிறுமூலகம், பருத்தி, துழாய், மிளகு, கடுகு

226. திப்பிலி காமன் சிறுமூலகம் சிறுபூளை செப்பில்
ஒப்பில் உழிஞை வெங் காற்பாசம் பன்னல் ஒளிர் பருத்தி
அப்படர் குல்லை துளபம் துழாய் மரிசம் கறிஆய்
வைப்பர் மிளகு கடிப்பகை ஐயவி வண் கடுகே (26)

### மஞ்சள், கருணை, வாசப்பண்டம்

227 அரிசனம் பொன்மை அரித்திரம் மஞ்சள் என்று ஆகும் கந்தம்
கருணை தற்கோலம் இலவங்கமே நல் தகரம் கோட்டம்
மருவிய ஏலம் வளர் சாதிக்காய் உடன் மாஞ்சி மற்றும்
பரவு கை[க]ச்சோலம் இவை வாசம் மேவிய பண்டங்களே. (27)

### கொத்தமூரி, கழங்கு, கழல், கிலுகிலுப்பை, சேம்பு, சிறுகீரை, கற்றாழை

228. உலகினுள் அஞ்சிப் பெயர் கொத்தமூரிக்கு உரைப்பர் மண்மேல்
குலவிய மூழல் கழங்கோ கொடிக்கழல் கொய்பகன்றை
கிலுகிலுப்பை சகுடம் சேம்பு கேள் சிறுக்கீரை என்னில்
குலைபெறு சாகினி சில்லி குமரி கற்றாழை அதே (28)

### வழுதுணை, சாரல்விளையும்நெல், செந்நெல், குளநெல், தோரை, இறுங்கு

229. ஆரும் பிரகதிர் வங்கம் வழுதுணை ஐவனமே
சாரல்விளையும்நெல் சாலியும் செந்நெல் தயங்கிய நீர்
வாரம் குளநெல் இயவையும் தோரை மலி உணவாம்
ஏருறு சொன்னலும் சோளமும் கூறில் இறுங்கு என்பரே. (29)

### கருந்தினை, செந்தினை, முதிரை, எள், எள்ளிளங்காய், கதிர், தினைத்தாள்

230. இறடி கருந்தினை செந்தினை ஏனல் எழு முதிரை
செறியும் அவரை துவரைகள் என்னு[ண்ணு]ம் திலமும் எள்ளுக்
கறைபயில் எள்ளிளங்காய் என்பர் கௌவை கதிர் குரலாம்
திறியும் அருவி இருவி எல்லாம் தினைத்தாள் என்பரே (30)

### பதர், வைக்கோல், போற்றாப்பொலி, பயிர், புல்பிறப்பு

231. பதடி எனில் பதர் ஆகும் வைக்கோல் வை பலாலம் என்பர்
அதுவும் உரைக்கில் அழி என்னலாம் பொங்கழி உரைக்கில்
புதிய களம்தனில் போற்றாப் பொலி பயிர் போற்று பைங்கூழ்
உதவி பசும்புல்கும்ஆம் புதல் புல் என்று ஒருபிறப்பே. (31)

### கோற்கொடி, கற்பகம்சேர்கொடி, கொடி, மென்கொடி, நாரரி

232. இலதை எனும் பெயர் கோற்கொடி கற்பகம் எய்து கொடிக்
குலம் அது உரைத்திடில் மென் காமர்வல்லி வெங் கோற்கொடியாம்
நலமிகு மென்கொடிச் சாதிப் பிறப்புக்கள் நாரரியே
நிலைபெறு நெய்யரி தெங்குநார்ப் பாளைக்கு நேர்ந்ததுவே. (32)

### வன்கொடி, கிழங்கு, இருவாச்சி, மல்லிகை, முல்லை

233. வந்தெழு வல்லியும் வள்ளியும் நூழிலும் வன்கொடியாம்
கந்தமும் மூலமும் ஆகும் கிழங்கு கமழ் மயிலை
முந்து இருவாச்சி முழு மௌவல் மல்லிகை மொய்த் தளவு
கொந்தணி மௌவலும் முல்லையின் பேர்என்று கூறுவரே. (33)

### சிறுசண்பகம், பிச்சி, கொவ்வை, அடம்பு, சிறுதூறு, பீர்க்கு

234. கருமுகை பித்தி சிறுசெண்பகம் கமழ் சாதி என்பர்
விரை மௌவல் மாலதியே பிச்சி தொண்டையும் விம்பமுமே
அருகடர் கொவ்வை அடம்பு சோபாலிகைஆம் அதிரல்
பிதிர் சிறுதூறு என்பர் பீரமும் பீர்க்கு என்று பேசினரே. (34)

### கூதாளி, சிவதை, சீந்தில், காஞ்சொறி, ஏதாளி, தருப்பை

235. கூதாளமே துடி கூதாளி யென்பர் கொடிச் சிவதை
தீதார் பகன்றை அமுதவல்லிப் பெயர் சீந்தில் என்பர்
மீதாரம் கண்டூரம் காஞ்சொறி பஞ்சிகமே உரைக்கில்
ஏதாளி ஆகும் குசையே தருப்பை இசைவுறுமே. (35)

### நாணல், பஞ்சாய்க்கோரை, வாட்கோரை, முள்ளி, பாசி, குளிரி

236. காசையும் நாணல் எருவை பஞ்சாய் கழிக்கோரை அகம்
வீசு செருந்தியும் வாட்கோரை முண்டகம் மேவு முள்ளி
மூசிய சைவலம் சேயீரம் நாரம் முழுப் பதியம்
பாசி குளிரி எனில் கல்லகாரம் பயின்றிடுமே. (36)

### தாமரை

237. வாரிசம் பங்கயம் முண்டகம் கோகனகம் வனசம்
வேரிய கஞ்சம் முளரி சரோருகம் மென்மலர்
அம்போருகம் பற்பம் அரவிந்தம் புண்டரிகம் கதிரோன்
தாரகம் போது அம்புயம் சதபத்திரம் தாமரையே. (37)

### தாமரை, கருங்குவளை, செங்குவளை

238. சலசம் பதுமம் குசேசயம் என்பர் தண் காவி தடம்
குலவு இந்தீவரம் நீலோற்பலம் மென் குவலையமே
அலர்தரு பானல் கருங்குவளைப் பெயராம் அரத்தம்
பல செங்குவளை கழுநீர் பன்னு உற்பலம் என்பரே. (38)

### நெய்தல், செவ்வாம்பல், வெள்ளாம்பல், அகஇதழ், புறஇதழ், பூவினுள்கொட்டை

239. கருகிய நெய்தல் குவலையம் ஆகும் கயிரவமே
அரி பயில் அல்லி குமுதம் வெள்ளாம்பல் அகஇதழ்
பொருவரும் அல்லி புறஇதழ் புல்லிதழ்ஆம் பொகுட்டுக்
குருகெழு பூவினுள்கொட்டையின் பேர்என்று கூறினரே. (39)

### நால்வகைப் பூ, மொட்டு, மலர்

240. நீர் கொடி கோடு நிலம் எனும் நால்வகை நீடிய பூச்
சேர் கலிகை முகிழே நனை கோரகம் செவ் அரும்பு
வார் கணிகை நகையே முகிழம் சினை மாமலர் மொட்டு
ஏர் கமழ் போது துணர் வீ அலரி இணர் மலரே (40)

### வாகை, பழம்பூ, பூந்தாது, இதழ், மாலை

241 வென்று புனைதரு பூ வாகை செம்மல் மிகு பழம்பூ
மன்றலம் தாது என்னில் கேசரம் கொங்கு மகரந்தம்ஆம்
ஒன்றிய ஏடு உடன் தோடு மலர்இதழ் தொங்கல் கண்ணி
ஒன்றிய கோதை தெரியல் அலங்கல் ஒலியலுமே. (41)

### மாலை, பிணையல், நுதல்மேல்அணி, வாசிகை

242. தொடலை இலம்பகம் தார் மாலை தாமம் செஞ்சூட்டு அணியல்
படலை சிகழிகை வாசிகை கத்திகை பைம் பிணையல்
மிடல்தரும் சூட்டும் இலம்பகமும் நுதல்மேல்அணியாம்
அடர்முடி வாசச் சிகழிகை வாசிகையாம் என்பரே. (42)

### பாரதிதீப வரலாறு

243. விழிஅருள் பூண்ட நவதாரணை முகில் வேங்கடவன்
வழியினுள் வாழ் திருவேங்கடபாரதி வண்டமிழின்
செழுமையது ஆகும் இலக்கிய பாரதிதீபம் தன்னின்
மொழி ஒரு நான்கில் மரப்பேர்த் தொகுதி முடிந்ததுவே (43)

## 5. இடப்பெயர்த் தொகுதி

### துறக்கம்

244. வானகம் நாகம் பவனம் உயர்நிலை மா சுவர்க்கம்
தான் அமராபதி உம்பர்இடம் ஐந்தருஉலகம்
மேனிலை பொன்னுலகம் விண்ணுலகம் விசும்பிடமே
கோனகர் இந்திரபதியே துறக்ஞகம் குலவியதே. (1)

### விஞ்சையர் சேர்விடம், வடக்கு, தெற்கு, மேற்கு, கிழக்கு

245. தீதுஅகல் சேணியும் சேடியும் விஞ்சையர் சேர்விடமாம்
மாதுறு போக நிலம் அதுவாகும் வடக்கு உத்தரம்
கோதறு தென்திசை தெக்கணம் பச்சிமமே குடக்குப்
போதுறு மேக்குக் கிழக்குக் குணதிசை பூருவமே. (2)

### தேவகுருவம், உத்தரகுருவம், திக்கு

246. தாதுறு தேவகுருவம் உடன் உத்தரகுருவம்
மீதுஅது வெள்ளிமலை பொன்மலைப் புறம் மேல் அரிதம்
மாதிரம் காட்டைக் ககுபம் மிசை புலம் வம்பல் திசை
தீதுஅகல் ஆசைஉடன் கோ எனல் இவை திக்கு என்பரே. (3)

### பூமி

247. அசலை அளக்கர் தரையே குவலையம் அம் புவனம்
வசுமதி தாத்திரி சாந்தை விபுலை வசுந்தரை கூத்து
இசைபயில் பூதலம் வேலாவலையம் செகம் பொறை மண்
இசைதரு பூமி மகிதலம் மேதினி என்பர்களே. (4)

248 தாரணி காசினி தாலம் தரணி தலம் புடவி
பாரகம் நேமி தராதலம் ஞாலம் படி அவனி
பேர் உலகம் புவி பூதலம் வையம் பிருதுவி பூ
வாரி நிலம் பொழிலே கோ அகலிடம் மண்டிலமே. (5)

### நரகம்

249. இருநிலம் பாவம் விளைநிலம் அள்ளல் இருஞ்சிறையே
துரகதி கொல்கதி பாதகம் கும்பி சுடர் எரியே
அருவினை சூழ் மடல் பாதாளம் பாதலத்(துடன்) அளறு
நிரையம் நிகோதம் நரகம் என்றே சொல்லு நீணிலமே. (6)

## உலகின் பொதுபெயர், நாடு

250. நாக தலம் உடன் நாடும் பவனம் நல் நாடு பொழில்
போக புடவி நிலமே உலகின் பொதுப்பெயரே
ஆகிய பைதிரம் மண்டிலம் பாண்டில் அகலுள் கண்டம்
மோகமென் தண்ணடை தெய்வ நல்நாடு என்று உறைசெய்வரே. (7)

## மலை

251. வரை குன்று நாகம் திகிரி அடுக்கல் மலை பொச்சை பூ
தரம் விண்டு சாரல் கல் வெற்புப் பிறங்கல் சயிலம் நகம்
கிரி தண் சிலம்பு குறும்பொறை வேதண்டம் கேள் பெருஞ்
சிகரி வெஞ் சிலை பறம்பு ஓங்கல் பொருப்பகம் கல்லகமே. (8)

## மலை, மேருமலை, பொதியமலை

252. இரவி குவடு நவிரம் பருப்பதமே இறும்பு
அத்திரி அசலம் குத்திரம் கோடு பொற்றை சிலோச்சயமே
தர மாதிரம் என்பர் பொன்மலை மேருத் தயங்கு வட
வரையாகும் என்பர் பொதியல் தென்குன்றம் மலையம் அதே. (9)

## குன்று, மலையுச்சி, மலைப்பக்கம்

253. குவடு பிறங்கல் பதலை குறும்பொறை குன்று இறும்பு
நவிலுவர் பொற்றை கொடுமுடி கோடு நலக் குவடு
தவ சிகரம் கிரி மேல் உச்சி வாரம் தடம் சாரல் கான்
கவர் கடம் என்னில் மலைப்பக்கமாகக் கருதுவரே (10)

## பாறை, துறுகல், மலைமுழை, பிலம், திரல், மலைப்பிளப்பு, கல்திரல், கற்புழை, சிறுதிட்டை

254 புலமிகு பாறை அறையே துறுகல் பொறை முடுக்கர்
மலைமுழை கந்தரம்ஆம் பிலம் கீழறை மன் திரல் உலம்
மலையின் பிளப்பே விடர் ஆகும் உயர் கல்திரள்
சிலை கற்புழையும் கரணம் பதுக்கை சிறுதிட்டையே. (11)

## விடர், திட்டை, உயர்நிலம், பரலடுத்துயர்நிலம், பாதலம்

255. விடரும் கமரும் அவிப்பும் விடர் என்பர்கள் மேடு திட்டை
திடவ சுவல் வன்பால் கங்கர் குவால் குப்பை சேர்ந்த குவை
உடன்உரை செய்யில் உயர்நிலம்ஆம் பரல்உற்றுஉயர்ந்த
படர் நிலம்ஆகும் முரம்பே அரம் பிலம் பாதலமே. (12)

## கடல்

256. பரவை அளக்கர் மகராலையம் அத்தி பௌவம் முந்நீர்
நரலை சமுத்திரம் வேலாவலையம் நதிபதியே
திரை இறவாலையம் கார்கோள் சவர் உப்புச் சிந்து அலை
உவரி கூலராசி கடல் வேலை ஆர்கலி வாருதியே. (13)

## கடல், கடல்திரை

257. மா வாரி வீரை உததி சலதி மகோததி
பாராவாரம் நேமி பெருநீர் புணரி மை அம்பரமே
பூவாடை சாகரம் சக்கரம் ஆழி புணரியுடன்
ஓவாத ஓதம் கடல்திரையாக உரைசெய்வரே. (14)

## நீர்த்திரை, கடற்கரை, நீர்க்கரை

258. தரங்கம் கல்லோலம் விசிகரமே அறல் தத்தும் மலை
விரிந்த நல் நீர்த்திரையாம் என்பர் பாரம் அல் வேலையுடன்
அருங் கரை கோடு அணை கூலம் அம் தீரம் அடர் வரை பார்
பொருந்திய வாசப் புனலின் கரைக்குப் பொதுப்பெயரே. (15)

### செய்கரை, மலைச்சாரல் வரும் ஆறு, முல்லைநிலக் கான்யாறு, ஆறு

259 செங்குலை சேதுக் குரம்பு இவை செய்கரை தெள்அருவி
அங்கிரிச் சாரல் வரும்ஆறு உயவை அருங் கலுழி
தங்கிய முல்லைநிலக் கான்யாறு உந்தி தன் குடினை
பொங்கிய சிந்து நதி ஆறு எனவும் புகன்றனரே. (16)

### கழிமுகம், உப்பளம், காவிரி, பொருனை, ஆன்பொருனை

260\. புகல் புகார் ஓடை அதோமுகம் என்னில் பொருந்து கழி
முகம் அதுவாகும் முகம் காயல்ஆம் கழி மொய் உப்பளம்
தகுகானல் காவிரி பொன்னி பொருனை அம் தண்பொருந்தம்
மகவானி ஆனி இவை ஆன்பொருனைக்கு அடைத்ததுவே. (17)

### வாவி

261\. அலந்தை கிடங்கு சுனை ஓடை கோட்டகம் ஆவி மடு
இலஞ்சி படுக் கயம் கேணி உவளகம் ஏரி பொய்கை
சலந்தரம் பட்டம் குளமே தடாகம் தடம் வலையம்
மலங்கல் குட்டம் குண்டமே வாவி சூழி அகண்டனையே. (18)

### ஆற்றிடைக்குறை, கிணறு, ஊறல், நீர்க்குமிழி, ஆழம்

262\. அறியில் இலங்கை துருத்தி அரங்கம்அவ் ஆற்றிடையில்
குறை கிணறுஆம் என்பர் கூவல் அசும்பு உடன் கூபம் இவை
உறவியும் ஊறல் குமிழியும் புற்புதம் ஓங்கு பௌவம்
நிறை நுரை ஆழம் அழுந்தயம் குண்டு நெடுங் கயமே. (19)

### நிறைபுனல், சேறு

263\. வாரி நிறையும் புனலே பிராறு வழாறும் என்பர்
நீர்உறு பள்ளம் வெங் காலாழம் தொள்ளி நிலை அளக்கர்
காரகற் பூமி[ழி] குழை சேதகம் பங்கம்ஆன தொய்யல்
சீரில் செறும்புஉடன் செய்யல் என்று ஓதுவர் சேற்றினையே. (20)

### பொல்லாநிலம், வெள்ளைமணல், மணற்குன்று, கருமணல், நுண்மணல், புழுதி

264\. சாலும் அசுத்தம் பொல்லாத்தலமே அங்கணம் சகதி
வாலுகம் வெள்ளைமணலே புளினம் மணற்குன்று என்பர்
மேல்அறல் ஆகும் கருமணல் நுண்மணல் மேவியதாம்
பால்அயர் பூழி புழுதி பொடிக்குப் பகர்ந்ததுவே. (21)

### குறிஞ்சி, நெய்தல், முல்லை, பாலை, மருதம்

265\. குல மலைச்சார்பிடம் ஆகும் குறிஞ்சி மகோததிசூழ்
நிலம் எனில் நெய்தல் வனம்சார் நிலம் முல்லை நீரின்றியே
உலர்நிலம் பாலை பணையே கழனி உயர் பழனம்
மலிதரு பானல் வயல்சூழ் நிலமும் மருதம்அதே (22)

### முல்லை, குறிஞ்சி, வன்பால், மென்பால், சமப்பால், கருநிலம்

266 பேராப் புறவம் பணை முல்லை ஆகும் பெயர் குறிஞ்சி
பாராரும் பாலை குறிஞ்சி வன்பாலை பகுத்த மென்பாலை
நீரார் மருதம் சமபடர் முல்லையும் நெய்தல் வனம்
காரார் மலைப் புனல் தன்னில் மிகும் சொல் கருநிலமே. (23)

### ஊர்

267\. சிறுகுடி பாக்கம் பதி நகரே நொச்சி சேரி புரம்
குறிபயில் பாடி அகலுள் குறும்பு குறிச்சி முட்டம்
இறை அகரம் பட்டினம் பாழி பூக்கம் இருக்கை குப்பம்
உறையுள் அம் கோசரமே பூண்டி வேலி தொல் ஊர் என்பரே. (24)

### குறிஞ்சிநிலத்துஊர், முல்லைநிலத்துஊர், நெய்தல்நிலத்துஊர், பாலைநிலத்துஊர், மருதநிலத்துஊர்

268. குறிஞ்சி நிலத்த சீறூர் குறிச்சி குலவு முல்லை
செறிந்தது பாடியும் பட்டினம் நெய்தலைச் சேர்ந்தது என்பர்
மறந்தரு பாலை குறும்பு முனையிடம் வாட்கை உடன்
உறைந்தது தண்ணடை ஆகும் மருதத்தில் ஊர்ப்பெயரே. (25)

### உழவர்பதி, நகரப்பதி, பகைநிலத்துஉறைபதி, சூழ்கழி

269 பூரியம் பூக்கம் குடிக்காடு உறையுள் புனை அருப்பம்
பார் உறை செய்(யினி)ல் உழ[வ]ர்பதி என்பர் பாடி பதி
சேரி புரம் நகரப்பதி பாசறை தெ(ம்)முனைசேர்
சூரிடம் தோணாமுகம் இருக்கை முன் சூழ்கழியே. (26)

### மலைஆறுசார்ந்தஊர், ஊர்சூழ்பதி, அரண்இருக்கை, புகார், கருவூர், மதுரை

270. கிரியாறு இரண்டும் அகலாத ஊர் எனில் கேடகமாம்
அருகு ஊர் உறைபதி கூறில் மடப்பம் அரண்இருக்கை
பொருகோடு எனில் குறும்புஆம் என்பர் காகந்தி போற்றும்புகார்
கருவூர்அணி வஞ்சி கூடல் மதுரைக்குக் கற்பித்ததே. (27)

### உறையூர், பாடி, தெரு, அங்காடி

271. பயில்தரு கோழி உறையூர் அச் சேரியும் பாடி என்பர்
நியமம் மன் ஆவணமே வீதி கோசு உடன் ஞெள்ளல் மறுகு
உயர் தெரு மார்க்கம் எனலாம் நியமம் ஒண் கூலம் உடன்
வியலுறும் ஆவணம் அங்காடியாக விளம்புவரே. (28)

### கோயில், மாதவர்வாழிடம்

272. குலவு சினகரம் சேதியம் தேவர்தம் கோயில் என்ப
நிலையம் நிகேதனம் மாதிரம் ஆலையம் நீடு பள்ளி
மலிதரு கோட்டம் குலமே உறையுள் வன் பாழி மன்னும்
நலமிகு மாதவர் வாழிடமாக நவிலுவரே. (29)

### இல், சிற்றில்

273. மாடம் வசதி பதி பாத்தில் சேர்வு வயின் உறையுள்
வீடு அகம் புக்கில் இடமே இடவகை மேவு நகர்
கூடு மனை பவனம் குலம் மாளிகை கூறில் இல்ஆம்
நீடிய சிற்றில் குரம்பையும் கூரையும் நேர்படுமே. (30)

### இறப்பு, முகடு, தாழ்வாரம், அடுக்களை, சாளரம்

274. மூரி இறை இறப்பு ஆகும் விடங்கம் முகடு என்ப தாழ்
வாரம் எனத்தகும் சோபானம் அட்டில் மடப்பளியும்
சாரும் அடுக்களை சாலேகம் சாலகம் சாளரமே
சீரிய நூழை தொல் வாதாயனம் எனச் செப்பினரே. (31)

### கல்லூரி, வேயுள், பீடம், சுவர்த்தலை, திண்ணை

275. மிகு கல்வியூரியும் கல்லூரி வேயுளும் வேய்தல் என்று ஆகும்
சொகுதகு பீடமும் பீடிகை ஆகும் சுவர்த்தலையும்
புகலுவர் வித்தகர் பித்திகையாகப் புனையும் தெற்றி
திகழ்தரு வேதிகை திட்டை மண்ணீடு என்பர் திண்ணையையே. (32)

### முற்றம், நிலாமுன்றில், சித்திரகூடம், மன்றம், கழகம்

276. நில முன்றில் அங்கணம் முற்றம் அரமியம் நீடு நிலாக்
குலா முன்றில்ஆம் தெற்றியம்பலம் சித்திரகூடம் என்பர்
மலியும் பொதுவில் பொது அம்பலம் இவை மன்றம்என்பர்
கலைதரு கல்வி பயில் களம்ஆகும் கழகமுமே. (33)

## கழகம், அரசர்கள் இருக்கை, அரங்கு

277. வல்லும் படையும் நல் சூது உடன் மாறு மகிழ்ந்த கல்வி
சொல்லும் களமும் கழகம் அரசர்கள் சூழ்ந்துஇருக்கை
புல்லும் பெயரினில் அத்தாணி ஆடிடம் போரிடமே
வெல்லும் வட்டாடிடமே அரங்காக விதித்தனரே. (34)

## ஒருசிறை, அணியவிடம், உறைவிடம், மக்கள் உறங்கிடம்

278. அறியில் ஒருசிறையே துச்சில் கொட்டில் அணியவிடம்
உறைவிடமே பிறப்பு ஆகரம் பாழி உறையுள் பள்ளி
செறி சயனம் கட்சி பாயல் அமளி மெய் சேர்விடமே
உறைவரு சட்டகம் சேக்கையும் மக்கள் உறங்கிடமே. (35)

## குதிரைப்பந்தி, யானைமேவுஇடம், யானைசெல்வழி, கூடு, வேள்விக்குண்டம்

279. செய மாவின் பந்தி பணை மந்திரம் தண்டம் சேவகமே
கயம் மேவுஇடம் கயம் செல்வழி தண்டம் கருதும் கட்சி
வியலார் குடம்பை வெம் பஞ்சரம் கூடு என்பர் வேள்விக்குண்டம்
உயர்வான தீத்தமும் வேதியுமாக உரை செய்வரே. (36)

## மட்கலம் வேமிடம், சுடுகாடு, தொழு

280. மருவிய மண்கலம் வேமிடம் சூளை மயானம் உடன்
கரி புறங்காடு சுடுநிலம் ஈமம் வெங் காளவனம்
பெரும் பிணக்காடு சுடுகாடு வெய்ய பிதிர்வனமாம்
நிரைதொழுத் தோழம் ஆன்வேலி தொறு ஆனிலை என்பரே (37)

## போர்க்களம்

281. செருநிலம் ஆகவபூமி அமர்க்களம் செம்புலமே
பொருளகளமே யுத்தபூமி சங்கிராமமண் போர்க்களமே
வெருவு பறந்தலை ஆயோதனதலம் வெங்களமே
பரிய பிணக்களம் வெஞ் சமதேசம் படுகளமே. (38)

## வழுக்குநிலம், மதில், சிறை

282. ஆரிடை தீய வருடம் அருப்பம் அவை வழுக்குப்
பார் இகல் இஞ்சி எயில் சுற்றுக் காவல் பயில் வரைப்புப்
பேர் அரண் காப்புப் புரிசை புகல் மதில் பேர் எனலாம்
சேரும் உவளகம் வன் சிறையாகவும் செப்பினரே. (39)

## மதில்சுற்று, மதில்உறுப்பு, அகழி

283. வாரி தகைப்புத் தொடை எனில் சுற்று மதில்உறுப்புச்
சேரும் விதப்புப் பதப்பாடு ஞாயில் திற எந்திரம்
போருறு நாஞ்சில் உடன் தோணி கோசம் பொருந்தும் என்பர்
ஆர் அகழ் கூறில் அகப்பாப் பவி[ரி]கம் அகல் கிடங்கே (40)

## வாய்தல், பெருவாயில், பெருவாயிலில் புகும் பூழை, வயல்

284. வரவியல் தோட்டி துவாரமும் வாரியும் வாய்தல் வண்
கோபுரம் அது சொல்லில் பெருவாயில் என்பர் புதவு உரைக்கில்
பெருகிய வாயிலில் போம் பெரும் பூழை பெரு விளையுள்
கருதிய செய்யும் வயல் விளையும் கழனியுமே (41)

## வயல், குறிஞ்சி சாரும்நிலம், பழங்கொல்லை, புதுக்கொல்லை, தினைப்புனம்

285. சேரும் வரவை தடி பாத்தியோடு செறி[று] குறிஞ்சி
சாரும் நிலம் கொல்லை தண் புனமாம் பழைதான கொல்லைப்
பேர் முதைப்புனமாம் புதுக்கொல்லையின் பேர் இதையாம்
காருறும் ஏனல் தினைப்புனமாகக் கருதுவரே. (42)

### தோட்டம், உழவு, உழவோர் வளைப்பு, முதுவரம்பு, வரம்பருகு, புற்று

286 துடவை படப்பை எனும் இவை தோட்டம் துடவை தொய்யல்
உடன் உழவின் பெயர் ஓதும் தொடுப்பு உழவோர் வளைப்பு
வடிவமில் மாசி முதுவரம்பு ஆகும் வரம்பருகுஆம்
அடர்தரு கங்கு வன்மீகமும் புற்று என்று அறைகுவரே. (43)

### வழி, அருநெறி, கவர்த்தநெறி, இழிவேற்ற வழி

287. நடவை செலவு சுரம் செப்பம் ஆரிடை நாடும் அத்தம்
தொடரும் ஒழுக்குச் சிறுபதமே இவை சூழ் வழியாம்
கடறு சுரம் அத்தம் தூம்பாம் அருநெறி கார்க் கவலை
படரும் கவர்த்த நெறி இழிவேற்ற படுகருமே. (44)

### புற்றம்பழஞ்சோறு, முதுநிலம், வழி

288 குளிர்தரு புற்றம்பழஞ்சோறு உரைக்கில் குரும்பி என்பர்
களரி கரம்பை பெரும்பாழ் முதுநிலம் கான் கடறு
வளர் நெறி ஆறு பதம் மார்க்கம் தாரி வழி வகுந்து
வளர்தரும் வட்டை பதவை இகவு சரி என்பரே. (45)

### இடம், பள்ளம்

289. புலம் களம் பாங்கர் வயின் வாய் வழி உழி போற்று திணை
நிலம் தலம் வைப்பு மருங்கு வளாகம் நிகிலம் பட்டி
இலங்கிய தானம்உடன் சூழல் பால் இடம் என்பர் பள்ளம்
உலர்ந்த கிழக்கு அவல் கீழே படுகர் உவளகமே. (46)

### பக்கம், நடு, மேல்

290. பக்கம் மருங்கு முன் பால் பாங்கரே புழை பாடு சிறை
மிக்க புடை இடம் ஞாங்கர் என்று ஓதுவர் மேவும் இடை
ஒக்கும் நனந்தலை மத்திமம் நாப்பண் உடன் ஒத்தல் நள்
மிக்க நடு உம்பர் மீமிசை தான் இவை மேல் என்பரே. (47)

### உயர்ச்சி, முன்னேவந்துறல், மேல்வந்துறல், முன்னர்

291. உந்தி நிவப்பு உவணம் துங்கம் ஓக்கம் உடன் வலனே
முந்திய மோடு இவை ஆக்கும் உயர்ச்சி மொழியின் முன்னே
வந்துறல் மேல் மருங்கர் ஞாங்கர் என்பர் மலி தலைத்தாள்
நந்து முதல் முன்னர்த் தானாகும் என்று நவிலுவரே (48)

### இம்பர், உம்பர், ஈண்டு, ஆண்டு, கூப்பிடுதூரம், கோழிப்பறவை, காதம்

292. இலகிய இம்பர் இவணே அவண் உம்பர் ஈண்டு இவ்விடம்
அலைவறும் அவ்விடமே எனில் ஆண்டு என்பரான எல்லை
குலவு குரோசமும் கூப்பிடும் கோழிப்பறவை என்னில்
கலி கிரவுஞ்சம் அக் காவதம் தான் என்பர் காதமுமே. (49)

### இடவகை, பாரதிதீப வரலாறு

293. பின் உழை கால் புறம் கீழ் மேல் கடை தலை பேணிய சார்
முன் இடம் தேவகை பால் வலமாம் இடம் முந்துதமிழ்ப்
பண்ணிய பாரதி பாரதிதீபம் பயில்தொகுதி
அன்ன இடப்பெயர் அஞ்சாவது முடிவானதுவே. (50)

## 6. பல்பொருட் பெயர்த் தொகுதி

### பொன்

294. கனகம் இரணியம் ஆடகம் மாழை கருந்தனம்
காஞ்சனம் நிதி பீதகம் சாமீகரம் பூரி சந்திரம்
தமனியம் வெறுக்கை நிதானம் புவம் சுவனம் தொடுக்கம்
புனை தனமே அரி சாம்புனதம் சொன்னம் பொன் என்பரே. (1)

### பொன், ஐந்துலோகம், உலோகப்பொது, நவமணி, கடவுள்மணி

295. இரணியம் ஈழம் பொருள் காணம் ஈகை ஏமம் இரும்பு ஓடு
உரைதரும் வெள்ளி பொன் ஈயம் செம்புஆம் ஐந்துலோகம் எல்லாம்
கருது பொன் என்பர் நவமணி மற்று அக் கடவுள்மணிக்கு
அருள் பெயரே தொல் நிதியே நிதானம் அணுகியதே. (2)

### மாணிக்கம், மணிப் பொதுப்பெயர், கனமணி, முத்து

296. மாமணியும் பற்மராகமும் மாணிக்கம்ஆம் மனவும்
தேமணி காசு மணிபேர்ப் பொதுப்பேர்ச் சிலாகை என்னும்
நாமம் அரதனம் ஆகும் கனமணி நல் தரளம்
கோமலி நித்திலம் முத்து ஆரமாகவும் கூறினரே. (3)

### பவளம், சங்கநிதி, பற்மநிதி, பண்டாரம், வெண்கலம்

297. துகிர் வித்துருமம் அரத்தம் துவர் பிரவாளம் துப்புத்
தருசொல் பவளம் சங்கின் வடிவாம் என்பர் சங்கநிதி
பகர் பற்மம் ஏய்தரும் பற்மநிதியும் பண்டாரம் என்பர்
மிகைவுற்ற கோசம் தண்டம் கஞ்சமாம் என்பர் வெண்கலமே. (4)

### வெள்ளி, செம்பு, பித்தளை, ஈயம், இரும்பு

298. இரசதம் தாரம் களதபுதம் வெள்ளி என்பர் சுற்பம்
பெருகிய சீருணம் தாம்பிரம் செம்பு என்பர் பித்தளையாய்
வரும் ஆரகூடம் மாயாபுரியும் மன சீருள் வங்கம்
கருதிய ஈயம் கருந்தாது அயம் என்பர் கார் இரும்பே (5)

### காந்தமணி, சந்திரன்ஒளியில் புனல்காலும்மணி, சூரியன்ஒளியில் கனல் காலும்மணி, படிகம்

299. இரும்பை வலிப்பது காந்தமணி இந்து இரேகை கண்டால்
தரும் புனல் கால்வது சந்திரகாந்தம் தரணியொளி
கருங் கனல் கால்வது சூரியகாந்தமணி பளிங்கு
திருந்து பருக்கை வெண்காழே படிகம் சிறந்ததுவே (6)

### சங்குமணி, பலகறை, பலபண்டம், அரும்பண்டம்

300. கண்ணிய சங்குமணி அக்கு வட்டி கவடி அலகு
எண்ணிய சோகி பலகறை வெள்வா[ர]கு எழில் வளமே
பண்ணியம் கூலம் உடன் பண்ணிகாரம் பலபண்டமாம்
நண்ணிய தாரம் அரும்பண்டம் என்று நவிலுவரே. (7)

### கருப்பூரம், கத்தூரி, மெய்ப்பூசு சாந்து, சாந்தின் பொதுப்பெயர்

301. மலி கருப்பூரம் பளிதம் கத்தூரியும் மான்மதமாம்
புலியொடு வட்டிகை காலேகம் பீதம் மெய்ப்பூசிய சாந்து
இலகிய பேர் தகரம் கலவைச்சேறு இனிய தளம்
புலர் விரை காலேகவண்ணம் அச் சாந்தின் பொதுப்பெயரே. (8)

### பூசுவன, செந்தாது, மயிர்ச்சாந்து, செறிகுழம்பு, அப்பல், பூசுதல்

302 குளிர் அங்கராகமும் பூசுவன குங்குமமும் செந்தாது
இளகும் தகரம் உடன் ஏலம் காசறையே மயிர்ச்சாந்து
அளவில் செறிகுழம்புஆம் செச்சை தேய்வை கொட்டல் அப்பல்ஆம்
புளகம் மிகுக்க வரித்தல் புலர்த்தல் மெய் பூசுதலே. (9)

### தொய்யில், திலகம், நுதல், எழுதுகுறி, அரத்தம், குங்கிலியம்

303. மானார் முலையில் தொழிலுற்று எழுதி வரித்தல் தொய்யில்
தானாம் திலகம் சுடிகை பொற் சுட்டி தயங்கு நுதல்
ஆனது எழுது குறிப் புண்டரம் துப்பு அரத்தமாகக்
கேல் நாடும் குங்குலுக், குற்குலுக் குங்கிலியம் என்பரே. (10)

## பெருங்காயம், சாதிலிங்கம், சாமரம், அச்சுதம்

304. இங்கு எனல்ஆகும் பெருங்காயமும் இங்குலிகம் உடன்
தங்கு சிந்தூரம் இவை சாதிலிங்கம் சவரி உடன்
துங்க வெண்சா(ய்)மரம் சாமரம் என்பர் துணர்க் கவரி
அங்க அரிசி அறுகை மெய் கூட்டியது அச்சுதமே. (11)

## அதிமதுரம், பிரப்பு, ஓமவிறகு, நெருப்புமலி விறகு

305. கூறும் அதிங்கம் மென் அட்டி மதுரமும் கொள்கலம் ஒன்று
ஏறிய பல்லுணவு எல்லாம் குறுணி கொண்டே அளந்து
வேறுறப் பாலிப்பது பிரப்பு ஓமவிறகு என்னலாம்
மாறு இல் சமிதை ஞெகிழி நெருப்பு மலிவிறகே. (12)

## கடைக்கொள்ளி, கரி, சாம்பல், சாந்து, புகை

306. எரி கடைக்கொள்ளி முளரி அலாதம் இராதம் என்பர்
கரி கந்துள் இருந்துஆம் என்பர் வெண்பலி சார் அடலை
சொரிகின்ற சாம்பல் சுதை களபம் சுடுசுண்ணமும் சாந்து
அரி புகை தூபம் உடன் தூமம்ஆம் என்று அறைகுவரே (13)

## நறைப்புகை, பொடி, இலவம்பஞ்சு

307. புதிய நறைப்புகை என்னில் குரூப்புகைப் பொற்பிதிரே
சிதர்ப் பராகம் ததர் சின்ன பின்னம் திகழ் துகள் நீறு
உதவிய சுண்ணம் உடன் தாதுப் பூதி ஒரு பொடியாம்
முதிர் இலவம்பஞ்சு பூளை என்றே சொல்லும் மூவுலகே. (14)

## பருத்தி, பஞ்சுநுனி, சோறு

308. பரி பன்னல் பஞ்சு காற்பாசம் பருத்தி துய் பஞ்சின் நுனி
நிமிரல் அன்னம் ஓதனம் போனகம் பொம்மல் மிசைப்புத் துப்பு
வரு கவளம் சொன்றி கூழ் மூரல் புன்கம் மடை மிதவை
சொரி உணவே பதம் பாளிதமே வல்சி சோறு என்பரே. (15)

## உண்டி, (உணவு) நுகருதல்

309. அயினி அசனம்அலை புழுக்கல் அடிசில் புகாப்
பயில்தரும் உண்டி மிசைதல் அயிறல் பரிகரித்தல்
மயமோடு அருந்தல் உணவு ஆர்தலே நுங்கல் மாந்தல் துய்த்தல்
இயல்போடு மேவல் பொசித்தல் நுகருதல்கு ஏற்றனவே. (16)

## அடிசில், புழுக்கல், தேவருணவு, பொரிங்குங்கறி, பிட்டு

310. அடுப அடிசில் புழுக்கல் புழுக்குவவாம் அமுதே
இடுபலியே சரு(வே) அவி தேவர் எழில் உணவாம்
உடல் உபதானம் அமைத்துப் பொரிக்குங்கறியும் கருனை
இடிதரு ஓதையும் ஆவியும் ஆகும் பிட்டு என்பதுவே (17)

## அடை, அப்பம், பிண்டி, புளிங்கறி, குழம்பு

311. அடை மோதகம் அயில் சஃகுல்லி பூரிகை ஆன கஞ்சம்
உடன் நொலையல் தோசை தான் அப்பம் ஆகும் ஒரு நுவணை
இடிஆகும் நுண் பிண்டி கூட்டு அமைத்தே இனிது ஏற்ற துவை
படுமே புளிங்கறி பாகே குழம்பு பயின்றதுவே. (18)

## கஞ்சி, தயிர், பால், நெய், மோர்

312. வடி கஞ்சி காடி மலிகாடி மேழை மருவு ததி
உடன் அளையே தயிர் கீரம் அமுதம் உதவு பயம்
தொடர்வுறு பால் இழுதே கிருது ஆச்சியம் துப்பு நெய்யாம்
முடை முசரே தக்கிரம் பிரை மச்சிகை மோர் என்பரே. (19)

## தேன், சர்க்கரை, கண்டுசர்க்கரை

313. குலவு பிரசம் மதுத் தேன் விசையம் குளம் கன்னலே
இலகிய பாகு உடன் கட்டி அக்காரம் இவை சர்க்கரை
தலமிகு கண்டம் உடன் பாளிதம் கண்டுசர்க்கரையே
நலம்மிகு புல்லகண்டம் அதில் பேதம் நணுகியதே. (20)

### கள், பருகுமவையின் பொதுப்பெயர்

314. சுரை நனை இக்கு நறவு வடி மட்டுத் தோப்பி தொண்டி
பிரசம் வழி மதுச் சாறே தணியல் பிழி படு தேன்
முருகு பைந் தேறல் உடன் பானம் சாதி மொழியில் கள்ளாம்
புரைதபு பானம் பருகுமவையின் பொதுப்பெயரே (21)

### கள்ளின்பேதம்

315. பாலி சுமாலி மதுகரம் சூழிகை பாடலியே
மாலி சுலோகி உடன் ஆம்பல் மாதுவமே மருட்டம்
சாலி விசுணி உணா முண்டகம் தமம் சக்கரமே
வேலி வெங் கஞ்சாவும் நள்ளி கள் பேத மிகுபெயரே. (22)

### அமுது, நஞ்சு, உண்பன, தின்பன, விலங்கின் உணவு

316. வாரி அமுதின் பெயர் மருந்து ஆகும் வளர் கரளம்
காரி கடு விடமே ஆலம் நீலம் வெங் காளம் நஞ்சுஆம்
சீருறு துற்றியும் உண்பன திற்றியும் தின்பனஆம்
கூர்இலை தின்னும் விலங்கின் உணவு குளகு என்பரே. (23)

### விலங்கு பறவை உணவு, ஒழிபொருள், உச்சிட்டம், பேய்த்தேர்

317. விலங்கு பறவை எனும் இரண்டிற்கும் மிகும் உணவை
இலங்கும் இரை உண்டியாம் என்பர் மிச்சிலும் எச்சிலுமே
துலங்கும் ஒழிபொருள் எச்சிலும் உச்சிட்டம் சொல்லுபவை
மலிந்த உகளம் வெண்டேர் கானல் பேய்த்தேர் மசரதமே. (24)

### உபகரணம், நிரை, அலகு

318. துப்பே சாதனம் துணைக்காரணத்தைத் தொடர்ந்து உரைக்கும்
ஒப்பில் உபகரணப் பெயராம் என்பர் ஒளி பந்தி
தப்பில் ஒழுங்கு நிரை மகிழின் பரல் தன்னுடனே
செப்பு மணி இவை எல்லாம் அலகு எனச் சேர்ந்ததுவே. (25)

### பாரதிதீப வரலாறு

319 சேறார்அகளப் புயன் செயங்கொண்டவன் சிந்தை அன்பு
மாறாது மாதவம் செய்து அருள் பாரதி வாதுகவிக்கு
ஏறானவன் சொன்ன பாரதிதீபத்தில் எண்ணுகின்ற
ஆறாவது பல்பொருட் பேர்த் தொகுதி முற்றானதுவே. (26)

## 7. செயற்கை வடிவப் பெயர்த் தொகுதி

### செயற்கையது, சூலப்படை

320. தோலினில் மண்ணில் எழுவகை லோகத்தில் தொல்மரத்தில்
நூலினில் செய்தல் செயற்கையதுஆம் கண்ணுதல் படைக்கு
மூலம் எனில் கழுமுள் முத்தலைக்கழு மூவிலைய
வேல் இவை சூலப்படை வடிவாக விளம்புவரே. (1)

### மழு, சக்கிரம், அரியின்வில், அரன்வில்

321. பரசு கணிச்சி நவியமும் மழுவாம் படை
திகிரி வளை எஃகம் சுதரிசனம் சக்கிரம் பருதி
தரு கதிர் நேமி அழல் ஆழியாம் என்பர் சாரங்க வில்
அரிதனதுஆகும் பினாக வில்லானது அரன்தனதே. (2)

### வில், வேல்

322. குனிதரு சாபம் சராசனம் கார்முகம் கோதண்டமே
தனுக் கொடுமரம் சாரங்கம் பினாகம் தவர் வில் என்பர்
நனிதரு குந்தம் உடம்பிடி எஃகமும் ஞாங்கர் அரண்
வினைதரு சத்தி விட்டேறுஓடு அயில் இவை வேல் என்பரே (3)

## அம்பு

323. வரி வாளி வண்டு பகழி பல்லம் புங்கம் வன்கணை கோல்
தெரி பாணம் மாற்கணம் தொடை விசிகம் சிலீமுகம் கோச்
சரம் ஆசுகம் பத்திரம் கொத்திரம் கங்கம் தாரை அம்போடு
அரி காண்டம் அத்திரம் மொட்டு தண்டமும் அம் புஎன்பரே. (4)

## கைவேல், வச்சிரப்படை, வாள்

324. மெச்சிய கப்பணம் தோமரம் கைவேல் விகற்பம் என்பர்
வச்சிரம் என்னில் குலிசம் அசனி வயிரப்படை
நச்சு கட்கம் வசி கண்டம் எந்திரம் நாந்தகம் (கைவ)ாள்
அச்சுறும் ஏதி கரவாளம் கோணம் அவை என்பரே. (5)

## ஈர்வாள், உடைவாள், கழுக்கடை, பிண்டிபாலம், கொடுவாள்

325. வரை வேதினம் கரபத்திரம் ஈர்தரு வாள் அது என்பர்
சுரிகை கழுமுள் உடைவாள் கழுக்கடையா(கச் சொல்லும்)
பரவிய பீலித்தண்டு எஃகம் எனில் பிண்டிபாலம் என்பர்
அரிதரு புள்ளம் குயம் கொடுவாள் என்று அறைகுவரே. (6)

## தண்டாயுதம், இரும்புலக்கை, உளிக்கருவி இலைமூக்கரிகத்தி, நாராசம், இருப்புமுள்

326. தடி தண்டாம் முசலம் இருப்புலக்கை அது என்பர்
விதியில் உளிக்கருவிப் போதரிவிக் கருவி என்பர்
முதுதழல் தண்ணம் குளிர் இலை மூக்கரி கத்தி என்பர்
எதிர்பொரு சலாகையும் நாராசம் தாறு என்று இருப்புமுள்ளே (7)

## ஆயுதப்பொது, ஆயுதக்கூர்மை, கவண்

327. படை ஏதி துப்புக் கழுமுள் கடுமுள் படைக்கலமே
அடர் சாதனம் பொது ஆயுதப் பேர் வள் அயில் இங்கிதம்
வடி வார் நுதி நுனை வையே பூ வசி வயிர் மழுவாம்
கடைசாமை கல்லெறியும் கவண் ஆகும் கவணையதே. (8)

## நுனை, படையுறை, அம்புபெய்கூடு, மெய்யுறை

328 தடநுதி நுங்கி நுனைக் கருவிப்புட்டில் அது ஆனது என்ப
படையுறை ஆவமும் தூணியும் அம்புபெய் பாத்திரமாம்
அடர் அரணம் கவசம் கண்டம் மெய்புகவாங்கருவி
தொடர்தரு பாலிகை மெய்யுறை ஆகவும் சொல்லுவரே. (9)

## தலைக்கீடு, பரிசை, பலகை, தோற்பலகை

329. கீசகம் சிக்கம் தலைக்கீடு சேடகம் கேடகம் தோல்
வீசுற்ற வீதிகைப் பட்டம் பரிசை மிகுபெயராம்
மாசுற்ற கட்டினம் தட்டு மாவட்ணம் பலகை
சோதித்த தோற்பலகைப் பெயர் தோற்பரம் தோல் என்பரே. (10)

## கைக்கட்டி, குதிரைக்கலணை, குதிரைவாய்ப்புகுகருவி, குசைக்கயிறு, குதிரைச்சம்மட்டி

330. அருள் கைப்படை உடன் கோதையும் கைக்கட்டி ஆகும் என்பர்
பருமம் படை பல்லணம் பண் கலணை பரி பகுவாய்க்
கருவியின் பேரும் கரிளே கலினம் வற்கம் குசையாம்
தரிவெறு மத்திகை கோல் எனில் சம்மட்டி தான் என்பரே. (11)

## யானைக் கழுத்திடு கயிறு, தளை, பற்றிரும்பு, பாடகம்

331. கலந்த புரோசை கவடும் கரிக் கழுத்தில் கயிறாம்
விலங்கு நிகளம் தொடர் தளை வல்லி மிகு பறளை
பலங்கொள் பறலிகை அள்ளு வலி எனில் பற்றிரும்பாம்
மலங்கிய பாதகடகமும் பாடகம்ஆம் என்பரே. (12)

### பதகிண்கிணி, அரக்குடைச்சிலம்பு, காலிலங்கு மணிவடம்

332. பதகிண்கிணி மணியாகும் பரிபுரம் நூபுரத்தோடு
உதவும் பரியகம் என்பர் இரதம் உடன் ஞெகிழி
அதுவும் அரக்குடைச் சூலச் சிலம்பணி ஆகும் அக்
காலிலகு மணிவடம் பாதசாலம் என்று இயம்புவரே. (13)

### காலணிவடம், மேகலை, அரைப்பட்டிகை, சதங்கை

333. விதமார் கொடையினில் வீரத்தில் வீக்கிய மெய்க் கழலே
அதுகால் மிசையில் அணிவடம் காஞ்சி கலாபம் மனா
வெதிர் மேகலை கலை(யென்னி)ல் அரைப்பட்டிகையின் பெயர்
பதமார் சதங்கையும் கிண்கிணியாகப் பகருவரே (14)

### பதக்கம், மாதர்முலையணிவடம், பூணின் புணர்வு

334. அருள் பதக்கம் கண்டிகை ஆரம் ஆரம் பதக்க(ம் அது ஆம்)
கருதும் அக் கோவையும் காசுடன் ஆரமும் கண்டிகையும்
மருவிய மாலையும் மானார் முலையின் மணிவடமாம்
பொருவில் கயிலும் கடையும் மெய்ப் பூணின் புணர்வு என்பரே. (15)

### தொங்கல், துடக்குவடிவு, தோளணி, கங்கணம், கைவளை

335. தொங்கல் நிதி வடகம் தூகம் மதிலிகைத் தூக்கம் துடக்கு
அங்கதம் தோளணி கேயூரம் ஆகும் அணி கடகம்
தங்கிய கங்கணமும் ஆகும் சூடகம் சங்கு தொடி
பைங்குருகே வண்டு சரி கன்று கைவளைப் பாற்படுமே. (16)

### குண்டலம், காதணி, நுதற்சுடிகை, பட்டம், சிரமாலை

336. கோடு மிருசிகைக் காதணி செம்பொற் குழை குண்டலம்
வேடகம் புல்லிகை மேவும் கடிப்பிணை வீசிய பொன்
தோடு அவை காதுக்கு அணிப்பெயர் சுட்டி நுதற்சுடிகை
ஓடை பொற் பட்டம் மன் காரோடி தான் சிரத்தோடு தொடையே. (17)

### நுதலணிபூண், கிரீடம், ஆபரணப்பொது, பேரணிகலம்

337. (வடிநுதற்) பூணும் இலம்பகம் புல்லகம்ஆம் சுடிகை
முடியே மௌலி மகுடம் கீரீடம் மொய் சேகரமாம்
படர் இழை நாண் கலம் பூண் அணி தான் ஆபரணம் அதுஆம்
அடர்உரு பூணும் மதாணியுமாம் பேரணிகலமே. (18)

### வட்டில், நாழிகைவட்டில், சட்டுவம், கண்ணாடி

338. தட்டகை உண்கலம் தாலம் கிண்ணம் கோரம் தாரை வள்ளம்
வட்டில் அதுஆம் கன்னல் நாழிகைவட்டில் சிரகம் தவ்வி
சட்டுவம் ஆடி படிமக்கலம் தர்ப்பணம் கஞ்சனை
இட்டிய ஆதரிசனம் கண்ணாடி எனும் உலகே (19)

### கண்டைமணி, எறிமணி, சிறுசின்னம், காளம், குறிஞ்சிப்பறை

339. எண்திசை யேணம் இபமணி கண்டை எறிமணி
சேகண்டி பொற் பீலி சிறுசின்னம் காகளம் காள அதுஆம்
தொண்டகம்ஒடு துடியே முருகியம் துங்கவென்றி
கொண்ட குறிஞ்சிப்பறை என யாவரும் கூறுவரே. (20)

### வேடர்பறை, முல்லையார் பறை, மருதப் பறை, ஒருகண் பறை, உடுக்கை

340 விறல் பயிலும் துடி வேடர் தம் தொல்பறை மென் முல்லையார்
பறையே கோட்பறை பம்பையும் ஆகும் பணை கிணையே
நிறை மருதப்பறை சாப்பறை நெய்தல்பறை ஒருகண்
உறுபறை மொந்தை உடுக்கையொடும் தண்ணுமை என்பரே (21)

### இடைசுருங்கு பறை, சிறியபறை, பரந்தபறை, முழவம், குடமுழவம், படகம்

341. துடியே இடைசுருங்கும் சிறு தொல்பறை ஆகுளியே
படைசேர் சிறிய பறை வாய் பரந்த பறை பதலை
முடம்சேர் முர[ழ]வம் குளிரே முழா மண் சி[க]னை முழவம்
குடமா முழவம் படகமும் ஆனகம் கூறுவரே. (22)

### பணைப்பொது, பேரிகை

342. புணர்தரு பீலி முருடு முரசு பொருமுழவு
பணை தரு கோடணை தூரியம் ஆகும் பணைப்பொதுப்பேர்
துணைதரு சண்டை முரசம் பணை துந்துமி சகடை
தணிதரு பேரிகைக் கூட்டம் என்றே தமிழ் சாற்றியதே. (23)

### பல்வகைப் பறை, கொம்பு, யாழ்நரம்பு

343. அம்பணம் திண்டிகை ஆனகம் சல்லரியாம் படகம்
பம்பை தடாரி தக்கையே பல்வகைப் பறைப்பேர்
கொம்பு எனில் ஆம்பல் இரலை வயிர்ஒடு கோடு எனலாம்
நம்பிய கோல் தந்திரி குரல் யாழின்நரம்பு எனரே. (24)

### யாழ், வார்க்கட்டு, முறுக்காணி, நால்வகையாழ்

344. தந்திரி கின்னரம் வீணை விபஞ்சிதம் தாழ்கருவி
உந்திய வல்லதி பேரிகை நல்யாழ்ப் பெயர் ஏர் திவவு
முந்திய வார்க்கட்டு மாடகமும் முறுக்காணி என்ப
கொந்தி பேரியாழ் மகரம் சகோடம் செங்கோடு என்பரே. (25)

### தேர், தேர்க்கால், உருளியகக்கதிர்

345 இரதம் திகிரி சயந்தனம் எந்திரமே கவரி
உரவம் கொடுஞ்சி வையம் தேர் திகிரி உருளி உந்தி
தெரியும் பருதியுடன் நேமி ஆழி பொற் சில்லி அத் தேர்
அருகுஒன்று கால் என்பர் ஆரே உருளிஅகக்கதிரே. (26)

### பாண்டில் பூண்ட ஊர்தி, பண்டி, தேர்மேலிடு பரம்பு

346. உகையுஞ் சிவிகையுடன் பாண்டில் பூண்டருள் ஊர்தியுடன்
சகடம் பெறும் வையம் சாகாடு சாடு சகடு ஒழுகை
பகர்கின்ற வையம் உருள் பண்டி ஆகும் பலவகையில்
இகல் தட்டுப்பா என்பர் தேர்மேல் அடர விடு பரம்பே. (27)

### திடர், தேர்ப்புடைசூழ் மரச்சுற்று, கலப்பை, பலவுறுப்பாகிய ஓர்உறுப்பு

347. திடரே எழுவும் கணையமும் ஆம் கிடுகே திகழ் தேர்ப்
புடைசூழ் மரச்சுற்று நாஞ்சில் அலம் படை பொற்கலனை
அடைவான நான்கும் கலப்பை அதுஆம் அக் கலப்பை அதன்
உடன் ஆர் கலனை பலவுறுப்பாகிய ஓர் உறுப்பே (28)

### தேர்மொட்டு, தூண், யானைஅணைதறி, வேள்வித்தறி

348. சிந்தைசெய் கூவிரம் கூம்பு கொடிஞ்சியும் தேர்மொட்டுஅதுஆம்
கந்து எழுவே வெளில் ஆளனம் கம்பம் கருந்தறியோடு
அந்தி மதலையும் தூண்ஆம் வெளில்உடன் ஆளானமும்
தந்திஅணைதறி யூபமும் வேள்வித்தறி என்பரே. (29)

### குறுந்தறி, கதவு, தாழ், உரல், ஊஞ்சல், உறி

349. போதிகை என்பர் குறுந்தறி வாரி புதவு உடனே
தீதுஇல் கபாடம் கதவு என்பர் தாழ் எனில் சீப்பு எனலாம்
ஓதும் கறையும் உலூகமுமாம் உரல் ஊசலுமே
மேதகு ஊஞ்சல் சிமிலி சிரம் சிக்கம் மேல் உறியே (30)

### கட்டில், பரண், இறைவை(ஏணி), கண்ணேணி, கிளிகடிகருவி, குறுந்தடி

350. பதியும் பரியங்கம் பாரி மஞ்(சம்) கட்டில்ஆம் பணவை
இதணம் கழுது பரணே கடவை இறைவை எம் மால்
உதவும் கண்ணேணி குளிர் தழல் தட்டை ஓதில் கிள்ளை
அதுகடியும் கருவிப்பேர் குறுந்தடியாம் குணிலே. (31)

### துடுப்பு, அடைகுறடு, பெருங்குறடு, மரக்கலம்

351. அறில் துடுவை துடுப்பு ஆகும் பட்டடை ஆகும் அடை
குறடு முருடு பெருங்குறடு ஆகும் குல மதலை
துறைதரு வாதை வங்கம் தோணி பாறு அம்பி தொள்ளு நவ்வே
மறிதரு நாவாய் சதாவே பஃறி மரக்கலமே. (32)

### மரக்கலப்பாய், ஓடம், தோணி, தெப்பம், கமண்டலம்

352. பாடின் மரக்கலப்பாய் இதை ஆகும் பகறி பகடு
ஓடம் அது ஆகும் திமில் தோணி என்பர் உயர் பகடு
தேடரும் அம்பி மிதவை புணை எனில் தெப்பம் அதுஆம்
கூடும் கமண்டலம் ஆகும் கரண்டகம் குண்டிகையே. (33)

### பேழை, கெண்டிகை, பீடிகை, கொள்கலம்

353. எண்டரும் மிஞ்சிகை மஞ்சகம் பேழை என அறைவர்
கண்டம் கரண்டகம் கோடீரத்தொடு கடிப்பம் அதுஆம்
கெண்டிகை பீடிகை யாகும் துமானம் கிளர் அலங்கல்
கொண்டு அணி சாந்து மடி இவை சேர்கலம் கொள்கலமே. (34)

### உடை, பொதி, திடமிகுகொள்கலம், கொல்லன் சின்னத்தட்டு, பீலியில் கட்டும் கவிகை

354. உடை கலை ஆகும் பொதி மூடை ஆகும் உயர் பகுவாய்
திடமிகு கொள்கலம் ஆகும் பிழாக் கொல்லன் சின்னந்[த்] தட்டாம்
அடர்தரு கன்னம் கலாபம் தழை தொங்கல் ஆனஇவை
தொடைதரு பீலியில் கட்டும் கவிகை எனச் சொல்வரே. (35)

### வெண்குடை, ஆலவட்டம், சிற்றாலவட்டம்

355. தொங்கல் உடன் சத்திரமே கவிகை தொடர்ந்த பிச்சம்
இங்குஇவை வெண்குடை கால்செய்வட்டம் உகமே விசிறி
அங்குஅவை வீசத் தகும் ஆலவட்டம் அது ஒழிந்து
தங்கிய பீலி செய் சிற்றாலவட்டமும் சாற்றினரே. (36)

### மயிர்வாரும் சீப்பு, சூதாடுகருவி, பந்து, சும்மாடு, துண்டம்

356. கருதிய சிக்கம் மயிர்வாரும் சீப்பின்பேர் காசும் வல்லும்
பரவிய சூதுடன்ஆடுதல் கந்துகம் பந்து என்பதாம்
மருவு சுமடு சுமையடை ஆகும் சும்மாடு அது என்பர்
முரிசெய் கடிகை எனில் துண்டம் கண்டம் மொழிகுவரே (37)

### வார், கயிற்றுவலை, கயிறு, தோல்செருப்பு, அடிதொடுவது, துருத்தி

357 காசறு வள் வகிர் வார் ஆகும் சாலம் கயிற்றுவலை
பாசமும் நாணும் கயிறு அதுஆகும் பதம் தொடுதோல்
ஆசுஇல் கழல் இவை தோலெசெருப்பு ஆகும் அடிதொடுவது
தோசம் இல் பாதுகை நீர்தூம் சிவிறி துருத்தியதே. (38)

### குடம், கரகம், பானை, மிடா, தாழி

358. கடமே இடங்கர் தசும்பு இரும்பை கும்பம் கன்னல் இவை
குடம் ஆகும் கன்னல் சிரகம் கரகம் குழிசி மிடாத்
தடவு ஆகும் பானை அகளமும் வம்பும் தடாவும் மிடா
அடர் சாடி தாழி அகளம் பதலை அவை என்பரே (39)

### நீர்நிறைசால், அகல், இரப்போர்கலன், குயவன், மண்ணரிநார், நூல், துன்னம்

359. தொகும் இடங்கர் வட்டம் நீர்நிறைசால் சார்வம் சுத்தியுமே
அகல் இரப்போர்கலன் ஐயம் கடிகை அவை என்பர் மட்
பகை குயவன் மண்ணரிநார் அது என்பர் பனுவல் தந்துப்
புகல் நூல் அதே என்பர் துன்னமும் பொல்லம் பொருந்தும் அதே. (40)

### கூறை, பட்டாடை

360 மடி துகில் தானை கலிங்கம் உடை தூசு வாதனம்
படம் ஆடை காழகம் அம்பரம் புட்டம் பட்டம் கலையாம்
புடவை அறுவை படாம் சம்பம் சேலை போற்றில் இவை
அடர் கூறை பாளிதம் கோசிகம் ஆகும் பட்டாடை அதே. (41)

### நல்லாடை, மரவுரி, சம்படாம்

361 திகழ் ஏடகம் புகழ் வேதிகை சில்லிகை சித்திலிகை
அகல் தூரியம் கத்தியம் கருள் பாரி நல்லாடை என்பர்
மகிழ் சீரை வற்கலை தன்னோடு இறைஞ்சி மரவுரியாம்
பகர்வாகும் கம்பளம் சிம்புளியே சம்படாம் என்பரே. (42)

### கச்சு, அத்தவாளம், மேற்கட்டி, உத்திரிகம், சட்டை

362 வம்பு உறு வார் கச்சு வடகமும் ஆம் அத்தவாளம் என்பர்
கம்பலமோடு விதானம் மேற்கட்டி ஏகாசம் எனின்
நம்பு உத்திரிகம் எனல்ஆகும் அங்கி நயந்த மெய்ப்பை
தம்பமெய்க் கஞ்சுகம் குப்பாயம் வாரணம் சட்டை அதே. (43)

### இடுதிரை, கொடி, சிறுகொடி

363. இகலின் எழினி படம் கண்டம் ஆகும் இடுதிரையே
துகிலகை கேதனம் வானி பதாகை துவசம் உடன்
நிகர்இல் படாகை விலோதனமே கொடி நீள் உலகோர்
புகலும் கதலிகை ஆகும் சிறுகொடிப் பூவையரே. (44)

### சீரை, மெத்தை, சித்திரப்படம், தீட்டுதல்

364. அத்தகு சீரை சிதவல் சிதர் என் அணை தளிமம்
மெத்தை எனச் சித்திரபடம் பொத்தகம் மேவியபேர்
சுத்தத் துகிலிகை வட்டிகை ஓவியம் சொல்லில் இவை
சித்திரம் ரேகை எழுதல் பொறி வரி தீட்டுதலே. (45)

### பாரதிதீப வரலாறு

365. மின்செயல் காரில் தரு பாரதி திருவேங்கடவ
னின் செயல் சீருற்ற ஏழாவது என்ன இயல்தெரிந்தோன்
தென்சிலைச் செந்தமிழ்ப் பாரதி பாரதிதீபம் தன்னின்
முன் செயற்கை வடிவப்பேர்த் தொகுதி முடிந்ததுவே. (46)

## 8. பண்புபற்றிய பெயர்த் தொகுதி

### பண்பின் இயல்பு

366. கருது வடிவில் அளவில் வண்ணத்தினில் காண்டலுற்ற
பொருளில் உணர்வில் புலப்படும் உண்மைப்பொருள் அதுஎனப்
பரவு குணத்தொடு பண் அவை பண்பு எனலாம் அவற்றைத்
தெரிய உரைக்கின் அவை பலவாகும் திறத்தனவே. (1)

### வட்டம், வளைவு

367. பருதி விருத்தம் உடன் கோளகை தட்டுப் பாலிகை சக்
கரம் வலையம் கொம்மை மண்டலம் ஆழி கடகம் சில்லி
தரு பாண்டிலே திகிரி நேமி வட்டம் தரம் குடிலம்
வரவாங்கல் கோட்டம் வனரே குலாவல் வளைவு என்பரே. (2)

## திரள்வடிவு, குவிதல்வடிவு

368 செற்றிய பந்தம் குலம் புஞ்சயம் கொம்மை சேடு கணை
துற்றே செறியும் துறுமல் குவிதல் தொகுதி உண்டை
மற்றுரை மாழை பிண்டம் திரள் வாகும் வடிவு குவால்
குற்ற இராசி குவை குப்பை ஆகும் குவிதலுமே. (3)

## தொகுதி, ஐம்மைவடிவு, பரந்தவடிவு, குமிழ்ப்புவடிவு, மொக்குள்வடிவு

369. தொடரும் மொய் தோடு குழுமல் திரளும் தொகுதி என்பர்
அடர் தொறு துற்றுத் துறுகு அரி முதல் ஐம்மையதாம்
படலை படாச்சி பரந்த வடிவினம் பைங் குமிழ்ப்பு
வடிவு புளகம் அக் கொப்புளம் மொக்குள்வடிவு என்பரே. (4)

## உள்துளைவடிவு, உண்டை, துளைப்பொருள், கற்றை, சற்சரைவடிவு

370. புழை உள்துளையது தூம்பு உடன் நாழி சுரை பூண் துளை
குழியம் திரள் உண்டை ஆகும் குழியம் புழல் குழலும்
கழல் துளை கற்றை மயிரின் தொகுதி கதிர்த்தொகுதி
விழை பிணரே சற்சரைவடிவாக விளம்புவரே (5)

## பெருமை

371 பாடு தடவு தடம் விபுலம் வியல் பாழி கண் மால்
மோடு பிறங்கல் நளியே இயக்கம் முடலை பணை
ஈடு கயவு பரி மூரி நன்று வியத்தகை மாப்
பீடுஒடு அகலுள் முன் பின் செம்மல் அண்ணல் பெருமையதே (6)

## மிகுதி, சிறுமை

372. உறு தவம் ஆற்றல் அறிவே விதப்பு இறப்புஒடு உறுப்புச்
செறி நளியே நனி ஆன்றல் பிறங்கல் சிறப்பு அடலை
அறி கயவே பொம்மல் பொக்கம் அதிகம் அது மிகுதி
சிறுமை அணு வஞ்சம் தன்று சின்னம் வறிது ஆசு என்பரே. (7)

## உயர்ச்சி, தூரம், சிறிது, விரிவாமிடம்

373. உரை[றை] நிவப்பு ஏந்தல் பிறங்கல் நிமிர்தல் உகப்பு உன்னதம்
புரை துங்கம் ஓங்கல் உடன் சேண் உயர்ச்சி எனப் புகல்வர்
(தெரி)சேணும் நீளிடையும் சேயும் தூரம் தி[கி]லம் சிறிதுஆம்
விரிவாமிடம் பரப்பு ஆகும் விசாலம் விபுலமுமே. (8)

## பரவுதல், நீளம், கூடுவது

374 பரவை ஞெமிர்தல் பரப்பு உடன் பாய்தல் (பரவு)தலாம்
விரவாதல் போகல் ஒழுகல் நெடுமை வடிதல் நெடில்
நிரை சேண் உடன் நீக்கல் தீர்தல் நேர்பாடு இவை நீளம் அதுஆம்
குரையார் குவிதல் பயனியும் கூடலும் கூடுவதே. (9)

## நுண்மை, அகலம்

375. நுணுகு நுணுக்கு நுணுக்கம் நிழற்றல் நுவணை நொசிவு
அணுவும் நுழை நுனை சாயல் ஒய்தல் ஆய்தல் அவை நுண்மையாம்
உணரில் அகறல் வியலிடம் பாழியுடன் அகலுள்
நணுகும் நளி கண்ணறையே அகலத்தின் நாமங்களே. (10)

## குன்றல், உள்ள நெறியில் சிறத்தல், பருமை, முழுவது

376. அறவும் அருகுதல் வீய்தல் சுருங்குதல் அஃகுதலே
குறைதல் சிறுகுதல் குன்றல் கழிவு உடன் கூர்ப்பும் உள்ள
நெறியில் சிறக்கும் பரூஉம் பீனம் என்ன என்னில் பருமை
முறையில் அகிலம் முழுவதுமாம் என்பர் மொய்குழலே. (11)

## மென்மை, செறிவு, மிடைதல்

377. தாங்கு கயவு மொய் மேம்பாடு சால்பு உடன் சாயல் மென்மை
வீங்கல் பொதுளல் விறைப்போடு உறைப்பு வெறுப்பு நளி
தீங்கல் துற்று உடன் தேற்றுக் குடிலம் செறிவு அது என்பர்
ஓங்கு ததைதல் துதைதல் மிடைதல் என்று ஓதுவரே. (12)

### நிறைவு, அளவின்மை, வண்ணம்

378. மலிர்தல் மலிதல் நெகிழ்தல் தெவிழ்தல் மல்கல் துவன்றல்
நிலைபெற ஆர்தல் கழிதல் நிறைவு என்பர் நீடு அனந்தம்
மலைவில் அபாரம் அபருமிதமும் அவ் அளவின்மையாம்
பொலி வெண்மை செம்மை கருமை பசுமை செம்பொன் வண்ணமே. (13)

### சிவப்பு, பொன்னிறம்

379. தொக்க அரத்தம் துவர் அரக்குச் செம்மை சோணம் துப்புச்
செக்கர் உடன் பாடலம் குலிகம் அத்துச் சிந்தூரமே
தக்க இராகம் அருணம் சிவப்பு என்பர் பீதகமே
புற்கலம் பிங்கலம் ஆகிய மூன்றும் பொன்னிறமே. (14)

### குரால்நிறம், புன்மை, வெண்மை, பச்சைநிறம்

380. போற்றும் கபிலம் குரால்நிறம் ஆகும் புகர் புன்மை வால்
தோற்றும் சுவேதம் உடன் பால் தவளம் துலங்கு வெண்மை
சாற்றிய பாசும் பசுமையும் பைத்து உடன் சாமளமும்
நேற்றிசெய் பச்சைநிறம் எனவே சொல்வர் நேரிழையே. (15)

### கருமை நிறம், நிறப்பொது, மலினம்

381. கருமை களங்கம் கறை நீலம் காளகம் காளிமம்ஆம்
பொருவரும் அஞ்சனம் கார் என்பர் மாமை புகர் கெழுவே
உருவொடு கேழ் சந்தம் வண்ணம் குருவும் ஒளி நிறமாம்
(ம)ரு கறை (மா)சு கசடு களிங்கம் மலினம்அதே. (16)

### ஒளி, ஒளிவிடல்

382. விரியல் இலக்கம் சுடர் கதிர் வாள் வில் வெயில் நிலவு
கிரணம் எல்லே தெளிர் தேசு துலக்கம் கெழு த[ந]கையே
மருவு ஒளி ஆகும் இலங்கல் சுடர்தல் வயங்கல் அவிர்
உருவு தயங்கல் ஒளிர்தல் நகுதல் ஒளிவிடலே. (17)

### கட்டழகு, அழகு, பேரழகு

383 ஏர் அணி யாணர்க் கவினே விடங்கம் எழில் வனப்புக்
காரிகை வாமம்உடன் பொற்புக் காமரும் கட்டழகாம்
ஆர் அழகு என்பர் பொலம் செவ்வி மாண்பு பை ஐ அணி சேர்
சீர் அழகு என் சித்திரம் பேரழகு விசித்திரமே. (18)

### வலி, வடிவு, வண்ணம்

384. உரம் மிடல் ஆற்றல் முடலை மதுகையுடன் மல்லலே
முரண் எறுழ் கொற்றம் வயம் பாழி மூரி முடுகல் மைந்து
வரு(ம் ஆண்மை) திண்மை துப்பு ஊக்கம் முன்பே வலம் மானம் வலி
தரும் ஓர் வடிவு எனில் செண்ணம் வண்ணம் சந்தம் தான்அதுவே. (19)

### மதர்த்தல், நொய்தாதல், எளிமை, தண்மை, அழல், மானம்

385. ஒண்மை மதர்வு மதர்த்தல் நொய்தாதல் உரைக்கின் நொய்வாம்
மெண்மையும் தண்மையும் தஞ்சமும் ஆகும் எளிமை என்பர்
வெண்மை வெளிறு இவை தண்மை அழல் உருப்பம் வெப்பமாம்
மண்மிகு மானம் பெரிதன்மை குற்றமும் மன்னுமதே. (20)

### இழித்தகுவு, சீதளம், வீரம், வரையறை, எல்லை, அளவை

386. இளிவே பரிபவம் என்னில் இழித்தகுவு ஆகும் என்பர்
நளி சீதம் சீதளம் வீரம் விறல் வெற்றி நல்கும் என்பர்
அளவே நிரை எண் வரையறை ஏணி அது வரைப்போடு
உளவாம் வரம்பு எல்லை கச்சம் அளவை உறு கடனே. (21)

### அளவு, விசையம், வெற்றி, கூறுபாடு

387. காறு துணை வரை நேர் பிரமாணம் காலம் உடன்
தாறே அவதி அளவாம் வலம் கொற்றம் தான் விசையம்
கூறிய வாகையுடன் ஆடல் ஆடி இவை கூடும் வெற்றி
வேறு வகையும் திறம் கூறுபாடு அதன்மேல் வருமே. (22)

### அறிவு, தொலைவு, கருத்து

388. உணர்வே புலன் ஒண்மை காட்சி மெஞ்ஞானம் உரன் அறிவாம்
துணையில் நிலைகெடல் தோற்றல் தொலைவு என்பர் சூழல்செத்துப்
புணர் குறிப்பு இங்கிதம் சிந்தை நினைவு உன்னல் போதம் உள்ளல்
கணமொடு கண்ணல் விரும்பல் கவைஞர் கருத்து என்பரே. (23)

### விருப்பு, உள்ளுணர்வு

389. மாதர் விழைவு பற்றே வெம்மை காமம் மெய்வாஞ்சை நசை
ஆதரவு ஆர்வம் உடன் பெட்டல் வெஃகல் அவா விராவே
காதல் இவரல் உடன் வீழ்தல் தாழ்தல் வெங்காமர் பெட்பும்
ஓதில் விருப்பு என்பர் ஞானமுஞ் சீலமும் உள்ளுணர்வே. (24)

### அன்பு, அருள், கைக்கிளை, பெருந்திணை, காமக்கவலை

390 பரிவு ஈரம் ஆர்வம் அளி நார் புரியுடன் பற்றும் அன்பே
அருளே கருணை இரக்கம் அதுஆம் கைக்கிளையதுவே
ஒருதலைமால் பொருந்தாமால் பெருந்திணை யோர்மதன்
விரகம் வெங் காமக்கவலை என்றே சொல்லும் மேதினியே (25)

### வேட்கைப்பெருக்கம், தக்கது, மாட்சி, செற்றம்

391. மிகு வேணவா என்னில் வேட்கைப்பெருக்கம் மிகும் தகுதி
தகவுஒடு தக்கது மாண் மாண்டல் மாட்சி அதுஆம் முனிவு
வெகுளி செயிர் கறுவும் சீற்றமே கதமே கறுப்பொடு
அகலா வயிரம் உடன் கோரமே செற்றம்ஆம் என்பரே. (26)

### சினக்குறிப்பு, அதிசயம்

392 கறுப்புச் சிவப்பு வியர்ப்புப் புழுங்கல் கனலல் கன்றல்
செறுத்தல் புகைதல் உடன் வெய்துறலும் சினக்குறிப்புஆம்
விறல்தகு விம்மிதமே இறும்பூது வியப்பு மிலைச்சு
அறத்தவர் யாரும் அதிசயமாக அறைவர்களே (27)

### அதிசயத்தோடு இரக்கம், உள்ளக்களிப்பு, கண்ணோட்டம்

393. அவையவர் ஓவென அய்யோ அந்தோ என அன்னோ எனும்
இவையும் அதிசயம் தன்னோடு இரக்கம் எழு செருக்குக்
கவலும் மதர்ப்புப் பெருமிதம் மத்தம் களிப்பு உளமாம்
உவமையில் கேண்மை நயம் நாகரிகம் கண்ணோட்டம் அதே (28)

### அழுக்காறு, மனக்கோட்டம், மறத்தல், இறுமாப்பு, மலர்ச்சி, உள்ளம்துணிந்துஎழல்

394. மிஞ்சா மனச்சழுக்கம் அழுக்காறு அவ்வியன் மனக்கோட்
டம் சோர்பு இகட்சி பொய்ச்சாப்பே மறவி அற மறத்தல்
எஞ்சாத ஏக்கழுத்தம் இறுமாப்பு செம்மாப்பு அது என்னில்
துஞ்சா மலர்ச்சி உரன் ஊக்கம் உள்ளம்துணிந்துஎழலே. (29)

### கொடுமை, நிலையுடைமை, கோரம், நாணம், பேரறிவு

395. நிகர் இல் கொடுமையும் கோண் என்ப ஏண்உம் நிலையுடைமை
தகுதியில் கோரம் கொடுமை கடுமையும் சண்டமும்ஆம்
நகைதரு மானமும் வெள்கலும் வட்கலும் நாணம் நல்கும்
முகரிமையும் பேரறிவு என்பதாகும் முதுக்குறையே. (30)

### கருதுதல், மதித்தல், இன்பம், தளர்வு, குறிப்பு

396. கதித்தல் குறித்தல் உணருதல் சுட்டல் கருதுதலாம்
மதித்தல் அதுஆகும் கருதுதல் பேணல் மகிழ் நயமும்
எதிர்த்த மகிழ்வும் நகையாகும் நல்இன்பம் கேட்டை தளர்வு
உதித்த சொன் நாட்டியம் தானே குறிப்பு என்று உரைத்தனரே (31)

### சுழற்சி, ஐயம், பொல்லாங்கு

397. கூறும் அலம்வரல் கொட்புச் சுழல்வு கொளில் கறங்கல்
மாறும் தெருமரல் ஆகும் சுழற்சி கொல் மானுதலே
வேறு அனுமானமும் ஆசங்கையும் ஐயம் மேவும் என்பர்
ஊறொடு கோள் இவை பொல்லாங்கு எனவும் உரைத்தனரே. (32)

## நன்மை, இரக்கம், அகமகிழ்ச்சி

398. மன்னிய வண்ணம் மணி மாசறல் உடன் மான் உறுதி
நன்னர் நறுமை நயம்சீர் இவை என்னின் நன்மை அதுஆம்
இன்னல் இணைவு எற்று இரக்கம் அது ஆனந்தம் இன்பம் என்னில்
அன்ன அகமகிழ்வாம் தொய்யல் கட்டியும் அப்பெயரே. (33)

## அறிமம், அறியாமை, அறிவின்திறம், மெய்யுவகை, கொண்டது மறவாமை

399. அறிமடம் ஆகும் அறிந்து அறியாமை எய்யாமை என்னும்
திறன் அறியாமையும் துயவே அறிவின்திறம் அது என்பர்
தறவுசெய் ஓகையும் மாராயமும் மெய்யுவகை என்பர்
கறுவுதலே கொண்டது மறவாமை கடைப்பிடியே. (34)

## நோய், உன்மத்தம்

400. மழுகல் அழுங்கல் மடங்கு அஞர் பையுண் மடி பிணி சூழ்
அழிவுறு நோய் என்பர் மாழாத்தல் மால் மறல் ஆகும் இருள்
கழுமல் மருள் மைந்து உணராமை மாழ்தல் களி மயக்கம்
மொழிவுறு மையல் உடன் மான்றல் மாலுதல் உன்மத்தமே. (35)

## பொறாமை, நோன்றல்(பொறை), அகல்வின்மை, வறுமை, மிகத்தெளிவு

401. நோனாமை என்னில் பொறாமை அதுஆம் நுண்மை நோன்றல்
ஆனாமையோடு தண்டாமை இரண்டும் அகல்வின்மையே
தானாகும் இன்மை இலம்பாடுஉடன் ஒற்கம் தான்வறுமை
மேனாள் உணர்வு உடன் தேற்றம் துணிவு மிகத்தெளிவே. (36)

## தனிமை, பொலிவு, வருத்தம்

402. புலம்பு தனிமை துவன்றல் கலித்தல் பொற்புப் பம்பலே
மலைந்த கஞறல் உடன் துப்பு உவப்பு மலி பொலிவுஆம்
கலங்கல் உலங்கல் அயர்வே அணுக்கம் அவா அணங்கு
மலங்கல் கசிவு வயா ஆகுலமும் வருத்தம் அதே. (37)

## சோம்பு, பொலிவழிதல், ஒண்மை

403. தீங்குசெய் அஞ்சல் அழுங்கல் அலைசுதல் சிந்தித்தலே
தூங்கல் அசைதல் மடி இவை சோம்பு என்பர் சொல் மழுங்கல்
போங்கலின் எய்திய புல்லெனல் ஆகும் பொலிவழிதல்
ஓங்கிய நன்மை மிகுதி அறிவு ஒழுங்கு ஒண்மையதே (38)

## அச்சம்

404. அதிர்ப்பு வெருவு அஞர் கம்பலை வெம்மை அழற்றி வெறி
பொதிர்ப்புத் துணுக்கம் உடன் பீதி கூசல் புரன் நடுக்கல்
விதிர்ப்புத் துளக்கம் புலம்பல் தெருமரல் மெய்யழிதல்
கொதித்துப் பனித்தல் உலைதல் கவலைக் குணம் அச்சமே. (39)

## அன்பின்நடையது, மெலிவு, செயலறவு, அடைக்கலம்

405. நயன் அளவு இன்பம் பயனிவை அன்பின்நடையது என்பர்
அயரும் ஒடுக்கம் அச் சாம்புதல் கூம்புதல் ஆகும் ஞொள்கல்
வியனுறு சிக்கம் முனிவே மெலிவு என்பர் கையறவே
செயலறவு என்பர் அடைக்கலம் கையடை சேருமதே. (40)

## துன்பம்

406 படர் துனி துக்கம் புலம்பு எவ்வம் கம்பலை பையுள் செல்லல்
நடலை இடுக்கண் அஞர் அல்லல் பீழை நழுங்கு அரந்தை
கடிய கவலை வறுமை பருவரல் கவ்வை பனி
தொடரும் மறுகல் பனி புன்கண் சூர் இவை துன்பங்களே. (41)

## துன்பம், பகை, மெலிவு

407 விழுமம் அழுங்கல் சிறுமை உடன் வெய்துறல் இரக்கம்
அழு துயரே இன்னல் பீடையும் அத் துன்பம் ஆகும் என்பர்
எழு முரண் தெவ்வு முனை உறழ் தூஒடு இகல் பகையாம்
கழிதரு புன்கண் பழங்கண் மெலிவு என்பர் கற்றவரே. (42)

### குற்றம்

408. காசு கசடு நவையே மறுக்கம் கவடு பழி
மாசு தவறு களங்கம் வசை புரை மானம் வடு
ஆசு செயிர் புகர் பொக்குப் பழுதுஒடு அஞர் கோது தோம்
தோசம் பொல்லாப்புத் துரால் இவை குற்றம் எனச் சொல்வரே. (43)

### வஞ்சனை, நட்பு, கையொழியாமை, ஒழுகலாறு, ஒழுக்கம்

409. கொடுமைசெய் குத்திரம் கைதவம் புள்ளுவம் கூடம் உடன்
கெடவரு பட்டிமை மாயமும் வஞ்சனை கேண்மை நற்கோள்
தொடர்பு அது நட்புக் கைதூவாமை கையொழியாமை சொல்லும்
கடிய கையாறு ஒழுகல்லாறு ஒழுக்கமும் கை அதுவே. (44)

### பழமை, இன்பம், மேற்கோள்

410. தொன்மை தொடர்பு உடன் தொத்து ஒடு பூருவம் தொன்று தொல்லை
முன்னை புராணம் புராதனம் தொண்டு முதுமை முந்தை
இன்னவை ஆகும் பழமை நயன் ஏமம் இன்பம் என்பர்
மன்னிய பூட்கையும் மேற்கொள் எனவும் வகுத்தனரே. (45)

### புதுமை, ஈன்றணுமை, பிறப்பு

411. யாணர் விருந்துக் கடி நவம்வம்பு புத்தேள் இவையே
பூணும் புதுமை புனிறு எனில் ஈன்றணுமைப் பொழுதாம்
பேணிய தோற்றம் சனனம் சனிப்பும் பிறந்தை பவம்
காணிய சூதகம் யோனி பிறப்பு என்பர் கற்றவரே. (46)

### கழிபிறப்பு, இப்பிறப்பு, வருபிறப்பு, காரணம், முறைமை

412. உம்மை கழிபிறப்பு இம்மையும் இப்பிறப்பு ஓர் மறுமை
அம்மை வருப்பிறப்பு ஆகும் நிபம் பொருட்டு உடன் நிமித்தம்
செம்மையில் வாயில் திறன் காரணத்தில் தெரியும் சொல்லாம்
மெய்ம்மை முறைமை மரபே பரம்பரமே மொழியே. (47)

### இளமை, இளமைச்செல்வி, பற்றுக்கோடு

413. குருளை மழவு கயம் இளை சேய் நவ்வி கொம்மை மஞ்சு
புருவை குழவி உடன் சேடு போதகம் பொன்தருணம்
முருகு பருவம் இளமை அக் கோமளமும் இளமை
அருளிய செவ்வி பற்றுக்கோடு கந்து ஒடு ஆலம்பனமே. (48)

### உரிமை, இலாபம், தருமம், அழுக்கின்மை

414. பொருவரு பாங்கும் கிழமையும் தாயமும் பூட்சியுமே
உரிமையது ஆக்கம் பலித்தல் பயன் பசை ஊதியமே
கருதில் இலாபம் சரதம் சுபம் மங்கலம் சீலத்தோடு
அருளும் தருமம் அமலம் விமலம் அழுக்கின்மையே. (49)

### மாதர் நண்ணாநெறி, தூய்தன்மை, தூய்மை, அறிவுள்ளது, போதம்இல்லாதது(அறிவில்லாதது), மேல்

415. மாதர் நண்ணாநெறி பூப்பு என்பர் தூய்தன்மை வாலாமையே
சூதகம் என்பர் புனிதம் பவித்திரம் தூய்மை என்பர்
சேதனம் என்பது அறிவுளது ஆகும் அசேதனமே
போதம்இலாதவை மேல்ஆம் தலை தலைமைப் பொருட்டே. (50)

### கணிதம், கன்னி, பரியாயம், நானாவிதம், முதல்

416. கரணம் அலகு எண் கணிதம் குமரியும் கன்னி என்பர்
பரவிய பன்முறையே பரியாயம் பலவிதமே
உரைசெயும் நானாவிதம் என்பர் மோனையுடன் தொடர்ந்து
தெரிதகும் ஆதி இவை முதலே எனச் செப்பினரே. (51)

### முடிவு, அனுபவம், வளமை, கொழுப்பு

417. மொழிதரும் அந்தமும் தீர்தலும் ஈறும் முடிவு அது என்பர்
அழிவிலதாம் துப்புரவே அனுபவம் ஆகும் என்பர்
செழுமையுடன் மல்லலே யாணர் வாய்ப்புத் திகழும் வண்மை
கொழுமை வளமை அதுஆகும் கொழுமை கொழுப்பு என்பரே. (52)

### சிறப்பிலதாம் குணம், செல்வம், வேறுபடல், உறவு, துறப்பது

418. சிறப்பிலதாம் குணம் சீத்தை சிக[த]ம்பு அது என்பர்
வெறுக்கை விபவம் நிதானம் பொறி செல்வம் வேறுபடல்
உறத்தகுமே விகிர்தம் விகடம் சொல் உறவு உறவித்
துறப்பது என்னில் துறவி அது ஆகவும் சொல்லுவரே. (53)

### நாறுதல், இனிமையது

419. விரை மணம் மன்றல் கடி வாசம் கொங்கு வெறி நறையே
முருகு பரிமளம்ஆம் மோக்கம் கானம் கந்தம் முன் கமழல்
அருகு உடன் கந்தித்தல் நாறுதல் ஆகும் அமுது சுவை
உருதரு சாரம் இவை இனிமையது என்று ஓதுவரே. (54)

### தித்தித்தல், கைத்தல், புளித்தல், ஒருபலம்

420 தீயமும் தீரமும் தெங்கு உடன் தேமும் தித்தித்தல் என்பர்
காயமும் காழ்த்தல் கடுத்தல் கரில் இவை கைத்தல் என்பர்
ஆய புளித்தலே ஆகும் பிராந்தித்தல் ஆன தொடி
ஏயது ஒருபலம் என்றே உரைசெய்வர் ஏந்திழையே (55)

### நீர்மை

421. மாலை உழுவல் தகவு இயல்பே முறை மா மரபு
பால் அதிகாரம் விதியே கிழமை பரிசு பண்பு
மேலுரை பாண்மை குணம் நீர்மை ஊழ் தண்மையே உரிமை
யேலும் எழுபொருளே ஆகும் என்பர் இவை முழுதே. (56)

### பண்பு, கொள்கை, உவமை

422. குணம் நிறமும் பண்பும்ஆம் அறிவோடு குணம் கொள்கையாம்
புணர் உறழ் ஓடு ஒப்பு நேரே நிகர் புரை போல் பொருவு
துணை ஒருவு ஈடு தகவே கடுப்பு உடன் தூக்கு இகல்
இணை எனவே உரை செய்வார் உவமையை ஏந்திழையே (57)

### பாரதிதீப வரலாறு

423. பொழி கொண்டல் என்ன கரப்புண்டரிகன் மெய்ப் பூசுரர்தம்
விழிநெஞ்சம் என்ன வரும் பாரதி திருவேங்கடவன்
செழியன் புகழ் அண்ணல் செப்பிய பாரதிதீபத்து எட்டாய்
மொழி பண்பு பற்றிய பேரின் இயலும் முடிந்ததுவே. (58)

## 9. செயல்பற்றிய பெயர்த் தொகுதி

### தொழில், செயல்

424 செயல் வினையே தருமம் கருமம் தொழில் செப்பில் இவை
இயலும் விதியுடன் நேர்பொருளாம் தொழில் என்பர் தொழிற்
பயிலது வாகும் அயர்தல் உஞற்றல் இழைத்தல் பண்ணல்
துயரில் வனைதல் இவை செயலாகவும் சொல்லினரே (1)

### மகள்விளையாட்டு, பாராட்டு, பொழுதுகழித்தல் விளையாட்டு

425. கெடலை உடன் பண்ணை ஓரை உண்டாட்டுக் கிரீடை பொய்தல்
கெடவரல் வண்டல் மகள்விளையாட்டு என்பர் கேள் மகிழ்வும்
படிமை திரிந்து கொண்டாடலும் பாராட்டு எனப் பகர்வர்
விடலை வினோதம் பொழுது கழித்தல் விளையாட்டதே. (2)

### புதுமணம், விழவு, ஒப்பனை

426. புரையில் வதுவை கடி மன்றல் மூன்றும் புதுமணமாம்
முருகு உடன் சாறும் அச் சேறும் விழவு என்பர் முன்புனைதல்
அரிதில் அமைத்தல் அணிதல் கைசெய்தல் அலங்கரித்தல்
உருவு மண்ணல் பொற்பு வேய்தல் வனைதல் சொல் ஒப்பனையே. (3)

### உண்டல், அடிசிலூண் தொழில்

427. வைத்தது அயிறல் அருந்துதல் ஆருதல் மாந்தல் துற்றல்
மெத்த நுகர்தல் உடன் உண்டல் தின்றல் மிகப் பொசித்தல்
துய்த்தல் பருகுதல் துவ்வு உடன் பண்பின் தொழிலைச் சொல்வர்
துய்த்து மிசைதல் அயிறல் அடிசிலது ஊண்தொழிலே. (4)

## சூடுதல், துஞ்சல்(உறங்கல்), நுகர்தல்

428. துனிவற வேய்தல் மலைதல் மிலைதலும் சூடுதலாம்
கனவோடு அனந்தல் உறங்கல் துயிலுதல் கண்வளர்தல்
இனிதுடன் பள்ளிகொள்ளல் துஞ்சல் ஆகும் எடுத்து நுங்கல்
தன விழுங்கன் நொண்டல் தான்இவையாம் நுகர்தல் தொழிலே. (5)

## களவு, வளைதல், ஏறுதல்

429. கரவு கயவு வடம் பட்டினம் கட்டல் கள்ளல் உடன்
உரைசெய் களவு என்பர் கோடல் ஞெமிர்தல் ஒடித்தல் உடன்
மருவி இறுத்தல் ஒசித்தல் மெய்தாழ்த்தல் வளைத்தல் என்பர்
விரைவுடன் எக்கல் இவர்க[த]ல் ஏறுதல் மேற்படுமே. (6)

## முரிதல், துவளல், தாழ்தல், அழுதல்

430. எலியோடு ஒசித்தலும் மோய்தல் முரிதலையே உரைக்கும்
தொலைவில் திவளல் திவண்டல் உவளல் துவளல் என்பர்
மெலிவோடு இறைஞ்சல் குரங்கலும் தாழ்தலை மேவும் என்பர்
கலுழ்தல் கலக்கம் கசிதல் அழுதலைக் கற்பிக்குமே (7)

## கோபம்

431. முனிவே கறுப்புக் குரோதம் குரூரம் முளவு கதம்
சினமே வெகுளி கலாம் பகை செற்றம் சிவப்பு உருத்தல்
வினை வேகமே சறவே வேர்த்தல் காய்தல் விளிவு செறல்
துனி கோரம் கோபத் தொழில் அதுவாக முன் சொல்லினரே. (8)

## புலவி, புலவிவேகம், கடத்தல்

432 பெருந்தலில் ஊடல்முதிர்வு எம்புலவி புலவியதில்
வருந்திய வேகம் துனி என்பர் தாவுதல் வாவுதலே
உரங்கொடு இகத்தல் குதித்தல் அகறல் உகழ்தல் உடன்
கரைந்தெதிர் நீட்டல் நடத்தலும் தாண்டல் கடத்தலதே. (9)

## போகல், நெருங்குதல்

433. படர்தல் பரிதல் வழங்கல் இகத்தல் பதி பெயர்தல்
விடுதல் தணத்தல் உடன் தீர்தல் தீர்த்தல் மிக ஒதுங்கல்
தொடர்தல் நடாத்தல் உடன் சேறல் போகல் தொழிலுக்கு[கா]ம்
மிடைதல் கஞரல் இமிர்தல் நெருங்குதல் மேல்வருமே. (10)

## விரைவு, விரைவுக்குறிப்பு, கடுப்பு

434 கடுகல் நொறில் துனை வல்லையே ஒல்லை கதழ்வு உடனே
முடுகல் விரைவு என்பதாம் ஞெள்ளல் பொள்ளல் மொழியுடனே
விடலில் கதுமெனல் நொய்தென வெய்தெனவும் விரைவாம்
அடரு கதனம் துரிதம் இவை கடுப்பாம் என்பரே. (11)

## திரிதல், நீர்ச்சுழலல், சுழலல், மீளுதல், ஆற்றுப்படை

435. உழிதரல் கொட்புத் திரிதல் சுரிதலும் உந்தியும் நீர்ச்
சுழலல் சுரியல் அதுதான் மொழியில் சுழலலுமாம்
அழிவின் முரிதல் மறிதரல் மீளுதல் ஆற்றுப்படை
வழி உட்படுவித்தல் ஆற்றுய்த்தல் அவ்வழி மாற்றுதலே. (12)

## பாய்தல், மண்டலம், ஊருதல், நேர்செலல்

436. பாதம் உகள்தல் குதித்தல் அக் குப்புறல் பாய்தல் என்பர்
மாதியும் வாளியும் சாரிகையும் சொல்லில் மண்டலமாம்
ஓதில் உகைத்தல் உடன் தூண்டல் ஊருதல் ஓர்பொருளாம்
வீதியில் நேர்செலல் வாலா என்று விளம்புவரே. (13)

## தங்கல், நிலைபெறல், சுமத்தல்

437. அசைதல் தெவிட்டல் அறுத்தல் விதித்தலோடு அல்கல் தங்கல்
இசைதரு மல்கல் பரிதல் நிலைத்தல் இனிய துஞ்சல்
பசையொடு மன்னல் நிலைபெறல் ஆகும் பரித்தல் உடன்
மிசை மெய்ப்பொறுத்தல் சுமத்தல் என்றே சொல்லும் மெய்த்தமிழே. (14)

### முயற்சி, மிக்குச் செயற்றொழில், செய்தற்கரியசெயல்

438 இயற்றல் உஞற்று உழப்பு ஆள்வினை ஊக்கம் இவையுடனே
முயற்றல் உடன்தரு தாளாண்மை என்னின் முயற்சி மிக்குச்
செயற்றொழிலே என்பது ஊராண்மை செய்தற்கரியசெயல்
இயற்றகு நாவலர் பேராண்மையாக விளம்புவரே (15)

### எண்ணல், ஆராய்தல், தேடல்

439. ஒளிதரு சூட்சி உசாத் தேர்ச்சி எண் எண்ணல் ஓர்தலும் அத்
தெளிதலும் தூக்கலும் தேர்தல் தெரிதலும் சேரஇவை
அளவறு கேள்வியது ஆராய்தலும் கையரிக்கொள்ளுக
வெளியுற நாடலும் நேடலும் தேடலின் மேல்வருமே. (16)

### ஒற்றுமை, ஒற்றல், வரையறுப்பு, விலைகூறல், கலக்கம்

440. கருது ஒற்றுமைக்கொளலே ஒற்றல் வேய் குனித்தல் கணித்தல்
வரையறுப்பு ஆம் நொடை விற்றல் பகர்தல் வரின் விலையாம்
துருமம் வெறிப்பு வெதிர்ப்புப் புலம்புஒடு சொல் முதிர்ப்பு
வெருவல் கலங்கல் கலக்கம் என்று ஓதுவர் மெல்லியலே. (17)

### நடுக்குதல், தியாகம்

441 விதிர்ப்புப் பனிப்பு விதலை கம்பம் உடன் மெய்ப் பொதிர்ப்போடு
அதிர்ப்பு நடுக்குதல் வேள்வி உதவி வேளாண்மை கொடை
மதித்துப் பகரல் பொழிதல் இடுதல் வழங்கல் நல்கல்
திதத்தில் அளித்தல் அருளுதல் ஈதல் தியாகம்அதே. (18)

### வரையாது கொடுத்தல், வேள்வி, வேள்வித்தறி, பாதுகாத்தல்

442. ஏற்ற கொடைமடமே வரையாது கொடுத்தல் என்ப
மாற்றரும் ஓமம் கிருது உடனே எச்சம் யாகம் மகம்
மேல் திகழ் இட்டி இவை வேள்வி யூபமும் வேள்வித்தறி
போற்றலும் ஓம்பலும் பாதுகாத்தல் பொருட்டு என்பரே (19)

### கொளற்பொருட்டு, அகத்தீடு, தலைக்காவல், பிச்சை, கரத்தல், இரத்தல், பூசனை

443. தேவு கொளற்பொருட்டு ஆகும் கவுவு அகத்தீடு தலைக்
காவல் இளை என்பர் ஐயம் பலி பிட்சையாம் கரத்தல்
வாவு கரவு அது இரவே இரத்தல் வழிபாடு உடன்
தாவுஇல் அருச்சனை ஆராதனை பூசை தான் என்பரே. (20)

### தொழுதல், காமவினைத்தொடர்பு, உண்டாதல்

444. வணங்கல் பராதல் பரவுதல் அஞ்சலி வந்தனையே
*தணிந்து பணிதல் இறைஞ்சலும் தாழுதலும் தான் தொழுதல்*
இணைந்த வெங் காமவினைத்தொடர்பு என்பர் இணை விழைச்சுப்
புணைந்து சொல் பூத்தல் பயத்தல் உண்டாதல் பொருட்டதுவே. (21)

### மெய்க்கூட்டம், வெட்டல், களைதல்

445. குறித்த புணர்ச்சி கலவி இரண்டும் மெய்க்கூட்டம் அதுஆம்
ஒறுத்தல் தடிதல் துணித்தல் துமித்தல் உடன் அறுத்தல்
எரித்தல் பிளத்தல் வகிர்ந்திடல் ஈர்த்தல் இது ஆகும் வெட்டல்
பறித்தல் உடன் கட்டல் குற்றல் களைதல் பயன்படுமே. (22)

### நெரித்தல், ஞெமுங்கல், கோறல்(கொல்லுதல்), அழித்தல்

446. நெரித்தல் வெறுத்தல் ஞெமுங்கல் அமுங்கலை நேர் உரைக்கும்
எருக்குதல் காதுதல் எற்றுதல் கோறல் எழில் துலைத்தல்
முருக்குதல் எண்ணில் ஒருபொருளாம் என்பர் முன் செகுத்த
அரித்தல் சவட்டல் உதைத்தல் தெறுத்தல் அழித்தல் அதே. (23)

### தோண்டல், துளைத்தல், கொழித்தல், வாய்மைச்செயல், கடைதல்

447. தொட்டல் அகழுதல் தோண்டல் குயில் தொள்கலும் துளைத்தல்
மட்டின் வறண்டல் வரன்றல் கொழித்தல் என்றூதலதே
உட்டெரிவாகும் உவனி[ளி]த்தல் வாய்மைச்செயல் உரைக்கும்
கட்டல் ஞெலிதல் கவர்தல் குடைதல் கடைதல்அதே. (24)

### சிந்துதல், வடுப்படுதல், தினவு, கூடிடல், ஆறலைத்தல், மீதூர்தல்

448. அடர்த்திற் தவற்றல் சிதர்த்தலும் சிந்துதல் ஆம் கதுவாய்
வடுப்படல் ஆகும் கண்டூர்த் தினவு ஆம் என்பர் மாறுஇன்றியே
அடுத்தலும் கூடிடலான வழிபறி ஆறலைத்தல்
உடத்தின் நெருக்கல் இடங்கழி மீதூறுதல் என்பரே. (25)

### அலைப்பு, முடங்கல், கொலைத்தொழில், குன்றல்

449 உலைத்தல் நெரித்தல் உடன் மிறை வேதனையோடு செறல்
அலைப்பு எனல்ஆகும் முணங்கன் மடங்கல் அது முடங்கல்
தொலைத்திடல் வெட்டல் அணங்கண்டல் பிட்டல் சொல்லில் இவை
கொலைத்தொழில் என்பர் தலை எஞ்சல் சிங்கலும் குன்றல்அதே. (26)

### சாதல், வேறுபடுத்தல், வேற்றுமை

450. வீதல் விளிதல் உலைதல் முடிவு உடன் வீட்டல் பொன்றல்
மாய்தல் தபுதல் உடன் துஞ்சல் சாதலின் மாற்றம் என்பர்
பேது உடன் வீற்றுத் திரிவு உடன் விள்ளலும் பேசில் இவை
தீதுறு வேறுபடுத்தலும் வேற்றுமையும் செயுமே. (27)

### உள்தளர்வு, வளைப்பு, நிணர்வு

451. உற்ற இளைப்போடு அமுங்கலும் ஒல்கலும் உள்தளர்வாம்
சுற்றுதல் தொட்டல் வரைத்தல் பிடித்தல் தொடித்தல் உடன்
முற்றுதல் சூழுதல் சூழிபோதல் என்று மொழி வளைப்பு
மற்று வலத்தல் சுவலல் சுற்றல் நிணர்வாம் அதுவே. (28)

### யாத்தல்(கட்டல்), விடல்

452. விசித்தல் சிமிழ்த்தல் பந்தித்தல் சுருக்குதல் வீக்குதலோடு
அசைத்தல் இமிழ்த்தல் வரித்தல் தொடர்ந்திடல் ஆர்ப்புக் கட்டல்
இசைத்தலினோடு இயாத்தல் என்று ஓதுவர் தீர்த்தல் உடன்
வசத்தினில் தீர்த்தல் விடல் பொருட்டாகிய மாற்றங்களே. (29)

### பூசல்

453. திறி முரண் ஞாட்பு இகல் ஆயோதனம் மொய் செரு வெஞ்சமம்
உறழ்வு இரணம் சமர் தாக்கே சினவுதலோடு அமரே
விறல் தெவ்வுப் போர் சங்கிராமம் சமீகம் வினை மலைவு
மறம் மலியும் பகை ஆகவம் பூசலின் மாற்றங்களே. (30)

### மிகுத்தல், கடுத்தல், கொற்றவள்ளை, தழிஞ்சி

454. பாரித்தல் பூரித்தல் தோற்றுதல் என்பது மிகுத்தல்
வாரித்தல் தன்னொடு வாராணை ஆகும் அது தடுத்தல்
கோரத்து அடையலர் நாடு அழிவு ஆவது கொற்றவளைத்
தாருற்ற மாற்றலர் மேல் படராமைத் தழிஞ்சியதே. (31)

### பாதீடு, கொட்டாவி, உயிர், வருத்தம்களைதல், உளம்வெம்பிக் காட்டல், உயிர்த்தல்

455. அளித்தலும் பொய்தலும் பாதீடு கொட்டாவி ஆபித்தலே
ஒளித்தமெய் ஆவி உயிர்ஆம் அயாவுயர்த்தல் வருத்தம்
களைதல் உறக்கம் வியர்த்தல் உளம்வெம்பிக் காட்டல்அதுஆம்
தளப்பம் உடன்உற்று உயிர்[த்]தல் உயிர்போதரவிடலே. (32)

### காதித்தல், உமிழ்தல், புயல்சொரிதல், தெவிட்டல்

456. (கழி)ய முனித்தல் வறத்தல் உறுத்தலும் காதித்தல்ஆம்
ஒழுகிய பில்கல் பிலித்தல் உமிழ்தல் பொருள் அது என்பர்
பொழிதல் பனித்தல் உடன் ஈடல் என்னில் புயல்சொரிதல்
விழைதல் உமிழ்த(ல் இமிழ்தல்) தெவிட்டலின் மேல்வருமே. (33)

## மழைவிடல், உடன்படல், பொழுதுநீட்டித்தல், மூடுதல்

457. மட்டுறு தூவல் துவலை துளித்தல் மழைவிடலாம்
ஒட்டல் வலித்தல் உடன் நேர்தல் என்னின் உடன்படலாம்
நெட்டை நெடித்தல் பொழுதொடு பாணியும் நீட்டித்தல்ஆம்
முட்டல் மொய் மூய்தல் கவித்தலும்ஆம் என்பர் மூடுதலே. (34)

## மொய்த்தல், எழுப்புதல், சோர்வு, வழு, குடியிறை

458 மூசலும் மூழ்த்தலும் மூஞ்சலும் தான்இவை மொய்த்தல் என்பர்
ஏசல் உணர்த்தல் எடுப்பல் எனில் இங்கு எழுப்புதலாம்
மாசறு சோர்வு (கயக்கு பிற)க்கு வழு அது என்பர்
கூசும் கரமும் கடனும் கறையும் குடியிறையே (35)

## அரசிறை, சுங்கம், எழுச்சி மிகுதி, எழுகிடல்(எழுப்புதல்)

459. அரசிறையே திறை யன்றி உலகிறையாகும் சுங்கம்
உரவு கலித்தல் அகம் சுற்றுதல் பம்மல் உடன் அருறல்
தருவது எழுச்சி மிகுதியின் பேர் என்பதாம் இவர்ச்சி
அருளும் உறுமலோடு ஒக்கம் உகைத்தல் எழுகிடவே[லே]. (36)

## தழீஇக்கோடல், சார்வு

460 தணவுதல் அன்றி முயங்குதல் விள்ளல் தழீக்கோடலாம்
மணவுதல் தோய்தல் தொடுத்தல் புணர்தலோடு அண்ணுதலே
நணுகுதல் புல்லல் பொருந்தல் உடன் சார்ச்சி நண்ணுதலே
குணமொடு செல்தல் படிதரும் சார்வு என்று கூறுவரே (37)

## கலத்தல், தடவுதல், திமிர்தல், வளைதல், வைப்புறுத்தல்

461. கடிது கலாவல் துளாவல் அளாவல் கலத்தல் என்பர்
தடவுதல் ஆகும் வருடலும் நீவ(லும்) தைவரலும்
விடவு நி[தி]மிர்தல் துவருதலாம் அவ் வளை(தல் வக்ரம்)
உடன்மெய் தெருட்டல் வருட்டல் இவை வைப்புறுத்தல் அதே. (38)

## குற்றுதல், முளைத்தல், விரிதல், பதனழிவு

462. அடுத்தல் அவைத்தலும் குற்றுத(லாம் மலர்)தல் அங்குரித்தல்
பொடித்தல் வெடித்தல் இவையே முளைத்தலும் போதுஅலர்தல்
வெடித்தன் மலர்தல் எதிர்தல் இம்மூன்றும் விரிதல் என்பர்
அடைத்தல் தழைத்தல் (ஊழ்த்தல்) செவ்வியோடு பதனி[ன]ழிவே. (39)

## சமைத்தல், மறித்தல், அசைதல், எட்டல், மேவல்

463. இசைவொடு சேர்த்தல் அமைத்தல் சமைத்தல் இகுத்தல் உடன்
விசைவுறு வீழ்தன் விழுதன் மரி[றி]த்தலை மேவும் என்பர்
அசைதல் துயல்வரலாம் எட்டல் ஆவது அணவுதலாம்
திசைபுகழ் வீழ்த்தலும் ஆர்த்தலும் மேவலைச் செப்பும் அதே. (40)

## கூடல், சரண்புகல், காவல்

464. குறைவில் பொருந்தல் சிவணல் உடன் ஒல்லல் கூடல் என்பர்
மறைபுகுதல் சொற் சரண்புகல்ஆம் என்பர் மண் கடியும்
சிறையும் ஒழுக்கம் நவிற்றல் செறிந்து துற்றல் பயில்தோடு
உறைதரு கட்டு (கதவு காவலா)க உரைசெய்வரே. (41)

## ஏவல், வறுமை, ஒழுக்கம், அவித்தல்

465. வியலரை ஏவல் வியங்கோள் வறுமையும் வீதுஇது என்பர்
இயல்பொடு மாலை கையாறே நட[டை] நிழலே சரிதை
செயல் இவைய[யு]ம் ஒழுக்கம் நவிற்றல் ெ...துற்றல்
பயிலல் நொகுத்தல் அவித்தல் என்று ஓதுவர் பாவலரே. (42)

### மூட்டல், செறித்தல், கூட்டம், விடுதல், வேகம்

466. மோகமின் மாட்டல் பொருத்தல் இரண்டையும் மூட்டல் என்பர்
ஆகமே மூழ்கல் குளித்தல் செறித்தல் அதுஆகும் என்பர்
யோகமும் கூட்டம் வியோகம் விடுதலை கூறும் என்பர்
வேகம்அது ஓதில் கடுமையும் வெய்ய விவேகமுமே. (43)

### செய்கடன், குயிலுவம், குமரனாடல், அரியினாடல்

467. செயலுறுகின்ற நியமம் நியதியும் செய்கடனாம்
பயிலும் நரப்புக் கருவியில் சேர்தரு பாடல்பண்பே
குயிலுவம் ஆகும் கொடை துடியாடல் குமரனதுஆம்
அயர்தரு மல் அல்லியம் குடம் ஆடல் அரியதுவே. (44)

### சிவன்ஆடல், திருமகள்ஆடல், அயிராணிஆடல், காமன்ஆடல், துர்க்கைஆடல்

468. படர் கொடுகொட்டியும் காபாலம் பாண்டரங்கம் சிவனாட்டு
அடர்சேர் பாவை திருமகள் ஆட்டு அயிராணியதுஆம்
கடையம் நடம் புகழ் பேடுஆடல் காமனதுஆகும் என்பர்
துடியிடை மாதர் மரக்கால் அது ஆடலும் துர்க்கையதே. (45)

### கூத்து, நிருத்தம், குரவை

469. பரதம் நடனம் உடன் ஆடல் நாடகமே பிடிதம்
தரமுடன் நாடனம் ஆலுதல் தூங்கிடல் தாண்டவம் கூத்து
உரம்மிகு நாட்டியம் கண்ணி நிருத்தமும்ஆம் குரவை
கரமலர் கோத்து உடன்ஆடல் என்றே சொல்லுவர் கற்றவரே (46)

### நடன விகற்பம், துணங்கை

470. கரணம் மலைப்புக் குனிப்பும் உள்ளாளம் கடகம் பி[வி]த்தம்
உர(ணு) பவுரியம் பிரமா[ர]ம் வீரட்டதாள[ன]ம் உடன்
பகருவின் நட(ம் இ)ருகை முடக்கிப் பழுப்புடையில்
துரிதலல் இதத்தின் அடித்து உடன் ஆடல் துணங்கையதே. (47)

### வேலன்ஆடல், கை குவித்துத் தட்டல், வாய்தட்டல், குந்தியகாலின் நிலை

471. (வெ)றியே அணங்கு கழங்காடல் வேலனது ஆடல் அதுஆம்
குறியால் அகங்கை குவித்து முன் தட்டலும் கொம்மையதாம்
அறியாத பிள்ளைகள் வாய்தட்டல் ஆவலங்கொட்டல் அதுஆம்
நெறியானம் குஞ்சித்தல் குந்திய காலின் நிலை என்பவே (48)

### கைகூப்பி மெய்கொட்டி நிற்றல், தாளவொத்து, நடனம்

472. நீடு குடந்தமும் கைகூப்பி மெய்கொட்டி நிற்றல் என்ப
தேடிய த(ாளத்தின் ஒ)த்தினவாம் சதிசீர் அது என்பர்
ஆடில் அதனின் நட[டி]க்கும் நடனமும் ஆகும் என்பர்
பாடல் பயிலும் பனுவல் தமிழ் தெரி பார்த்திபரே. (49)

### பாரதிதீப வரலாறு

473 கயல்தங்கு வாவிக் கடம்பையர் ஆதி கைக் கார்நிகரும்
இயல்தங்கு செந்தமிழ்ப் பாரதி பாவலர் ஏற்றுஅரிதாம்
உயர் செஞ்சொலால் சொன்ன பாரதிதீபத்தின் ஓர் ஒன்பதாய்
முயலும் செயல் பற்றிய பேர்இயலும் முடிந்ததுவே. (50)

## 10. ஒலிபற்றிய பெயர்த் தொகுதி

### எழுத்தின்ஓசைச் சொல்

474. கருது நொடியும் பனுவலும் கூற்றும் கதையும் சொல்லும்
உரையும் மறையும் மொழியும் வினாவும் ஒலிப்பு அறையும்
மருவு மிசையும் கிளவியும் வாணியும் மாற்றமுமே
அரிய எழுத்தினில் ஆகிய ஓசைச்சொல் ஆனதுவே. (1)

475 பகர்தல் இயம்பல் குயிறல் மறுத்தல் பன்னல் சொற்றல்
புகறல் விளம்பல் கரைதல் வழங்கல் புகழ்தல் செப்பல்
இகலொடும் ஓதல் மிழற்றல் அறைதல் வசனம் இவை
இகலுறு கட்டுரை பேசுதல் கூறல் சொல் என்பர்களே. (2)

**உண்மை, பொய், குறளை, புறங்கூறல், வாழ்த்து**

476. திடம் ஆணை வாய்மையும் சரதம் மெய் உண்மை சிறந்தது என்பர்
மடி மாயை வஞ்சமுமே சகடம் கூடம் வாய்த்திரத்தோடு
அந்தி சதமும் [உடன் நிசிதமும்] பொய் பிசினம் குஞ்சமும் குறளை
கொடுவாய் எனில் புறங்கூறு ஆசில் வாழ்த்து எனக் கூறுவரே. (3)

**திசைச்சொல், வாழ்த்து, பெருஞ்சொல், சிறுசொல், பழிச்சொல்**

477. மருவிய தேசிகம் ஆகும் திசைச்சொல் வழுத்தல் உடன்
பரவல் துதித்தல் உடன் ஏத்தல் போற்றல் பழிச்சல் இவை
தெரிதலில் வாழ்த்துப் பலரறிசொல் பெருஞ்சொல் சிறுசொல்
அருளில் பழிச்சொல் பழிஅவை கெளவையும் ஆம்பலுமே. (4)

**அம்பல், அலர், இடக்கர், கீர்த்தி**

478. அடக்கம் உடன் சிலர் தம்முள் புறஞ்சொல்லல் அம்பல் என்பர்
அடக்கம் இல்லாமல் பலர்புறங்கூறல் அலர் அது என்பர்
இடக்கர் மறைத்து உரையாடல் மெய்(யினொடு) இசை புகழும்
கிடைத்து அருள் சீர்த்தியும் மீக்கூறலும் சொல்லில் கீர்த்தியதே. (5)

**ஏற்றம்(புகழ்), மிகுபுகழ், தேற்றம், உறுதிக்கட்டுரை**

479. எழில்புனை தோற்றம் உடனே மலைவு எனில் ஏற்றம் அது ஆம்
விழைதரு சீர்த்தி மிகுபுகழாகி விடும் குறிக்கோள்
வழுவு[வ]று ஓர்ப்புக் கடைப்பிடி தேற்றத்தின் மாற்றம் அது ஆம்
கழறல் இடித்தல் உறுதியது ஆகிய கட்டுரையே. (6)

**உரப்புதல், தேற்றமொழி, நிரம்பாதசொல், நிமித்தம், புனருத்தி மோனம்**

480. தெழித்தல் உரப்புதல் மன்றஎன் மாறுஎன் சொல் தேற்றம் அதுஆம்
நிழற்றன் மிழற்றன் நிரம்பாதசொல் சொல் நிமித்தம்எனில்
தொழத்தகு வாய்ப்புள் விரிச்சியதுஆம் சொன்ன சொல்லைச் சொல்லல்
மொழிப் புனருத்தி என் வாளா என் சொல் எனின் மோனத்ததே. (7)

**சூளுறவு, விளித்தல், கீழறுப்பு**

481. சூளொடு வஞ்சனையே சபதம் சொல்லி[ல்] சூளுறலா[வா]ம்
நீள விளித்தல் கரைதன் முன் கூவுதல் நின்று உளைத்தல்
ஆளை அழைத்தல் அறைகூறல் சொல்லல் விளை[ளி]த்தல் அதுஆம்
கேள் அறைபோதலும் கீழா[ழ]றுப்பு ஓதல் கிளவியதே. (8)

**முதுசொல், காரணச்சொல், உபசாரச்சொல், விழைவுறுசொல், வினாவல், வினாவெதிர் சொல், நெடுமொழி**

482. மொழிமை முதுசொல் கதை காரணச்சொல் முகமாற்று உடன்
அழகுறு நன்னயம் உபகா[சா]ரம் அசதி நகையே
விழைவுறு சொல்லு வினாவல் கடாவல் விடை எதிர்சொல்
பழுது இல் நெடுமொழி தன்னை மேம்பாடு படச்சொல்லலே. (9)

**அல்லவாம் எனல், கேட்பித்தல், உரையசைச்சொல், முன்னிலைஅசைச்சொல்**

483. அன்று என் கிளவியது அல்லவாம் எனும் அம்ம என் சொல்
ஒன்றது கேட்பிக்கும் ஆங்க அதுவே சொல் உரையசையாம்
என்று உரை செய்வர் மியா இகமோ மதி யோடு இகும் சின்
குன்றிய சொல் முன்னிலை அசைச்சொல் என்று கூறுவரே. (10)

**அசைநிலைச்சொல், இசைநிறைஅசைச்சொல்**

484. வாய பிற பிறக்கு யா கா அரோ வேழ் மாது எனும் சொல்
ஆயது அசைநிலை ஆகும் இசைநிறையோடு அசைச்சொல்
ஏயும் குரையும் எனும் ஒடு இரண்டினும் எய்தும் ஒப்புப்
போயதோர் போலியும் அப்பொருட்டாகப் புகலுவரே. (11)

### சாரியை, இடைச்சொல்

485. இன் அன் வற்று அத்து அம் ஒன் ஆன் இக்கு அக்கு இகந்தேயொடு அம்மே
அன் மன் இவை சாரியை அதுவாகும் எம் ஏம் தம் அம் ஆம்
கொன் மன் உடன் ஏன் அள் ஆர் தம் பாக்குக் கொல்லொடும் முந்
தன்னுடன் தில் எனா என்றா இடைச்சொலின் தன்மையதே. (12)

### எழுத்தின் சாரியை, வேற்றுமை உருபு, சுட்டு, ஐயச்சொல்

486. காரமும் மானமும் கானும் கரமும் கருது எழுத்தின்
சாரியை ஐ ஒடு (கு) இன் அது கண் தனைக் கிளக்கில்
ஓரும் அவ் வேற்றுமையின் உரும் மூன்று உரைக்கில் சுட்டு இது ஆம்
கூரிய கொல் அனை யாது என்னை ஐயச்சொல் கூறுவரே. (13)

### இடத்தின் ஐயுற்றசொல், கல்வி, வேதநூல்

487. ஏதம் இல் ஆண்டையு யாங்கும் இடத்தினுக்கு ஏற்ற சொல்லாம்
ஓதி அறிவு கலை கேள்வி சால்பும் உரைக்கில் கல்வி
ஆதி நல்நூல் எழுதாக்கேள்வி சாகை அரும்சுருதி
வேதம் மறை இவை தான் என்று கூறுவர் வித்தகரே. (14)

### வேதநூலின் இருவகைப் பொருள், ஞானபாகை உபநிடதம், வைதிகம்

488. அருண் ஞானபாகை உடன் கருமபாகை என்று ஓது நன்னூல்
அருமறைப் பொருள்படும் நூல் வேதத்தின் ஏதமற்ற
ஒரு ஞானபாகை உபநிட[த]ம் வேதத்தின் உட்பொருளாம்
வருவேதம் தன்னின் வழி மார்க்கமாகும் அவ் வைதிகமே. (15)

### முதல்வேதம், இரண்டாம் வேதம், சாமவேதம், நூல்

489. சாரும் பவுடிகம் முன்னையது ஆகும் தயித்திரியப்
பேர் இரண்டாவது சாமமுங் கீதப் பொருநடையாம்
ஆரிடம் ஆகமமே அதிகாரம் அரும்பிடகம்
பாருள தந்திரம் பனுவலும் நூலின் பன்மையதே. (16)

### மூதுரை, பாடம், சூத்திரயாப்பு

490 மூதுரை முன்னை பழமொழியோடு முதுமை என்பர்
ஓதமை ஆடலும் பாடம் அது ஆகும் உரை விதியின்
ஏதம்இல் சூத்திர யாப்பாம் அடிவரையின்றிச் செய்யில்
கோது அறு கேள்வி அகவல் பொருள் எனக் கூறுவரே. (17)

### பாயிரம், ஓத்து

491. பூத்திகழ் பாயிரம் நூன்முகத்தோடு புறவுரையாம்
நீத்திலவாத இனமணி தன்னை நிரைத்தது போல்
வாய்த்த இனப்பொருள் தன்னை ஒருவழி வைத்து உரைப்பது
ஓத்து என ஓதுவர் சொற்றமிழ் நூல் கற்று உயர்ந்தவரே. (18)

### படலம், விருத்தி நடையது, விரித்துரை, பொழிப்புரை

492. புரக்கும் ஒருமொழி அன்றி விரவும் பொதுமொழியாய்
இருக்கும் அது ஆகும் படலம் சருக்கம் இலம்பம் முற்றும்
விருத்தி நடையது என்றாம் விரித்துரை மெய்யுரையின்
பொருள்திறமாம் அப்பொருட் பிண்டம் அதுஆகும் பொழிப்புரையே. (19)

### பதிகம், இலக்கியம், அரும்பொருள்நடை

493 கோட்டுப் பதி(கம்) பலவனச் சொற்பொருட் கூட்டம் என்பர்
ஒட்டும் இலக்கியம் தன்னோடு உதாரணமும் எடுத்துக்
காட்டல் அது ஆகும் பிசிதியும் ஞா(பக)மும் கருதின்
நாட்டிய அப்பொருளின் நடையாக நவிலுவரே. (20)

### யாப்பு, வெண்பா, கலிப்பா, ஆசிரியப்பா, வண்ணகம்

494. கவிதையுடன் செய்யுள் பாத் தூக்குப் பாட்டுக் கவியது என்னின்
உவமையில் யாப்பு முதற்பா வெண்பா அது உரை முறைமை[முரற்கை]
அவிர் கலிப்பாத் தொகை தன்னோடு அகவலும் ஆசிரியம்
இவரும் அராகம் முடுகியல் வண்ணகம் என்பர்களே. (21)

### குளகதச்செய்யுள், சந்தம், தாண்டகம், கணக்கு

495. தெரி குற்றெழுத்துத் தொடர்பாக் குளகதச்செய்யுள் என்பர்
இருபத்திருமுன்று எழுத்தாகி நான்கடி எய்தும் செய்யுள்
தருவது சந்தம் தானமிகு தாண்டகம் தான் அது என்பர்
கருது எழுத்தோடு எண் இவைதான் இரண்டும் கணக்கு என்பரே. (22)

### எண், எழுத்து, ஒற்றெழுத்து, காஞ்சி

496. இடறு இல் கரணம் கணிதம் இவை எண் எழுத்து உரைக்கின்
வடிவொடு தன்மை பெயர் முடிவே என மன் எழுத்தாம்
உடைய விராமை புலுதம் உடன் மெய்யும் ஒற்றெழுத்து
கட நல் உலகம் புகப் பாட்டு எழுந்தது காஞ்சியதே (23)

### முதுமொழிக் காஞ்சி, பேரியற் காஞ்சி, பொருண்மொழிக் காஞ்சி, முதுபாலை

497. கழிந்தவற் காட்டின் அதுவே முதுமொழிக் காஞ்சி என்பர்
அழிந்து அகக் கேட்டு உரை பேரியற் காஞ்சி அருள் மொழிமெய்
மொழிந்தசொல் சொல்லல் பொருண்மொழிக் காஞ்சி முதுசுரத்தின்
இழிந்து இரைக்கு ஏங்கல் முதுபாலையாக இயம்புவரே. (24)

### குற்றிசை, குறுங்கலி, பாசறைமுல்லை, இல்லாண்முல்லை

498. பன்னித் துறந்தது குற்றிசை முற்றப் பழி அவன் தன்
முன் நின்று உரைத்தல் குறுங்கலி பாசறை முல்லைக் கொண்கண்
மின்னினை உள்ளல் இல்லா[ண்]முல்லைப் பாசறை மீது இறையை
உன்னித் தகாதுஎன்பர் நன்னூல் நெறி கற்று உயர்ந்தவரே. (25)

### இசைப்பாட்டு, இன்னிசை, பல்லியந்தருபாடல்

499. வரி கொளை பன்[ண்] இசை பாண் கானம் பாணி மருவிய கந்
திருவம் மென் கீதம் உடன் கேயம் காமரம் சேர் இசையாம்
இருளறும் இன்னிசை சங்கீதம் பல்லியம் இராகம் உடன்
பரவி அமர்ந்த இசைகர் குனிதரு பாடலதே (26)

### நாற்பெரும்பண், நால்வகையாழ்

500. மொழிதரு பாலை குறிஞ்றி மருதம் மென் முல்லை என்ப
எழில்புனை யாழ்வகை நாற்பெரும் பண் என்பர் யாழை[மை] நல்யாழ்க்
கொழிதரு செவ்வழி யாழறையே அக் குறிஞ்சி முல்லை
விழைபயிர் ஏனை எனின் நேரிசையின் விகற்பமதே. (27)

### குறிஞ்சியாழ்த்திறன்

501. நந்து படுமலை காந்தாரம் பஞ்சுரம் நைவளைத்தொடு
அந்த மருள் செந்திறம் அரற்று அயிர்ஆம் குறிஞ்சி
சிந்தை இல்லாதவ(ரா)கங் குறு(ங்கலி) தேர்நிறமே
பந்தம் இலாக்காணம் குறிப் புத்து... பாலையதே. (28)

### பாலையாழ்த்திறன், மருதயாழ்த்திறன், செவ்வழி(முல்லை)யாழ்த்திறன்

502. படுமலை செவ்வழியே எனில் செம்பாலை பாலையுடன்
விடல்தரும் பாலையுடன் கொடிப்பாலை விளரி என்பர்
வடிவில் வியந்தை நவிரே குறிஞ்சி மருதத்தது ஆம்
திடனில் பெயர்த்திறம் சாதாரி யாமையம் செவ்வழித்தே. (29)

### நெய்தல்யாழ்த்திறன், பாடலுக்கு ஏற்பது, ஆடலுக்கு ஏற்பது, வள்ளைப்பாட்டு

503. நீடு விளரித் திறங்காலம் யாழ் நெய்தல் நீணிலத்தாம்
பாடலுக்கு ஏற்பது செந்துறைப் பாட்டு மென் பாவையன்னார்
ஆடலுக்கு ஏற்பது வெண்டுறை ஆகும் அவர் உலக்கை
மாடமுற் கொண்டு மென் சீர்பாடிக் குற்றலும் வள்ளையதே. (30)

### எழுத்திலா ஓசை, அனுகரண ஓசை

504. பிளிறல் குரைத்தல் இரைத்தல் சிரத்தல் பிரத்தல் உடன்
குளிறு பயில்தல் உழைத்தது எழுத்துடன் கூரவிசைசெய்
எளு(மென)ல் அழுமெனல் கல்லெனல் ஒல்லெனல் இம்மெனலோடு
அளவில் ஞெரோ[ஞொ] பொள்ளெனலாம் அனுகரணத்ததுவே. (31)

### ஆரவாரம்

505. இரைத்தல் திரைச்சி தழங்கல் கறங்க ... ல் ஞெள்ளல்
உரைத்தல் துவைத்தல் கலித்தல் கரைத்தலும் பொலி
குரைத்தல் தெளித்தல் அரவமோடு ஆகுலம் எக்காளித்தல்
புரைத்தல் துழனியோடு ஆர்ப்பு ஆரவாரம் வெம் பூசலதே. (32)

### பாரதிதீப வரலாறு

506. கன்னல் குலாவும் வயல் சூழ் கடம்பைமன் கஞ்சமலர்
மின்னுளவாகும் புய பாரதி திருவேங்கடவன்
பன்னிய பாரதிதீபத்து இடையினில் பத்து எனவே
முன்னும் ஒலி பற்றியே பேர் இயலும் முடிந்ததுவே (33)

## 11. ஒருசொற் பலபொருட் பெயர்த் தொகுதி

### ஏமம், விழுமம், செழுமை

507. சேமமே காவல் பொன் இன்பம் ஏமாப்பு இரவு செறி மயக்கம்
ஏமம் அது ஆகும் சிறப்பொடு சீர்மை இடும்பை இசை
தாம் உரை செய்யில் விழுமம் அதுஆகத் தரும் செழுமை
நாமம் அது என்னில் வளனே கொழுப்பு எனும் நானிலமே. (1)

### உறை, உந்தி

508. நிந்தை செய் கூறை கழுவு உவர்நீர் துளிநீர் மருந்து
பந்த வென் நோய்தவிர்த்து இன்பம் தருபொருட் பாலுறுபீர்
முந்திய காரம் ஒழுகல் இடைச்சொல் மொழியின்உறை
உந்தி கொப்பூழ் நதி தேருருள் யாழ்க்கண்ணது ஓர் உறுப்பே. (2)

### பாழி, நந்தல், விருப்பு, வெம்மை

509. அன்பால் உறையுள் சயனமும் ஊரும் அடல்வலி யு[ம்]
வன் பாழி ஆக்கமும் கேடும் அதுஆம் நந்தல் என்பு உருக்கும்
மின்பாடல் ஆடலும் விருப்போடு எனல் வேண்டல் வெம்மை
*வன்பாட லாவ குகன்மாற்க கூத்தின் வகுத்தனரே. (3)

### ஓசை

510. கலித்தல் அழுங்கல் துவைத்தல் இரங்கல் கவனம் விம்மல்
சிலைத்தல் இமிழ்த்தல் இரட்டல் அழுங்கல் சிலம்பல் சும்மை
நலத்தகு கம்பலைத் தோடணை நெய்தல் நவிற்றல் உடன்
ஒலித்தல் இசைத்தல் கறங்கல் என்று ஓதுவர் ஓசையையே. (4)

### ஒல், பண்ணை, புரை

511. ஓதை புலம்பல் அரவமோடு ஓசை ஒலியுடனே
நாதமும் ஒல் என்பர் நன்னீர்ப் படுவும் நல் நுதலார்
ஆதரவான விளையாட்டும் ஆயமும் ஆகும் பண்ணை
போது உவமைச்சொல் உயர்பு உடன் குற்றம் புரை என்பரே. (5)

### யாமம், தாமம், வரைதல், பரிவு

512. யாமம் உரைக்கில் பொழுது உடன் சாமம் இரவு அது என்பர்
தாமம் முகை நன் ஒளியுடன் தார் என்பதாம் வரையுமாம்
அது நீக்குதல் கொள்முதலாம் என்பர் ஆன துன்பம்
காமுறும் இன்பம் இரண்டும் பரிவு எனக் கற்பித்ததே. (6)

### மஞ்சு, துஞ்சுதல், வாமம், வெறி

513. மஞ்சு அது உரைக்கின் முகிலோடு இளமை வனப்பு அது என்பர்
துஞ்சுதல் சாதல் உறங்கல் நிலைத்தலும் சொல்லும் என்பர்
எஞ்சலின் வாமம் குறங்கே குறள் இடப்பால் அது என்பர்
மிஞ்சிய நாற்றம் விரை அணங்கு ஆட்டு வெறி என்பரே. (7)

### பாணி, கோடகம், கோதை

514. நீடிய நீரொடு கையே நெடித்தல்பொழுதோடு
நேராடல் உட்பல்லிபம் பாணி மரக்கொம்பு பாய் பொதும்பு
கோடகம் ஆகும் குரங்குடனே என்பர் கோதைமுடி
சூடியசேரன் வில் நாண் துடர் கைக்கட்டித் தொங்கல் அதே. (8)

### வஞ்சி, தோல், வாரணம்

515. நாற்பாவில் ஒன்று உடன் நாற்றகத்து ஓர் கொடி நன்னுதல் பேர்
மேற்போய்விடுஞ்சொல் கருவூரும் தான் வஞ்சி வேழம் உடன்
தோற்பன போர்வை பலகை வனப்பு இவை தோல் அது என்பர்
காற்போர் செய் கோழியும் வேழமும் வாரணம் காண் என்பரே. (9)

### மால், மா, மலைதல்

516. அரி முகில் வேட்கை மருந்து மயக்கமோடு ஆன புதன்
கருமையும் ஏனைப் பெருமையும் மால் என்பர் காமர் வண்டு
திரு நிறம் ஓடு இருளும் கருமை திகழ் பருமை
மருவிய மா மலர்சூடல் பொருதல் மலைதல் அதே. (10)

### சூர், தார், விண்டு, சிலை

517 சூர் அது வஞ்சனை அஞ்சாமை தெய்வமும் சொல்லும் என்பர்
போர் எதிர் செல்லும் கொடிப்படை ஆவீற் புனைமணியும்
வேரிசெய் மாலையும் தார் என்பர் மாயனும் வெற்பும் விண்டாம்
மேருறு வில்லும் மலையும் சிலை என்று இயம்புவரே. (11)

### கொண்டல், ஆரல், ஆரம், குயம், காரிகை

518. வாருறு மேகமும் கீழ்காற்றும் கொண்டல் செவ்வாய் கார்த்திகை
ஆரல் முத்து ஆத்தி அணி மாலை சந்தனம் ஆரம் என்பர்
கூர்அரிவாளோடு இளமை பின் கொங்கை குயம் அது என்பர்
காரிகை மாது எனில் கட்டளையாகும் கலித்துறையே (12)

### இவர்வு, சாறு, அளி, குவலயம்

519. சேறல் ஒழுக்கத்துடனே விரும்பல் செலுத்துதலே
ஏறல் இவர்வு என் கிளவியதாம் கள் இசை விழவே
சாறுஅது ஆகும் மதுக் கொடை வண்டினம் தான் அளியே
கூறுவர் நெய்தல் உடன் நிலம் ஆகும் குவலயமே. (13)

### வைகல், தொண்டு, சேய், பொழில்

520. கழிதரு நாள் புலரிக்காலம் வைகல் தங்கல் பொருட்டாம்
பழமை நவம் மிகும் கேண்மை தொழும்போடு ஒன்பானும் தொண்டாம்
மொழியின் இளமை மகவும் செவ்வாயும் முருகனும் சேய்
பொழில் எனில் காவும் உலகமுமாகப் புகலுவரே (14)

### பிரசம், அரில், கோடு, படு

521. பிரசம் எனும் பெயர் தேனீயும் தேனும் பிணக்குக் குற்றம்
அரில் எனவாம் சங்கு ஊதும் அக் கொம்புடன் ஆர் மருப்புக்
குரையும் மரக்கொம்பு நீர்க்கரையும் வெற்பும் கோடு அது என்பர்
பரவு பெருமை படுதல் ஒலி இவை பாடு என்பரே. (15)

### வை, இளமை, கறை, குளிர்தல்

522. மொழிதரு கூர்மை நெல்தாள் புல்லு வை என்பர் மொய் இளமை
களிதரு காமமும் தன்மையும் சொல்லும் கறை எனும் சொல்
ஒழுகும் உதிரம் திறையே நிறமும் உரைக்கும் என்பர்
*குளிர்தல் உரைக்கிற் துளையே மராமெனக் கூறுவரே. (16)

### சிறை, பரிவு, வேழம், அளகம், சூழி

523. சிறை எனில் காவல் இறகுஆம் பரிவு செயல் விருப்பாம்
விறல் இபம் கன்னல் கொறுக்கை வெதிர் இவை வேழம் என்பர்
அறைமட மாதர்குழலும் பினலும் அளகம் என்பர்
துறைபயில் வாவி முகடா...முமென் சூழியதே. (17)

### வயா, பரி, கண்டகம், தொடி, அந்தம்

524. மருவும் வயா எனின் வேட்கைப்பெருக்கம் வருத்தம் அதுஆம்
பரி பரியே செலவே பாதுகாவல் படர் வருத்தம்
சுரிகை ஒள் வாள் முள் இவை கண்டகம் தொடி தோள்வளையோடு
ஒருபலமாம் அந்தம் ஈறு அழகாக உரைசெய்வரே. (18)

### கந்தம், கடு, துண்டம், கண்டம், குயிறல்

525. கடியே கிழங்கு புனல் கந்தமாகும் கடுமரமே
விடமே கடு என்பர் துண்டம் கழுத்து மெய்சேர்கருவி
அடல்வாள் திரையுடன் தேசமும் கண்டம் அதுஆம் செறிதல்
குடையொடு கூறல் இவை...யென்பர் குயிறலுமே. (19)

### ஏற்றல், போற்றல், பகல், கோள்

526. இகலோடு எதிர்ந்து பொருதலும் கோடலும் ஏற்ற(ன)லாம்
புகழ்தலுடன் பாதுகாத்தலும் போற்றல் பொருவருநாள்
திகழ்ஒளியோ(டு) நடு எ .. செயலும் தெளிந்து உரைக்கில்
பகல் அதுஆம் குணம் கோட்பாடு கோள் என்பர் பைந்தொடியே. (20)

### கம்பலை, மடல், உம்பர், குழை

527 கருது நடுக்கம் அச்சம் ஓதை இன்னாங்கு இவை கம்பலையாம்
மருவு தொகுதி பனையிதழ் பூவிதழாம் மடலோடு
உரைசெய்வர் மேலிடம் தேவர் தம் பேர்இவை உம்பர் என்பர்
குருமணி சூழ் குண்டலமே தளிர்த்தல் குழை என்பரே. (21)

### கார், ஆர், தபனன், கனலி, கழுமல்

528 காரே கருமை புனல் மாரிக்காலம் கருமுகிலாம்
ஆரே பத தேருறுப்பே கூர்மை ஆத்தி அனல் அருக்கன்
பேரே தபனன் கதிரவன் பாவகன் பேர் கனலி
நேரே மயக்கமும் பற்றும் கழுமல் நிலைபெறுமே. (22)

### முல்லை, கஞ்சா, கன்னல்

529. வன்திறல் கான்தன் நிலம் அதுஆன மல்லிகை மாறுபடா
வென்றி தருமுல்லை கஞ்சா பூங்காடும் விரையும் என்பர்
குன்றலில் நாழிகை வட்டில் சருக்கரையோடு குடம்
என்று இவை கன்னல் பெயராம் கரகமும் ஏந்திழையே. (23)

### மது, களம், களரி, இழுமெனல்

530 பொழில்தருத் தேறல் செந்தேன் மது என்பர் பொருநிலத்தோடு
ஒழுகு கருமை மிடறே களம் என்பர் ஓங்கு கடம்
கழி வில் கமைகள் செருச்செய் நிலமும் களரி என்பர்
இழுமெனல் ஓசை இனிமை என்றே சொல்லும் இவ்வுலகமே. (24)

### காழ், பால், கலை, துன்னல்

531. கோல் பரல் சேகு மணிக்கோவை மாலை குலவு ஒளி காழ்
பால் திசை பக்கம் பருத்தல் உடன் இயல்பாம் மொழிந்த
நூல் கவ்வி ஆடை முக ஏறு காலநுட்பம் கலையாம்
மேல் செறிவோடு குறுகலும் துன்னல் விளங்கிழையே. (25)

### அணி, மாழை, பணை

532. அணி எழ[ழி]ல் பூணோடு அழகு ஆடையும் பையோடு ஆயமுடன்
பணியில் கட்டிபொன் ஓலையும் மாழை பணை எனும்பேர்
மணமுரசோடு புரவியின் பந்தி மரத்தினில் கோடு
உணர்வில் பழனம் பொருத்தல் பணைத்தல் உடன் கழையே. (26)

### திணை, துத்தி, அம்பரம், வம்பு

533. நெறிசேர் ஒழுக்கம் குலம் ஒழுக்கத்தின் நிலம் திணையாம்
பொறியே சுணங்கு திதலையும் துத்தி பொருகடல் விண்
செறிகூறை அம்பரம் கச்சு நிலையின்மை சேர்புதுமை
நறையோடு நான்கு இவை வம்பு என ஓதும் இந் நானிலமே. (27)

### அணங்கு, அளக்கர், தொடுத்தல், கவலை

534. மாதரும் பேயும் வருத்தமும் தெய்வமும் வன்கொலையும்
ஓதில் அணங்கு அதி[நி]லம் சேறு உததியுறும் அளக்கர்
சூதின் வளைத்தல் பிணித்தல் மெய் பற்றல் தொடுத்தல் என்பர்
காதிய துன்பம் கவர்நெறி ஆகும் கவலையுமே. (28)

### கந்தரம், அந்தில், மை, கொன், எல்லை

535. கந்தரம் மேகம் மலைமுழையோடு கழுத்து எனலாம்
அந்தில் ஆங்கு அசைநிலைமை முகில் ஆடும் குற்றம்
முந்தியகாலம் பயனிலி அச்சம் உடன் பெருமை
தந்திடும் கொன் பகல் தன்னோடு அளவை தரும் எல்லையே. (29)

### பிறப்பு, செறிவு, ஏசல், பதி, மள்ளர்

536. பேசு பி(றவி) பிறப்புச் செறிவு பெருக்கலுமாம்
ஏசல் இகட்சி நகை எனலாம் பதியே உரைக்கில்
ஓசை பயிலும் இறையவனோடு அங்கு உறைவிடமாம்
மாசறு வீரர் உழவர் தம் பேர் என்பர் மள்ளருமே. (30)

### கருங்கை, பதம்

537. கொல்லும் தொழில் வன்தொழில் கருங்கை என்பர் கூறு நிதி
சொல்லின் உறு (')பயல் பல்பண்டமாம் பொருள் சோறு வழி
எல்லுறு காலம் உடன் நிறம் பாவலர் எட்டுடனே
புல்லிய பேதவுரை பதமாகப் புகலுவரே. (31)

### புதை, செம்மல், மாலை

538. ஏ அதின் கட்டும் புதுமையுமாம் புதை ஏற்றபழம்பூ
இறை புத்திரன் மாரி பெருமை புகலில் செம்மல்
ஏவு பொன் பூமணி சொல்லில் தொடுத்தவை ஏறும்இருள்
வாவிய அந்தி இயல்பதுமாம் என்பர் மாலையதே. (32)

### துப்பு, செத்து, தானை, ஓதி

539. ஒப்புறு வண்ணம் பவளம் வலி அரக்கு ஓதில் இவை
துப்பு அது என்பர் கருத்து ஒப்புச் செத்து என்பர் சூழ்கலிங்கம்
கைப்படை காலாட்படை இவை தானை செங்கால் எகினம்
மைப்பயில் கேசம் மலி ஓதியாக வகுத்தனரே. (33)

### கரணம், செச்சை

540. சொல்வர் எல்லாரும் முதல்பொருட்டாம் துணைக்காரணமும்
பல்வகை ஆடலும் பாடலும் காமப்பகுதி உடன்
கல்வியும் எண்ணும் கரணம் என்றே ஒன்றும் காமர்வெட்சி
கொல்வினை மேவு வெள்ளாட்டு ஏறுமே செச்சை கூறிடிலே. (34)

### புலம்பு, சிலம்பு, கலுழி, கலித்தல்

541. புலம்பே தனிமை உடனே நடுக்கம் புலம்பலுமாம்
சிலம்பே மாலை ஒலி காலணியாம் என்பர் சேர்கலுழி
கலங்கர் நீர்உடன் கான்யாறு என்பர் கலித்தல் என்னில்
நலஞ்சேர் எழுச்சி ஒலித்தல் என்றே சொல்லும் நானிலமே. (35)

### புலவர், மறம், உருத்தல்

542. அலைவறு தேவர் கவிகள் மெய்ப்பாடுநர் ஆடுநரே
புலநடராக வறியோர் பொருநர் புலவர் என்ப
சிலைதரு வீரம் கொடுமை சினம் கொலைசெய்தல் மறம்
உலைவறு தோன்றல் வெகுட்சியது ஆகும் உருத்தலதே. (36)

### பொருநர், கோள், நிழற்றல்

543. ஆளும் பெரும் போர்த்தலைவரும் கூத்தரும் ஆனபடை
வாளொன்று வீரர் இவரே பொருநர் மருவுநவ
கோளும் கொளலும் கொலை இடையூறும் அக் கோள் அது என்பர்
நீளும் குடை நிழல்செய்தல் நுணுக்கம் நிழற்றலதே. (37)

## வாரி, வதுவை, கனவு, நனவு

544. கனை கடல் வெள்ளமிகுதி மதிநூல் கதவு தடை
எனில்இவை வாரி வதுவை மணம் மன்றல் என்று இவையும்
புனைதரு வாசம் மணம் புணர்வாம் துயில் பொய் மயக்கம்
கனவு எனல் ஆகும் நனவே தெளி கண் என்பரே. (38)

## வாரி, வதுவை, கனவு, நனவு

545. வேய் அமை ஒற்று உடன் வினையும் ஆகும் மிகு வருத்தம்
ஏய வலியிடை தா என்று உரைசெய்வர் ஏற்ற கல்வி
சே(ய) செவி இவை கேள்வியதுஆம் புல(னும்) திறனும்
வாயில் அது என்பர் வடிவேல் அனைய மதர்விழியே (39)

## வேளாண்மை, நாகம், முளரி

546 வேளாண்மை ஆவது உபகாரம் மெய் உபசாரம் விண்ணோ
...ரங்கு ஓர் மரப்பேர் மலையாடு அரவு
காளம் அசலம் இவை நாகம் என்று ஓதுவர் காய்கனலே
காளார் மரை முள்மாமரம் முளரிய...தே. (40)

## வேலன், விருத்தி, சுடர், கயம்

547 உரை முருகன் வெறியாட்டாளன் வேலன் உரியபொருள்
விரிதர ஓதல் விருத்தி முதுமொழி வெங்கன(லே)
சொரிதண் திங்கள் கதிரே (சுட)ர் என்பர் சூழ் கயமே
கரியினில் கன்று உடன் ஆழம் நல்நீர் எனக் கற்பித்ததே. (41)

## தாலம், மதலை, பதலை, இறும்பூது

548. தரைபனை உண்கலம் நாத் தாலம் ஆகும் தவப்புதல்வர்
பரவு மரக்கலம் தூணே மதலை பதலை என்னின்
விரவிய தாழி பரந்த(ரு) வாய்ப்பறை மெய் வியப்போடு
அருள் சிறுதூறு மலை இறும்பூது என்று அறைவர்களே. (42)

## குளிர், பிறங்கல், மறை, சிரகம்

549. இரைபயில் கிள்ளை கடியும் கருவி இலைமூக்கரி
கருவி குடமுழவு ஆகும் குளிர் பிறங்கல் உயரம்
பெருமையும் ஆகும் மறைதேரல் வேதப்பெயர் மறையாம்
சிரகம் என்னில் கரகம் துவலை செயறருமே. (43)

## நீவி, கேவலம், ஆகம், வறிது, எகினம்

550 நீவி அரித்தல் துகில் கொய்சகம் உடனே துடைத்தல்
கேவலம் ஆகும் தனிமையும் முத்தியும் கேயூரமார்
ஆவி பயில் உடல் ஆகம் சிறிதொடு அருகல் வறிது
ஏவிய நாயோடு அனமே கவரி எகினமதே. (44)

## முடலை, விடங்கம், படலை, மடங்கல், இருத்தல், கவிகை

551. முடலை திரட்சி முருடாம் விடங்கம் முகடு அழகாம்
படலை எனில் பகை கூற்றூ ஊழித்தீ சிங்கம் பாயும் உரும்
இடி நோய் மடங்கல் இகுத்தல் செகுத்தலும் வீழ்த்துதலும்
குடை கொடை என்னும் இரண்டும் க(விகை அதுஆம் என்ப)ரே. (45)

## அள், ஞெள்ளல், பள்ளி, இதழ், வள்

552. அள் எனில் காது செறிவு உடன் வன்மையது ஆகும் என்பர்
ஞெள்ளல் தெரு உடன் மென்மை துயில் இடன் இரண்டும்
பள்ளி பனையிலை பூந்தோடு ஆகும் பயின் இதழாம்
வள் எனில் கூர்மை வலி உடனே வடி வாள் என்பரே. (46)

## ஆணை, தாயம், ஆயம், மதவு, காயம்

553. ஆய மெய்ப்பாட்டோடு இலாஞ்சினை சூழ்[ள்] விறல் ஆணை என்பர்
தாயம் உரிமையுடன் தம்குடித்தமர் தாய்த் திரள் சூது
ஆயம் அது என்பர் வனப்பே வலியுடன் நீளம் மதவு ஆம்
காயம் அது என்னில் யாக்கையும் காழ்ப்பும் கருதியதே. (47)

### கோல், கட்டளை, தெவிட்டல்

554. இறைமுறை செய்தலின் யாழ்நரம்பே மைஎழுதுவது
நிறையே துலாம் மத்திகை அம்பு கோல் என்பர் நீண்டநெறி
அறிவது உரைத்து அங்கு அறிவது கட்டளையாம் ஒழித்தல்
திறவோடு உமிழ்தல் இரட்டல் தெவிட்டலின் செய்தியதே. (48)

### அழுங்கல், வழங்கல், அற்றம், உலவை, கழங்கு

555. அழுங்கல் இரக்கம் உடன் கேடுறல் சொல்லலோடு அளித்தல்
வழங்கல் அதுஆம் அற்றம் சோர்பு உடன் ஈய மறைப்பொருளாம்
ஒழுங்கேர் சா[கா]ற்று மரக்கோடு மாமருப்பாம் உலவை
கழங்கு அணங்காட்டுக் கொடிகழலாகவும் கற்பிப்பரே (49)

### அறல், இறை, உறழ், பொறை

556 அறலே வயவு கருமணல் நித்திரையாகும் என்பர்
இறையே சிறிது உயர்ந்தோரர் தங்கலே கடன் இல்இறப்பாம்
உறழே செறிவு இடையீடே புணர்வு உடன் ஒத்தலுமாம்
பொறையே சுமத்தல் பொறுத்தலுமாகப் புகலுவரே (50)

### கருவி, ஓரை, முற்று

557. சுடர் பூண் தொகுதி படைக்கலம் பல்லியம் தின் தொடர் யாழ்
இடம் மேவு கொண்டல் கலனை கவசம் இயம் கருவி
உடன் மாதர்கூட்டம் இராசியும் கூற்றொடும் ஓசை என்பர்
முடிவு ஆய் வளைத்தல் முழுவதுமாம் என்பர் முற்றினையே. (51)

### தூவு, கழுது, வேலை, சினை

558. ஏவும் பசையும் தசையும் பறவை இறகினையும்
தூவு என்பர் பேய் வண்டு இதணம் கழுது என்பர் சூழ்ந்த கடல்
மேவும் கடற்கரை காலமும் தான் இவை வேலை என்பர்
ஓவும் சினை மரக்கோடு ஆகுவ ஒன்று உறுப்பு என்பரே. (52)

### படர், பதங்கம், நனை, கடிகை, காலை

559. படர் எனில் உன்னல் செலவே பரிவு பதங்கம் விட்டில்
ஒடு பறவைப் பொதுப் பேர்களும் நனை (பூவின்) மொட்டு என்பர்
கடிகையும் வேதம் சமயம் கள் நாழிகை காலை எனில்
தொடர்தரு காலமும் நாட்கூறுமாம் எனச் சொல்லுவரே. (53)

### எற்று, வயிரம், மற்று, கொற்றம்

560. எற்றே நினைவு துணித்தல் புடைத்தல் எறிதல் எற்றல்
செற்றமுடன் வன்மை வச்சிரம் கூர்மை அச் சேகு மணி
மற்று இவையே வயிரம் வினைமாற்று என்பர் மற்று எனும் சொல்
கொற்றம் அரசியல் வெற்றியும் ஆகவும் கூறுவரே. (54)

### வீசல், தேசிகம், பாடலம், காசறை, பாசம்

561. வீசல் கொடுத்தல் எறிதல் திசைச்சொல் மிகும் அழகும்
தேசிகமே என்பர் பாடலம் பாதிரியே சிவப்பாம்
காசறை நாணலும் காயாமரம் என்பர் கற்றறிந்தோர்
பாசமும் ஊசித்துளை கயிறாகப் பகருவரே (55)

### தண்ணடை, பாடி, கட்சி, ஓரி

562 நாடு உடன் ஊர் இவை தண்ணடை நாடு நகரம் இவை
பாடியும் ஆகும் படைவீடு அஃது என்பர் பாதகஞ் சேர்
காடு உடன் கூடு இதண் என்ற(ல்) கட்சி கருநரியோடு
ஆடவர் தங்கள் மயிர் ஓரியாக அறைவர்களே. (56)

### மூரி, ஊர்தி, அரலை, தரணி

563. மூரி பெருமையும் ஆன்ஏறும் ஆகும் முழங்கு கரி
தேரொடு மாவும் சிவிகையும் ஊர்தி திகழ் அரலைப்
பேர் அது கூறில் கனிக்காழ் கழலைப் பிறங்கல் உடன்
தாரணி தன்னோடு இரவியும் ஆகும் தரணியதே (57)

## இரலை, பல்லம், முரண், கழிதல், இறத்தல்

564. இரலை புல்வாய் கலை ஊதியகொம்போடு இசை தலைநாள்
கரடி சிலீமுகம் பல்லம் அதுஆம் வலி பாய் பகையே
முரண் எனல்ஆகும் கழிதல் இறத்தல் மொழியின் இவை
உருவழி சாவு கடத்தல் இகத்தல் என்று ஓதுவரே. (58)

## தட, தவ, வெடி, முருகு, ஏனை

565. தட எனில் கோட்டம் பெருமை தவ மிகுதல் குறைதல்
வெடி எனில் வெள்ளிடையோடு வெருவுதல் வேள் விழவு
கடியோடு இளமை வெறியாடு வேலன் கருது எழுச்சி
யுடனே முருகு எனும் ஏனை ஒழிவோடு இடைச்சொல் அதே. (59)

## மானுதல், படை, தானல், வயின்

566. மானுதல் ஒப்பு மயக்கமும்ஆம் என்பர் மண்[ன்] சயனம்
தானையோடு ஆயுதமே உழு நாஞ்சிலும் தான் படையாம்
கானல் கதிரொளியே மலைச்சார் கடற்சார் பொழிலாம்
ஆன வயிறு மனை இடமே வயினாம் என்பரே. (60)

## கூலம், மூலம், கழல், வேலி

567 கூலமும் நீர்க்கரை பல்பண்டம் பாகலைக் கூறும் என்பர்
மூலம்எனும் பெயர் நாளொடு வேரும் முதலும் என்பர்
காலடித் தோலொடு காலொடு காலணியும் கழல் ஆம்
வேலி மதில் உடன் காவலுமாக விளம்புவரே. (61)

## வண்ணம், காசு, குரை, அருணம், ஆசு

568. மாசு இல் மரபு பெருமையும் வண்ணம் மணி குற்றமே
காசு எனல் ஆகும் குரையே இடைச்சொல் கருது ஒலியாம்
மாசு இல் அருணம் சிவப்பொடு மான் அழகுஆகும் என்பர்
ஆசு மெய்சேர்வு கலி[வி]யே சிறுமை குற்றமதே. (62)

## பனி, வனம், அழுங்கல், கனம், நியமம்

569 பனி எனில் துன்பம் நடுக்கம் அச்சம் தரும் பாய்புனல் கான்
வனம் எனல் ஆகும் அழுங்கல் அரவம் இரங்கல் என்பர்
கனம் எனல் ஆகும் செறிவொடு மேகமும் காமர் தெரு
நினைவகலாத நியதியும்ஆகும் நியமம் அதே. (63)

## ஊறு, வசை(வசி), நூல், அசைதல்

570. உசை இடையூறு உற்றறிபுலன் தான்இவை ஊறு அது என்பர்
வசை எனில் போழ்ந்த வடுக் கூர்மை தாட்சி வருட்டல் என்பர்
இசைதரு நூல் எனின் எண்ணம் பனுவல் இசைக்கும் என்பர்
அசைதலை நேரதா யங்கலு[நோதலும் தங்கலு]மாக அறைகுவரே. (64)

## நவிரம், குலம், ஆலுதல், சேண், ஆர்தல்

571. மலை தனின் உச்சி மருதயாழ்த்திறன் நவிரம் என்பர்
குலம் எனில் இல்லமும் கூட்டமும் கூட்டும் குடியுமாம்
ஒலியுடன் ஆடுதல் ஆலுதல் நீளம் உயரமும் சேண்
அலைவற ஆர்தல் நிறைதலும் உண்டலுமாம் என்பரே. (65)

## தளிமம், வலம், நளி, மறலி, வளம்

572. உறைதரு மெத்தை அழகே தளிமம் உறைவிடமே
விறலொடு மேலிடமே வலம் என்பர் மிகுபெருமை
செறிவு இவையே நளி என்பர் வெங் கூற்றொடு சேர் மயக்கம்
மறலி அது என்பர் வளப்பாடு பண்டம் வளம் என்பரே. (66)

## மூரல், பாலை

573. மூரல் நகை எயிறே சோறு நீர்இன்றியே முதிர்ந்த
பார் தரு பாரினில் பாடலும் பாலைப் பதியிடத்திற்
பேரல் பொருளிற் பிரிதல் ப(ரி)வரை பெண்உடன்கொண்டார்
உடன் போதல் அவை பாலையாக அறைகுவரே. (67)

### குறிஞ்சி, மருதம், படிவம், அண்டர்

574. செழு மலைச் சார்இடம் அந்நிலப்பாடல் செம்முள்ளி செவ்வே
மொழிவர் குறிஞ்சி பயன் நிலம் அந்நிலத்தோர் முடிய
வழிபடு பாடல் மருதம் அவிர்தல் வடிவம் இவை
அழிவில் படிவம் அமரரோடு ஆயரும்ஆம் அண்டரே. (68)

### மனவு, சுடிகை, புணரி, முனை, வியங்கோள்

575. மனவு எனில் அக்கு மணி ஆடை வேணி மயிர்முடியும்
புனைதரு சூளிகையோடே சுடிகை புணரி கடல்
வனை கடல் சூழும் கரை திரையாம் வெம் பகை இறைமை
முனை எனலாம் வியங்கோள் ஆணை ஏவல் முறைபெறுமே. (69)

### வரை, கணம், அருகல், கரில், தாபரம்

576. வரை எனில் பாடல் எழுதல் வடிவு வட்டம் திரட்சி
உரைசெய் (கணம் என்)பர் சாதல் சுருங்கல் உடன் உரைக்கில்
அருகல் என்று ஓதுவர் கூர்த்தல் கொடுமை அவை உரைக்கில்
கரில் மலைபோல் மரம்போல் நிற்கும் தாபரம் காண் என்பரே. (70)

### பலி, பரவை, அலரி, சித்திரம், மெய்

577. பலி ஐயம் சோறு கடலே பரப்புப் பரவை என்பர்
அலரி மென்பூவும் அருக்கனுமாம் பொய்யையான மெய்போல்
சில செய்தலும் வடிவு அழகொடு கோலமும் சித்திரமே
நிலைபெறு சொற்பொருள் மெய்யெழுத்தோடு மெய் நேர்ந்திடுமே. (71)

### மன், தண்மை, இயல், மாடு, கணை

578 மன் மன்னவன் இடைச்சொல் உடன் மன்னலுமாம் செய்தலும்
தன்மை இடப்பொருளும் தன்மை ஆம் இயல் சாயல் நடை
பொன் மணி போல்வனவே தனம் மாடு புனை திரட்சி
வின்மலி ஏவும் பகழிஅதுஆகும் விறல் கணையே. (72)

### செயிர், கற்பம், அரணம், விதி, குரல், கரைதல்

579. செயிர் எனில் குற்றம் சினவலுமாம் கற்பம் தேவர்உலகு
அயனுடைய ஆயுள் மதிலே கவசம் அரணம் என்பர்
இயல்புடனே செயல்ஆகும் விதி குரல் யாழ்நரம்பு
பயில் கதிர் கூவல் மொழிதல் கரைதலின் பாற்படுமே. (73)

### சிக்கம், காரி, நீலம், வெள்ளை

580. உறி மயிர்வார்தரு சீப்பு இவை சிக்கம் உயர் சனிக்கோள்
கறைபயில் நஞ்சொடு சாத்தன் இருள்நிறம் காரி என்பர்
நிறைபுனல் நெய்தலின் நீல நிறத்தன நீலமணி
அறைகுவர் நீலம் வெள்ளாடு வெண்பா வெண்மையாம் வெள்ளையே. (74)

### உழை, வழி, வாரம், கைக்கிளை

581. உழை எனில் யாழ்நரம்போடு இவை மான் என்று உரைத்திடுவர்
வழி இடனோடு பின்னும் வரையார் என்பர் வாரம் என்னில்
கிழமை பகுதி மலைச்சார்வு அதுஆம் என்பர் கைக்கிளையே
கழுமிய யாழின் நரம்பொடு ஒருதலைக் காமமுமே. (75)

### வையம், ஆற்றல், வாள், எஃகம், வில்

582. தேரோடு அவனி சகடம் எருது சிவிகை என்னும்
பேர்இவை வையம் வலி செயல் ஆற்றலின் பேர் அது என்பர்
கூரிய வாள் ஒவ்வொளி வாள்உழுபடை கூரம் வை வேல்
தாரும் எஃகம் வில் இரட்டையோடு ஒளி தான் தருமே. (76)

### அங்கதம், விளரி, எல், நாண்

583. அங்கதம் தோளணி தன்னோடு அரவு என்பதாம் இளமை
தங்கிய வேட்கையுடன் யாழ்நரம்பு தரும் தகுதி
இங்கு இவை ஆகும் விளரி எல்லே ஒளியோடு இரவுஆம்
மங்கலமான அணி பாசம் நாண்என்பர் மாதவரே. (77)

### அரி

584. சிங்கம் அளி திருமால் கவி இந்திரன் திகிரி படை
பைங்கிளி கிண்கிணி பெய்பரல் வாசி பறவை நிறம்
வெங் கதிர் பன்றி வலி பகை பொன் புகை வெம் பணி கூற்று
அங்கி புலி கவி வாள் தேரை ஊகை அரி என்பரே. (78)

### நகை, பொருள், இடி, தொய்யல்

585. மகிழ் வினோதம் விளையாட்டு இடையோடு வரும் நகையே
இகழ்வதுமே பெறும் செல்வம் வெறுக்கை என்னில் பொருளாம்
ககரம் நறுஞ் சுண்ணமோடு தருப்பணம் தான் இடியாம்
திகழும் உழவு ஏர் குழை தொய்யல் மகிட்சியும் செப்புவரே. (79)

### நாகு, கூழ்

586. ஆன் ஆடு எருமை மரை இவை அல்லனவாம் கொழுமை
ஈனாஇளமை நன்னீர்வாழும் சாதி இளமரமே
தான் ஆகும் நாகு தழை உடன் சொல்லும் தமனியமும்
ஏனாடு உணவு பயிர் இவை கூழ் என வேண்டுவரே. (80)

### இதை, கிழி, ஊக்கம்

587 இதையே மரக்கலப்பாயே புதுப்புணம் ஏற்றபொருட்
பொதி ஆடைகீறல் எழுதும்படமும் புனை கிழியாம்
விதமார் முயற்சியும் வண்மையும் உண்மையும் மெய்மனத்தில்
உதை ஆதரத்து மிகுதியுமாம் என்பர் ஊக்கம் அதே. (81)

### கடி, நேர்

588. விரைவு விளக்கம் கரிப்பே புதுமை மிகுதி ஐயம்
வரைவு முன்றேற்றுச் சிறப்பொடு கூர்மை மணம் எச்சமே
கருது காப்பு வெம் பேய் மணம்செய்தல் கடி எனலாம்
நெடிது உடன்பாடு கொடை ஒத்தல் தனி நேர் என்பரே. (82)

### வாகை

589. எண்ணெண் கலையினில் ஈகையில் பண்பில் எழிலொருத்தல்
நண்ணும் செயலில் மரபினில் செல்வத்தில் நல்அறிவில்
கண்ணும் தருமத்தில் வீரத்தில் ஐம்புலன் காத்து முத்தி
வண்மை பெறுநெறியில் பேர் பெறுவது வாகையதே. (83)

### பாரதிதீப வரலாறு

590. வெருவாது உயர் அந்தமும் மெய்வீடு கண்டருள் வேங்கடவன்
பருதிக் கதிரொளி போல் வன பாரதி பங்கையம்சேர்
இருகைப் புயல்சொற்ற பாரதிதீபத்தின் ஏகாதசத்து
ஒருசொல் பலபொருள் பேரான் இயல் முடிவுற்றதுவே. (84)

## 12. பலபெயர்க்கூட்டத்து இயர்பெயர்த்தொகுதி

### இருமை, இருவினை, இருசுடர், இருவகைத் தோற்றம், இருமரபு, இருவகைக்கந்தம்

591. இருமை மறுமையும் இம்மையுமாம் நன்று தீது எனலாம்
இருவினை சந்திர சூரியர் என்ப இருசுடராம்
இருவகைத்தோற்றம் சரம் அசரமாம் தந்தை தாய் வழி என்று
இருமரபு ஆகும் நற்கந்தம் துர்க்கந்தம் இருவகையே. (1)

### மும்மை, முப்பொறி, முச்செயல், முக்காலம், மும்முரசு

592. மருவிய உம்மையும் இம்மையோடு உம்மை மறுமை அதுஆம்
கருதிய வாக்கு மனம் காயம் முப்பொறி காத்து அளி[ழி]த்தே
இரித்தலும் முச்செயல் முக்காலம் இறப்பு எதிர் நிகழ்வுஆம்
முரசு எனில் வீரம் (நியாயம்) தியாகம் இம்மூன்று என்பரே. (2)

## மூன்றுஇடம், முந்நிலம், முக்குற்றம், முச்சுடர்

593. முன்னிலை தன்மை படர்க்கை எனும் இவை மூன்று இடமாம்
முந்நிலம் பூமியோடு அந்தரம் கோவன்பர் முக்குற்றமே
முன்னிய காமம் வெகுளி மயக்கு என்பர் முச்சுடரே
முன் எழும் ஆதித்தன் சந்திரன் தீ இவை மூன்று என்பரே. (3)

## மும்மொழி, மூவகைச்சீவ அனல், முத்தீ

594. மும்மொழி வாழ்த்தல் பழித்தல் பட்டாங்கு என்பர் மூவகையாம்
செம்மையில் பூதம் உதரம் உடன் விந்துச் சீவஅனலம்
முத்தீ கா(ருகபத்)தீயம் ஆகவனீயம் உடன்
கைம்மிகு மன்சுவந் தென்திசை அங்கிக்குக் கற்பித்ததே. (4)

## முக்குணம், சாத்துவிதம், இராசதம்

595. முக்குணம் சாத்துவிதமோடு இராசதம் தாமதமாம்
அக்குணம் ஞானம் தவம் கல்வியோடு ஐம்புலன் அடக்கல்
இக்குணம் நல்லருள் ஆனந்தம் மெய்ம்மை இனிய தவம்
தக்கதோர் தானம் தருகும் இராசத தற்குணமே (5)

## தாமதகுணம், மூவகைத்தானம், உத்தமதானம்

596. கிளர் பெருஉண்டி மடி வஞ்சனை நிதி கேடு உறக்கம்
களைதரு காமம் சலம் இவை தாமதம் கட்டுரைக்கின்
அளவு எனும் உத்தமம் மத்திமத்தோடு அதமங்களதாய்
உளத்துஇனிது ஏற்ற நிதி நல் தவர்க்கு இடில் உத்தமமே. (6)

## மத்திமதானம், (அதமதானம்)

597. ஆதுலர் அந்தகர் மாதர் உறுப்பிலி யாங்கள் அவர்க்கே
ஈதலும் மத்திமம் கண்ணோட்டம் காரண மேற்று அனுக
.. ... .. .. ...
... .. . ... ... (7)

## திரிகடுகம், திரிபலை, திரிபுரம், ஆதித்தன் மூவகை வீதி

598. திரிகடுகம் சொல்லில் சுக்கு மிளகு இவை திப்பிலியாம்
திரிபலை தான்றி கடு நெல்லி வெள்ளி பொன் சேர் இரும்பாம்
திரிபுரம் மேடம் இடபம் மிதுனம் எனத் திகழும்
திரிவிதம் ஆதித்தன் தேரோடு வீதித் திறம் இதுவே. (8)

## நாற்புவி, நாற்படை, நாற்கதி, நாற்புகல்

599. நாற்புவி முல்லை குறிஞ்சி மருதம் நறு நெய்தலாம்
நாற்படை தேர் கரி காலால் குதிரை எனந வில்வார்
நாற்கதி உம்பர் மனிதர் விலங்குடன் நாகர் என்பர்
நாற்புகல் வெற்பு மதில் காடு நீர்என நாட்டினரே (9)

## நான்மறை, நாற்புலவோர்

600. தாதரு நான்மறை தானே இருக்குத் தயித்திரியம்
(கீதத்து) அடர்தரு சாமம் அதர்வணமே கிளர்க்கும்
காதிய நாற்புலவோரும் கவி உடனே கமகன்
வாதியும் வாக்கி உடனே உரைக்கும் மகிதலமே. (10)

## கவி, கமகன்

601. சிலர்புகழ் நா(ல்)வகை ஆசு மதுரம் அச் சித்திரத்தோடு
அலைவறு பல்வகை வித்தாரம் பாடும் அவன் கவியாம்
இலகிய ஞாபகம் செம்பொருளாம் அவற்று எப்பொருளும்
கலை தெரியும்படி பாடவல்லோன் அக் கமகனுமே. (11)

## வாதி, வாக்கி

602. கருதிய ஏது உடன் மேற்கொள் எடுத்துஉடன் காட்டி தன்கோள்
வரநிறுவிப் பின் பிறன்கோள் மறுப்பவன் வாதி என்பர்
விரவின் அறம் பொருள் இன்பம் நல் வீடு இவை மெய்விளங்க
உரைசெயும் ஆற்றல் உடையானை வாக்கி என்று ஓதுவரே. (12)

### ஆசுகவி, மதுரகவி

603. தொடுத்த பொருளில் தொடித்த இன்பத்துடன் தோமளவாய்
அடுத்த பொழுதினில் பாடுவது ஆசு என்பராம் அடியோடு
எடுத்த தொடையும் விகற்பமும் கேள்விக்கு இனிய சொல்லாய்
வடித்த பொருட்செல்வ மாய பாப் பாடல் மதுரம் அதே. (13)

### சித்திரகவி

604. அக்கரசித்திரம் ஆகாரசித்திரம் ஆன கதி
மிக்கிடு சித்திரம் பெந்திதைசித்திரமே எனநான்கு
ஒக்க இருத்தல் அறுபத்து நாலென்று உரைச் சித்திரம்
திக்கய முற்றும் புகழ்தரப் பாடுகை சித்திரமே. (14)

### வித்தாரகவி

605. தெரிதரு கோவை பரணி உலா மடல் சின்னம் என்றோர்
அரித[தி]னில் பாடும் புராணமே அக் காவியம் ஐந்துமாய்
இருளறச் சொல்லும் இயல் இசை நாடகத்தோடு எவையும்
விரிதரப் பாடுதல் வித்தாரமாக விளம்புவரே. (15)

### நால்வகைப்புண்ணியம், சிலையோர்நால்வகை நிலை, பைசாசம்

606. நாலது புண்ணியம் தானம் தவம் கல்வி நல் ஒழுக்கம்
நால்உளதாகும் வகையே நிலைமை பைசாசம்உடன்
ஆலிடம் மண்டிலம் அப் பிரத்தாலிடம் மற்று அவற்று ஓர்
காலை முடக்கி ஒருகால் நிறுத்தல் பைசாசம் அதே. (16)

### ஆலிடம், மண்டலம், பிரத்தாலீடம்

607. முதல் வலக்கால் மண்டலித்து இடக்காலுடன் முந்துறவே
அது விருப்பு ஆலிடம் அல் இருக்கால் மண்டலித்து அழகால்
எதிரிருப்பாய் மண்டலம் இடக்கால் வளைத்திட்டு ஒருகால்
... விதியின் முற்பந்தாம் எனச் ஞசெப்பினரே (17)

[608 (18), 609 (19), 610 (20) வரை மூன்று பாடல்கள் இல்லை]

### பஞ்சசயனம், ஐம்பால்முடி, ஐந்துஉண்டி

611. திட மயிர்ச்சேணம் படாம் பஞ்சின் மெத்தை அம் தூவி உடன்
படர் விரிப் பாய் உடன் பஞ்சசயனம் ஐம்(மயிரின்)[பால்] முடியாம்
வடி குழல் தொங்கல் பனிச்சை சுருள் கொண்டை மாந்தல் நக்கல்
அடர விழுங்கல் கடித்தல் சுவைத்தலோடு ஐந்துஉண்டியே (21)

### குதிரைஐங்கதி, சிவன்ஐம்முகம், ஐம்பால்

612 மருவிய மல்லர் மயில் முயல் தன்னுடன் வாமேக[வானர]
சரகதி ஆகும் பரிஐங்கதி வாமம் சத்தியம் தற்
புருடம் ஈசானம் அகோரம் இவ் ஐந்தும் புராரிமுகம்
ஒருவன் ஒருத்தி பலர் ஒன்று பல ஐம்பாற்கு உரித்தே. (22)

### வினாஐந்து, அந்தணர் அறுதொழில்

613. அறியான் வினாதல் அறிவொப்புக் காண்டல் ஐயம்அறுத்தல்
பிறிதாம் உணர்வு அவன் பாற்கோடலே சொற் பினையலற்கே
உறவார் மெய் காட்டல் வினாஐந்து உடன் ஓதல் ஓதுவித்தல்
முறை வேட்டல் வேட்பித்தல் ஏற்றல் கொடுத்தல் மும்மூன்றதுவே. (23)

### அரசர்அறுதொழில், வணிகர்செய்தொழில்ஆறு

614. ஓதுதல் வேட்டல் கொடுத்தல் படைக்கலம் உற்று இயற்றல்
பூதலம் காத்தல் அரசற்கு அறுதொழில் பூவணிகர்க்கு
ஈதல் உழவு பசுக்காவல் வாணிகம் என்றும் மறை
தீதற ஓதுதல் வேட்டல் என்று ஆறுஎன்பர் செய்தொழிலே. (24)

### உழவர்அறுதொழில், காருகவினைத்தொழில்

615. உழவொடு வாணிகமே பசுக்காவல் உயர் மறையோர்
வழிவர நிற்றல் குயிலுவம் காருகம் வானனதித்
தொழுமர பாராறு தொழில் பட்டுத் துகில்அமைத்தல்
கழுவுதலோடு சுமத்தல் தொழில் என்பர் காருகமே. (25)

### ஆறங்கம், அறுசமயத்தர்

616. வேதம் மெய் மந்திரம் சந்தோபிசிதி வியாகரணம்
ஆதி நிகரில் தி[நி]ருத்தம் அச் சோதிடம் ஆறங்கமாம்
தீதுஇல் நையாயிகர் மீமாங்கரே புத்தர் சேடிகரே
தாதிய லோகாயுதரே அருகர் சமையத்தரே. (26)

### உட்பகைஆறு, அறுவகைத்தானை

617. காமம் வெகுளி மயக்கம் உலோபம் கருது மதமே
மாறுகொளல் இவை ஆறும் மெய் உட்பகை எனவாம்
வாம வில் வேல் வடி வாள் ஆனை தேர் வடி வாசி என
லாம் அவையே அறுதானை என்று ஓதுவர் அந்தணரே. (27)

### நாட்டுவகைஆறு, அரசியல்ஆறு

618. செய்வுறு செல்வம் விளைவொடு பல்வளம் சேமம் உடன்
ஐவரு நோய் குறும்பின்மை இது ஆறும் நவின்றிடும் மெய்
உய்வகை ஆகும் படை குடி கூழ் அமைச்சொடு நட்போடு
ஐய்வகை ஆகும் அரணே உடையது அரசியலே. (28)

### அறுசுவை, அறம் பொருள் இன்ப - அறநிலை மறநிலை ஆறு

619. அலைவில் அறுசுவை தித்தித்தல் கைத்தல் அறப் புளித்தல்
துலைவுறு கார்த்தல் உடனே உவர்த்தல் துவர்த்தல் என்பர்
உலகின் அறம் பொருள் இன்பம் மூன்றினில் ஓர் இரண்டாய்
நிலவி அறம்மறம் தன்னோடு அறுவகை நேர்படுமே. (29)

### அறநிலைஅறம், அறநிலைப்பொருள்

620. தூ நிரைமீட்டல் துடர் நிரை ஓட்டல் செஞ்சொற்றுறவோர்*
மானவொடு ஏவின செகுத்தல் அறநிலை மன்அறமாம்
சேனையோடு ஆர்அமர் கொள்ளல் நிரைகொள்ளல் செய்துஅவத்தால்
ஆன தண்டிப்பொருள் எல்லாம் அறநிலைக்காம் பொருளே. (30)

### மறநிலைஇன்பம், கன்மபூமிப்பயன்

621. ஏறு தழுவல் பொருளே கொடுத்தல் இலக்கம்எய்தல்
சீறி வலிதினில் கோடல் ம(றநிலை)சேர் இன்பமாம்
கூறும் உழவு தொழில் வாணிபம் வித்தை கூடு புகழ்ப்
பேறு படு சிறப்பே கன்மபூமிப் பெரும்பயனே (31)

### போகபூமி

622. ஒத்த குலம் கல்வியரோடு இளமையும் மோக இன்பத்து
ஒத்த பிராயப் புமான் மட மாதினுக்கு ஓங்குதரு
ஒத்து நுகர்ச்சி அமுதோடு அளிக்க உருகிவிடா
ஒத்த அப் போகம் தரு போகபூமி என்று ஓதுவரே. (32)

### அறுவகைப் போகபூமி

623. மாமதில் ஆயரிவஞ்சனை நல்லரி வஞ்சம் உடன்
ஏமதவஞ்சம் உடனே ரணவஞ்சம் ஈதுடனே
தாம்உறை தேவகுருவம் உடன் உத்தரகுருவமாம்
அவை ஆறுவகைப் போகபூமியது என்பரே. (33)

### அறுவர்சக்கரவர்த்தி, எழுதீவு

624. புகலின் அரிச்சந்திரன் முசுகுந்தன் புரூரமன் போர்ச்
சகரன் நளன் தன்னுடன் கார்த்திகேயனும் தான்அறுவர்
மிகு சக்கரவர்த்தி நாவல் இறலி விறல் குசையே
திகழ் கவுஞ்சம் சனமாலி தென் புட்பகம் தீவு என்பரே. (34)

### எழுகடல், மேல்ஏழ்உலகம்

625. உப்புக் கரும்பு மது நெய் தயிரோடு ஒண் பால் உடனே
அப்புக் கடல் இவை ஏழாகும் ஏழுலகாகும் அவையாம்
ஒப்பற்ற பூப் புவலோகம் உடன் சுவலோகம் சொலும்
தப்பற்ற மா சனலோகம் தவத் தவலோகத்ததே. (35)

## கீழ்ஏழ்உலகம்

626. ஏரார் அதலத்துடன் ஏழ்தலம் எழில் நிதலம்
காரார் சுதலத்தொடும் மென் இராதலம் காண் கைக்கெட்டாப்
பேரார் தராதலம் மாதலம் என்பவை கீழுலகாம்
கூர்அகி மெத்தக் குலையே படைக்கள் கோமளமே. (36)

## ஏழ்நரகம்

627. எரியழல்வட்டம் எரிபரல்வட்டம் எரிபடையாய்
வரு சுடர்வட்டம் பொரு கரிவட்டம் வறுத்து உடனே
சொரி மணல் வட்டம் புகைவட்டம் சேர் இருள் சூழ்ந்த வட்டம்
பெருகழறா வட்டம் என்று ஏழ்நரகமும் பேர்பெறுமே (37)

## ஏழுமாதாக்கள், ஏழுதாதுக்கள்

628 பார்ப்பினி சங்கரி கௌமாரி நாரணி பன்றிமுகி
ஏற்பவள் சாமுண்டி இந்திராணி ஆகுவரே எழுபேர்
தோல் பொலியும் தசை என்பு நரம்பு நெய்த்தோர் நிணமே
மேற்பொழி விந்து உடன் ஏழுதாது என்ன வேண்டுவரே. (38)

## வேந்தனின் ஏழுபண்பு, எட்டுத்திக்குப்பாலர்

629. அறம் பொருள் இன்பம் மறுமை புகழ் மதிப் பண்பு இவை ஏழ்
பெறும்பொரு வேந்து இந்திரன் அங்கியே யமன் பேண் நிருதி
உறும் புனல் மன்உயிர் புட்பகன் ஈசன் திக்கு ஓர் எண்மரே
சிறந்துலகு எண்திக்குப் பாலகராகச் சிறந்தவரே. (39)

## எண்திசைக்குறி, அட்டமங்கலம்

630. கொடி புகை சீயம் உடனே இடபம் குலக் கழுதை
அடல் இபம் காகம் இவை எண்திசைக்குறி ஆடி சுடர்
படர்கொடி தோட்டி இணைக்கயலே கும்பநீர்ச் சவுரி
இட முரசு ஆனல் இவை அட்டமங்கலம் என்பர்களே. (40)

## அட்டமூர்த்தம், அட்டமாசித்தி

631. மதி அம் கதிர் அங்கி நீர் இயமானனன் வான் நிலம் கால்
இது அட்டமூர்த்தம் அடல் அட்டமாசித்தியே அணு[ணி]மாக்
கதியுற்றதோர் மகிமா லகுமா பிராத்திமம் காமிகத்தோடு
உதவும் அசித்துவம் விசுவத்துவம் காமரூபி...வமே. (41)

## எண்வகையோகம், இயமம்

632. மாயா இயமம் நியம ஆதனத்துடன் மன்னு பிரா
ணாயாமமே பிரத்தியாகாரம் தாரணை ஆனபடியே
ஆம் தியானம் சமாதி என்பார்கள் இயமம் உண்மை
ஆயே கொல்லாமை புலன் காவலாம் பொருளாசையற்றே. (42)

## நியமம், எண்வகைஎச்சம்

633. சாதகமான தவம் சவுசத்துடன் தத்துவநூல்
நீதியின் ஓதல் கடவுளர்ப்பேணல் நியதி என்பர்
தீதுறு கூன் குறள் ஊமை செவிடு சிதடு என மாப்
பேத மருள் உறுப்பில்பிண்டம் எண்வகைப்பேர் எச்சமே. (43)

## எண்குணம்

634. தெழியா அனந்தம் மெஞ்ஞானம் அனந்த தரிசனத்தோடு
அழியா அனந்தமெய்வீரியம் தன்னோடு அனந்தசுகம்
இழிவான நாமமுடன் ஆகும் கோத்திரம்இன்மை இன்பம்
ஒழியா இயல்பு அவை எண்குணமாக உரைசெய்வரே. (44)

## செட்டி எண்குணம்

635. தனிமையின் ஆற்றல் உறுவது தேர்தல் தன்னோட்டரின்
மனன்அழியாமை பொழுதொடு சேரல் வருவது அஞ்சாது
இனிமையனாதல் பொருளீட்டல் நல்கல் எவரிடத்தும்
முனிவு இலன் ஆதல் இவைஎட்டும் செட்டிக்கு முன்னுளதே. (45)

### எண்வகைக்கணம், எட்டுமெய்ப்பரிசம்

636. இந்திரன் அங்கி ... இரவில் அளி இயமானன்
அந்தரமாம் எண்கணமும் (பி)டித்தல் அடித்தல்உடன்
வந்துறக் கேட்டல் தடவுதல் தட்டல் வாக்குரைத்தல்கோ
பந்தனில் வெட்டல் இவை எட்டும் மெய்ப்பரிசங்களே. (46)

### எண்வகைமணம், எண்வகைப்போர்த்தொழில்

637. அருள் பிரமம் பிரசாபத்தியத்துடன் ஆரிடமே
பெருகிய தெய்வம் அசுரம் இராக்கதம் பேய்நிலை காந்
திருவம் அது எண்மணம் வெட்சி கரந்தை தெரிந்த வஞ்சி
மருவிய காஞ்சி நொச்சி உழிஞை தும்பை வாகை எட்டே. (47)

### எட்டுத்திக்குயானை

638. ஆம் அயிராவதம் புண்டரீகம் குமுதம் அஞ்சனம்
வாமனம் புட்பதந்தம் சாறுவபூமம் வருமதத்துத்
தேமலியும் சுப்பிரதீபம் என்னத் திசை எட்டினும்
நாமம் மிகும் கரி நாற்கோடுடைத்தது நன்னுதலே. (48)

### நவகண்டம்

639. தெற்கு வடக்குக் குணக் குடபால் எனச் செப்புதற்கே
எக்குலவும் திசை தன்னில் விதேயம் இரேவதமாம்
தற்குறிப்பாகிய பேர் எட்டும் மத்திமம் தன்னுடனே
நற்குறிப்பு ஏற்றது இவை எனல் ஆகும் நவகண்டமே. (49)

### நவமணி, காணப்படாமணி

640 மாணிக்கம் முத்து மரகதம் நீலம் வயிரம் துப்பு
யாணர்க் கதரின் வயிடூரியம் பற்மராகம் இரு
ணாணத் திகழொளி கோமேதகம் என் நவமணியாம்
காணப்படாமணி சிந்தாமணி அக் கவுத்துவமே (50)

### நவதாரணை, நவரசம்

641. நாமம் இலக்கம் பரி கரி கஞ்சம் நயந்த செய்யுள்
தாம எழுத்துச் சதுரங்கம் நீர் நவதாரணையாம்
காமம் அவலம் உருத்திரம் அச்சம் சிங்காரம் நகை
யேமறு வீரம் வியப்பே கருணை நவரசமே. (51)

### நாரணன் பத்துஅவதாரம்

642 மீன் ஆமை கேழல் நரசிங்கம் வாமனமே பரசு
ராமன் இராமன் அலாயுதன் ஆகு வடமதுரை
யான்ஆகும் கிட்டினன் கற்கியுடன் அவதாரம் பத்தும்
தானாகி வையம் புரப்பவன் நாரணன் தான் என்பரே. (52)

### சிற்ப வினைக்குறிப்புபத்து, தசாங்கம்

643. கல்லு மண் செங்கல்லு உலோகம் மரம் சுதை காமர்வண்ணம்
சொல்லிய சந்தம் மெழுகு குளம் பத்தும் சிற்பவினை
நல்ல நதி மலை மா வாசி ஊர் தொடை நாடு கொடி
வெல்லும் முரசுடன் ஆணை தசாங்க வினைப்பயனே. (53)

### உயிர்வேதனை பன்னிரண்டு, அரசர் ஐம்பெருங்குழு

644 வாதம் புனல் கனல் ஆயுதம் வல் விடம் மாஅசனி
சீதம் அத் தாகம் பசி தெரியாச் சினம் நோய் மருந்தாம்
மா துயர் ஆறிரண்டாம் உயிர்க்கு ஐங்குழு மந்திரம்
தூது புரோகிதன் சேனாபதி பொற(று[ஒற்று]ர)யற்கே. (54)

### பதினெட்டு மொழியாளர்

645. அங்கர் கலிங்கர் கவுசலர் சோனகர் ஆரியரே
சிங்களர் மாளுவர் மாராடர் மாகதர் சிந்தவரே
கொங்கர் உமணர் களப்பரர் சீனர்கள் கொங்கணரே
வங்கர் துளுவர் மலையாளர் பத்தெட்டு வாசகரே. (55)

## பதினெண்கணம்

646. சுரரோடு அசுரர் இராக்கதர் சித்தர் தொழும் இசைக் கிம்
புருடர் இயக்கரே வித்தியாதரர் நன்முனிவர்
கருடர் பிசாசரும் ஆகாசியர் கந்திருவர் தக்
கருகர் வெம் பூதரும் இப் போகபூமிப் பன்னெண்கணமே. (56)

## அரசர் பதினெண்கணம்

647. கரணத்தினவர் ... ரே கடைகாப்பர் சுற்றம்
மருமக் கரிமிசையோர் பரிவீரர் படைத்தலைவர்
அருமைப்பதியினர் தாம் என்பர் (வே)தியனோடு நட்டோர்
அரசற்கு அடும்படையன மா மருததனி ... தே. (57)

## உலகர்க்கு உறுதுயர் பதினெட்டு

648 வெறுப்புப் பசியி ... நீர் வேட்டல் வெகுளி இன்பம்
பிறப்புக் கிலேசம் மதமோடு அதிசயம் பேதமையே
இறப்புச் செனூ நரை பொச்சாப்பு பகை ... நினைப்பு
உறதச செயலறவு ஏலா உலகர்க்கு உறுதுயரே. (58)

## பதினெண்புராணம்

649. மச்சம் பிரமம் வராகம் வயிணுவம் மார்க்கண்டை
அச்சம் இலிங்கம் பவுடிகம் வாமனம் காந்தர்ப்பம்
மெச்சு கதம் சைவம் ஆக்கினேயம் பிரமாண்டம் மிகு நாரதம்
கச்சபம் காருடம் மற்றும் புராணக்கலை பலவே. (59)

## முப்பத்திரண்டு அறம்

*650. ஆதுலர்க்கு உண்டி அறுசமையத்தருக்காம் உணவு
(மே)ாதின் அருட் சிறைச் சோற்று அத்து ஓதனம் உண் கண்மருந்து
ஏதில் பிணஞ்சுடல் கண்ணாடி நோய்மருந்து இன்பம் எண்ணெய்
காதல் மகப்பெறுவித்தல் பிற ... லொடே. (60)

*651. சந்ததி பெற்றல் முலைப்பால் மடம் தடம் கா விலங்கு
அந்தமில் வண்ணார் நாவிதர் பட்டார் வணைது ...
பந்து ஆமட்டுஊண் நிசன நாள் ஓலை களாப பாலு நல்கல்
இந்தொழில் தறினன் பண்டம் முப்பத்திரண்டு அறமே. (61)

## பிள்ளைப்பாட்டு

652. திங்கள் இரண்டினில் ஐந்தனில் ஏழினில் ஒன்பதினில்
அங்கு ஒருபத்துஒன்றில் காப்புச் செங்கீரை அமுதுடன் தால்
தங்கு சப்பாணி முத்தம்கூறல் ஆண்டுதனில் புதல்வ
இங்குஎதிர் வாஎனல் பூச்சூட்டல் திங்கள் ஓர்எட்டினிலே. (62)

## ஆண்பிள்ளைப்பாட்டு

653. ஆண்டு இரண்டுற்ற சிறுபடை கொட்டல் அணுகிய
மூவாண்டினில் கோழகம் தான்செய்தல் சிற்றில்அழித்தல் ஐந்தாம்
ஆண்டில் மையாடல் சுரிகை மெய்சேர்த்தல் அவையவை அவ்
ஆண்டினில் பாடுதல் ஆண்பிள்ளைப்பாட்டுக்கு அடைவதுவே. (63)

## பெண்பிள்ளைப்பாட்டு

654. முன்னவை ஆண்டின் முடித்தல் அவ் ஆண்டு எல்லை மூன்று தன்னில்
உன்னு கும்பகன் ஐந்தொடு அது எல்லையின் ஓங்கு வில் வேள்
தன்னை வழிபடல் நீராடல் தண் கடலாடல் சிற்றில்
பன்னல் மணசெ... பொன்ஊசல் பெண்பிள்ளைப்பாட்டு என்பரே. (64)

## பெண்டிர் இலக்கணம்

655. நல்லுரையாடியும் நல்லிசை யோர நகைவிளைத்தும்
மெல்லென ஒல்கி விலங்கி நடந்தும் விழிவலையால்
கொல்லுவர் போல்எதிர் நோக்கியும் நாணியும் கொங்கையில்கை
ஒல்லை நலிந்தும் அழுது உடன் ஏங்கி ஒடுங்கியுமே. (65)

656. மருங்கினில் கைவைத்து வாகியுன் நெற்றியின் வைத்து ஒருகை
ஒருங்குடன் ஆடியும் மெண்ணானதாகியும் முன்னழிந்து
குரங்(க)யின் கூந்தலில் ஏந்துகை வீதியும் கோதுசெய்து
இரங்கியும் மெல்லென்று செய்வது பெண்டிர்க்கு இலக்கணமே. (66)

## உற்பாதம், ஏழுமேகம்

657. அரவொடு திங்கள் கதிர் பரிவேடம் அழல் புகை இந்
திரவில் அடுஅழல் உற்பாதம் கால்ஒளி தீப் புகையே
மருவுறு நீலிநி நீலவாருணி வாரியுடன்
இருமையவாம் புட்கலாவத்தமே என்று ஏழ்முகிலே. (67)

## திருப்பொறி

658. தாமரை சக்கரம் சங்கம் நிறைமதி தாவு இடபம்
காமுறு மானே தோட்டி நிறைகுடம் காரமுமே
பூமுடி தோரணம் நாவாய் துணைக்கயல் பூங்கடலே
ஏமுறு ரேகை திருப்பொறியாக இயம்புவரே. (68)

## அரசுயானை இயல்பு

659. ஓரேழ் உயரம் நன்னீளம் அதே பெற்றும் ஒன்பதின்முன்று
ஈரேழ் முழம் சுற்றுடைத்தாய் அச்சங்கரே சிறுமண
காரே நிறம் முன் பாது பின் தாழ்ந்து கை கால் மருப்புச்
சீர் ஏயும் தாலவட்டத்தாலும் கோறலுந் திண்கரியே. (69)

## குதிரை இயல்பு

660. நாறிய பூங்குழலார் மணம் போல்...ாயக் கதலி
மீறிய பூமடல்போல் செவியாகி முகம் அழகாய்க்
கூறிய நாற்கதி பெற்று ஏதமஞ்ச காலுணையாய்
வீறிய எண்பத்திரண் குலி அத்திரி வேடிக்கையே. (70)

## பதாதி, சேனம், கும்பி, கணம், வாகினி, பிராதனை

661. ஒருகரி தேர் ஒன்று மா நான்கு சேவகர் ஈர்ஐவராய்
அருள்வ பதாதியது ஆகும் பதாதிகள் மும்மடியே
வரு சேனம் மும்மடி கும்பி தெ மும்மடி கணமே
தரு மும்மை வாகினி என்பது மும்மடி பிராதனையே. (71)

## சமுகம், அனிகம், அக்கிரோணி, நூறு, ஆயிரம், பதினாயிரம்

662. தானையுமே மும்மடியாம் சமுகமும் தன்னின் மும்மை
யானது அனிகமுமாம் அதில் ஐமடி அக்கிறோணியாம்
ஏனைய பத்துச் சதம் நூறு பத்து எனில் ஈரைந்து நூறு
ஊனம்இல் ஓர் பதினாயிரமே அயுதம் என்பரே. (72)

## மாலயிதம், கோடி, அற்புதம், மாகும்பம், வாமனம்

663. ஆடல் அயிதமும் நூறாயிரமாகும் மாலயிதம்
கோடி அது பத்து நூறாயிரம் அதுஅக் கோடி பத்தே
வாடல் அற்புதம் அக்கோடி நூறு என்ப மாகும்பமும்
நடு அது நூறுபத்தாம் கோடி வாமனம் நேர்படுமே. (73)

## சங்கு, சமுத்திரம், அந்தியம், மத்தியம், பாரதம், பிரமகற்பம்

664. வாமனம் பத்துச் சங்கு என்பர் அச் சங்கது எனின் மற்றது ப[த்]
தாம் அதுவாகும் சமுத்திரம் ஆங்கது பத்து அந்திய
மாம் அது மேற் பத்து மத்தியம் பாரதம் மேல் பத்து அதுஆம்
காமருவும் மேற்பத்து அதுமே பிரமகற்பு எனுமே. (74)

## பாரதிதீப வரலாறு

665. கந்தரம் என்னக் கொடையுடையான் கடம்ப அடவி வாழ்
இந்திரன் மேன்மலை வாழ் முனி போல இலக்கணத்தால்
செந்தமிழ் நூல்தெரி பாரதி பாரதிதீபம் தன்னின்
முந்திய பல்பொருள் பன்னிரண்டாம் இயல் முற்றியதே. (75)

(*குறி இடப்பட்டவை சரியாக விளங்கவில்லை)

## குறிப்புகள்



இந்நூலின் பதிப்பாசிரியர் பேராசிரியர் வ. ஜெயதேவன் இல்லினாய்சு பல்கலைக்கழகப் பேராசிரியர் லாடிஸ்லாவ் சுகுஸ்தா அவர்களிடம் நேரிடையாக அகராதியியலில் பயிற்சி பெற்றவர்; தமிழ் அகராதியியல் வளர்ச்சி வரலாறு குறித்து ஆராய்ந்து முனைவர் பட்டம் பெற்றவர்; சென்னைப் பல்கலைக்கழகப் பதிப்புத்துறையின் முதல் இயக்குநர்; தமிழ் மொழித்துறையின் முன்னைத் தலைவர்; தமிழ் இலக்கியத்துறையின் தகைசால் பேராசிரியர்; தமிழ்ப் பேரகராதித் திருத்தப்பணித் திட்டத்தின் தலைமைப் பதிப்பாசிரியர்; இந்திய அகராதியியல் கழகத்தின் பொதுச் செயலாளர்; ஆசிய அகராதியியல் கழகத்தின் தலைவர்; அகராதிகள், மொழிபெயர்ப்பு நூல்கள், ஆய்வுநூல்கள், பதிப்புக்கள் பலவற்றின் ஆசிரியர்; இவர் மேற்பார்வையில் 28 பேர் முனைவர் பட்டமும் 100 பேர் ஆய்வியல் நிறைஞர் பட்டமும் பெற்றுள்ளனர்.

நிகண்டுகளில் உள்ள சொற்களுக்குப் பொருள் காண வேண்டுமாயின் அச்சொல் எந்தத் தொகுதியில், எந்தப் பாடலில் இடம்பெற்றுள்ளது என்பதைப் பார்த்த பின்னரே அச்சொல்லின் பொருளை அறிந்துகொள்ள முடியும். அவ்வாறு அறிந்துகொள்ள முற்படினும் பாடல்களின் ஓசை நயத்திற்காகவும் யாப்பிற்காகவும் சொல்லின் இசைக்காகவும் சேர்க்கப்பட்ட அடைமொழிகள், அசைச் சொற்கள் முதலியன தடையாய் இருக்கும். இவற்றை எல்லாம் கருத்தில் கொண்டு நிகண்டுகள் தரும் சொற்பொருளை அகராதி முறையில் தொகுத்துத் தந்தால் பலரும் பயன் கொள்வர் என்ற எண்ணத்தோடு இந்நிகண்டு அகராதி வடிவம் பெற்றுள்ளது.

சென்னைப் பல்கலைக்கழகம்
2007